Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 92 | சர்வதேச மின் செய்தித்தாள் | மார்ச் 01 2025














## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்































2025 உலக வணிகம்

விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்:

437.345.4203




"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

காலங்காலமாக
மனவுலக இருட்டுக்குள்
முடங்கிக்கிடந்த
பெண்ணினம் விழித்தெழ
வேண்டும்.
விழிப்புத்தான் அவர்களின்
விடுதலைக்கு
முதற்படி.






## சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# உழைப்பையே உயிராக்கி மலையானவன்

# லெப். கேணல் தவா [தவம்]

லெப். கேணல் தவம்




மிகவும் அண்மைக்காலத்தில் எம்மை விட்டு நீண்டதூரம் போய்விட்ட எங்கள் அன்பு அண்ணன் லெப்.கேணல் தவம். தவா பற்றிய நினைவுக் குறிப்பை எரிமலையில் எழுதுவதற்காகப் பலரிடம் தகவல் திரட்டச் சென்றிருந்தேன் எமது அமைப்பில் நீண்டகாலம் பணியாற்றிய நிதர்சனத்தின் மதிப்புமிக்க முத்துக்களில் ஒருவரான அவரைப்பற்றித் தேடிச்சென்றபோது தான் அவர் வெறும் முத்தல்ல ஏராளமான முத்துக்களைத் தன்னகத்தே கொண்டிருந்த ஒரு பெருங்கடல் என்பது புரிய வந்தது.

தவா தான் இருக்கும்போது தன்னைப்பற்றிச் சொன்னதுமில்லை. இல்லாத போது அவர் பற்றிக் கூறுவோருக்குப் பஞ்சமுமில்லை. அந்தப் பெருங்கடல் பற்றி அவருடன் சேர்ந்து வாழ்ந்த நினைவுகள் பற்றிப் பலரும் என்னிடம் கூறியவற்றைத் தொகுத்து வழங்குகின்றேன். திருமலையின் திரியாயில் நாராயணபிள்ளை மண இணையர்கட்கு 1966 இல் இரண்டாவது மகனாக முகுந்தன் பிறந்தபோது அந்தக் குடும்பம் நல்ல நிலையில் இருந்தது. தகப்பன் கிராமசேவையாளர் உத்தியோகத்தையும் தாய் ஆசிரியத் தொழிலையும் செய்தனர். முகந்தனுக்கு ஒரு தமையனும் இரண்டு தங்கைகளும் உள்ளனர்.

திரியாய் தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்விகற்ற நாட்களில் விளையாட்டுக்களில் அவனுக்கு நல்ல ஆர்வம். பாடசாலை மட்டம், கோட்ட மட்டம் என்று பல பரிசில்களையும் தட்டிச் சென்றிருக்கிறான். சிறந்த தடகள வீரனாகவும் (கிறிக்கற்) துடுப்பாட்ட வீரனாகவும் திகழ்ந்தான். க.பொ.த. சாதாரண தரம் முடித்து உயர் தரத்தில் வர்த்தகத்தைத் தெரிவுசெய்து கற்ற முகுந்தனுக்குக் கல்வியைவிடத் தேசமே பெரிதாகத் தெரிந்தது. சிங்கள இனவாதத்தின் முதற்பொறியாக இருந்தது திருமலை. அங்கு சிங்களக் குடியேற்றங்களும் பெருகத்தொடங்க தமிழர் விடுதலைக்கான பயணமும் தீவிரம் பெற்றது. லெப்.கேணல் புலேந்தி அம்மான் திருமலைக்குப் பொறுப்பாகச் செயற்பட்ட காலத்தில் 1985.06.08 அன்று தனது வீடு குறித்த பற்றுக்களைத் தள்ளிவிட்டுத் தேசத்திற்காகப் பயணமானான் முகுந்தன்.

திருமலை - 02 பயிற்சி முகாமில் புலேந்தி அம்மானிடம் பயிற்சி பெற்றதன் பின்பு அவனது பெயர் தவம், தவம் பேச்சு வழக்கில் தவா ஆகி நிலைத்துப் போனது. தவா இயக்கத்தில் இணைந்து கொண்ட அதே ஆண்டு 08ம் மாதம் 10ஆம் நாள் பன்குளம் திரியாய் வீதியில் இருந்த கஜூத் தோட்டத்தில் தவாவின் தகப்பன் உட்பட 16பேரைச் சிங்களப் படைகள் சுட்டுக்கொன்றனர். ஏற்கனவே கிராமசேவையாளராக அரச சேவை செய்த அவரைச் சிங்களம் கட்டாயம் கற்றுத் தெரிவாக வேண்டும் என்ற சட்டம் பாதிப்புக்குள்ளாக்கியது. அவரது அரசசேவையைப் பறித்தது. தொடர்ந்து தீவிரம் பெற்ற அரச பயங்கரவாதம் அவரது உயிருக்கு உலைவைத்தது. தவாவுக்கு அதுவாழ்க்கையில் மறக்க முடியாத நாள்.

அந்த வலியைச் சுமந்து கொண்டே அவர் விடுதலைக்காகப் பயணித்தார். திருமலைத் தாக்குதலணி வடக்கு நோக்கிப் புறப்பட்டது. அப்போது அவருக்கு அகவை பத்தொன்பது. 1986ல் யாழ்ப்பாணம் சென்ற தவா, அல்பேட் வீட்டில் ஒருவனாகினான். கேணல் கிட்டு யாழ். மாவட்டத் தளபதியாகச் செயற்பட்ட காலம் அது. மதன் வீடு, குப்புவீடு, நம்பர் -3, மெயின் போன்ற நிலையங்களில் ஒன்றான உரும்பிராய், நீர்வேலிப் பகுதியில் அமைந்திருந்த அல்பேட் வீடு சற்றுமாறுபட்டது. அங்குதான் ஆயதக் களஞ்சியம், ஆயுதப்பராமரிப்பு, குப்பி அடைத்தல், சக்கை அடைத்தல் போன்ற வேலைகள் மறைவாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. தவா அந்தப்பணிகளில் தன்னையும் ஈடுபடுத்திக்கொண்டார்.

ஆயுதம் பற்றியும் வெடிமருந்து பற்றியும் தேவையான அறிவைப் பெற்றிருந்தார். அதுதான் பிற்காலத்தில் திரைப்படத் தயாரிப்புக்களில் அவரை ஒரு வெடிபொருள் நெறியாளராக உருவாக்கிவிட்டது. அந்தக் காலத்தில் ஒரு முகாமின் சகல வேலைகளையும் போராளிகளே மாறி மாறிச் செய்வார்கள். சமையல், துப்பரவு, ஆயுதப் பராமரிப்பு, அன்றாடப் பதிவு என்று இன்றைய நாட்களைவிட எல்லாமே மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. லெப்.கேணல் ஜொனியே இவற்றையெல்லாம் சரிபார்ப்பார். சமையலில் இருந்து சகலவற்றையும் தவாவும் செய்தார். 21.12.1985 அன்று சுதுமலையில் அமைந்திருந்த கேணல் கிட்டுவின் மையத்தளத்தை அழிப்பதற்காகச் சிங்களப் படைகள் மூன்று பெல் வகை உலங்கு வானூர்திகளோடு சுற்றிவளைப்பைச் செய்தன.

அதை முறியடிக்க அல்பேட் முகாமில் இருந்து போராளிகள் சென்றனர். சண்டை முறியடிக்கப்பட்டது. ஆனால் இவர்களின் அணிக்குத் தலைமையேற்றுச் சென்ற மேஜர் அல்பேட் தவாவிற்கு அருகிலே வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இந்தச் சண்டையில் தவா மிகவும் திறமையாகச் செயற்பட்டமைக்காகக் கேணல் கிட்டு உட்பட அனைவராலும் பாராட்டப்பட்டார். அதன் பிறகு 1986 இல் வசாவிளான் பகுதிக் காவல்நிலைகளில் காவலில் ஈடுபட்டார். அங்கு நடைபெற்ற சண்டை ஒன்றில் கையில் சிறு விழுப்புண் இவருக்கு ஏற்பட்டது. இதே ஆண்டு காங்கேசன் துறையில் இருந்த சிங்களப் படைகள் தெல்லிப்பழை ஊடாகப் பெருமெடுப்பில் முன்னேறத் தொடங்கின.

படையினரை வழிமறித்து நடாத்தப்பட்ட சண்டையிலும் தவா பங்கேற்றார். தொடர்ந்து மருத்துவ சிகிச்சைக்காகத் தவா தமிழகம் சென்றார். அங்கு மூன்று முறை மூல நோய்க்கான அறுவைச் சிகிச்சை இவருக்குச் செய்யப்பட்டது. 1987 இல் அங்கிருந்து திரும்பவும் நாட்டுக்கு வந்த பின்பு புலேந்தி அம்மான் மீண்டும் தவாவைத் தன்னுடன் சேர்த்துக்கொள்கிறார். மீண்டும் திருமலைத் தாக்குதல் அணியில் இணைந்து கொண்டு சொந்த ஊருக்குத் திரும்பிப் பணியாற்றிய தவா 1987 இல் மீண்டும் புலேந்தி அம்மானுடன் யாழ் நோக்கிச் செல்கின்றார். 1987 பெப்ரவரி மாதம் கேணல் கிட்டுவின் ஆக்கப்படி நிதர்சனம் நிறுவனம் தொடங்கப்படுகின்றது. இதன் ஒரு பகுதியாக ஒளிபரப்புச் சேவையும் தொடங்கப்படுகின்றது.

தெல்லிப்பழை, புத்தூர், கொக்குவில், வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் ஒளிபரப்பு மையங்கள் செயற்படுகின்றன. 1987 காலப்பகுதியில் பரதன் அவர்கள் நிதர்சனத்திற்கு பொறுப்பாக இருந்து செயற்பட்டபோது தவா நிதர்சனத்தோடு இணைந்து கொள்கின்றார். நிதர்சனத்தின் மூத்த போராளிகளில் ஒருவரான கப்டன் தீப் தவாவின் ஊர்க்காரர். இருவரும் ஒன்றாகச் சேர்ந்து படப்பிப்புக்களில் ஈடுபடுவார்கள். படப்பிடிப்பில் தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்தார். பின்னாட்களில் ஒரு ஒளிப்பதிவு வல்லுனராகவே அவர் செயற்பட்டார். தியாகி திலீபனின் உண்ணாநோன்புக் காலத்தில் கப்டன் தீப்புடன் இணைந்து அந்த வரலாற்று நிகழ்வை படப்பிடிப்புச் செய்தார். அமைதிப்படை ஆக்கிரமிப்புப் படையாகியது.

தன்னை வளர்த்த புலேந்தி அம்மானின் இழப்பு தவாவுக்குள் நெருப்பாய் கனன்றது. தொடர்ந்து இந்திய-புலிகள் போர் வெடிக்கின்றது. அந்த நேரம் இந்தியப் படைகளால் ஊடகங்களே முதலில் முடக்கப்படுகின்றன. நிதர்சனமும் தனது உடைமைகளோடு தன்னை உருமறைத்தபடி இந்தியப் படைகளுக்கு எதிராக ஊடகப் போரைத் தொடக்கியது. தென்மராட்சி மீசாலையில் “எம்.ஜி .ஆர். வீடியோ சென்ரர்” என்ற பெயரில் கப்டன் தீப், தவா, பரதன், புதுவை இரத்தினதுரை போன்றவர்கள் ஒளிக் கலையகம் ஒன்றை அமைத்து அதன் மறைவில் வேலைகளைத் தொடர்ந்தனர். பழைய ஆவணங்களைப் பாதுகாப்பது, புதிய விவரணம் ஒன்றைத் தயாரிப்பதற்கான படப்பிடிப்புக்களில் ஈடுபடுவது இவர்களுடைய வேலை.

இந்தியப்படைகளுக்கு முதலில் எம்.ஜி.ஆர் என்ற பெயரில் ஐயப்பாடு இல்லை. கப்டன் தீப், தவா போன்றோர் இந்தியப் படைகளின் நகர்வுகளை மறைமுகமாக இருந்து படம் பிடித்தனர். இந்தியப் படைகள் செய்த படுகொலைகள் பற்றி மக்களிடம் பேட்டிகளை பதிவு செய்தனர். இவர்களது பணிகள் இந்தியப் படைகளின் சந்தேகத்திற்கு இடமாகவே ஆவணங்களை தகுந்தமுறையில் மறைத்துவிட்டு வன்னிநோக்கிப் பயணமாகின்றனர். “பப்பா அல்பா” என்ற சங்கேதப் பெயருடைய வன்னிக் கானகமுகாம் ஒன்றில்வைத்து நிதர்சனத்தின் பணிகள் தொடர்கின்றன. ஒரு சிறிய கலையகத்தை அமைத்து ஒலிப்பதிவு, படத்தொகுப்பு வேலைகள் தொடங்குகின்றன.

இதுவரை எடுக்கப்பட்ட காட்சிளும் பேட்டிகளும் சேர்க்கப்பட்டு விவரணம் ஒன்று தயாராகின்றது. “இந்திய அரச பயங்கரவாதம் - பாகம் 1, பாகம் 02” என்ற பெயருடைய விவரணம்தான் உலகிற்கு முதன் முதலில் இந்தியப் படைகள் ஈழத்தில் செய்தது என்ன என்பதை தெளிவாக்குகின்றது. இந்த விவரணத் தயாரிப்புக்களை தவா, தீப் ஆகியோர் காட்டுக்குள் இருந்து வெளிவந்து மக்கள் மத்தியில் உள்ள வீடியோக் கடைக்காரர்களை அணுகி சமூக நிகழ்வுகளை படம் பிடிக்கும்போது இந்தியப்படைகளின் காட்சிகளையும் படம்பிடித்துத் தருமாறு கேட்டு அக்காட்சிகளைப் பெற்று விவரணத்தில் இணைத்தனர்.

அந்தச் சந்தர்ப்பம்தான் வன்னி எங்கிலும் வீடியோக் கடைக்காரர்களையும் மக்களையும் தவாவிடம் நெருங்கவைத்தது. தவாவிற்குத் தெரியாத வீடியோ. நிழற்படக் கடைக்காரர்கள் இல்லை என்னும் அளவிற்கு அந்த உறவு வலுப்பட்டது. தவாவிற்குத் தெரியாத ஊர்களும் இல்லை. அவரை அறியாத மக்களும் இல்லை. “கானகத்தில் ஒரு நாள்” சிலநூற்றுக் கணக்கான போராளிகளின் காட்டுவாழ்க்கை பற்றிய செய்திகளை எடுத்துக் காட்டிய படம். தவாதான் இதற்கும் படப்பிடிப்பு. இந்தக் காலத்தில்தான் ஒட்டுசுட்டான் கோயில் திருவிழாவில் ஒரு அருமையான பாடகரை ஒரு வீடியோ ஒளிநாடா மூலம் தவா இனம் கண்டார்.






உடனே புதுவை அண்ணரிடம் உங்களுக்கேற்ற பாடகர் ஒருவர் இருக்கிறார் எனச்சொல்லி வைத்தார். இந்தியப் படைகள் புறப்பட்ட கையோடு கண்ணாடிச் சந்திரனும் தவாவும் சென்று அந்தப் பாடகரிடம் தொடர்புபட்டு கலை, பண்பாட்டுக் கழகத்துடன் இணைக்கின்றனர். அவர் பாடகர் சாந்தனாக தமிழ் மக்கள் மத்தியில் அறிமுகமாகக் காரணமானதும் தவாதான். இந்தியப் படைகள் தமிழீழத்தில் இருந்து தோல்வியுடன் புறப்பட புலிகள் கானகத்தில் இருந்து வெளிவருகின்றனர். அந்தக் காலப்பகுதியில் தேனிசை செல்லப்பா குழுவினர் தமிழகத்தில் இருந்து ஈழம் வருகின்றனர். கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் இருந்த கவின் கலைக் கல்லூரியில் இருந்து தவா உட்பட பல போராளிகள் தேனிசை செல்லப்பா குழுவினரோடு புறப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அம்பாறை வரை 21 இடங்களில் தேனிசை செல்லப்பாவின் தாயகப்பாடல்கள் மேடை நிகழ்ச்சிகளாக நடைபெறுகின்றன. அந்த நிகழ்ச்சிக்கான மேடையமைப்பு ஒளியமைப்பு, படப்பிடிப்பு, உணவு உபசரிப்பு, பாதுகாப்பு உட்படப் பலவேலைகளின் பின்னணியாகத் தவா உள்ளிட்ட ஒரு சிலர்தான் பணியாற்றினார்கள். இன்னவேலையென்றில்லாமல் எல்லாவற்றையுமே இழுத்துப் போட்டுக் கொண்டு இடைவெளி நிரப்பி, ஆளில்லை என்று திக்கு முக்காடும் நேரங்களில் அந்த இடைவெளிகளை நிரப்பி, கடின உழைப்பின் போதும் கலகலப்போடு உலவி தவா இந்த விடுதலைப் பயணத்தோடு இரண்டறக் கலந்திருந்தார்.

தேனிசை செல்லப்பாவின் நிகழ்ச்சி திரியாயில் நடந்த போதுதான் தவாவின் தாயார் தவாவை நீண்ட நாட்களுக்குப் பிறகு காண்கிறார். அதுவரை இது தனது சொந்த ஊரென்று தவா மூச்சுக்கூட விடவில்லை. தாயைக் கண்ட நிறைவோடு அவரது பயணம் தொடங்குகின்றது. 1990 இற்குப் பிறகு சிங்களப் படைகளின் வல்வளைப்பு தவாவின் உறவுகளை ஊரைவிட்டே ஏதிலிகளாக்கி அனுப்புகின்றது. 1990-1991 வரை தவா கலை, பண்பாட்டுக் கழகப் பணிகளோடு இணைந்திருந்தார். அக்காலத்தில் “இந்த மண் எங்களின் சொந்த மண்”, “வேங்கைகளின் விடுதலை வேதம்” “யாகராகம்,” “நெய்தல்” உட்பட ஆறு பாடல் ஒலிநாடாக்கள் தமிழோசை கலையகத்தால் கலைபண்பாட்டுக்கழக வெளியீடுகளாக வெளிவந்தன.

இந்தப் பாடல் ஒலி நாடக்களின் தயாரிப்பில் பல்வேறுபட்ட வேலைகளோடு தவா இணைந்திருந்தார். அப்போது கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் பத்து நாட்கள் முத்தமிழ் விழா நடத்தப்பட்டது. அதன் சிறப்பான ஆற்றுகைக்கும் தவாவினது உழைப்பு பலம் சேர்த்தது. மின் பிறப்பாக்கியிலிருந்து மேடைகட்டுதல், கலைஞர்களை ஏற்றியிறக்குதல், மக்கள் தொடர்பு, வரவேற்பு என்று தவா அனைத்து வேலைகளின் முதுகெலும்பாக நின்றார். கலை, பண்பாட்டுக் கழகத்துடனான அவரது தொடர்பு வெளிச்சம் இதழின் நுாறாவது இதழ் வெளியீட்டு விழாவரை தொடர்ந்தது. எந்தப் பணி என்றாலும் களமுனைப் படப்பிடிப்புக்களைச் செய்ய அவர் தவறவேயில்லை. 1990 களில் நடந்த பல சண்டைகளுக்குத் தவாதான் படப்பிடிப்பு.

கோட்டை, மாங்குளம், கொக்காவில் போன்றவை மிகமுக்கியமானவை. 1991 இன் பின்னர் நிதர்சனத்தோடு மீண்டும் இணைந்த தவா வன்னிப்பகுதிப் படப்பிடிப்புக்குப் பொறுப்பாகத் தனது பணியைத் தொடர்ந்தார். வன்னியில் தொடக்கத்தில் தவாவுக்கென்றொரு முகாம் இருந்ததில்லை ஆனால் தவாவைத் தெரியாத வீடுகளே இல்லை. சொந்த ஊர்ப் போராளிகளுக்கே தெரியாத இடங்கள் தவாவிற்கு நன்கு அறிமுகமாகியிருந்தன. வன்னி வாழ்க்கையில் மக்களின் எழுச்சி நிகழ்வுகள், குண்டு வீச்சுக்கள். போராளிகளின் பயிற்சி முகாம் படப்பிடிப்புக்கள், அடையாள அட்டைப் படம் எடுத்தல், விளையாட்டுக்கள் என்று அனைத்தையுமே தவா படம்பிடித்தார். காலப்போக்கில் அவருக்குதவியாக பல புதிய போராளிகள் வந்திணைய அவர்களையும் பயிற்றுவித்தார்.

வன்னியில் இருந்த காலத்தில்தான் கரும்புலி போர்க் உடனான நட்பு இவருக்குக் கிடைக்கின்றது. போர்க் கொண்டுசென்ற வெடிக்கும் ஊர்திக்குரிய பயிற்சி ஒத்திகை நடக்கின்றது. தவாவும் படப்பிடிப்புச் செய்தபடி அருகில் நிற்கிறார். மாங்குளம் முகாம் மீதான தாக்குதலில் போர்க் வெடிக்கப்போகும் நேரத்திற்குச் சற்று முன்னர் போர்க்குடன் அமர்ந்திருந்து ஒன்றாகப் பகிடிவிட்டு, ஒன்றாகச் சாப்பிட்டு, அவர் போய் வெடித்த பிறகு அந்தத் தாக்குதலின் பதிவுகளைச் செய்து, விமானக் குண்டுவீச்சுக்களில் மாட்டுப்பட்டுத் தப்பிவந்து, வீரச்சாவுகளுக்குச் சென்று என்று ஓடியோடி உழைத்தார்.

மாங்குளம் சண்டைமுடிய அத்தாக்குதலின் வரைபடத்தையும் சிலமுக்கிய குறிப்புக்களையும் அன்றிரவே யாழ்ப்பாணத்திலமைந்திருந்த தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்றகட்டளை கிடைக்கிறது. கூடநின்ற தவாவின் தோழன் நாளை விடியக் கொண்டுசெல்வோம் என்று கூறுகின்றார். ஏற்கனவே மூன்று நாட்கள் தூக்கமில்லை. ஆனாலும் தவா “இல்லையில்லை இன்றிரவே அனுப்ப வேண்டும்” எனச் சொல்லி கடின பாதைகளால் உந்துருளியில் சென்று கடல் கடந்து யாழ். சென்று உரிய பணியை நிறைவேற்றினார். அலுப்புச் சலிப்பில்லாமல் பணியாற்ற அவருக்கு நிகர் எவரும் இருந்ததில்லை. யார் எது கேட்டாலும் தவா இல்லை என்று சொன்னதில்லை.

எங்கிருந்தாவது பெற்று உரிய நேரத்திற்கு உரிய பொருளைக் கொடுத்துவிடுவார். A1, A5, JVC, MS-1, M-4, M7, M1000, M3000, M450, M9000 என்று பழைய, தற்போது புழக்கத்தில் உள்ள அனைத்துக் கமரா வகைகளுமே தவாவுக்கு நன்கு பழக்கம். கமராமீது அவருக்கு அன்பு இருந்தாலும் ஆயுதம் மீதுதான் அவருக்குக் காதல் இருந்தது. குறிபார்த்துச் சுடுவதில் தவா மிகவும் கெட்டிக்காரன். 1987 இல் இருந்து 2006 முகமாலைக்களம் வரை தவா நிற்காத சண்டைக்களங்களே இல்லையெனலாம்.

சண்டைக்களங்களுக்கு கமராவுடன் போகும் தவா பின்னர் துவக்கெடுத்து ஆமிக்குச் சுடுவதும் காயப்பட்டவர்களைத் தூக்குவதுமாக மாறிவிடுவார். இப்படித்தான் முல்லைத்தீவுச் சண்டையில் நிற்கும்போது தவாவுக்கு நன்கு அறிமுகமான தவாவிடம் படப்பிடிப்பு பயிற்சிபெற்ற பெண்போராளி சண்டைசெய்து கொண்டிருக்கும்போது தவாவுக்கு முன்னே விழுப்புண்படுகின்றார். தவா அவரைத் தூக்கிக்கொண்டு 750 மீற்றர் தூரம் ஓடிச் சென்று காவு வண்டியில் ஏற்றிவிட்டு வந்தே மீதிப் பணி தொடர்ந்தார். சண்டைப் படப்பிடிப்புச் செய்ய அவருடன் பல போராளிகள் நின்றாலும் சண்டை நடக்கும் போது அவர் முகாமில் நிற்க மாட்டார்.

படப்பிடிப்பில் ஈடுபட்டவர்களுக்கு உதவிபுரிய, மின்கலத்துக்கு மின்னேற்றிக் கொடுக்க என்று களமுனைக்கு விரைந்துவிடுவார். இப்படித்தான் முல்லைத்தீவுச் சண்டையில் ஒரு பெண் போராளி படப்பிடிப்புச் செய்து கொண்டிருந்தார். தவாவுக்கு அகவையிலும், அனுபவத்திலும் அவர் மிகவும் சிறியவர். அவரிடம் “தங்கச்சி உந்தக் கமராவைத்தாங்கோ படமெடுத்துப் போட்டுத் தாறன்” என்று தவா கேட்க, தவாவைப் பற்றி அதிகம் தெரியாத அவரோ “நான்தான் இங்க ஒரு கிழமையாக நிண்டு படமெடுக்கிறன். கமராவைத் தரமாட்டன். வேணுமென்றால் நீங்கள் லைற் பிடியுங்கோ நான் படமெடுக்கிறன்” என்று கூறத் தவா அவர் படமெடுத்து அவ்விடம் விட்டு அகலும்வரை லைற் பிடித்து உதவி செய்தார்.

பின்னாட்களில் தவாபற்றி அறிந்து அந்த நிகழ்வுக்காக அந்தப் பெண்போராளி வருந்தியபோதும் தவா சங்கடப்படவேயில்லை. பெரியவராயிருந்தாலும் தவா தன்னைப் பற்றி பெரிதாக எண்ணுவதில்லை. அவரவருக்கேற்ற வகையில் தவா தன்னை மாற்றியமைத்துக் கொள்வார். நிதர்சனத்தின் வெளியீடுகளில் ஒன்றான ஒளிவீச்சு சஞ்சிகை உருவாக்கத்திற்கான அடித்தளத்தை மாமனிதர் சச்சிதானந்தம் (ஞானதரன்) அவர்களுடன் இணைந்து தவா போட்டிருந்தார். 1993 மேயில் அது தன் முதல் இதழை வெளியிட்டது. அதற்கு முன்னரே தவாவும், திரு. சச்சியும் இணைந்து 91, 92 காலப்பகுதியில் அந்த இதழைத் தயாரித்து விட்டனர்.

அந்த இதழின் தொழில்நுட்பத்தில் இருந்த குறைபாடு காரணமாக அது 1993 இலேயே மீண்டும் திருத்தமாகத் தயாரிக்கப்பட்டது. இந்த ஒளிவீச்சு சஞ்சிகை 100 ஐத்தாண்டித் தனது இதழ்களைவெளியிட்டது. அது தொடங்கப்பட்டதிலிருந்து இறுதி இதழ் வரை, அது பின்னர் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியாகப் பரிணாம வளர்ச்சியடைந்ததுவரை தவா உடனிருந்து தனது உழைப்பை ஊற்றியிருந்தார். ஒளிவீச்சு தயாரிப்பில் செய்திப் படப்பிடிப்பு மிகமுக்கியமான ஒன்று. வன்னிக்கு எல்லாரும் இடம் பெயர்ந்த பின்னர் தொழில்நுட்பக் கோளாறுகள் நடுவில் கலையகம் இல்லாத இக்கட்டுக்குள் இச்செய்திப் படப்பிடிப்பை செய்வது மிகவும் கடினமாக இருந்தது.

இதன் படப்பிடிப்புக்கு ஒளியமைப்பைச் சரியாகச் செய்வது நாட்கணக்கில் இழுபட்டது. இன்று சரிவராவிட்டால் நாளை, நாளை சரிவராவிடில் மறுநாள் என்று அந்த வேலை நீண்ட போதும் தவாதான் பொறுமையாக இருந்து அந்த ஒளியமைப்புச் சரியாகும் வரை இடத்தை மாற்றி மாற்றி விளக்குகளை அமைத்து அந்தப்பணியை சரியாக்கித் தருவார். ஒளிவீச்சுத் தயாரிப்பின் போதுதான் எழில் தவாவுக்கு அறிமுகமானார். போராளியாகவும் செய்தி வாசிப்பாளராகவும் இருந்த அந்தப் பெண்ணைத் தவாவுக்கு மிகவும் பிடித்துப் போனது. 1995 பெப்ரவரி மாதம் தவாவுக்கும் எழிலுக்கும் திருமணம் நடைபெற்றது. அதன் பயனாக இரண்டு பிள்ளைகள்.

தவாவைப் போலவே அவரது குடும்பமும், போராளிகளின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்தது. தவா நீண்ட நாட்கள் வீடு செல்லாத போதெல்லாம் வீட்டைத் தனியே நிர்வகித்து விடுதலைப் போருக்கு உறுதுணையாயிருந்தார் தவாவின் மனைவி. தொடர்ந்த காலங்களில் தவாவின் மைத்துனர்கள் இருவர் போராடச் சென்று மாவீரரானார்கள். இருபத்து மூன்று வருடகாலப் போராட்ட வாழ்க்கையில் தவா தனது குடும்பத்தோடு ஒன்றாக இருந்த நாட்களை எண்ணிவிடலாம். தான் திருமணம் செய்தவர் என்றோ, தனக்கு குடும்பம் இருக்கிறது என்றோ அவர் நினைத்ததில்லை. இயக்கம் எங்கு போகச் சொல்கிறதோ அங்கு போய் எதைச் செய்யச் சொல்கிறதோ அதைச் செய்து ஒரு செயல்திறனுள்ள முழுமையான போராளியாகவே அவர் இறுதி நாட்கள் வரை வாழ்ந்தார்.

எதிரி விமானங்களின் குண்டு வீச்சுக்கள், மக்களின் இடர்பாடான இடப்பெயர்வுகள் தவாவைப் பொறுத்தவரை தாங்க

முடியாத துயரமான நிகழ்வுகள். நவாலி சென். பீற்றேர்ஸ் தேவாலயப் படுகொலையின் போதும், யாழ். வலிகாம இடப் பெயர்வின் போதும் கையில் கமராவோடு அவர் படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்தார். அந்த வேளைகளில் படப்பிடிப்பைத் திடீரென்று பிறர் பொறுப்பில் விட்டுவிட்டுத் துன்பப்படும் மக்களுக்கு உதவிபுரியத் தவா போய்விட்டார். நிதர்சனம் நிறவனத்தாலும் திரைப்பட உருவாக்கப் பிரிவாலும் தயாரிக்கப்பட்ட குறம் படங்கள், முழுநீளப்படங்கள் அனைத்திலுமே தவாவின் உழைப்பு இருந்தது. தன்னை ஒரு நடிகனாக அவர் என்றும் நினைத்ததேயில்லை.

இந்தப் பாத்திரத்துக்குத் தவாதான் பொருத்தம் என்று இயக்குநர் தீர்மானித்தபோது தவா மறுப்புக் கூறுவதில்லை. வழமையாக எந்த வேலைப் பொறுப்பைக் கொடுத்தாலும் தான் ஏற்றுக் கொண்டு செய்ததைப் போல் நடிப்பையும் ஈடுபாட்டோடுதான் அவர் செய்தார். “இன்னும் ஒரு நாடு”, “முற்றுகை”, “விடுதலை மூச்சு” ஆகிய படங்களில் இப்படித்தான் அவர் சிறப்பாகப் பங்கேற்று நடித்திருந்தார். இன்னும் ஒரு நாடு படத்தின் பின்பு பலர் அவரைக் “கிண்ணி” என்றே அழைத்தார்கள். கிண்ணி யின் அம்மாவுடனான அன்பும் அவருக்கு என்றுமே இருந்தது. இளமைக்காலப் போராட்ட நாட்களில் வெடிபொருளில் அவருக் கிருந்த பரிச்சயம் திரைப்படத் தயாரிப்பில் அவருக்குக் கை கொடுத்தது.

எந்தப் படமாக இருந்தாலும் அதை எவர் தயாரித்தாலும் தவா தான் அதன் வெடிபொருள் கையாளலைச் செய்வார். ஏற்கனவே வெளியான உலகின் சண்டைப் படங்களில் வெடிபொருட்களை எவ்வாறு கையாண்டார்கள் என்ற பொறிமுறையைச் சொல்லித் தருவதற்கு எவரும் இல்லை. கேட்டுப் பெறுவதற்கும் வாய்ப் புக்கள் இல்லை. இங்குள்ள வளங்களை வைத்துக் கொண்டு கற்பனையையும் ஒருங்கிணைத்துச் செயற்படுவதே பொருத்த மாக இருந்தது. தவாதான் இந்த விடயத்தில் தமிழீழத்தின் முன்னோடி. ஒரே காட்சியில் சுடுவதும், அது படுவதும் தெரிய வேண்டும் என்பதற்காக வாயு ரவையைத் தெரியுசெய்து அது வும் தொடர் சூடாகச் சுடப்பட வேண்டும் என்பதற்காக வாயு ரவைத் தயாரிப்பின்போதே சில ஏற்பாடுகளைச் செய்து வெற்றி பெற்றார்.

படப்பிடிப்புக்காக படைக்கலம் சார்ந்த பல ஏற்பாடுகளைச் செய்து திரைப்படங்களின் வெற்றிகளுக்கு வழிகோலினார். ஜெயசிக் குறுக் காலம் இயக்கத்தின் நெருக்கடிக்காலங்களில் ஒன்று. படப் பிடிப்புக்கென களமுனைக்கு அனுப்பப்படும் போராளிகள் ஒவ் வொருவராக விழுந்து கொண்டிருந்தனர். விழுப்புண் அல்லது வீரச்சாவு. அந்த நேரங்களில் தனது அன்புக்குரியவர்களின் இழப்பு தவாவை வெகுவாகப் பாதித்தது. தானே நேரில் சென்று களக்காட்சிகளைப் பதிவு செய்தார். ஜெயசிக்குறுவில் வீரச் சாவடைந்த கப்டன் ஜீவனுக்கு உறவினர்கள் அருகில் இல்லை. தவா தனது வீட்டிலேயே ஜீவனின் இறுதி நிகழ்வுகளைச் செய்து முடித்தார். “ஜெயசிக்குறு எதிர்ச்சமர்” பற்றிய விவரணத்தயாரிப்பு ஜெயசிக்குறு சமரைப் போலவே நீண்டதாக இருந்தது.

களத்தில் நின்ற ஏராளமான போராளிகளினதும் களமுனைத் தளபதிகளினதும் பேட்டிகள் களமுனையில் வைத்தே ஒளிப் பதிவு செய்யப்பட்டன. தவாதான் நேரில் நின்று அனைத்தையும் ஒழுங்குபடுத்திப் படப்பிடிப்பைச் செய்தார். சமாதான காலத்தில் ஒருசில நாட்கள் திரைப்பட உருவாக்கப்பிரிவிற்கான உயர் தொழில்நுட்ப வலுக்கொண்ட நவீன டிஜிற்றல் கமராவைக் கொள்வனவு செய்ய தவா உட்பட மூன்றுபேர் இங்கிருந்து வெளிநாடு ஒன்றுக்குச் சென்றனர். கமராவின் தயாரிப்பாளர்கள் அதற்கான ஒரு மாதப் பயிற்சியை வழங்கிய பின்னர் தேர்வு வைத்து அதில் தேறிய பின்னரே கமராவை உரியவர்களிடம் கையளிப்பார்கள்.

ஆனால் தவாவின் திறமையும் சென்றவர்களின் திறமையும் கமராவின் தயாரிப்பாளர்களுக்கு வியப்பைத் தந்தது. போய்வர இரண்டு நாட்கள் பயிற்சிக்கு ஐந்து நாட்கள் என்று ஒரு கிழமைக் குள்ளேயே அந்த அலுவலை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டு ஊர்வந்து சேர்ந்தார்கள். புதிய கமராவின் பெறுமதி அரியது. தவா பயிற்றுவிக்க ஏனையவர்கள் அதைக் கற்றுக்கொள்ள முழுநீளத் திரைப்படத்தின் உருவாக்கத்தில் அது முதன்மை யாய் இருந்தது. இன்னமும் இருக்கின்றது. தவாவிடம் படப் பிடிப்புப் பயிற்சி பெற்று ஏராளமான ஆண், பெண் போராளிகள் வெளியேறியிருக்கின்றனர். அவர்களிடம் ஒரு ஆசிரியரைப் போல அவர் என்றும் பழகுவது கிடையாது.

எந்தப் பெரிய சிக்கலாயிருந்தாலும் போராளிகள் மனத்தாங் கலோடு அந்தச் சிக்கல்களைத் தவாவிடம் கொண்டு வருவர். படப்பிடிப்புத் துறையில் ஏற்படுகின்ற அனைத்துச் சிக்கல்களை யுமே அவர் சிறிதாக நினைப்பார். உடனடியாக அப்பிரச்சினை களுக்கான தீர்வைத் தவா தேடிக்கொடுப்பார். அவர் நிற்கும் இடத்தில் கலகலப்புக்கு என்றும் குறைவிருக்காது. அது அனல் பறக்கும் சண்டைக்களமாக இருந்தாலும் சரி, வியர்வை வழிந் தோடும் கடின வேலையென்றாலும் சரி அங்கு நடு நாயகனாக அவரே விளங்குவார். “தவாண்ணை வந்தால் எல்லா வேலை யும் தானாக நடக்கும்.

எந்த வேலை என்றாலும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய் வார். யாரையாவது இதைச்செய், அதைச்செய் என்று கூறிவிட்டு அவர் இருக்க மாட்டார். அவரே முன்னின்று செய்வார். நாங் களும் இயல்பாக வேலையில் இறங்கி விடுவோம்” என்று சொல் கிறார்கள் தவா வளர்த்த போராளிகள். அறிந்தவர்கள், தெரிந் தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களது இன்ப துன்பங்களில் பங்கெடுப்பதை ஒரு தலையாய கடமையாகவே அவர் கைக் கொள்ளுவார். இழப்பு வீடெனில் தோரணங்கட்டுவதிலிருந்து பாடை சுமப்பதுவரை, திருமணங்கள் எனில் பந்தல் போடுவதி லிருந்து உணவு பரிமாறுவது வரை பொறுப்புணர்வோடு பங்கெடுப்பார். அமைப்பின் முக்கிய தளபதி ஒருவருக்குத் திருமணம்.

திருமணத்தில் படப்பிடிப்பிலிருந்து உணவு பரிமாறுவதுவரை தவா ஓடி ஓடித் திரிந்தார். மணவிழாவுக்கு எதிர்பார்த்ததைவிடக் கூடுதலானோர் வந்திருந்தனர். உணவு பரிமாறுவதுதான் சிக்கல். ஒருமாதிரி வந்தவர்கள் எல்லோருக்கும் உணவு கொடுத்தாகிவிட்டது. திருமணத்தை ஒழுங்குபடுத்தியவர்கள் பலருக்குச் சரியான பசி. அன்று மதியத்திலிருந்து அவர்களுக் குச் சாப்பாடு இல்லை. நேரம் இரவு ஒன்பதைத் தாண்டிவிட்டது. கடைக்குச் சென்று உணவும் பெறமுடியாது. தவாவுக்கு எங் கிருந்துதான் அந்த அறிவு வந்ததோ தெரியாது. நிறை குடத்தில் வைத்திருந்த தேங்காயை உடைத்து, பரப்பி வைத்திருந்த அரிசியைக் கொறித்து வாழைப்பழத்துடன் தானும் சாப்பிட்டு இருந்தவர்கட்கும் கொடுத்து அன்றைய பொழுதைச் சமாளித் தேவிட்டார்.

வழமையாகத் தவாவுக்கு உணவு நேரத்துக்கு உண்ண வேண்டும். சுவைத்தும் ருசித்தும் சாப்பிடக்கூடியவர் அவர். ஆனாலும், படப்பிடிப்பு நடைபெறும் நாட்களில் நடிக்கவந் தவர்கள், படப்பிடிப்பில் ஈடுபட்டவர்கள், உதவியாளர்கள் என்று அனைவருக்கும் கொடுத்தபின்பு இறுதியாகச் சாப்பிடுபவர் தவா வாகத்தான் இருக்கும். சாப்பாடு இல்லையெனில் பட்டினி அல் லது சமாளிப்பு. வாகனம் ஓடுவது தவாவுக்கு ஒரு கலை, அது எந்த ஊர்தி என்றாலும், யாருடையதாக இருந்தாலும் ஒரு தடவை ஓடிப்பார்த்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். அவ ருக்கென்று ஒரு உந்துருளி இருக்கும், வேலைக்காக வெளியில் செல்லும் யாராவது அதைக் கேட்டால் கொடுத்துவிட்டு, நடந்தும் தன்பணி தொடர்வார்.

தவாவிடம் பெறுமதியான ஒரு பொருள் இருக்கின்றதெனில் பெடியளுக்குச் சந்தோசமாக இருக்கும். யாராவது ஒருவர் சிறிது நாட்களின் பின்னர் “தவாண்ணை அதைத் தாங்கோ” என வாங்கிவிடுவார். நிரந்தரமாக அவரிடம் எதுவுமே இருந்த தில்லை. அவரிடம் இருந்ததெல்லாம் அனைவருக்கும் சொந் தம். பதவியையும் பொறுப்புக்களையும் விரும்பாமல் ஒரு தொண்டனாகவே, ஒரு தொழிலாளியாகவே வாழ நினைத்தார். அதன்படி வாழ்ந்தார் தவா. அவரது மனதுக்குள் போராளிகள், பணியாளர்கள் என்ற வேறுபாடு ஒருபோதும் இருந்ததில்லை. கர்வமோ தலைக்கனமோ தலைதூக்கியதில்லை. இறுதியாக, “எல்லாளன்” நடவடிக்கையை வரலாறாக்கும் முழுநீளத் திரைப் படத்தின் தயாரிப்புவேலை நடைபெற்றுக்கொண்டிருந்தது.

தவாதான் அனைத்து வேலைகளுக்குமான முதுகெலும்பு. அகவையின் அடிப்படையில் ஓரளவு தெளிவாகக் காணப்பட்ட தவாவின் தோற்றம் ஒரு பொடியனைப்போல் உருமாறி இருந் தது. “தவாண்ணையைப் பார்க்க இப்பதான் வடிவாயிருக்குது” பலர் கூற புன்னகைத்தபடி கடமையில் இறங்குகிறார். பெப்ரவரி மாதம் 13ம் நாள் நிதர்சனத்தோடு மிக நெருக்கமாகவிருந்த செட்டி அம்மா குடும்பத்தில் இரண்டாவதாகவும் ஒரு வீரச்சாவு நிகழ்ந்தது. மேஜர் செட்டியின் தமையன் லெப்.கேணல் புகழ் மாறன் - மன்னார்க் களமுனைக்குச் சென்று வித்துடலாக வீடு வந்திருந்தார். திரைப்படப் படப்பிடிப்பில் இருந்த தவா அனைத் தையும் விட்டுவிட்டுச் செட்டியம்மா வீட்டுக்கு வந்துவிட்டார்.

அங்கு சகல ஒத்துழைப்புக்களையும் செய்து, வித்துடலைத் தூக்கிச் சுமந்து துயிலுமில்லம் வரை கொண்டுசென்று இறுதி நிகழ்வில் பங்கேற்றுவிட்டுத்தான் மறுவேலை பார்த்தார். பலர் அங்குதான் அவரை இறுதியாகக் கண்டார்கள் - மனைவியின் தாயார் உட்பட. வீட்டில் மனைவி, பிள்ளைகளுக்குக் காய்ச்சல் என்ற செய்தியை மாமி அவரிடம் கூறினார். தவா வீடுபோய் ஒரு மாதத்துக்கு மேலாகிவிட்டது. அடுத்த ஞாயிறு வருவதாகக் கூறி மாமியாரை அனுப்பிவிட்டு தவா படப்பிடிப்புப் பணிகளில் இறங் கிவிட்டார். அவர்சொன்ன ஞாயிற்றுக் கிழமை தவா வீடு சென் றார் வித்துடலாக. பெப்ரவரி 17ஆம் நாளிரவு, களமுனை ஒன் றில் திரைப்படத்தின் காட்சிகளைப் பதிவு செய்துவிட்டு, அடுத்த நாட் காலை படப்பிடிப்புக்கான ஒழுங்குகளையும் ஏற்பாடு செய்து விட்டு இரவு 10.00 மணிக்குத் தங்குமிடம் வந்துசேர்ந்தார்.

களமுனைக்கு அருகில் என்பதால் எதிரியின் எறிகணைகளுக் குப் பாதுகாப்பாக அனைவரையும் பதுங்குகுழிக்குள் இறங்கிப் படுக்கச் செய்துவிட்டு ஒரு சிலருடன் மேலே உறங்கிய தவா, மீண்டும் எழுந்திருக்கவே இல்லை. அவருடன் மேஜர் புகழ் மாறன், போர் உதவிப்படைவீரர்களான நிதர்சனப் பணி யாளர்கள் ரவி (சுப்பிரமணியம்), அகிலன்(சிறீமாறன்) ஆகி யோரும் மண்ணின் மடியில் இரண்டறக் கலந்தனர். ஒரு நாளும் ஓய்ந்திருக்காத, உழைப்பு அன்றி உறங்கிக் கிடக்காத தவாவை வித்துடலாக உறக்கத்திற் பார்த்த அனைவருக்குமே நெஞ்சம் பதறித்துடித்தது. 23 வருடங்களாக விடுதலைப் போராட்டத்தின் நகர்வுகளில் சலிப்பின்றி, களைப்பின்றி ஓயாது சுழன்ற அந்தப் புயல் ஓய்ந்துபோய்க் கிடந்தது. 1987 இல் இருந்து உயிர் பிரியும் வரை படப்பிடிப்பையே பணியாகச்செய்து, அனைத்து வரலாற்று நிகழ்வுகளையும் பதிவு செய்து,

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர்நாள் உரைகள். சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பின் முக்கிய நிகழ்வுகள். பேச்சு வார்த்தைகள். சமர்க்களப் படப்பிடிப்புக்கள் தமிழீழ விமானப்படை தொடர்பான ஆரம்பகாலப் பதிவுகள். ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை உருவாக்கம். தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் முதன்மைப் படப்பிடிப்புகள், அரங்க நிகழ்வுகள். தமிழீழத் திரைப்படங்களின் உருவாக்கம்.

என்று அயராது உழைத்தவரை ஒரே நாளில் இழந்துவிட்டோம். இப்போதுஞ்சரி, எப்போதும் தவாவைத் தெரிந்தவர்கள் அனை வருக்குமே ஒருவிடயம் புரியவில்லை. தூக்கிச் சுமந்து அவரது உடலை விதைத்தாகிவிட்டது. அவரது 45ம் நினைவு நாளும் நடந்து முடிந்துவிட்டது. தவா எங்கே என்ற கேள்விக்கு அவர் எங்கேயோ அலுவலாகப் போய்விட்டார், வருவார் என்றுதான் நினைப்பில் இருக்கிறது: தவா நிரந்தரமாகப் பிரிந்துவிட்டார் என்பதை யாருமே நம்பத்தயாராக இல்லை. அவரை யாரும் மறக்கவும் இல்லை தம்நினைப்பிலிருந்து அழிக்கவும் இல்லை. அவரைப் பற்றிய குறிப்புக்களை எழுதி முடியப்போவதும்










இல்லை.

ஒரு மலையை அளந்தது போல அவரது வரலாற்றில் ஒருசிறு துளியைத்தான் இங்கு பதிவுசெய்திருக்கின்றேன். பாரதியாரின் பாட்டில் சேவகனாக வரும் கண்ணனைப் போலவே பலரும் தவாவை எண்ணி உறவு கொண்டாடுகின்றனர். விடுதலைப் போரின் ஆழமான வேர்களுக்கு ஒரு சேவகனாகவே இருந்து நீருற்றிச் சென்ற அவரைப்போல் ஒருவர் இனிப் பிறந்துதான் வரவேண்டும். ஆயினும் அவரது கடமைகள் ஓயப்போவ தில்லை. அவர் உருவாக்கிய போராளிகள் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்வார்கள். தமிழீழத்தைப் பற்றிய செய்திகளைக் காட்சிப்புலத்தின் ஊடாக அறிந்து கொள்ளும் ஒவ்வொருவருமே தவாவின் உழைப்பை நன்கு உணர்ந்து கொள்வார்கள்.

நினைவுப்பகிர்வு – போராளி அம்புலி

தகவல்:- கவிஞர் புதுவை இரத்தினதுரை, கார்த்திக் மாஸ்ரர், ராஜா, சிவகுமார், பிரதீப், சிறி, திலகன், நகுலன், ஏரம்பு, சேரன், சாரதா, தமிழவள் மற்றும் நிதர்சனப் போராளிகள்.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”

# தமிழீழ செய்திகள்




# செம்மணியில் எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதிக்கு சென்று பார்வையிட்டார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

16.02.2025

யாழ்ப்பாணம் செம்மணி பகுதிக்கு அருகில் மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.



செம்மணி பகுதிக்கு அருகில் அமைந்துள்ள சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மின் தகன எரியூட்டி அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.





அவற்றுக்கு கடந்த வியாழக்கிழமை (13) அத்திவாரம் வெட்டும் போது, மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் காணப்பட்டுள்ளன.

அதனை அடுத்து, கட்டட வேலைகளை முன்னெடுத்த ஒப்பந்தக் காரர், அது தொடர்பில் நல்லூர் பிரதேச சபை மற்றும் மயான அபிவிருத்தி சபையினருக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ள நிலையில், கட்டட பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

அந்நிலையிலையே நேற்று சனிக்கிழமை (15) நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

1996ஆம் ஆண்டு சுண்டுக்குளி மாணவி கிருஷாந்தி உள்ளிட்ட 4 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை 1995ஆம் ஆண்டு மற்றும் 96ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்ட பலர் படுகொலை செய்யப்பட்டு, செம்மணி பகுதியில் உள்ள வயல் வெளிகளில் புதைக்கப்பட்ட சம்பவம் வெளிச்சத்திற்கு வந்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக் கப்பட்டதாக கூறப்படும் பகுதிகள் குறித்த மயானத்தை அண் மித்த பகுதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆதாரங்களை திரட்டும் செயன்முறையை கனடா வலுப்படுத்த வேண்டும்!

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

16.02.2025

இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களை திரட்டும் செயன்முறை வரவேற்கத்தக்கதாகும். ஆனால் அச்செயற்திட்டத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆணை மேலும் வலுப்படுத்தப்படவேண்டும். அதற்குரிய அழுத் தங்களை இணையனுசரணை நாடுகளில் ஒன்றான கனடா வழங்கவேண்டும் என இலங்கைக்கான அந்நாட்டு உயர்ஸ் தானிகர் எரிக் வோல்ஷிடம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி யின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இலங்கைக் கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ்க்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை(14) இரவு 7.30 மணிக்கு யாழ் ஃபொக்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது தமிழர்கள் முகங்கொடுத்துவரும் சமகாலப் பிரச்சினைகள், அப்பிரச்சினைகளுக்குரிய தீர்வை வழங் குவதில் தற்போதைய அரசாங்கத்தின் அணுகுமுறைகள் உள் ளிட்ட விடயங்கள் தொடர்பில் கனேடிய உயர்ஸ்தானிகர் கஜேந்திரகுமாரிடம் கேட்டறிந்தார்.

அதற்குப் பதிலளித்த கஜேந்திரகுமார், தேசிய மக்கள் சக்தி அர சாங்கம் தாம் புதியதொரு அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப் பப்போவதாக ஏற்கனவே கூறியிருந்தாலும், தற்போதுவரை எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை எனவும், கடந்த காலத்தை ஒத்த நிலைவரமே இப்போதும் தொடர்வதாகவும் விசனத்துடன் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக் குதல், அரசியல் கைதிகளை விடுவித்தல் என்பன உள்ளடங் கலாக அரசாங்கத்தினால் முன்னர் அளிக்கப்பட்ட வாக் குறுதிகள் இன்னமும் உரியவாறு நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவித்த கஜேந்திரகுமார், இவற்றை நாம் கூறுவதற்கு முன்னரே நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு இருப்பினும் கூட, அரசாங்கம் வேண்டுமென்றே அவற்றைத் தவிர்த்து வருவதாகவே கருதவேண்டியிருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

மேலும் தமிழர்களுக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க அரசியல் தீர்வாக தாம் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வையே வலியுறுத்திவருவதாக கனேடிய உயர்ஸ்தானிகரிடம் கூறிய அவர், தற்போது பாராளுமன்றத்தில் வட, கிழக்கு மாகாணங் களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 19 உறுப்பினர்களில் தமிழ்த் தேசியக்கட்சிகளைச் சேர்ந்த 10 உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயலாற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாகவும், அதனை இலக்காகக்கொண்ட ஒற்றுமை முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் எடுத்துரைத்தார்.

அத்தோடு கனடாவில் நடைமுறையில் இருக்கும் சமஷ்டி முறைமை தொடர்பில் இலங்கை மக்களுக்குத் தெளிவூட்டுவதற் குரிய செயற்திட்டத்தை கனடா முன்னெடுக்கவேண்டும் என்றும் அவர் உயர்ஸ்தானிகரிடம் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பெருமளவுக்கு வலுவற்றதெனினும், இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களை திரட்டும் செயன் முறை வரவேற்கத்தக்கதாகும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.



இருப்பினும் அச்செயற்திட்டத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆணை மேலும் வலுப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத் திய அவர், அதற்குரிய அழுத்தங்களை இணையனுசரணை நாடுகளில் ஒன்றான கனடா வழங்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.



**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# 600 தமிழ் மக்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட இடமே செம்மணி

### பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

17.02.2025

'செம்மணி பகுதி, சுமார் 600 தமிழ் பொதுமக்கள் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட இடமாகக் கருதப் படுகிறது' என்று பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - செம்மணி பகுதியிலுள்ள இந்து மயானத்தில் தகன மேடை அமைப்பதற்காக வெட்டப்பட்ட இடத்தில் மனித எச்சங்கள் மீட்கப்பட்ட இடத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

'படுகொலைகளுடன் தொடர்புடைய 10 இடங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றில் இரண்டு இடங்களில் மாத்திரமே அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன'.

'ஏனைய இடங்களில் கணிசமான அளவு மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளதா? என்ற சந்தேகம் எழுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.



# மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக போராடும் சட்டத்தரணி, அருட்தந்தையர் உட்பட 10 பேருக்கு நீதிமன்றம் பிறப்பித்துள்ள தடை உத்தரவு

17.02.2025

மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக மக்கள் போராட்டம் ஒன்று இடம் பெறலாம் என்ற அடிப்படையில் இதனால் பொதுமக்களுக்கு இடையூறாக, நஷ்டம், தொந்தரவு ஏற்படலாம் என்ற வகையில் மன்னார் பொலிசாரால் முன் வைக்கப்பட்ட தடை உத்தரவுக்கு பல்வேறு நிபந்தனைகளுடன் மன்னார் நீதவான் நீதிமன்றம் 17ம் திகதி அன்று திங்கட் கிழமை(17) மாலை தடை உத்தரவுக்கு அனுமதி வழங்கி யுள்ளது.



மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கனிய மணல் அகழ்வு மேற்கொள்வதற்கான அனுமதி வழங்குவது தொடர்பாக அரச திணைக்கள அதிகாரிகள் ஆய்வு செய்வதற்காக இரு முறை மன்னார் மாவட்டத்திற்கு வருகை தந்த நிலையில் இரு முறையும் மக்களின் ஒன்றினைந்த எதிர்பால் அரச திணைக களங்கள் உள்ளடங்களாக சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனமும் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவ்வாறான நிலையில் மீண்டும் குறித்த அரச திணைக் களங்கள் மற்றும் ஓரியன் மினரல் நிறுவனம் ஆய்வுக்காக மன்னார் ஓலைத்தொடுவாய் மற்றும் தோட்டவெளி பகுதிக்கு வருகை தர உள்ள நிலையில் பொதுமக்கள் அணி திரண்டு போராட்டம் மேற்கொள்ள உள்ளதாக பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதன் அடிப்படையில் போராட்டக்காரர்கள் என அடையாளப் படுத்தி சிலரின் பெயர்களை குறிப்பிட்டு பல்வேறு நிபந்தனை களுடன் மன்னார் பொலிசார் தடையுத்தரவை பெற்றுள்ளனர்.

குறித்த தடை உத்தரவானது சட்டத்தரணி செல்வராஜ் டினேசன், அருட்தந்தை மார்கஸ் அடிகளார் உள்ளடங்களாக 10 பேருக்கு எதிராக பெறப்பட்டுள்ளது.

குறித்த தடை உத்தரவின் கீழ் மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் போராட்டம் மேற்கொள்ளாமல் இருத்தல் வேண்டும். எந்த பொது சொத்துக்களுக்கு தனியார் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்த கூடாது. மிக முக்கியமாக மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் ஓரியன் மினரல் நிறுவனத்தின் செயல்பாட்டுக்கும் இடையூறு ஏற்படுத்த கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த நீதிமன்ற கட்டளை இன்று திங்கட்கிழமை(17) ஆம் திகதி தொடக்கம் எதிர் வரும் 14 நாட்களுக்கு வலுவுள்ள தாக காணப்படும் என குறித்த கட்டளையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் மன்னார் மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான பிரச்சார நடவடிக்கையின் போது மன்னார் மக்களுக்கு விருப்பம் இல்லாத கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்க போவதில்லை என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பகிரங்கமாக தெரிவித்த நிலையில் அவர் ஜனாதி பதியாக ஒரு வருட காலப்பகுதிக்குள் கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதற்கான கூர்ப்பு அறிக்கையை தயார் செய் வதற்கான இரண்டாவது முறை அரச திணைக்களங்கள் மன்னார் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளமை குறிப்பிடத்தக்கது.



2025.02.17 ம் திகதி மன்னார் நீதவான் நீதிமன்றில்

1. செல்வராசா டினேசன் தலைமன்னார் மன்னார்
2. பிரகாஷ் மகிமா தோட்டவெளி மன்னார்
3. அருட் தந்தை மார்கஸ் தோட்டவெளி தேவாலயத்தில் அருட் தந்தை
4. கிறிஸ்து நேசரத்னம் தோட்டவெளி தேவாலயத்தின் அருட் தந்தை
5. சுந்தரதாஸ் ஜங்கரன் சில்வகரிசல் பேசாலை மன்னார்
6. நேசன் லூஸ்தீன் தோட்ட வெளி மன்னார்
7. அமிர்தநாதன் நடகுநாஸ் வெனிஸ்டா வேதசாட்சி கோவில் தோட்டவெளி
8. இமானுவேல் கனீஸ்டன் வேதசாட்சி கோவில் தோட்டவெளி
9. செபமாலை பிரான்சிஸ் கொணையன் குடியிருப்பு தோட்டவெளி
10. [illegible]

குற்றவியல் நடவடிக்கை முறை சட்ட கோவை 106 (1) பிரிவின் பிரகாரம் பிறப்பிக்கப்படும் கட்டளை

2. எந்தவொரு பொது சொத்துகளுக்கும் மற்றும் வேறு பிரிவினரது தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்காது இருத்தல் வேண்டும்

3. மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் ஓரியன் மினரல் பிறைவட் லிமிடெட் நிறுவன கடமைக்கு இடையூறு ஏற்படும் வகையில் எந்தவொரு செயற்பாடும் செய்யாது இருத்தல் வேண்டும்.

நீதவான்
நீதவான் நீதிமன்றம்
மன்னார்

Sup.Num.Addl.Magistrate, Mannar

**மனித உரிமைக்கும் மனித நீதிக்கும் சமாதானத்திற்கும் குரலெழுப்பும் இந்த உலகமானது, உரிமைகேட்டு, நீதிகேட்டு, சமாதான வழியில் தீர்வுகேட்டு நிற்கும் எமது மக்களிற்குச் சார்பாகக் குரலெழுப்பவேண்டும்; இதுவெ உலகத்தின் இன்றைய தார்மீகக் கடப்பாடு ஆகம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# தனியார் காணியில் விகாரை கட்டியமை சட்டவிரோதமான செயற்பாடு

## யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு

17.02.2025

தனியார் காணியில் விகாரை கட்டியமை சட்டவிரோதமான செயற்பாடு எனக் கூறும் யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு, விகாரை கட்டப்பட்டதை வன்மையாக கண்டித்ததோடு காணி உரிமையாளருக்கு நீதி கிடைக்குமா என்பது சந்தேகமே என்றும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.






கடந்த பல வருடங்களாக இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து வந்த தனியார் காணியில் அவர்களது அனுமதியின்றி இராணுவத்தின் பாதுகாவலில் பௌத்த விகாரை (திஸ்ஸ விகாரை) கட்டப்பட்டமையை யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இராணுவம் போர்க்காலத்தில் கையகப்படுத்திய ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளில் உள்ள வீடுகள், இந்துக் கோயில்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் பலவற்றை இடிப்பதற்கும் தரைமட்டமாக்குவதற்கும் இவர்களுக்கு யார் உத்தரவு கொடுத்தது?

அண்மையில் புதிய ஜனாதிபதி “மக்களுடைய காணிகள் மக்களுக்கே வழங்கப்படும்” என்று வழங்கிய வாக்குறுதியின்படி மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படுமா?

நீதிமன்றத் தீர்ப்புக்கள் மதிக்கப்படாது கட்டுமானப் பணிகள் பாதுகாப்பு படையினரின் அனுசரணையில் நடக்கும்போது (உ+ம்: குருந்தூர் மலை விவகாரம்) தையிட்டி விகாரை விவகாரத்தில் காணி உரிமையாளர்களுக்கு நீதி கிடைக்குமா என்பது சந்தேகமே.

ஆனால், தையிட்டி விகாரை விவகாரம் இதுபோன்றே வேறு இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள இடங்களில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இதனை இடித்து அகற்றினால் பிரச்சினை தீருமா என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டும். இடிப்பதால் தென்னிலங்கையில் மதக் கடுங்கோட்பாட்டுவாதிகளால் பிரச்சினை இன்னமும் மோசமாகும் என்பதே யதார்த்தம்.

அத்துடன் மத நல்லிணக்கம் எட்டாக்கனியாகிவிடும். எனவே, நீதிமன்றத் தீர்ப்புக்களை எல்லா இடங்களிலும் எல்லா மக்களும் (பாதுகாப்புப் படையினர் உட்பட) மதித்து நடப்பது சாத்தியப்படக்கூடிய வழிமுறை என்று நாம் கருதுகிறோம்.

வடக்கு, கிழக்கில் போர் முடிவுக்கு வந்து 16 வருடங்களாகியும் இன்னமும் பெருமளவில் நிலைகொண்டிருக்கும் பாதுகாப்புப் படையினர் அங்குள்ள மக்களின் பாதுகாப்பையும் அடிப்படை மனித உரிமைகளையும் மதித்துச் செயற்படும்போது அது இப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற கள நிலையை உருவாக்கும் என குறிப்பிட விரும்புகிறோம் என்றுள்ளது.

# மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கான கள ஆய்வை உடனடியாக நிறுத்த வேண்டும்

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

18.02.2025

மன்னார் தீவில் மக்களின் விருப்பமின்றி கனிய மணல் அகழ்வதற்காக நாளை (19) மேற்கொள்ளப்படவுள்ள கள ஆய்வினை உடனடியாக நிறுத்த வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.



மக்களின் விருப்பமின்றி இந்த கள ஆய்வு இடம்பெற்றால் பாரிய அளவில் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய சூழ்நிலை நிலவுகிறது. இதனால் ஆபத்தான நிலைமைகள் தோன்றலாம். இதன் காரணமாக சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களும் உண்டாகும் என ரவிகரன் மேலும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் இன்று (18) நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்தில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

மன்னார் தீவுப் பகுதியில் இடம்பெற்று வரும் கனிய மணல் அகழ்வு உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

மன்னார் தீவுப் பகுதி என்பது மிகவும் குறுகிய தாழ்வான நிலப்பகுதியாகும். இது, கடல் நீர் மட்டத்திலிருந்து தாழ்வான நிலப்பகுதி என்பதால் மழைக்காலத்தில் நீர் வழிந்தோட முடியாமல் பொதுமக்கள் தொடர்ந்தும் இடம்பெயரவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

இயற்கை அனர்த்தத்தை தாங்குதிறன் கொண்டதாக தீவுப் பகுதியின் தரைத்தோற்ற அமைவிடம் இல்லை. அதனால்தான்




மன்னார் தீவில் மூன்று மாடிகளுக்கு மேல் கட்டடங்களை அமைப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை அனுமதி வழங்குவதில்லை. ஆகவே, இப்பகுதியில் கனியமணல் அகழ்வதென்பது மிகவும் பாரதூரமான விளைவுகளை பொது மக்களுக்கு ஏற்படுத்தும்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையின் கீழ் 23 அரச திணைக்களங்கள் மன்னார் தீவுப் பகுதிக்குச் சென்று கள ஆய்வு மேற்கொண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை வழங்குவதற்குரிய ஏற்பாட்டுக்காக முன்னர் இரண்டு முறை சென்றபோதும் மக்களின் பாரிய எதிர்ப்பு காரணமாக கள ஆய்வு மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்பட்டது.

இந்நிலையில் நேற்றைய தினம் (17) மன்னார் நீதிமன்றத்தில் போராட்டத்துக்கு எதிராக தடை உத்தரவு பெற்றுக்கொண்டு, நாளை (19) அப்பகுதியில் கள ஆய்வினை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும். அந்த மக்களுடைய விருப்பம் இல்லாமல் தனியார் காணிக்குள் அத்துமீறி உட்புகுந்து இந்த ஆய்வை மேற்கொண்டு, தனியார் நிறுவனங்களுக்கு கனியமணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதென்பது அந்த மக்களுக்குச் செய்கின்ற மிகப்பெரிய துரோகமாகும்.

எந்தத் திட்டமாக இருந்தாலும் மக்களுடைய விருப்பமின்றி செயற்படுத்த முடியாது. பாரிய அளவில் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய சூழ்நிலை நிலவுவதால் ஆபத்தான நிலைமைகள் தோன்றலாம். சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது.

ஆகவே, நாளைய கள ஆய்வை மத்திய சுற்றாடல் அதிகார சபையும் ஏனைய திணைக்களங்களும் உடனடியாக நிறுத்த வேண்டும் என இந்த உயரிய சபையின் ஊடாக கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்.

www.sangathamil.ca

# வெளிநாட்டு உணவகங்களின் வருகை பாரம்பரிய உணவுகளை மேலும் ஓரங்கட்டிவிடும்

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்



19.02.2025

ஒரு இனத்தின் தேசிய அடையாளங்களில் உணவுப் பண்பாடும் ஒன்று. தேசியத்தைக் கட்டமைப்பதில் பண்பாட்டின் ஏனைய கூறுகளைப் போன்று உணவுப் பண்பாடும் காத்திரமான பங்களிப்பைச் செய்கிறது. ஆனால், மதப் பண்பாட்டில் பௌத்தத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கிளர்ந்தெழுகின்ற நாம், உணவுப் பண்பாட்டில் நிகழும் ஆக்கிரமிப்புகள் குறித்துக் கண்டு கொள்ளாமல் இருக்கிறோம். அண்மைக்காலமாக வெளிநாட்டு உணவகங்கள் பல இங்கு கிளைகளைத் திறந்து கொண்டிருக்கின்றன. எமது உணவுப் பண்பாட்டில் திணிக்கப்படும் மாற்றங்கள் பற்றி நாம் விழிப்படையாவிட்டால் வெளிநாட்டு உணவகங்கள் எமது பாரம்பரிய உணவுகளை மேலும் ஓரங்கட்டிவிடும் எமது ஆரோக்கியமும் மேலும் வீழ்ச்சியடையும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சிறுதானியப் பொங்கல் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) ஊரெழு வளர்பிறை சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றுகையில்,

நெல் அரிசிச் சோற்றின் வருகையுடனேயே எமது உணவுத் தட்டுகளில் இருந்து சாமை, வரகு, கம்பு, குரக்கன், குதிரைவாலி போன்ற சிறுதானியங்கள் ஓரங்கட்டப்பட்டன. நெல் அரிசியுடன் ஒப்பிடும்போது சிறுதானியங்கள் அதிக கலோரிப் பெறுமானம் கொண்டவை அதிக நார்ச்சத்து உடையவை. அதிக அளவில் மாப்பொருளையும் புரதத்தையும் விற்றமின்களையும் கனியுப்புகளையும் கொண்டவை. மேலதிகமாக, புற்றுநோய் எதிர்ப்புச் சேர்வைகளையும் கொண்டிருக்கின்றன. இவற்றால்தான் எமது முன்னோர்கள் தேக ஆரோக்கியத்துடன் நூற்றாண்டைக் கடந்தும் வாழ்ந்தார்கள்.

சூழலியல் நோக்கிலும் நெல்லைவிட சிறுதானியங்களே முதன்மை பெறுகின்றன. நெல் பயிரிடுவதற்கு ஈரமான தரையும் அதிகளவில் நீர்ப்பாசனமும் தேவைப்படுகிறது. ஆனால், சிறுதானியங்கள் வறண்ட சூழலிலும் குறைந்த நீர்த் தேவையுடன் வளரக்கூடியவை. நெல் நோய்களினதும் பீடைகளினதும் தாக்கத்துக்கு அதிகளவில் ஆளாகும்போது சிறுதானியங்கள் இவற்றுக்கு எதிராகத் தாக்குப் பிடிக்கின்றன. காலநிலை மாற்றம் எம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நிலையில் சிறுதானியங்களை நோக்கி நாம் திரும்புவது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

எமது இளைய தலைமுறை பாரம்பரிய உணவுகளை நாகரிக மற்றதொன்றாகக் கருதும் மனப்பாங்கைக் கொண்டிருக்கின்றது. துரித உணவகங்களையே அதிகம் நாடுகிறார்கள். கொத்து ரொட்டியையும், பிஸ்ஸாவையும், ப்ரைட் றைஸ்சையுமே விரும்புகிறார்கள். மென்பான நிறுவனங்களின் விளம்பரங்களில் மயங்கி இந்த உணவுகளோடு சேர்த்து ஆபத்தான மென்பானங்களையும் அருந்தி வருகிறார்கள். தேசியம் என்பது வெறும் அரசியல் சொல்லாகியுள்ள இன்றைய சூழ்நிலையில் உணவுப் பண்பாட்டுத் தேசியம் பற்றிய புரிதலை எமது மக்களிடம் ஏற்படுத்துவது அவசியம் என்றார்.

# அம்பாறை உடும்பன்குளம் படுகொலையின் 39 ஆம் ஆண்டு நினைவு நாள்

19.02.2025

19-02-1986 அன்று இன்றைய நாளில் உடும்பன் குளப்பகுதியில் 120 இற்கும் மேற்பட்ட அப்பாவி தமிழர்களை படுகொலை செய்த 36ஆவது மறக்க முடியாத நினைவு நாள் இலங்கை தமிழர்கள் வரலாற்றில் கிழக்குமாகாணத்திலும் சிறீலங்கா இராணுவத்தினால் கொடூரமான முறையில் கூடுதலான இனப் படுகொலைகள் நடந்திருக்கின்றன.



இதில் பல தமிழ் இளைஞர்களை சித்திரவதை செய்தும் வெட்டியும் சுட்டும் படுகொலை செய்த அதேவேளை பெண்களை வெட்டியும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியும் வீடுகளோடு சேர்த்து எரித்தும் கொன்றுள்ளனர். இந்த வகையில் பல ஆயிரக் கணக்கான தமிழ் உறவுகளின் மரண ஓலத்தை கிழக்கு மாகாணம் கண்டிருக்கின்றது.

இவ்வாறு அம்பாறை மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் சிங்கள இராணுவத்தினரின் கொடூரங்களுக்குள் இருந்து தப்ப முடியாமல் போனது. இந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள உடும்பன் குளம் என்ற கிராமத்தில் தான் கொடூரமான படுகொலைச் சம்பவம் ஒன்று 1986 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. வளமான மண்ணில் வளமாக வாழ்ந்த உறவுகள் 36 வருடங்கள் கழிந்த நிலையிலும் இன்றும் அங்கு சென்று விவசாயம் செய்ய முடியாத நிலைக்கு இப்படுகொலையானது மறக்க முடியாத ரணவலியை ஏற்படுத்தியிருக்கிறது.

இக்கிராமமானது வயல் நிலங்களையும் மலைகளையும் அழகான அருவிகளையும் கொண்ட அழகிய தொரு கிராமமாகும். உடும்பன்குள கிராமத்தில் விவசாயம் செய்யும் மக்கள் வயல் விதைப்புக்களிலும் அறுவடைக் காலங்களிலும் தங்கள் குடும்பத்துடன் சென்று அருகில் உள்ள மலைகளில் வடிகாலிலேயே வாழ்ந்து வந்தார்கள். அக்காலப்பகுதியில் தங்கள் உணவுத் தேவைக்கு மலைகளில் உள்ள மேடுகளில் சோளம் வெண்டி கீரை போன்றவற்றை பயிரிட்டும் அருகில் உள்ள குளம் ஒன்றில் மீன்களை பிடித்தும் உணவாக்கிக் கொள்வார்கள்.

இவ்வாறு தங்கள் நிலங்களில் நிம்மதியாக வாழ்ந்த இம்மக்கள் தங்களுக்கு இப்படி ஒரு கொடூரம் நடக்கவிருப்பதை அறிந்திருக்க வாய்ப்பே இல்லை.

இப்படுகொலைச் சம்பவமானது தற்செயலாக வந்த இராணுவத்தினராலோ அல்லது பதில் நடவடிக்கை என்ற ரீதியிலோ இப்படுகொலைகள் செய்யப்படவில்லை. மாறாக இம்மண்ணில் இருந்து இவர்களை விரட்டுவதே இவர்களின் உள்ளார்ந்த நோக்கமாகும் என்பதை இம்மக்கள் பின்னாளில் அறிய முடிந்தது.

19-02-1986 அன்று காலை கொண்டை வெட்டுவான் இராணுவ முகாமில் இருந்த இராணுவம் ஏற்கனவே திட்டமிட்டபடி உடும்பன்குளம் கிராமம் நோக்கி சென்றது. அக்கிராமத்தைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் தங்களோடு பிறமத காடையர்களை இணைத்துக் கொண்டனர். கிராம மக்களில் கூடுதலானவர்களை மாசிமாத அறுவடைக்காலம் என்பதால் வயல் வேலைகளுக்குச் சென்று விடுவார்கள் அன்றும் அப்படித்தான் வயல் வேலைக்குச் சென்று விட்டார்கள். வயலில் வேலை செய்த அப்பாவி பொதுமக்களை கைது செய்து கைகளையும் கண்களையும் கட்டி துன்புறுத்தினார்கள். ஆண்களுடைய உறுப்பை அறுத்தார்கள். பின்னர் அவர்களை சுட்டும் வெட்டியும் படுகொலை செய்துவிட்டு வைக்கோலை போட்டு எரித்து விட்டுச் சென்று விட்டார்கள்.

இந்தப் படுகொலை சம்பவத்தினை பற்றி வன்னியிலிருந்து சென்ற ஒரு பத்திரிகையாளர் இந்த படுகொலை சம்பவத்தில் உயிர் தப்பியவர்களை நேர்காணல் செய்து மேலதிக தகவல்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனாலும் இன்றுவரை இப்படுகொலைக்கு நீதிகிடைக்காத நிலையில் சிறீலங்கா இனவாத அரசின் தமிழின அழிப்பு தொடர்கின்றது.




## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# மாணவி வித்தியா படுகொலை வழக்கில்; சிறீலங்கா சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை[?]

20.02.2025



யாழ்ப்பாணம் புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியாவை 2015 ஆம் ஆண்டு கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தி கொலை செய்யப்பட்டார். பத்து ஆண்டுகள் முடிந்துவிட்டன.

வித்யா படுகொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான சுவிஸ் குமாரை ஆரம்பத்தில் தப்பிக்க உதவிய குற்றச்சாட்டில் வட மாகாண முன்னாள் சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.மிஹால் 4 வருட சிறைத்தண்டை வழங்கி தீர்ப்பளித்தார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் குற்றவாளியான சுவிஸ்குமாரை தப்பிக்க உதவிய வழக்கு இன்று (20-02-2025) வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்றது.

இதன்போது சுவிஸ்குமார் அவர்களை பணம் பெற்று தப்பிக்க உதவிய குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்ட நிலையில் அப்போதைய வடமாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்க அவர்களுக்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், 50 ஆயிரம் ரூபாய் குற்றப்பணமும் அறவிடப்பட்டது.

மற்றைய சந்தேக நபரான பொலிஸ் உத்தியோகத்தர் சிறிகஜன் அவர்களுக்கும் 4 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன், குறித்த நபர் நாட்டை விட்டு தப்பிச் சென்றதால் அவருக்கு திறந்த பிடியாணையும் வவுனியா மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது.

# யாழ். அரியாலை மனிதப் புதை குழியைப் பார்வையிட்ட யாழ். நீதவான்!

20.02.2025

யாழ்ப்பாணம் - அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் உள்ள மனிதப் புதைகுழியை யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா இன்று பார்வையிட்டார்...!





குறித்த மயானப் பகுதியில் குழி வெட்டியபோது அண்மையில் மனித எலும்புகள் மீட்கப்பட்டிருந்து. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த பகுதியில் இன்று விஜயம் செய்த நீதவான் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதன்படி குழியில் இருந்து எலும்புகள் மீட்கப்பட்டு பகுப்பாய்வுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அப்பகுதியை ஸ்கானர் இயந்திர உதவியுடன் முழுமையாக பரிசோதனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது சட்ட வைத்திய அதிகாரி, பொலிஸார், தடயவியல் பொலிஸார், நல்லூர் பிரதேச செயலர் முளன்னாள் மாநகர சபை உறுப்பினர் வைத்திலிங்கம் கிருபாகரன் என பலரும் பிரசன்னமாகி இருந்தனர்.









**அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப, காலமாற்றத்திற்கு ஏற்ப, சமூகப் பண்பாட்டுப் புறநிலைகளுக்கு ஏற்பச் சிந்தனை உலகமும் மாற்றங்களைச் சந்திக்கிறது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# 2017 பெப்ரவரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்றுடன் 2920 நாட்கள் கடந்தும்...!

# கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினரின் மாபெரும் தீச்சட்டி ஏந்திய கவனயீர்ப்பு பேரணி!

20.02.2025

ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை. ஜனாதிபதிகளின் பெயர்கள் மாறியுள்ளன செயல்கள் மாறவில்லையென சர்வ தேச நீதி கோரி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கிளிநொச்சியில் முன்னெடுத்த போராட்டத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.






கிளிநொச்சியில் கடந்த 2017 ஆம் ஆண்டு இதே நாளில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் இன்று எட்டாவது வருடத்தை நிறைவு செய்துள்ளது.

இந்நிலையில், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் தீச்சட்டி ஏந்திய பேரணி நடைபெற்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தீச்சட்டி ஏந்திய பேரணி டிப்போ சந்தி வரை சென்றது. போராட் டத்தில் வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பெருமளவில் கலந்துகொண்டனர்.



2017 பெப்பரவரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் எட்டு வருடங்களாக அதாவது இன்றுடன் 2920 நாட்களாக கடந்து தொடர்கின்றது. 2009 மே 18 இல் முள்ளிவாய்க்காலில் போர் மௌனிக்கப்பட்டு 16 ஆண்டுகள் ஆகின்றன.

இன்றும் இனப்படுகொலை தொடர்ந்த வண்ணம் உள்ளன. ஆனால், இலங்கையில் ஜனாதிபதிகளும் ஆட்சியாளர்களும் மாறினாலும் தொடர்ந்தும் இனப் படுகொலைக்கான நீதி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, நேரடியாக படையினர்களிடம் சாட்சியங்களுடன் ஒப்படைக்கப்பட்டவர் களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான நீதி இதுவரை கிடைக்கவில்லை.

தேசிய மக்கள் சக்தி மூலம் தற்போதய புதிய ஜனாதிபதியாக கடந்த 2024 செப்டெம்பர் பதவியேற்ற அநுரகுமார திஸா நாயக்க 2024 நவம்பர் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்று அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்து மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் எந்தவொரு நல்லெண்ணமும் அவர்களின் செயலில் தென்படவில்லை. மாறாக புலனாய் வாளர்களை ஏவி விட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மாரைக் கண்காணிப்பதுடன் அவர்களைச் சுதந்திரமாக தமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுக ளுக்கு நீதி கேட்டு நடத்தும் கவனயீர்ப்புப் போராட்டங்களில் கலந்துகொள்ள விடாமல் நீதிமன்ற தடை உத்தரவுகளைக் கொடுத்து ஜனநாயக வழிப் போராட்டத்தை அடக்கி ஒடுக்கி தடுக்கும் அடாவடிச் செயல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை. ஜனாதிபதிகளின் பெயர்கள் மாறியுள்ளன செயல்கள் மாறவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடைய பெற்றோர்கள் இது வரை 300 இற்கும் மேற்பட்ட தமது உறவுகளின் உண்மை நிலையறியாது வேதனையுடன் உயிர் இழந்த பரிதாபங்கள் வடக்கு, கிழக்கில் நடந்துள்ளன.

எங்கள் வேதனைகளையும் வலிகளையும் உண் மைகளையும் இலங்கை அரசு புரியவில்லை. அதேபோல் சர்வ தேசமும் புரியவில்லை என்பதையே கடந்த எட்டு வருங்களாக நாங்கள் கண்ட உண்மையென குடும்பங்கள் தெரி வித்துள்ளன.
















# சமூகச் செயற்பாட்டாளருக்கு பயங்கரவாத ஒழிப்பு மற்றும் விசாரணைப் பிரிவு அழைப்பு


SRI LANKA POLICE
MESSAGE FORM

20.02.2025

சமூக செயற்பாட்டாளர் குருசுமுத்து விமலசேன லவக்குமார் மட்டக்களப்பு கல்லடியில் உள்ள பயங்கரவாத ஒழிப்பு மற்றும் விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை (20) காலை 9.00 மணிக்கு வாக்குமூலம் வழங்குவதற்காக, வாழைச்சேனை பொலிஸாரினால் அழைப்பு விடுக்கப்பட்டதாக கு.வி.லவக்குமார் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இவர் கடந்த காலங்களில், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பல்வேறு அரசியல் பிரச்சினைகளுக்கு நியாயம் வேண்டி அரசிற்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டு வந்தார்.

# தையிட்டி போராட்டத்தில் ஈடுபட்ட வேலன் சுவாமியை விசாரணைக்கு அழைப்பு


SRI LANKA POLICE
MESSAGE FORM

20.02.2025

கடந்த பௌர்ணமி தினத்தன்று நடைபெற்ற சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் குறித்து வாக்குமூலம் பெறுவதற்கு வேலன் சுவாமிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

நாளையதினம் (20) பலாலி பொலிஸ் நிலையத்திற்கு, நண்பகல் 12 மணிக்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரையானது மக்களது காணிகளை அபகரித்து சட்டவிரோதமாக கட்டப்பட்ட நிலையில், அந்த விகாரையை அகற்றுமாறு கோரி இந்த போராட்ட மானது முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம் தொடர்பாக செல்வராஜா கஜேந்திரனிடம் பலாலிப் பொலிஸ் வாக்குமூலம்

20.02.2025

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம் தொடர்பாக செல்வராஜா கஜேந்திரன், வாசுகி சுதாகரன், வேலன் சுவாமிகள் உள்ளிட்டோர் இன்றைய தினம் வியாழக் கிழமை பலாலி பொலிஸ் நிலை யத்தில் வாக்கு மூலம் அளித் துள்ளனர்.



தையட்டி விகாரையில் கடந்த 12 ஆம் தேதி மேற்கொண்ட போராட்டத்து தொடர்பில் விகாரையின் பிக்கு வழங்கிய முறைப் பாட்டிற்கு அமைய பொலிசாரால் குறித்த வாக்கு மூலம் பெறப்பட்டது.

வாக்கு மூலம் அளிப்பதற்காக மூவரையும் இன்றைய தினம் வியாழக்கிழமை 12 மணிக்கு சமூகம் அளிக்குமாறு தெரிவித்த பொலிசார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் அவர்களை காத்திருக்கச் செய்து அதன் பின்னர் அவர்களிடம் வாக்கு மூலம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் குறித்த விகாரை அமைக் கப்பட்ட இடம் மக்களின் உறுதியுள்ள காணிகள் என்பதை அரச திணைக்களங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

என்ற விடயத்தை பொலிசாருக்கு தெரியப்படுத்திய நிலையில் தாம் குறித்த விகாரை அகற்றப்படும் வரை தொடர்ந்து போராட் டத்தில் ஈடுபடுவோம் என செல்வராஜா கஜேந்திரன் வாக்கு மூலம் அளித்த பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.



# மனிதப் புதை குழி தொடர்பில் விசாரணை மேற்கொள்ள சிறீலங்கா அரசு ஒத்துழைக்கவேண்டும்

### பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

20.02.2025

அரியாலை சிந்துப் பாத்தி மயானத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் மனித எச்சங்கள் வெளிவந்த நிலையில் அது குறித்து யாழ்ப்பாண நீதிமன்றம் கவனம் செலுத்தி இருப்பது வர வேற்கத்தக்க விடயம் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த மயானத்தில் மனித எச்சங்கள் வெளிவந்தமை தொடர்பில் அறிய கிடைத்ததும் நாங்கள் சென்று பார்வையிட்டோம்.

அங்கு காணப்பட்ட எச்சங்களை பார்க்கும்போது எங்கிருந்தோ கொண்டு வந்து புதைக்கப்பட்ட எச்சங்களாகப் பாகங்கள் கலக்கப்பட்டவையாகக் காட்சி தந்தது.

இந்நிலையில் யாழ்ப்பாண நீதி மன்றம் குறித்த விடயம் தொடர் பில் கவனம் செலுத்தி இருப்பது நம்பிக்கை தரும் நிலையில், தேவை ஏற்படின் சர்வதேச தரத்திலான பகுப்பாய்வுகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் யுத்த கால உரிமை மீறல்கள் தொடர் பில் சர்வதேச விசாரணைகளைக் கோர மாட்டோம் உள்ளக விசாரணைகளே இடம்பெறும் எனக் கூறி வரும் நிலையில் குறித்த புதைகுழி யுத்த காலத்தில் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட மனித எச்சங்களாக இருக்கலாம் என நாம் சந்தேகிக்கிறோம்.

ஆகவே தற்போதைய அரசாங்கத்திடம் நாங்கள் கோரிக்கை முன் வைக்கிறோம் குறித்த மனிதப் புதை குழி தொடர்பில் நீதியான நம்பகத்தன்மையான விசாரணைகளை மேற்கொள் வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# சமூகப் புதைகுழியை மறைக்குமுகமாக தையிட்டி விகாரை கட்டப்பட்டுள்ளதா?

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சத்திவேல்

21.02.2025

சமூகப் புதைகுழியினை மறைக்கும் முகமாக தையிட்டி விகாரை கட்டப்பட்டுள்ளதா என சந்தேகம் இருப்பதாக சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற் கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரால் இன்று (21) வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

படையினரை பொறுத்தவரையில் தமிழர் பிரதேசத்தில் நாட்டின் சட்டங்கள் அவர்களின் இரும்பு சப்பாத்தின் கீழ் என்பதற்கு இன்னொரு அடையாளமே அவர்களால் தையிட்டியில் தனியார் காணியில் கட்டப்பட்ட திஸ்ஸ விகாரையாகும்.

இந்த அநீதிக்கு எதிராக ஜனநாயக உரிமையோடு போராடு வோர்க்கு எதிராக பொலிசாரும் செயற்பட்டு போராட்டம் தொடரா திருக்க அடையாளம் காணப்பட்டோரை விசாரணைக்கென அழைப்பதையும் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதை யும் வன்மையாக கண்டிக்கிறோம். அநீதிக்கு எதிரான ஆட் சியாளர்கள் தம்மை தம்பட்டம் அடிக்கும் தேசிய மக்கள் சக்தி தலையிட்டு நீதியை நிலைநாட்டாதவிடத்து அது தமிழர்களுக்கு இழைக்கும் அநீதியாக அமைவதோடு அதுவே இனங்களுக் கிடையில் அமைதியின்மை இன, மத விரிசல் என்பன ஏற்படு வதற்கும் வழிவகுக்கும். அது மட்டுமல்ல, தேசிய மக்கள் சக் திக்கு வாக்களித்த தமிழ் தேச மக்களை அவமானப்படுத் துவதாக அமையும் எனவும் கூறுகின்றோம்.

வரலாற்றில் மன்னர் ஆட்சிக் காலத்தில் நாட்டில் செல்வம் பெருகி அமைதி நிலவியபோது அரசன் தமது கௌரவத்துக் காகவும் புகழுக்காகவும் வானுயர கோபுரங்களோடு வழிபாட் டிடங்களை அமைத்ததாகவும் அதன் மூலம் பக்தி வளர்ந்த தாகவும் கூறப்படுகிறது.

ஆனால், இலங்கையில் விசேடமாக 1948ஆம் ஆண்டுக்கு பின்னரான காலகட்டத்தில் சிங்கள பௌத்த பேரின வாதத்தை பாதுகாக்கவும் அதன் மூலம் அரசியல் செய்யவும் ஆட்சியை கைப்பற்றவும் மட்டுமல்ல, தமிழர் தேசத்தில் நிலங்களை ஆக் கிரமிக்கவும் ஆட்சியாளர் விகாரைகளை கட்டியதே வரலாறு.

அதேபோன்று தமிழர் தேசத்தில் பல நூறு விகாரைகளை கட்டு வோம் என கூழுரைத்த சிங்கள பௌத்த அரசியல்வாதிகளை யும் கொண்டதே நாட்டின் அரசியல்.

யுத்த காலத்தில் படையினர் பொதுமக்களை அவர்களின் இருப் பிடங்களில் இருந்து துரத்திவிட்டு அவர்களுக்கு சொந்தமான காணிகளை இல்லாமல் ஆக்கிரமித்து பாரிய படைத்தளங்களை அமைத்தனர். புத்தரின் தர்ம போதனைகளை எல்லாம் தூக்கி எறிந்தவர்கள் தனது வழிபாட்டுக்கென படைத்தளங்களில் வழிபாட்டுத் தலங்களையும் அமைத்துக்கொண்டனர்.

அந்த வகையில் தற்போது சர்ச்சைக்கு உள்ளாகியுள்ள தையிட்டி விகாரை பல கேள்விகளை மக்கள் மத்தியில் எழுப் புகிறது. விகாரைக்கென்று காணி இருக்கும்போது தனியார் காணியை தேர்ந்தெடுத்து அதன் உரிமையாளர்களின் அனு மதியின்றி விகாரை கட்டியது ஏன்?

தொற்று நோய் காரணமாக முழு நாடும் முடக்கப்பட்டிருந்த போது அவசர அவசரமாக விகாரை எழுப்பியது ஏன்?

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கும்போதும் படை யினர் யாருடைய அனுமதியோடு இவ்விகாரையை அமைத் தனர்? அதற்கான பணம் எங்கிருந்து வந்தது? இதற்குப் பின் னணியில் இருந்தவர்கள் யார்? என்ற கேள்விகளோடு இந்த விகாரை அமைக்கப்பட்டதன் பின்னால் ஏதோ மர்மம் உள்ள தாகவே தோன்றுகிறது. இதற்கு அடிப்படை காரணம் தனியார் காணியில் விகாரை அமைத்தமையாகும்.

கொழும்பு துறைமுகப் பகுதியில் அதுவும் அதி பாதுகாப்பு பிர தேசத்தில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அண்மை யில் செம்மணியில் மின்சார தகன மேடை அமைப்பதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டபோது மனித எச்சங்கள் வெளி வந்ததாக கூறப்படுகிறது. இவற்றைத் தவிர நாட்டின் தமிழர் பிரதேசம் உட்பட பல பகுதிகளில் சமூக புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டாலும் அது தொடர்பான விசாரணை முழுமை பெற் றதாக இல்லை. காணாமலாக்கப்பட்ட உறவுகளை தேடுவோர் சமூகப் புதைகுழிகளுக்கு முன்னால் நின்று கண்ணீர் விடு கின்றனர்.

நீதி கேட்டு வீதியில் நிற்கின்றனர். அவர்களுக்கு இன்று வரை நீதி கிட்டவில்லை. இந்த நிலையில் அவ்வாறான ஒரு சமூக புதைகுழியினை மறைக்கும் முகமாக இவ்விகாரை கட்டப் பட்டுள்ளதா? என மக்கள் சந்தேகம் கொள்வதிலும் நியாயம் இருக்கிறது.

தையிட்டி விகாரை என்பது நில ஆக்கிரமிப்பு, யுத்த வெற்றி, பௌத்தமயமாக்கல் அடையாளங்களுக்கு அப்பாலும் சிந்திக்க வைக்கிறது. ஏனெனில், உண்மையில் பௌத்தத்தை காக்க வேண்டும் எனில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடத் திலேயே விகாரை கட்டப்பட்டிருக்க வேண்டும். அதனை தவிர்த்து விட்டு வேறோர் இடத்தை தேர்ந்தெடுத்தது ஏன்? அதுவும் அவசர அவசரமாக விகாரை கட்டப்பட்டுள்ளது. அதுவே விகாரைக்கு பின்னால் ஏதோ மர்மம் உள்ளது. அதனை மறைக்கவே படையினர் திட்டமிட்டு செயற்பட்டுள்ளனர் என மக்கள் சிந்திக்கின்றனர். மர்ம முடிச்சை அவிழ்க்கவேண் டியதும் மக்களின் சந்தேகத்தை தீர்க்க வேண்டியதும் அரசின் கடமையாகும்.

யுத்த காலத்தில் இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன. உயிருக்குப் பயந்து அபயம் தேடி அங்கு வந்திருந்த மக்கள் அநியாயமாக கொல்லப்பட்டனர். மக்கள் வாய் திறக்க வில்லை. ஏனெனில் அடக்குமுறை, கொலை, ஆயுதம் அவர் களுக்கு நேராக நீட்டிக்கொண்டிருந்ததோடு தலைக்கு நேராக வும் தொங்கிக்கொண்டிருந்தது. தம்புள்ளையில் இந்து ஆலய மொன்று அனுமதியின்றி கட்டப்பட்டதாக இடித்து அழிக்கப்பட்ட போது மக்கள் பொறுமை காத்தனர். ஆனால், திஸ்ஸ விகாரை என்பது சிங்கள பௌத்த பேரினவாதம் தம் தலையில் காலை வைத்து விதைத்திருப்பதன் அடையாளமாகவே மக்கள் உணர் கின்றனர். அதனால் மக்கள் தம் அறக்கோபத்தையே வெளிப் படுத்துகின்றார். இதனை ஆட்சியாளர்கள் விளங்கிக்கொள்ளல் வேண்டும்.

வெறுமனே பிழையான இடத்தில் விகாரை கட்டப்பட்டுள்ளது என்று கூறுவது மட்டும் பிரச்சினைக்கு தீர்வு அல்ல. மக்க ளுடைய சந்தேகங்கள் தீர்க்கப்பட வேண்டும். நீதி நிலை நாட்டப்பட வேண்டும். நாட்டின் சட்டங்களுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். நாட்டின் சட்டங்களுக்கு காவலாக இருப்போம் என்பதை ஆட்சியாளர் உறுதிபடுத்தவும் வேண்டும்.

கடந்த கால ஆட்சியாளருக்கு தற்போதைய தேசிய மக்கள் சக்தி என்ன செய்ய முடியும்? என கேள்வி கேட்போர் ஒன்றை மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். தேசிய மக்கள் சக்தி யினர் கடந்த கால தவறுகளை எல்லாம் சுட்டிக்காட்டி அதற்கு காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள். தண்டிக்கப்படுவார்கள் என்று கூறியதை மறந்துவிட முடியாது. தற்போது அவர்களை தேடி தேடி வலை வீசி நீதிமன்றம் கொண்டுவர முயற்சிப்பதை நாம் காண்கின்றோம். பலர் மீது வழக்குகளும் தொடுக்கப்பட்டுள்ளது. எனவே, திஸ்ஸ விகாரை விடயத்திலும் அநீதி நிகழ்ந்துள்ளது. இங்கும் நீதி நிலை நாட்டப்படுவதோடு குற்றவாளிகள் நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.

இங்கு விகாரை பிரச்சினை என்பது சமயம் சார்ந்த பக்தி சார்ந்த பிரச்சினை அல்ல. இது தமிழ் மக்களின் அரசியலோடு தொடர் புடையது. அதனாலேயே போலி சிங்கள தேசியவாதிகளும் சிங்கள பௌத்த அரசியல்வாதிகளும் கூக்குரல் இடுகின்றனர். தமிழர்களின் அரசியல் வீழ்த்தப்பட்ட தன் அடையாளமாகவே விகாரை அமைந்துள்ளது. இதனை ஏற்க முடியாது.

எனவே சமூகப் புதைகுழி விகாரைக்குள் இருக்கலாமோ என் கின்ற சாதாரண சந்தேகத்தினை தீர்க்க வேண்டியது ஆட்சி யாளரின் கடமை. அதேபோன்று நீதியை நிலைநாட்ட வேண் டியதும் அவர்களின் பொறுப்பாகும். இதற்கான அழுத்தத்தினை தமிழ் தேசத்தின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்க கட்சியினர் உட்பட அனைவரும் ஒன்றிணைந்து குரல் எழுப்புதல் வேண்டும். மக்களோடு பயணிக்க வேண்டும். இதுவே இன்றைய தேவை. அதுவே மக்களுக்கான அரசியல் கௌரவமாகவும் நீதிக்கான பயணமாகவும் அமையும் என்றார்.

# வெடுக்குநாறி மலை ஆதி சிவன்கோயில் சிவராத்திரி: பூசகரை மறைமுகமாக அச்சுறுத்தும் சிறீலங்கா சிங்கள காவல்துறை!

22.02.2025

நெடுங்கேணி வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி தினம் தொடர்பாக ஆலய பூசாரியார் மதிமுகராசா மற்றும் முக்கியஸ் தரான பூபாலசிங்கம் ஆகியோர் நெடுங்கேணி காவல்துறை யினரால் அழைக்கப்பட்டு விவரங்கள் பெறப்பட்டுள்ளது.

நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகள் தொல்பொருட்த திணைக்களத்திற்கு கீழ் உள்ளதாக தெரிவித்து, அந்த திணைக் களம் மற்றும் நெடுங்கேணி காவல்துறையினரால் பொது மக்கள் வழிபாடுகளை மேற்கோள்வதற்கு பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில் கடந்தவருடம் சிவாரத்திரி தினமன்று மாலை 6 மணிக்குப் பின்னர் சிவராத்திரி பூஜைகளை செய்ய முற்பட்ட 8 பேர் நெடுங்கேணி காவல்துறையினரால் அடாவடியான முறை யில் கைதுசெய்யப்பட்டனர். இது தமிழ்மக்கள் மத்தியில் கவ லையை ஏற்படுத்தியதுடன், காவல்துறையினரின் செயற்பாடுக ளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களும் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில் அது தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, கைது செய்யப்பட்ட 8 பேரையும் வழக்கிலிருந்து முழுமையாக விடுதலை செய்த நீதிபதி காவல் துறையினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினையும் தள்ளுபடி செய்தார்.

இந்நிலையில் இம்முறை சிவராத்திரி தினம் தொடர்பாக ஆலயத்தின் பூசாரியார் மற்றும் முக்கியஸ்தர் ஒருவர் நெடுங் கேணி காவல்துறையினரால் நேற்றுமுன்தினம் அழைக்கப் பட்டு அவர்களிடம் விபரங்கள் பெறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆலயத்தின் பூசகர் மதிமுகராசாவிடம் கேட்ட போது இம்முறை சிவராத்திரி விரத பூஜைகளை காலை முதல் மாலை 6 மணிவரை முன்னெடுப்பதற்கு நாம் தீர்மானித் துள்ளதாக தெரிவித்தார்.



6 மணியின் பின்னர் பிறிதொரு பகுதியில் சிவனுக்கான இரவு அனுஸ்டானங்களை செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளது. சிவராத்திரி தினம் வெடுக்குநாறிமலையில் சிறப்பாக இடம்பெறும் என அவர் தெரிவித்தார்

**எத்தனை துயர் வரினும் எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலைப் பாதையிலே தொடர்ந்து போராடுவோம்.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உள்ளிட்ட 15 அமைப்புகளுக்கு தடை விதித்தது சிங்கள இனப்படுகொலை அரசு

22.02.2025

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உள்ளிட்ட 15 அமைப்புகளை தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவித்து சிங்கள இனப்படுகொலை அரசின் பாதுகாப்பு அமைச்சினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் பட்டுள்ளது.







பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்யகொன் தாவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் பட்டுள்ளது.

வெளிநாடுகளில் தொழிற்படுகின்ற தமிழீழ விடுதலை புலிகள் அமைப்புடன் தொடர்புடைய குழுக்களிடமிருந்து பெறப்படுகின்ற உதவியுடன் அந்த அமைப்பை மீள் உருவாக்குவதற்கான எத்தனிப்புகள் அவதானிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துடன் தொடர்புப்பட்ட செயற்பாடுகள் (?) மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்த குற்றச்சாட்டில் (?) குறித்த அமைப்புகளை தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிப்பதாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தமிழர் புனர்வாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, உலக தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசு, உலக தமிழர் நிவாரண நிதியம் மற்றும் கனேடிய தமிழர் தேசிய அவை உள்ளிட்ட அமைப்புகள் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தமிழ் இளைஞர் அமைப்பு, எக்சியூ என்று அறியப்படுகின்ற தலைமையகக் குழு, தேசிய தௌஹித் ஜமாத் அமைப்பு, ஜமாதே மிலாதே இப்ராஹிம் அமைப்பு, விலயாத் அஸ் செயிலானி, டருள் ஆதர் அத்தபவியா, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம் மற்றும் சேவ் த பேர்ள்ஸ் என்பனவும் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப் பட்டுள்ளன.

# சிறீலங்கா வனவள பாதுகாப்பு திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள திருகோணமலை வெல்வேரி கிராமக் காணிகளை விடுவிக்க கோரிக்கை

22.02.2025

வனவள பாதுகாப்பு திணைக்களத்தினால் கற்கள் இடப்பட்டு கையகப்படுத்தப்பட்டுள்ள தமது பூர்வீக காணிகளை விடுவித்து தமது வாழ்வாதாரத்திற்கு உதவுமாறு வெல்வேரி கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



திருகோணமலை - வெல்வேரி கிராமத்தில் பல தசாப்த காலமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வாழ்ந்து வந்த மக்கள் நாட்டில் ஏற்பட்ட தொடர்ச்சியான வன்செயல் காரணமாக உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் அங்கிருந்து தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து மீள குடியமர்ந்து வந்தனர்.

இந்நிலையில் 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து பாதுகாப்பின் காரணமாக மீண்டும் மீள குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் 2010ஆம் ஆண்டுக்கு பின்னர் குறித்த பகுதியில் வன வள பாதுகாப்பு திணைக்களத்தினால் எல்லைக் கற்கள் இடப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

1970 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே 30க்கு மேற்பட்ட குடம்பங்கள் அப்பகுதியில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாகவும், வன வள பாதுகாப்பு திணைக்களத்தினால் கையகப் படுத்தப்பட்டுள்ள பகுதிக்குள் தாங்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்களாக வீட்டின் சிதைவுகள், சீமேந்தால் கட்டப்பட்ட சுமார் 10 அடி விட்டமுடைய பல கிணறுகள், நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட்ட கால்வாய்கள் உட்பட பல ஆதாரங்களும் தமது காணிக்கான ஆவணங்களும் வைத்திருப்பதாகவும் குறிப் பிடுகின்றனர்.

அத்துடன் தமது காணியைச் சுற்றியுள்ள ஏனைய பகுதிகளில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் குறுகிய பரப்பளவைக் கொண்ட தமது காணிகள் மாத்திரம் வன வள பாதுகாப்பு திணைக்களத்தினால் விடுவிக்கப்படாமல் இருப்பதாகவும் கவலை வெளியிடுகின்றனர்.



எனவே வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினால் கையகப் படுத்தப்பட்டுள்ள சுமார் 40 ஏக்கருக்கு மேற்பட்ட தமது காணிகளை விடுவித்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவோடு நாட்டின் நெல் உற்பத்திக்கு பங்களிப்பு செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குமாறும் சிறீலங்கா அரசிடம் கோரிக்கை விடுப் பதாகவும் தெரிவிக்கின்றனர்.







**எமது தாயக மண்ணில், வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான எமது சொந்த மண்ணில், நாம் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; என்பதே எமது குறிக்கோள். இதுவெ எமது தேசத்தின் அபிலாசை.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# பூஜாபூமி என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள புல்மோட்டை சாத்தனமடு பகுதி விவசாய காணிகளை விடுவிக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

23.02.2025

புல்மோட்டை - சாத்தனமடு பகுதியில் பௌத்த பிக்குவால் கையகப்படுத்தப்பட்டுள்ள விவசாய காணிகளை விடுவிக்கு மாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

புல்மோட்டை கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட புல்மோட்டை சாத்தனமடு குளப்பகுதியின்கீழ் விவசாயத்தில் ஈடுபட்டுவந்த விவசாயிகளின் காணியில் பௌத்த மதகுரு ஒருவர் புத்தர் சிலையை வைத்து அதனைச் சுற்றியுள்ள விவசாய காணிகளில் பல வருட காலமாக விவசாயம் மேற் கொண்டுவந்த விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளுக்கு தடைவிதித்து வருவதால் அவர்களுடைய வாழ்வாதாரம் பாதித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அதனை சுற்றியுள்ள 10 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளில் விவசாயம் மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும், முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் புல்மோட்டையில் பௌத்த மக்களே இல்லாத பகுதிகளில் பூஜா பூமி என்ற பெயரில் காணிகளை கையகப்படுத்தி புத்த சிலைகளை வைத்து நிலங்களை ஆக்கிரமிப்பதோடு இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையினையும் குறித்த பௌத்த மதகுரு மேற் கொண்டு வருகின்றார்.

இதனால் காலாகாலமாக அப்பகுதியில் விவசாயம் மேற் கொண்டு வந்த விவசாயி ஏ.எல்.எம்.மீராசாகிபு என்பவர் மீது தொல்லியல் பொருட்களை சேதப்படுத்தியதாக குற்றம்சாட்டி கைது செய்து வழக்கும் தொடரப்பட்டிருந்தது. இதனால் அவர் மன உளைச்சலுக்கு உள்ளாகி 2021.12.12 அன்று இறந்தும் போனார்.

எனவே ஆட்சிக்கு வந்திருக்கின்ற புதிய அரசாங்கம் இவ் வாறான விடயங்களை கவனத்திற் கொண்டு பூஜாபூமி என்ற









கிட்டத்தட்ட அதனை சுற்றியுள்ள 100 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை அவர் கையகப்படுத்தியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று பரவிய மக்கள் நடமாட்டம் இல்லாத 2019ஆண்டு காலப்பகுதியில் குறித்த பகுதியில் புத்தர்சிலை வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் தற்போது இருக்கின்ற பாரிய புத்தர்சிலை வைக்கப்பட்டது.

பௌத்த மக்கள் இல்லாத இடத்தில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை பராமரிக்க எவரும் இல்லை. இதை நாங்கள்தான் பராமரித்து வருகின்றோம்.

பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களுடைய காணிகளை விடுவித்து மக்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக் கின்றனர்.

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புல்மோட்டை 01 கிராம சேவகர் பிரிவில், புல்மோட்டை கிராமத்தில் ஶ்ரீ சத்தர்ம யுக்திக்க வன செனசுன என்ற விகாரைக்காக நில அளவை யாளர் தலைமையதிபதியின் 2019.09.09 ஆந் திகதியைக் கொண்ட இறுதிக் கிராம வரைபட இல. 30 என்பதில் குறித்துக் காட்டப்பட்டுள்ளவாறாக காணித்துண்டு இல. 1145 ஆலடிப்புலவு காணி மற்றும் தோண்டாமுறிப்பு காணி (7.1466 ஹெக்டேயர்), காணித்துண்டு இல.1146 ஆலடிப்புலவு காணி மற்றும் தோண் டாமுறிப்பு காணி (4.3715 ஹெக்டயார்), காணித்துண்டு இல. 1147 (11.7193 ஹெக்டேயர்), காணித்துண்டு இல. 1148 ஆலடிப் புலவு காணி (7.4712 ஹெக்டேயர்), காணித்துண்டு இல. 1153 நாவலடி மோட்டை காணி (1.0438 ஹெக்டேயர்) எனக் குறித் துக் காட்டப்பட்டுள்ளவாறான பரப்பளவில் மொத்தமாக 31.7524 ஹெக்டேயர் காணி 2023.08.15 அன்று வெளியிடப்பட்ட 2345/38 இலக்க அதிவிசேஷ வர்த்தமானி அறிவித்தல் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த விகாரையானது குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 2018.05.30 அன்று பதிவு செய்யப்பட் டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 16 வருடங்களாக காணாமல் போன மகனைத் தேடி வந்த தாய் உயிரிழந்துள்ளார்

24.02.2025

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் சுழற்சி முறை போராட்டத்தின் 3000ஆவது நாளான இன்றைய தினம் திங்கட்கிழமை தனது மகனை தேடிவந்த தாய் ஒருவர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

வவுனியா தோனிக்கல்லினை சேர்ந்த 79 வயதுடைய தாயே உயிரிழந்துள்ளார். இவரின் மகன் 2009ம் ஆண்டு இறுதி யுத்தத்திலே காணாமல் ஆக்கப்பட்டார்.

இந்நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு போராட்டங்களில் முன்னின்று போராடி வந்த தயார் ஆவார்





## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# நெல்லியடி பொலிசார் சித்திரவதை புரிந்ததாக இளைஞன் குற்றச்சாட்டு

24.02.2025




நெல்லியடி பொலிசார் தன்னை கைது செய்து சித்திரவதைக்கு உட்படுத்தி கையையும் முறித்துள்ளதாக நெல்லியடி பகுதியை சேர்ந்த நந்தகுமார் இலங்கேஸ்வரன் என்பவர் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 18ஆம் திகதி எனது அம்மா வீட்டிற்கு அருகில் உள்ள ஆலயம் ஒன்றின் முன்னால் நின்ற போது, முச்சக்கர வண்டியில் வந்த பொலிசார், என் மீது தாக்குதல் மேற்கொண்டு, கை விலங்கு இட்டு, முச்சக்கர வண்டியின் உள்ளே கீழே போட்டு, தமது கால்களுக்குள் என்னை அழுத்தி பிடித்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

அங்கு எதற்காக என்னை தாக்கி , கைது செய்தீர்கள் என கேட்ட போது, வயர் வெட்டின சம்பவம் தொடர்பில் என கூறினார்கள். எனக்கு அப்படியொரு சம்பவம் தெரியவில்லை.

பின்னர் எனக்கு கைவலி ஏற்பட்டு, நான் வலியினால் துடித்து என்னை வைத்தியசாலைக்கு அழைத்து செல்லுமாறு கூறிய போது மந்திகை வைத்தியசாலையில் என்னை அனுமதித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காகக யாழ் . போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டேன்.

வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் வேளையில் “வீடியோ கோல்” ஊடாக பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் என்னை பார்வையிட்டு , எனக்கு பிணை வழங்கி எனது வழக்கினை எதிர்வரும் 10ஆம் மாதத்திற்கு திகதியிட்டுள்ளார்.

என் மீதான தாக்குதல் மற்றும் சித்திரவதை குறித்த மனித வுரிமை ஆணைக்குழுவின் யாழ் . பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்.

பெயின்டிங் வேலைக்கு சென்றே எனது குடும்பத்தினை பார்த்து வருகிறேன். தற்போது பொலிசாரின் தாக்குதலால் எனது கை முறிந்து உள்ளதால் என்னால் வேலைக்கு செல்ல முடியவில்லை. அதனால் எனது குடும்பத்தின் வாழ்வாதாரம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

அதேவேளை, குறித்த நபரினால் மனிதவுரிமை ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய எதிர்வரும் 04ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு பொலிசாருக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளதாக மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்திற்கு கடந்த மாதம் ஜனாதிபதி வருகை தந்த வேளை நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், நெல்லியடி பகுதியில் தொலைத்தொடர்பு நிலையத்தின் கேபிள் வயர்கள் வெட்டி களவாடப்பட்டு வருவதாகவும், பொலிஸார் அசமந்தமாக செயற்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டு இருந்தது.

அந்நிலையில் வயர்கள் களவாடப்படும் சம்பவம் குறித்து உரிய விசாரணைகளை முன்னெடுத்து தொடர்புடைய நபர்களை கைது செய்யுமாறு நெல்லியடி பொலிசாருக்கு பொலிஸ் உயர் அதிகாரிகள் கடும் அழுத்தம் கொடுத்த நிலையிலையே, வயர்களை திருடியதாக நபர் ஒருவரை பொலிசார் கைது செய்து சித்திரவதைக்கு உள்ளாக்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 3000 ஆவது நாளாக வவுனியாவில் தொடரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம்

24.02.2025

வவுனியாவில் தமிழர் தாயக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சிமுறை போராட்டமானது 3000ஆவது நாளான இன்றும் (24) நடத்தப்பட்டது.






வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் வவுனியா தபால் திணைக்களத்துக்கு அருகில் 3000ஆவது நாளாக போராட்டம் மேற்கொள்ளும் கொட்டகைக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவுகளின் உருவப்படத்தினை தாங்கியவாறும், அமெரிக்க மற்றும் ஐரொப்பிய ஒன்றியத்தின் கொடிகளைத் தாங்கியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.










**கரும்புலி வீரர்கள் பலர் இன்று பெயர் குறிப்பிடப்படாத கல்லறைகளில் அநாமதேயமாக உறங்கிய போதும், அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப் புகழுடன் வாழும்.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# ஈழத்தமிழர்களின் அரசியல் நியாயங்களை உலகிற்கு வெளிப்படுத்தியவர் மூத்த செய்தியாளர் ஆனந்தி

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் இரங்கல்

24.02.2025

ஈழத்தமிழ் ஊடக உலகின் மூத்த செய்தியாளர் ஆனந்தி சூரிய பிரகாசம் அவர்களின் மறைவு சர்வதேச ஊடகத்துறைக்குப் பேரிழப்பு என தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றியத்தின் செயலாளர் எஸ். ஜெயந்திரன் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள இரங்கல் செய்தியில்,

சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் 2006 ஆம் ஆண்டிற்கான தலைவராக செயற்பட்டிருந்த ஆனந்தி சூரியப் பிரகாசம் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை விவகாரத்தை சர்வதேச அரங்கிற்கு கொண்டு சென்றவர்.

பிபிசி தமிழோசையில் இவர் பணியாற்றியபோது முதன் முதலில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நேர்காணல் செய்திருந்தார்.

அந்த நேர்காணல் மூலம் இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்குத் தமிழர்களின் அரசியல் விடுதலை கோரிக்கையின் நியாயத் தன்மைகள் வெளிப்படுத்தப்பட்டன.

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டம் 1980 களில் ஆயுதப் போராட்டமாக மாறிய காலகட்டங்களில் பிபிசி தமிழோசை மூலமாக தமிழர்களுக்கு இலங்கை அரசாங்கம் இழைத்த அநீதிகளை துணிச்சலாகவும் ஆதாரங்களோடும் வெளிப்படுத்தியிருந்தார்.

செய்தியாகவும் செய்தி விமர்சனமாகவும் வெளிப்படுத்திய ஆனந்தி பிரபல அரசியல் பிரதிநிதிகள் மற்றும் துறைசார்ந்த பலரையும் நேர்காணல் செய்திருந்தார்.



குறிப்பாக புவிசார் அரசியல் போட்டிகளினால் ஈழத் தமிழர் அர சியல் நியாயங்கள் எவ்வாறு பாதிப்படைகின்றன என்பது பற்றிய கணிப்புகளை ஆனந்தி அப்போதே வெளிப்படுத்தியிருந்தார்.

அத்துடன் இலங்கைத்தீவில் வாழும் மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் அரசியல் விவகாரங்கள் பற்றியும் ஆனந்தி வேறு பல நேர்காணலில் வெளிப்படுத்தியிருந்தார்.

அதேநேரம் தமிழ்தேசிய அரசியலில் நேர்மையான மாற்றுக் காருத்தாளர்களுக்கு ஆனந்தி முக்கியத்துவம் வழங்கியிருந்தார்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரியை பிறப்பிடமாக கொண்ட ஆனந்தி சூரியபிரகாசம், ஆனந்தி அக்கா என்றும் அழைக்கப்பட்டார். இவர் 1970களிலேயே இங்கிலாந்துக்கு குடிபெயர்ந் திருந்தார்.

பின்னர் 1980 களில் பிபிசி தமிழோசை வானொலியில் அறிவிப்பாளராக சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றினார்.

2005 ஆம் ஆண்டு பிபிசி தமிழோசை பணியில் இருந்து ஆனந்தி ஓய்வு பெற்றார். அதன் பின்னர் சர்வதேச அரங்கில் ஈழத்தமிழர்கள் பற்றிய நியாயங்களை எடுத்துரைக்கும் பணியில் ஈடுபட்டார்.



தனது 24 வயது மகள் லண்டனில் விபத்து ஒன்றில் உயிரிழந்த போதும் மனம் தளராமல் ஈழத்தமிழர்களுக்கான பணியை அவர் தொடர்ந்து முன்னெடுத்திருந்தார். பாலியல் தொடர்பான கல்வியை பிபிசி தமிழோசையில் 1997 ஆம் ஆண்டு அவர் தொடர் நிகழ்ச்சியாக நடத்தியிருந்தார்.

பாலியல் கல்வியும் அது தொடர்பான புரிதலும் இள வயது மாணவர்களுக்கு முக்கியமானது என்ற அடிப்படையில் துறைசார்ந்த மருத்துவர்கள் பலரின் ஆலோசனைகளைப் பெற்று அந்த நிகழ்ச்சியை அவர் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மாபெரும் பணியாற்றிய மூத்த செய்தியாளர் ஆனந்தி அக்காவின் ஆத்மா சாந்தியடைய தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் பிரார்த்திக்கின்றது.

# அநுரவின் கன்னி பட்ஜட்: இனிப்பு என்று எழுதிய காகிதத்தால் சுற்றப்பட்ட நஞ்சு

## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன்

25.02.2025

அநுர அரசாங்கத்தின் கன்னி வரவு-செலவுத்திட்டமானது தமிழ் மக்களின் உணர்வுகளை திசைதிருப்பி அவர்களின் அபிலாஷைள் ஒருபோதும் நிறைவேறாமல் தடுப்பதற்கான நஞ்சை மறைப்பதற்காக கவர்ச்சிகரமான திட்டங்களை முன்மொழிந்து உருவாக்கப்பட்டுள்ளது என்றும் இது இலங்கையில் எத்தகைய ஆட்சி வந்தாலும் தமிழத் தேசிய இனத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது என்பதை நிரூபித்துள்ளதாகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டம் குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இப்பொழுது ஆட்சியில் அமர்ந்திருக்கின்ற தேசிய மக்கள் சக்தி என்று சொல்லக்கூடிய ஜனதா விமுக்தி பெரமுண என்ற இடதுசாரி கட்சியானது தனது முதலாவது வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பித்துள்ளது.

இது தொடர்பாக பாராளுமன்றத்திலும் விவாதங்கள் நடைபெற்று வருகின்றது. இந்த வரவு-செலவு திட்டம் தொடர்பாக ஆளும் கட்சி தரப்பினர் ஆஹா ஓஹோ என்றும் எதிர்க்கட்சிகள் அதனை கடுமையாக விமர்சித்தும் கருத்துகளைக் கூறி வருகின்றனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் முதன் முறையாக முழுமை யாக ஒரு இடதுசாரி கட்சி ஆட்சியில் அமர்ந்திருக்கின்றது.

ஆகவே அவர்களது பொருளாதாரக் கொள்கையானது இது வரை ஆட்சிசெய்த ஆட்சியாளர்களின் பொருளாதாரக் கொள்கையைவிட மாறுபட்டதாகவும் உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவதாகவும் அடித்தட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாகவும் சமத்துவமான சமுதாயத்தை நோக்கிச் செல்லக்கூடிய ஒரு வரவு-செலவுத்திட்டம் அமைந்திருக்க வேண்டும். அது அவ்வாறு அமைந்திருக்கிறதா என்றால் இல்லை என்றே கூற முடியும்.

இந்த வரவு-செலவு திட்டத்திலிருந்து புதிய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையில் எத்தகைய வித்தியாசங்கள் இருக்கின்றன என்று பார்க்கின்றபொழுது எந்த வித்தியாசத்தையும் காணமுடியவில்லை.

அதே பழைய விடயங்கள் பழைய உறுதிமொழிகள், ஜஎம்எவ்வை திருப்திப்படுத்துதல், கற்பனையில் வரக்கூடிய திட்டங்கள் என்றவாறு இந்த வரவு-செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதே தவிர இதில் பிரத்தியேகமாகவோ அல்லது மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதாகவோ எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த வரவு-செலவுத்திட்டத்தில் வடக்கு மாகாணத்திற்கு மிக அதிகபட்ச நிதியை ஒதுக்கியிருப்பதாக ஒரு மாயத்தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது வந்திருக்கின்ற அரசாங்கம் தமிழ் மக்களின்மேல் அக்கறை கொண்டு 5000மில்லியன் ரூபாயினை வடக்கு மாகாண அபிவிருத்திக்காக ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

5000 மில்லியன் என்பது தமிழில் 500கோடி ரூபாய். வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாகாணங்களுக்கும் இதிலிருந்து சராசரி 100கோடி ரூபாய் போகலாம். ஆகவே இந்த 100கோடி ரூபாயை வைத்துக்கொண்டுதான் 2025ஆம் ஆண்டிற்கு வடக்கு மாகாண அபிவிருத்தியைக் கவனிக்க வேண்டும்.

அபிவிருத்தி என்பது அடிப்படையில் இரண்டு வகைப்படும். ஒன்று நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவது. இரண்டாவது நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி மக்களின் நலன் சார்ந்து சிந்தித்து அவர்களின் வாழ்வாதார வளங்களைப் பெருக்குவது.

இந்த அடிப்படையில்தான் இந்த வரவு-செலவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதா? வடக்கு-கிழக்கு மாகாணங்கள் யுத்தத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள். இதில் பல்லாயிரக்கணக்கான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. இன்னும் பல்லாயிரக்கணக்கில் மாற்றுத் திறனாளிகளும் இருக்கின்றனர்.

பாதிப்படைந்த கிராமங்களும் பிரதேசங்களும் நிறையவே இருக்கின்றன. இவைபற்றி பிரத்தியேகமாகக் கருத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றதா என்றால் இல்லை. கடந்த அரசாங்கங்களைப் போலவே இந்த அரசாங்கமும் அவைகளைக் கண்டுகொள்ளவில்லை.

இந்த அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்டத்தினூடாக வடக்கு மாகாணத்தில் காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் போன்ற பகுதிகளில் தொழிற்சாலை பூங்காக்களை அமைக்கப் போவதாகக் கூறுகின்றனர்.

தொழிற்சாலை பூங்காவிற்கு இடங்களை ஒதுக்குவது மாத்திரமல்ல அங்கு தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

இவற்றை உருவாக்குவதற்கான முதலீட்டாளர்களை அடையாளம் காணவேண்டும். முதலீட்டாளர்களை கவர்வதற்கான கவர்ச்சிகரமான திட்டங்கள் இருக்க வேண்டும். இவை எதுவும் இந்த வரவு-செலவு திட்டத்தில் காணப்படவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடந்த தேர்தலில் தங்களுக்குக் கிடைத்த வாக்குகளை இன்னும் பலப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் உள்ளூராட்சிசபைத் தேர்தலிலும் தனது நிலையை வலுப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலும் வடக்கிற்கு மிக அதிகபட்சமான நிதி ஒதுக்கப்படுவதாகக் காட்டப்படுகிறதே தவிர இதில் எத்தகைய உண்மையும் இல்லை.

இந்த வரவு-செலவுத்திட்டமானது வெறும் கடிதாசியில் எழுதப்பட்டிருக்கிறதே தவிர உண்மையான அடிப்படையில் உருவாக்கப்பட்டதல்ல. அரசாங்கம் எதிர்பார்க்கின்ற நிதி வருவாயில் துண்டுவிழும் தொகையான 2200 பில்லியனை எங்கிருந்து திரட்டுவது என்பதே அரசாங்கத்திற்குப் புரியாமல் இருக்கின்றது.

இந்த நிலையில் முக்கியமான விடயங்களுக்குத்தான் அரசாங்கம் முன்னுரிமை அளிக்குமே தவிர, இவர்கள் உறுதியளித்த அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்படும் என்பதல்ல.



இதேபோன்றுதான் வடக்கு மாகாணத்திற்கு உறுதியளிக்கப்பட்ட அபிவிருத்தி நிதி என்பதும் இப்பொழுது வெறும் கடிதாசியிலிருக்கிறதே தவிர, அது வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட செயலகங்களை சென்றடையுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சில கவர்ச்சிகரமான விடயங்கள் இருப்பதுபோன்ற ஒரு மாயை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அரச உத்தியாகத்தர்களுக்கு அடிப்படை சம்பளத்தில் உயர்வு.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்பு, மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1700 ரூபாவாக உயர்த்த கம்பெனிகளுடன் பேச்சுவார்த்தை, கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு இந்தியாவின் உதவி இப்படி சில கவர்ச்சிகரமான சொல்லாடல்களால் மக்களைத் திருப்திப்படுத்தி வருகின்ற உள்ளாட்சி தேர்தல்களில் பிரதேச சபைகளையும் தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கான முயற்சியில்தான் இந்த வரவு-செலவுத்திட்டம் அமைந்துள்ளது.

இவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் நிறைவேற்றப்படக்கூடிய வாக்குறுதிகள் கூட நிறைவேற்றப்படவில்லை. குறைந்தபட்சம் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்றார்கள். அதுகூட நீக்கப்படாமல் புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் வரும் என்று கூறுகின்றார்கள்.

அரசியல் கைதிகளை விடுவிப்போம் என்றார்கள். இவர்கள் ஆட்சிக்கு வந்தபின்னர் எந்தவொரு அரசியல் கைதியும் விடுவிக்கப்படவில்லை. கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற யுத்தம் மற்றும் படுகொலைகள் தொடர்பாக பொறுப்புக்கூறல் என்பதை மறுதலித்து இப்பொழுது அவற்றிற்கு வக்காலத்து வாங்கவும் முப்படைகளைப் பாதுகாக்கவுமாக ஜெனிவா சென்றிருக்கின்றார்கள்.

ஆகவே இந்த அரசாங்கத்தினுடைய கபடத்தனங்களையும் மாயத்தோற்றத்தையும் பொய்யான உறுதிமொழிகளையும் தமிழ் மக்கள் சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய நேரம் வந்திருக்கின்றது. தமிழ் மக்களாகிய நாம் இந்த நேரத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு செயற்படாவிட்டால், தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் என்பது இருண்டதாக மாறிவிடக்கூடிய அபாயம் இருக்கின்றது.

# வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராகவே வாக்களிப்போம்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

25.02.2025

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பல அடிப்படை பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளார்கள். இருப்பினும் வரவு செலவுத் திட்டத்தில் அதற்கான தீர்வுகள் ஏதும் முன்வைக்கப்படவில்லை. எம் மக்களுக்கு முரண்பாடற்ற தீர்வு கிடைக்கும் வரையில் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதை தவிர வேறு எந்த தெரிவுகளும் தமக்கு கிடையாது. யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் தமிழர் பிரதேசங்களில் ஆக்கிரமிப்புக்கள் இன்றும் தொடர்கின்றன என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 7 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

சுதந்திரத்தின் பின்னரான 76 வருடங்களாக இந்த நாட்டை இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் மாத்திரமே ஆட்சி செய்தன. பெயர்கள் மாறுபட்டாலும் அந்த இரண்டு கட்சிகளே ஆட்சி செய்துவந்துள்ளன. இந்நிலையில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் கடந்த 76 வருடங்களை காட்டிலும் மாறுபட்ட காலகட்டமாக தற்போதைய நிலை இருக்கின்றது.

இனப்பிரச்சினைகள் மற்றும் தமிழ்த் தேசிய வாதம் தொடர்பில் அவர்களின் கருத்துக்களை கேட்காவிட்டாலும் அவர்களின் கொள்கையை முன்னெடுப்பவர்களாக இருக்கின்றனர். ஆனால் தாம் ஆட்சிக்கு வந்தால் இனவாதத்தை முற்றாக இல்லாமல் செய்வதாக கூறினர். இனப்பிரச்சினைக்கான அடிப்படை காரணம் இனவாதமாகும். இதனை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

காலம் காலமாக இனவாதத்தால் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சிறந்த ஆரம்பத்தை அரசாங்கம் முன்வைக்கும் என்றும் எதிர்பார்த்தோம். ஆனால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வாக ஏதும் குறிப்பிடப்படவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டவாறு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றே நாங்கள் எதிர்பார்த்தோம். இந்த மாகாணங்களுக்காக விசேடமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. வடக்கில் வீதி அபிவிருத்திருக்காக 5000 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதாக கூறப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங்கள் உள்ளன. அதன்படி ஒரு மாவட்டத்திற்கு ஆயிரம் மில்லியன் ரூபாவே கிடைக்கும். அடிப்படை உட்கட்டமைப்புக்கு குறைந்தப்பட்சம் 1300 மில்லியன் ரூபாவாவது தேவையாகும். அதேபோன்று யாழ். நூலக அபிவிருத்திக்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இது போதுமானதல்ல. அத்துடன் கச்சேரிக்கான மூலதன செலவை எடுத்துக்கொண்டால் யாழ்ப்பாணத்திற்கு 187 மில்லியன் ரூபாவும், மன்னாருக்கு 189 மில்லியனும், வவுனியாவுக்கு 100 மில்லியனும், முல்லைத்தீவுக்கு 126 மில்லியனும், கிளிநொச்சிக்கு 179 மில்லியனும் ஒதுக்கப்படுகின்றது.

எனினும் அம்பாந்தோட்டைக்கு 500 மில்லியனுக்கும் அதிகமாகவும், மாத்தறைக்கு 400 மில்லியனுக்கும் அதிகமாகவும், கம்பஹாவுக்கு 500 மில்லியனுக்கும் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளன. கேகாலை, இரத்தினபுரி, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் அவ்வாறே அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் எமது மாவட்டங்களுக்கு 200 மில்லியனுக்கும் குறைவாகவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் இவை. இங்கே என்ன செய்தியை கூற விரும்புகின்றீர்கள். இந்த மாவட்டங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி கூறினாலும் அதற்கு மாற்றமான வகையிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரதமரின் கீழுள்ள கல்வி அமைச்சின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 6000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 20 ஆயிரத்திற்கும் மேல் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

ஏன் இவ்வாறு வேறுபட்ட வகையில் கொடுப்பனவு, இது கல்வியை இராணுவ மயமாக்கும் விடயம்தானே. கடந்த அரசாங்கத்தின் இந்த கொள்கையை நாங்கள் கடுமையாக எதிர்த்தோம். யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் நிறைவடைந்தும் தற்போதும் அடக்குமுறையான செயற்பாடுகளே இருக்கின்றன.

கிழக்கு மாகாணத்தை எடுத்துக்கொண்டால் நிதி கேந்திரமாக மாற்றப்படும் என்று கூறப்பட்டு, அந்த பொறுப்பை இந்தியா ஏற்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் சர்வதேச ரீதியில் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்தியா இதை ஏற்றுக்கொள்ளுமா? இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா அவற்றை பெற்றுக்கொள்ள விரும்புகின்றது.



ஆனால் நீங்கள் வேறு நிறுவனங்களுக்கு கொடுக்க முயற்சிக்கின்றீர்கள். இந்நிலையில் இந்தியா கிழக்கில் அபிவிருத்திகளை செய்யுமா? நீங்கள் இதில் பல சந்தேகங்கள் எழுகின்றன.

விவசாயத்துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு துறைகளை எடுத்துக்கொண்டால் வடக்கு மற்றும் கிழக்கில் வன பாதுகாப்பு திணைக்களம், உயர் பாதுகாப்பு வலயங்களாக பெரும்பாலான காணிகளை கைப்பற்றியுள்ளன. பொதுமக்கள் தமது விவசாய நிலங்களுக்கு செல்வதற்காக நீதிமன்றத்தை நாட வேண்டியுள்ளது.

அந்த மக்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் மயிலத்தமடு போன்ற இடங்களில் தமிழர்களின் பால் பண்ணை தொழிலுக்கு எதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மயிலத்தமடு மேய்ச்சல் தரை பகுதிக்காக மக்கள் போராட்டங்களை நடத்துகின்றனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தெளிவான நிலைப்பாட்டை எடுக்காவிட்டால் முன்னைய அரசாங்கங்களின் வரவு செலவுத் திட்டத்தை போன்றதாகிவிடும். இந்த அரசாங்கத்தின் கொள்கை முன்னைய அரசாங்கங்களின் கொள்கை மற்றும் செயற்பாடுகளில் இருந்து மாறுபடாது. நாங்கள் கடந்த அரசாங்கங்களின் வரவு செலவுத்திட்டங்களுக்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தோம்.

இவ்வாறான அடிப்படை பிரச்சினைகள் வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் முகம்கொடுக்கின்றனர். இந்த அரசாங்கத்தின் ஊடாக பாரிய மாற்றம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எம் மக்கள் மத்தியில் இருந்தது. ஆனால் இந்த வரவு செலவுத்திட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு தீர்வுகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

அரசாங்கமானது எங்களுக்கு குழப்பமில்லாத தீர்வை வழங்கும் வரையில் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிப்பதை தவிர எங்களுக்கு வேறு தெரிவுகள் கிடையாது என்றார்.

# வடக்கு, கிழக்கில் 92,000 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள்

## தமிழரசுக்கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.எஸ. குகதாசன்

25.02.2025

வடக்கு கிழக்கில் 92,000 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உள்ளன இவர்களுக்கு நிலையான வருமான வழிமுறைகள் இல்லை, இதனால் இக்குடும்பங்களில் உள்ள பிள்ளைகளது எதிர்காலம் கேள்விக் குறியாக உள்ளது.எனவே பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருவாய் பெறக்கூடிய சுய தொழில்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.என தமிழரசுக்கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.எஸ்.குகதாசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் விரிவாக்கமானது, ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கும் நம்பிக்கைக்குரிய ஒரு படியாகும். பொருளாதார மாற்றச் சட்டத் திருத்தம், அரச-தனியார் கூட்டுச் சட்ட அறிமுகம் முதலியன வணிக நம்பிக்கை மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டுள்ளன. எனினும், இந்த ஒப்பந்தங்கள் எவ்வாறு கட்டமைக்கப்படும் அல்லது எந்தக் குறிப்பிட்ட தொழில்கள் பயனடையும் என்பது பற்றிய தெளிவான வரைபடத்தை அரசு வழங்கவில்லை என்றார்.



# இந்திய கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்களை தடுக்குமாறு கோரி தீவக கடற்தொழில் அமைப்பு மகஜர் கையளிப்பு!

27.02.2025

இந்திய கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்களை தடுக்க நடவடிக்கை எடுக்க கோரி யாழ் நகரில் போராட்டம் ஒன்றை இன்று வியாழக்கிழமை (27) தீவக கடற்தொழில் அமைப்பு முன்னெடுத்தது.



யாழ் பண்ணையில் உள்ள கடல்வள நீரியல் திணைக்களம் முன்பாக ஆரம்பமான போராட்டம், இந்திய துணைத்தூதரகத்திற்கு சென்று, அங்கிருந்து வடமாகாண ஆளுநர் அலுவலகம் வரை ஊர்வலமாக சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான கடற்றொழில் சங்கங்களை சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மீனவர்கள் இதில் பங்குபற்றியுள்ளனர்.



“தாண்டாத தாண்டாத எல்லையை தாண்டாதே, அழிக்காதே அழிக்காதே எமது வளங்களை அழிக்காதே, இந்திய அரசே எங்களை வாழ விடு, மீனவர்களின் வயிற்றில் அடிக்காதே” போன்ற கோஷங்களை எழுப்பிய நிலை மீனவர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்



போராட்டத்தில் ஈடுபட்ட கடற்தொழிலாளர்களினால் நீரியல் வளத்துறை அலுவலகம், இந்திய துணைத்தூதரகம் மற்றும் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் மகஜர் கையளித்தனர்.

# வெளிவிவகார அமைச்சர் குற்றவியல் நீதி தொடர்பில் ஜெனிவாவில் எதனையும் கூறவில்லை!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

27.02.2025

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மற்றும் நல்லிணக்க அலுவலகத்தை வலுப்படுத்துவதாகவும், போர்க்களத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் ஆராயப்படும் என்றும் வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஜெனிவாவில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் குற்றவியல் நீதி தொடர்பில் ஒரு வார்த்தையையும் அவர் கூறவில்லை.

யுத்த சம்பவத்தில் குற்றவியல் தொடர்பான நீதி மிகவும் முக்கியமானது. ஆனால் அதை தவிர அனைத்தையும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். முறைமை மாற்றம் என்று கூறிக் கொண்டு வந்த இந்த அரசாங்கமும் பழைய எண்ணப்பாடுகளையே கொண்டுள்ளது. என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (27) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி செலவினத் தலைப்பு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

கடந்த பாராளுமன்றத்தில் இதே தலைப்பின் கீழ் விவாதத்தில் கலந்துகொண்டிருந்த போது மனித உரிமைகள் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் மற்றும் அதன் நம்பகத்தன்மை தொடர்பில் குறிப்பிட்டிருந்தேன். அந்த ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் சில உறுப்பினர்கள் வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்திருந்த போது காணாமல் போனோரின் உறவினர்களையும் சந்தித்ததுடன், கொழும்புக்கு வந்ததும் அது தொடர்பில் அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தனர்.

அந்த அறிக்கையில் இருந்த விடயங்கள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை. பாதிக்கப்பட்ட தரப்பினர் நஷ்ட ஈட்டுக்கு இணக்கம் தெரிவித்திருந்ததாக கூறப்பட்டது. ஆனால் அது தவறான தகவலாகும்.

இதை குறிப்பிடுவதற்கான காரணம் என்னவெனில் பொலிசாரின் செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ந்தும் சந்தேகங்கள் நிலவுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் அங்கு இன்னும் இராணுவ மயமாக்கலாகவே இருக்கின்றது. பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதை போன்றே தெரிகின்றது.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு தண்டனை இடமாற்றங்கள் இடம்பெறுவதால் அங்கே பகைமை உணர்வு காணப்படுகின்றது. இதனால் மனித உரிமைகள் ஆணைக்குழுவை நம்ப வேண்டியுள்ளது. பொலிசாரின் செயற்பாடுகளில் அவர்கள் தலையிட வேண்டும்.

கடந்த அரசாங்கத்தில் எமது அரசியல் கட்சியினர் தையிட்டி விகாரை விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் உத்தரவு கேட்ட போது நீதவான் அதற்கு மறுப்பு தெரிவித்தார் எனினும் அந்த எதிர்ப்பு போராட்டத்தை எவ்வாறு செய்ய வேண்டும் என்ற விதப்புரைகளை வழங்கியிருந்தார். இதன்படி நாங்கள் அந்த நடவடிக்கையை கவனமாக முன்னெடுத்தோம். எனினும் பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அந்த இடத்திற்கு சென்று அங்கிருந்த பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சட்டத்தரணிகளை கைது செய்திருந்தனர். இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு 8 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகள் சம்பவம் இடம்பெற்ற அன்றே செய்யப் பட்டது. அதன் பிரதிநிதி உடனே அங்கே வந்தார். ஆனால் பொலிசார் அவரையும் அச்சுறுத்தியுள்ளனர். ஆனால் இன்று வரையில் அது தொடர்பில் ஏவ்வித விசாரணைகளையும் செய்யவில்லை. எம்மிடம் ஒரு நம்பிக்கை மட்டுமே உள்ளது. எங்களுக்கு இந்த ஆணைக்குழுவிடம் மட்டுமே செல்ல முடியும். சுதந்திரமாக இந்த ஆணைக்குழுவுக்கு செயற்பட முடியாவிட்டால் என்ன செய்யலாம். இந்த ஆணைக்குழுவுக்கு முழுமையான அதிகாரம் உள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜெனிவா கூட்டத்தொடரில் கலந்துக் கொண்டுள்ளார். அவர் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம்



மற்றும் நல்லிணக்க அலுவலகத்தை வலுப்படுத்துவதாக கூறியுள்ளார். போர்க்களத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் ஆராயப்படும் என்றும் கூறியுள்ளார். ஆனால் குற்றவியல் நீதி தொடர்பில் ஒரு வார்த்தையையும் அவர் கூறவில்லை. யுத்த சம்பவத்தில் குற்றவியல் தொடர்பான நீதி மிகவும் முக்கியமானது. ஆனால் அதனை தவிர அனைத்தையும் வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவில் பேசியுள்ளார்.

மனித படுகொலைகளை செய்தவர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவதை தவிர அனைத்தையும் கூறியுள்ளார். இவர் பலவற்றை மூடி மறைக்கின்றார். இது மிகவும் கவலைக்குரிய விடயமே. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் இதனையே செய்தார். முறைமை மாற்றம் என்று கூறிக் கொண்டு வந்த நீங்களும் முன்னைய அரசாங்கங்களின் எண்ணப்பாடுகளையே கொண்டுள்ளீர்கள்.

ஜனாதிபதி தன் மீதான நம்பகத் தன்மையை பாதுகாக்க வேண்டுமாயின் அவர் இதில் தலையிட வேண்டும். எவ்வாறாயினும் கடந்த 77 வருடங்களாக தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றோம். முன்னைய அரசாங்கங்கள் வடக்கு மற்றும் கிழக்கு பிரச்சினைகளை எவ்வாறு பார்த்ததோ, தற்போதைய அரசாங்கமும் அதே பார்வையை கொண்டுள்ளது என்றார்.

# சந்தன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளில் எள்ளங்குளத்தில் சாந்தன் அவர்களுக்கு துயிலாலயம்

28.02.2025

“சாந்தன் துயிலாலயம்” 28.02.2025 வெள்ளிக்கிழமை இன்று எள்ளங்குளம் துயிலுமில்லத்தில் காலை 09 மணிக்கு, சாந்தனின் புகழுடல் விதைக்கப்பட்ட இடத்தில், சாந்தனின் குடும்பத்தினரால் உருவாக்கப்பட்டுள்ள “சாந்தன் துயிலாலயம்” தாயாரால் அங்குராப்பணம் செய்து வகைக்கப்பட்டது.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில், கைதாகி சுமார் 32 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையான சாந்தன், குடிவரவு சட்டத்தின் கீழ் கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில், கடந்த 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி காலமானார்.














# ரொரான்ரோவில் பனிப்பொழிவை அகற்ற 3 வாரங்கள் தேவை

17.02.2025

ரொறன்ரோவில் பனிப்பொழிவினை அகற்றுவதற்கு 3 வாரங்கள் தேவைப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

ஒரே வாரத்தில் மூன்று தடவைகள் பாரியளவில் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வீதிகளில் படர்ந்துள்ள பனியை அகற்றுவது மிகவும் சவால் மிக்கது என தெரிவிக்கப்படுகின்றது.



கடந்த சனிக்கிழமை 10 சென்றிமீற்றரும், கடந்த புதன்கிழமை 20 சென்றிமீற்றரும், இன்று 25 சென்றிமீற்றரும் பனிப்பொழிவு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




அதிகளவு பனிப்பொழிவு காரணமாக சில பகுதிகளில் வாகனங்களை நிறுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

# ரொரான்ரோவில் பியர்சன் விமான நிலையத்தில் பயணிகள் விமானம் விபத்தில்; 18 பேர் காயம்

17.02.2025

கனடாவின் ரொரான்ரோ பியர்சன் விமான நிலையத்தில் விமானமொன்று தலைகீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் சுமார் பதினெட்டு பேர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பியர்சன் விமான நிலையத்தின் ஓடு பாதையில் தரையிறங்கிய போது விமானம் தலைகீழாக கவிழ்ந்துள்ளது.

விமான நிலையப் பகுதிகளில் பலத்த காற்று வீசியதாகவும் கடுமையான பனிப்பொழிவு நிலைமை காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் எதனால் இந்த விபத்து ஏற்பட்டது என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்த விமானத்தில் விமானப் பணியாளர்கள் உள்ளிட்ட 80 பேர் பயணம் செய்துள்ளனர்.

அமெரிக்காவின் டெல்டா விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.



# ரொரான்ரோவில் வீடுகளில் பனி அகற்ற நகர சபை உதவி

18.02.2025

ரொரான்ரோவின் தொடர்ச்சியான பனிப்புயலால் பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்கள், தங்கள் வீட்டு முற்றம், நடைபாதை மற்றும் அடைப்புகளிலிருந்து பனியை அகற்றுவதற்கு நகராட்சி சேவையைப் பெற 311 இலக்கம் மூலமாக கோரிக்கை விடுக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

பின்வரும் வழிகளில் சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரொரான்ரோ நகர இணையதளம் அல்லது 311 அழைப்புக் கோரி செய்யலாம்.

இந்த சேவையை பெற, நகராட்சி நடைபாதை பனிநீக்க சேவையுடன் இணைந்த இடங்களில் இருப்பது அவசியம். (குறிப்பாக எடோபிகோ, நார்த் யோர்க், மற்றும் ஸ்கார்பரோ ஆகிய பகுதிகள் இதற்குள் வருகின்றன.)

வீதிகளில் பணி அகற்றியதன் பின்னர் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

வீட்டின் முன்பாக உள்ள பனி அடுக்கு குறைந்தது 25 செ.மீ. உயரம் இருக்க வேண்டும்.

நகராட்சி அதிகாரிகள், இந்த முறை மூன்று பெரிய பனிப் புயல்களுக்கு பிறகு பனியால் மூடப்பட்ட நகரின் முக்கிய இடங்களைத் துப்புரவாக்க பல நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

450-க்கும் மேற்பட்ட டிரக் (Dump Trucks) பனியை நகரத்தின் ஐந்து முக்கிய சேமிப்பு இடங்களுக்கு கொண்டு செல்வதற்காக பணியமர்த்தப்பட்டுள்ளன.

முதன்மையாக மருத்துவமனைகள், முக்கிய வீதிகள், சாலையோர நுழைவாயில்கள், பஸ்கள் நிற்கும் இடங்கள் மற்றும் பள்ளி பகுதிகள் துப்புரவாகும், அதன் பிறகு மட்டுமே குடியிருப்பு பகுதிகள் கவனிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.






"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

www.sangathamil.ca

# ரொரான்ரோவில் அதிகரிக்கப்பட உள்ள சொத்து வரி

18.02.2025

கனடாவின்  டொரான்ரோ நகரில் சொத்து வரி அதிகரிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

டொரான்ரோ நகர முதல்வர் ஒலிவியா சௌ தாக்கல் செய்த வரவு செலவு திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வரி அதிகரிப்பிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படியே வரி வீதமானது 6.9 வீதத்தினால் அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

முதல்வரினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் எவ்வித நிறைவேற்றப்பட்டுள்ளது.

சொத்து வரி இவ்வாறு 6.9 வீதமாக உயர்த்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நகர முதல்வராக பங்கேற்றதன் பின்னர் சௌள சமர்ப்பித்த இரண்டாவது வரவு செலவுத் திட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.




# கனடாவில் புதிய விசா வழங்குவதில் விதிமுறைகள்

25.02.2025

கனடாவில் அதிகளவில் வெளிநாட்டினர் குடியேறுவதை தடுக்கும் நோக்கி விசா வழங்குவதில் புதிய விதிமுறைகளை அந்நாட்டு அரசு அமுல்படுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கையால் இலங்கையர்கள், இந்தியர்கள் உட்பட கனடாவில் வசிக்கும் பல்வேறு நாட்டினருக்கு சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் குறிப்பாக புதிதாக கனடாவுக்கு வேலைக்கு செல்வோர் மற்றும் குடியேற நினைப்பவர்களுக்கும் சிக்கல் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் வெளிநாடுகளில் இருந்து வந்து தங்கி பயிலும் மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்தவரகளின் விசா நிலையை, எந்த நேரத்திலும் மாற்றுவதற்கான அதிகாரத்தை கனடா எல்லைப் படை அதிகாரிகளுக்குஅந்நாட்டு அரசு வழங்கியுள்ளது.

அந்தவகையில் குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு விதிமுறைகளில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களின் கீழ், மின்னணு விசா, தற்காலிக தங்கும் விசா உள்ளிட்டவற்றை மறுக்கவோ நிராகரிக்கவோ கனடா எல்லைப் படைக்கு தற்போது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கனடாவில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர் விசா காலம் நிறைவடைந்த பிறகும் அவர் நாட்டைவிட்டு வெளியேற மாட்டார் என்று கனடா அதிகாரி நினைத்தால் அவரது விசா காலம் முடியும் முன்பே இரத்து செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய மாணவர்கள் மற்றும் சட்டப்பூர்வமாக குடியேறுபவர்களுக்கு கனடா மிகவும் விருப்பமான இடங்களில் ஒன்றாகும். தரவுகளின்படி, தற்போது கனடாவில் உயர்க்கல்வி படித்து வரும் இந்திய மாணவர்கள் மட்டும் 4.2 இலட்சத்துக்கும் அதிகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்காலிக தங்கும் விசாவை பெற்று இந்தியாவைச் சேர்ந்த பலரும் கனடாவுக்கு சுற்றுலா சென்று வருகின்றனர் எனவும், 2024 முதல் பாதியில் மட்டும் 3.6 இலட்சம் இந்தியர்களுக்கு பயண விசாவை அந்நாட்டு அரசு வழங்கியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்த நிலையில், மாணவர்கள், சட்டப்பூர்வமாக குடியேறியவர்களின் விசாக்கள் இரத்து செய்யப்பட்டால், அவர்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் கனடாவைவிட்டு வெளியேற நோட்டீஸ் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே காலிஸ்தான் விவகாரத்தில் இந்தியா - கனடா இடையே பிரச்னை நிலவி வரும் சூழலில், புதிய விசா விதிமுறைகளால் பாதிப்பு ஏற்படக்கூடும் என்ற அச்சம் இந்தியர்களிடையே நிலவுகிறமை குறிப்பிடத்தக்கது.

# ஒன்ராரியோ மாகாணத்தில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று டக் போர்ட் தலைமையில் கொன்சர்வேர்ட்டிவ் கட்சி அரசாங்கத்தை பெரும்பான்மைப் பலத்தோடு ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள்

27.02.2025

27.02.2025 அன்று நடைபெற்ற கனடாவின் ஒன்ராரியொ மாகாணத்திற்கான தேர்தலில் பெரும்பான்மையான வாக்காளர பெருமக்கள் டக் போர்ட் அவர்களை முதல்வராகக் கொண்டு கொன்சர்வேர்ட்டிவ் கட்சி அரசாங்கத்தை பெரும்பான்மைப் பலத்தோடு மீண்டும் ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள்.

ஒன்ராரியோ மாகாண சபையில் மொத்த 124 ஆசனங்களில் கொன்சர்வேர்ட்டிவ் கட்சி 80 ஆசனங்களைக் கைப்பற்றி பெரும்பான்மை அரசாங்கத்தை அமைக்கும் மக்கள் அணையைப் பெற்றுள்ளார்கள்.

மேலும், எடிபி கட்சி 27, லிபரல் கட்சி 14, பசுமைக்கட்சி 2 மற்றும் சுயேச்சை 1 இடங்களையும் கைபற்றியுள்ளார்கள்.




| PARTY | ELECTED | LEADING | % OF TOTAL VOTE | VOTES |
|---|---|---|---|---|
| PC | 80 | 0 | 43.0% | 2,158,452 |
| NDP | 27 | 0 | 18.5% | 931,796 |
| LIB | 14 | 0 | 30.0% | 1,504,688 |
| GRN | 2 | 0 | 4.8% | 242,822 |
| OTH | 1 | 0 | 3.7% | 185,829 |



நடைபெற்று முடிந்த ஒன்ராரியோவின் தேர்தலில் பெட்டியிட்ட 5 தமிழர்களில் இருவர் ஸ்காபுறோ மற்றும் மார்க்கம் நகரங்களில் பேட்டியிட்ட கொன்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளர்களான லோகன் கணபதி (மார்க்கம் தோர்ண்ஹில்), விஜேய் தணி காசலம் (ஸ்காபுரோ ரூஜ்பார்க்) ஆகிய தொகுதிகளுக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.



# தமிழக செய்திகள்



# முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருவதால் தமிழகத்துக்கு நீர் வெறுவதில் சிக்கல்

16.02.2025

பெரியாறு அணையின் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருவதால் இரண்டாம் போக சாகுபடி மற்றும் குடிநீர் திட்டங்களுக்கு நீர் பெறுவதில் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகி உள்ளது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்தேக்க பகுதிகளில் கடந்த சில வாரங்களாக மழைப் பொழிவு இல்லை. இதனால் கடந்த மாத இறுதியில் விநாடிக்கு 328 கன அடியாக இருந்த நீர்வரத்து படிப்படியாக குறைந்து இன்று 55 அடியாக மாறியது. இதே போல் 121 அடியாக இருந்த நீர்மட்டம் 117.5 அடியாக குறைந்தது. விநாடிக்கு தற்போது 457கன அடிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. நீர்வரத்தை விட அதிக நீர் வெளியேற்றப்படுவதால் அணை நீர்மட்டம் மேலும் குறைய வாய்ப்புள்ளது.

முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தளவில் 104 அடி வரை தண்ணீர் இருந்தால்தான் சுரங்கப்பாதை வழியே தமிழகத்துக்கு தண்ணீர் எடுக்க முடியும். மேலும் சுரங்கப்பாதையில் அடிக்கடி அடைப்புகள் ஏற்படுவதால் 108 அடி இருந்தால் தான் தற்போது நீர் பெற முடியும் என்கிற நிலை உள்ளது.

இந்நிலையில், நீர்மட்டம் வெகுவாய் குறைந்து வருவதால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதி இரண்டாம் போக பயிர் சாகுபடிக்கு நீர்பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேலும் குடிநீர் திட்டங்களும் முடங்கும் நிலை உருவாகி உள்ளது.

இது குறித்து நீர்வளத்துறை அதிகாரிகள் கூறுகையில், “நீர் வரத்தும், நீர்மட்டமும் தொடர்ந்து குறைந்து வருகிறது. இருப்பினும் தமிழகத்துக்கு நீர் பெறுவதில் சிக்கல் ஏற்படும் அளவுக்கு பாதிப்பு இருக்காது. கடந்த 3 நாட்களுக்கு முன்பு நீர்வரத்து பூஜ்யமாக இருந்த நிலையில் தற்போது நீர்வரத்து தொடங்கியுள்ளது” என்றனர். இந்நிலையில், பருவமழை பெய்து நீர்மட்டம் உயரும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகளும் உள்ளனர்.



# தமிழ்நாட்டில் 12,525 ஊராட்சிகளிலும் திடக்கழிவு விழிப்புணர்வு பாடல்

17.02.2025

வீடுகளிலேயே மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து அப்புறப்படுத்துவதற்கான விழிப்புணர்வு பாடலை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி தலைமை செயலகத்தில் இருந்து காணொலி மூலம் தொடங்கி வைத்தார்.

தூய்மை பாரத இயக்கத்தை தமிழகத்தில் மேலும் சிறப்பாக செயல்படுத்துவதற்கு, வீடு, வீடாக சென்று பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் மூலம் திடக்கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிப்பதை பொதுமக்களுக்கு தெரிவிக்கவும், திடக்கழிவுகளை அவரவர் இல்லத்திலேயே மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து அப்புறப்படுத்துவதற்காக உரிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும் பேட்டரியால் இயங்கும் வாகனங்களில் ஒலிபரப்ப திடக்கழிவு விழிப்புணர்வு குறித்த பாடல் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 1 கோடியே 25 இலட்சம் ஊரக குடியிருப்புகளில் 84 ஆயிரத்து 651 பணியாளர்கள் குப்பை சேகரித்து தரம் வாரியாக பிரிப்பதற்காக பணியாற்றுகின்றனர். இதற்காக 8,315 மின்கல வாகனங்கள் மற்றும் 1,291 டிராக்டர்கள், 372 பிற வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த அனைத்து ஊராட்சிகளிலும் பேட்டரியால் இயங்கும் வாகனங்களில் ஒலிபரப்பிட வசதியாக இந்தப் பாடலை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி தலைமை செயலகத்தில் காணொலி காட்சி மூலம் தொடங்கிவைத்தார். இதன்மூலம் தமிழகத்தில் உள்ள 12,525 ஊராட்சிகளிலும் இப்பாடல் ஒலிபரப்பப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என அரசு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நடைபெறும் ஊழல் முறைகேடுகளை தமிழ்நாடு அரசு தடுத்து நிறுத்த வேண்டும்!

## நாம் தமிழர் கட்சி – செந்தமிழன் சீமான்

23.02.2025

விவசாயிகள் அரும்பாடுபட்டு விளைவித்த நெல்மணிகளைக் கொள்முதல் செய்வதற்காக தமிழ்நாடு அரசால் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நடைபெறும் ஊழல் முறைகேடுகளால் வேளாண் பெருங்குடி மக்கள் செய்வதறியாது தவித்து வருவது மிகுந்த மனவேதனை அளிக்கிறது.

இரத்தத்தை வியர்வையாகச் சிந்தி, வெயிலிலும் மழையிலும் தங்கள் கடின உழைப்பினால் விளைவித்த நெல்மணிகளுக்கு உரிய விலை வேண்டி விவசாயிகள் காலங்காலமாகப் போராடி வருகின்றனர். குறைந்தபட்ச கொள்முதல் விலையாகக் குவிண்டால் ஒன்றுக்கு 3000 ரூபாய் நிர்ணயிக்க வேண்டும் என்று கோரிவரும் வரும் நிலையில், நெல் உற்பத்தி செலவுக்கு இணையாக, அரசு மிகக்குறைந்த கொள்முதல் விலையை மட்டுமே நிர்ணயித்து விவசாயிகள் வயிற்றில் அடித்து வருகின்றது.

அதுமட்டுமின்றி, நெல்லின் ஈரப்பதம் 20% வரை அனுமதிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்த நிலையில், இந்திய ஒன்றிய அரசால் அனுமதிக்கப்பட்ட 17% ஈரப்பத அளவில் மட்டுமே தமிழ்நாடு அரசு நெல் கொள்முதல் செய்கிறது.

இந்நிலையில், தமிழ்நாட்டு விவசாயிகள் விளைவித்துக் கொண்டுவரும் 17% குறைவான ஈரப்பதம் உடைய 40 கிலோ நெல் மூட்டைகளுக்கும், ஈரப்பதத்தினால் ஏற்படும் இழப்பினை காரணம் காட்டி $1\,{}^{1}/_{2}$ கிலோ வரை கூடுதலாக எடை நிறுத்தே நேரடி நெல் கொள்முதல் நிலைய அதிகாரிகள் எடுத்துக்கொள்வதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர். அதாவது, சராசரியாக 1 மூட்டைக்கு $1{}^{1}/_{2}$ கிலோவரை விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகின்ற வகையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் பிடித்தம் செய்யப்படுகிறது.

அதுமட்டுமின்றி, ஏற்றுக் கூலி, இறக்கு கூலி, வண்டி வாடகை என்று கூறி 1 கிலோ நெல்லுக்கு 1 ரூபாய் என ஒவ்வொரு 40 கிலோ மூட்டைக்கும் 40 ரூபாய் வரை நெல் கொள் முதல் நிலைய அதிகாரிகள் இலஞ்சம் கேட்பதாகவும் வேளாண் பெருமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அதன்படி, விவசாயிகள் ஒவ்வொரு மூட்டை நெல்லுக்கும் $1{}^{1}/_{2}$ கிலோ நெல்லும், 40 ரூபாய் பணமும் கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது வேளாண் பெருங்குடி மக்களின் உழைப்பை உறிஞ்சும் சிறிதும் மனச்சான்றற்ற கொடுஞ்செயலாகும்.

ஏற்கனவே, பாசன நீர்ப் பற்றாக்குறை, இடுபொருட்கள் கிடைக்கப்பெறாமை, உரம் விலையேற்றம், வேலையாட்கள் பற்றாக்குறை, பருவகால மாற்றம் எனப் பல்வேறு தடைகளைத் தாண்டி பயிர் விளைவித்தாலும், விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காத காரணத்தால், விவசாயிகள் வேளாண்மையை விட்டே வெளியேறி வருகின்றனர். இத்தகு துயர்மிகு சூழலில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் ஊழல் முறைகேடுகளை அரசு அனுமதிப்பது வன்மையான கண்டனத்துக்குரியது.

17% ஈரப்பதம் என்பது அரசு நிர்ணயித்துள்ள விழுக்காடு தானே? அதனால் ஏற்படும் எடை குறைவையும் அரசுதானே ஏற்க வேண்டும்? அதேபோன்று ஏற்றுக் கூலி, இறக்கு கூலி,



வண்டி வாடகை ஆகியவற்றையும் நெல் கொள்முதல் செய்கின்ற தமிழ்நாடு அரசுதானே ஏற்க வேண்டும்? அவற்றையெல்லாம் விவசாயிகள் தலையில் சுமத்துவது எவ்வகையில் நியாயமாகும்? ஏற்கனவே, நெல் உற்பத்தி செலவுக்கு இணையாக, அரசு நிர்ணயித்துள்ள நெல் கொள்முதல் விலையும் உள்ளதால், வேளாண் பெருங்குடி மக்கள் சிறிதும் இலாபம் இன்றியே நெல் விவசாயம் செய்து வருகின்றனர். அதனையும் அதிகாரிகள் மூலம் அரசு தட்டிப்பறிப்பது கொடுங்கோன்மையாகும்.

ஆகவே, தமிழ்நாட்டில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நடைபெறும் ஊழல் முறைகேடுகளைத் தடுத்து, எவ்வித கையூட்டுக்கும் இடமளிக்காமல் சரியான எடையில், சரியான கொள்முதல் விலையை வேளாண் பெருங்குடி மக்களுக்கு முறையாக வழங்க வேண்டுமென தமிழ்நாடு அரசினை வலியுறுத்துகிறேன்.

– செந்தமிழன் சூசீமான்
தலைமை ஒருங்கிணைப்பாளர்
நாம்தமிழர்கட்சி

www.sangathamil.ca

# ‘மும்மொழிக் கொள்கையை மட்டும் எதிர்ப்பது சந்தர்ப்பவாத அரசியல்’

## பாமக நிறுவனர் இராமதாஸ்

20.02.2025

“தமிழக அரசுக்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழை பயிற்று மொழியாகவும், பாட மொழியாகவும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால், அதை செய்யாமல் மும்மொழிக் கொள்கையை மட்டும் எதிர்ப்பது சந்தர்ப்பவாத அரசியலாகவும், தமிழ் மொழிக்கு இழைக்கப்படும் துரோகமாகவும் தான் பார்க்கப்படும்” என்று பாமக நிறுவனர் இராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: “நமது தாய்மொழியாம் தமிழை வளர்த்தெடுக்க வேண்டியதன் தேவையை உலகத்தாய்மொழி நாள் கொண்டாடப் பட்டு வரும் கடந்த 26 ஆண்டுகளாக தொடர்ந்து வலியுறுத்தி வரும் போதிலும், அன்னைத் தமிழைக் கட்டாய பாடமாகவும், பயிற்றுமொழியாகவும் நடைமுறைப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்காதது கண்டிக்கத்தக்கது.

அன்னைத் தமிழின் வளர்ச்சிக்கு பங்களிக்காமல் இந்த நாளை கடைபிடிப்பது சற்றும் பொருளற்றது பயனற்றது என்பது தான் பாமகவின் உறுதியான நிலைப்பாடு ஆகும். உலகத் தாய்மொழி நாள் அறிவிக்கப்படுவதற்கு முன்பிலிருந்தே தமிழகத்தில் தமிழ் மொழியை கட்டாயப் பயிற்று மொழியாகவும், பாடமாகவும் அறிவிக்க வேண்டும் என்று பாமக வலியுறுத்தி வருகிறது.

உலகத் தாய்மொழி நாள் அறிவிக்கப்பட்டவுடன், ஒவ்வொரு ஆண்டும் உலகத் தாய்மொழி நாளில் அன்னைத் தமிழை பயிற்று மொழியாகவும், பாட மொழியாகவும் அறிவிக்க வேண்டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். கடந்த 2023-ம் ஆண்டு இதே நாளில் தமிழ்க் கட்டாயப் பாடம், தமிழ்க் கட்டாயப் பயிற்றுமொழி உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 8 நாள்கள் தமிழன்னை சிலையுடன் பரப்புரை பயணம் மேற்கொண்டேன். ஆனால், அந்தக் கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்றவில்லை. உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தாய்மொழி தான் பயிற்று மொழியாக திகழ்கிறது.

ஆனால், தமிழகத்தில் மட்டும் தான் தமிழைப் படிக்காமலும், தமிழில் படிக்காமலும் பட்டம் பெற முடியும் என்ற அவல நிலை நிலவுகிறது. இந்த நிலையை மாற்ற திமுக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? 25 ஆண்டுகளுக்கு முன்பு 1999-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழை கட்டாய பயிற்று மொழியாக்க வேண்டும் என்று வலியுறுத்தி 102 தமிழறிஞர்கள் சாகும்வரை உண்ணாநிலை மேற்கொண்டனர். அதைத் தொடர்ந்து எட்டாம் வகுப்பு வரை தமிழை கட்டாயப் பயிற்றுமொழியாக்கி சட்டம் கொண்டு வருவதற்கு ஒப்புக் கொண்ட தமிழக அரசு, ஐந்தாம் வகுப்பு வரை தமிழை பயிற்றுமொழியாக்கி அரசாணை பிறப்பித்தது.

ஆனால், அடுத்த சில மாதங்களிலேயே அந்த அரசாணை செல்லாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதை எதிர்த்து தமிழக அரசின் சார்பில் 2000-ம் ஆண்டில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த வழக்கு 25 ஆண்டுகளாக உச்சநீதிமன்றத்தில் உறங்கிக் கொண்டிருக்கிறது. அதை விசாரணைக்கு கொண்டு வருவதற்கோ அல்லது கட்டாயப் பயிற்றுமொழிச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கோ தமிழக அரசு இன்று வரை நடவடிக்கை எடுக்கவில்லை.

உலகத் தாய்மொழி நாள் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்தே தமிழ் பயிற்றுமொழிக்கான அரசியல் போராட்டமும், சட்டப் போராட்டமும் தொடங்கியது. ஆனால், அதன்பின் கால் நூற்றாண்டுக்கு மேலாகியும் இன்று வரை அன்னை தமிழுக்கு ஆட்சிப் பீடம் கிடைக்கவே இல்லை. அதேபோல், எனது அழுத்தம் காரணமாக, தமிழகத்தில் 10-ம் வகுப்பு வரை தமிழைக் கட்டாயப் பாடமாக்கி 2006-ம் ஆண்டில் அப்போதைய முதல்வர் கருணாநிதி சட்டம் கொண்டு வந்தார்.

அதன்படி 2015-16ஆம் ஆண்டு முதல் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழ்க் கட்டாயம் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதுவும் நடக்கவில்லை. இதுதொடர்பான வழக்கும்



உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் தான் உள்ளது. ஆனால், அந்த வழக்கை விசாரணைக்கு கொண்டு வந்து தமிழை கட்டாயப்பாடமாக்க தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழகத்தில் மும்மொழிக் கொள்கையை திணிப்பதற்கு தமிழக அரசும், கட்சிகளும் எதிர்ப்பு தெரிவிப்பது மிகவும் சரியானது. மும்மொழிக் கொள்கையை எதிர்ப்பது எந்த அளவுக்கு நியாயமானதோ, தமிழை கட்டாயப் பாடமாக்குவதும், பயிற்று மொழியாக்குவதும் அதை விட நியாயமானதும், முக்கியமானதும் ஆகும்.

தமிழக அரசுக்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழை பயிற்று மொழியாகவும், பாட மொழியாகவும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால், அதை செய்யாமல் மும்மொழிக் கொள்கையை மட்டும் எதிர்ப்பது சந்தர்ப்பவாத அரசியலாகவும், தமிழ் மொழிக்கு இழைக்கப்படும் துரோகமாகவும் தான் பார்க்கப்படும்.

எனவே, உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள தமிழ் மொழி தொடர்பான வழக்குகளை மிக விரைவாக விசாரணைக்கு கொண்டு வந்து, தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும் தமிழைக் கட்டாயப்படமாகவும், கட்டாயப் பயிற்று

# இந்தி ஆதிக்கத்திற்குத் தமிழகம் ஒருபோதும் பணியாது!

## உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன்

23.02.2025

“இந்தியாவில் இந்திப் பேசும் மாநிலங்களாக உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், இராஜஸ்தான், அரியானா, உத்தரகாண்ட், இமாச்சலப் பிரதேசம், ஜார்கண்ட் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியில் வாழும் மக்கள் இந்திமொழிப் பேசுகிறார்கள். ஏறத்தாழ 40% மக்கள் பேசுகிற இந்தி மொழி இந்தியாவின் பெரும்பான்மை மொழியாகும்” என்ற வாதத்தை இந்தித் திணிப்பாளர்கள் முன் வைக்கிறார்கள்.

ஆனால், உண்மையில் மேற்கண்ட மாநிலங்களில் பேசப்படுவது இந்தி அல்ல; பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன. உத்திரப் பிரதேசத்தில் கரிபோலி, போஜ்புரி, அவதி, கன்னோஜி, பந்தேலி, பகேலி, பிரஸ்பாஷா ஆகிய மொழிகள் அங்கு மக்களால் பேசப்படுகின்றன. மத்தியப் பிரதேசத்தில் மால்வி, நிமதி, பகேலி ஆகிய மொழிகள் பேசப்படுகின்றன. இராஜஸ்தானில் இராஜஸ்தானி, மார்வாரி, மேவாரி மொழிகள் பேசப்படுகின்றன. அரியானாவில் அரியான்வி என்ற மொழிப் பேசப்படுகிறது. உத்தரகாண்ட் மாநிலத்தில் குடவாலி, குமோனி ஆகிய மொழிகள் பேசப்படுகின்றன. ஜார்கண்ட் மாநிலத்தில் சந்தாலி மொழிப் பேசப்படுகிறது. இப்படி ஆங்காங்கே காலங்காலமாக இந்த மக்கள் மேற்கண்ட மொழிகளைத் தங்களது தாய்மொழிகளாகக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவை அத்தனையையும் இணைத்து அவையெல்லாம் இந்தியின் கிளை மொழிகள். ஆகவே இந்தி பெரும்பான்மை மக்களால் பேசப்படும் மொழி என்ற வாதத்தை இந்தி வெறியர்கள் முன்வைக்கிறார்கள்.

மொகலாயர் ஆட்சி நடைபெற்றபோது, தில்லி கடை வீதியில் பல்வேறு மொழிகள் பேசுபவர்கள் அங்கு வந்துபோவார்கள். அப்போது இந்த மொழிகளின் கலப்பட மொழியாக உருவானது இந்தியா. அதற்கு பஜார்பாசா என்றுதான் மொகலாயர் காலத்தில் பெயர் சூட்டப்பட்டிருந்தது. கடைத்தெரு மொழியாக இருந்த இந்தி, இந்தியாவின் ஆட்சி மொழியாக வேண்டும் என்றும், பெரும்பான்மை மக்கள் பேசுகிற மொழி என்றும், பிற மொழிகள் பேசுபவர்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் முனைந்து செயல்படுகிறார்கள்.

இந்தியாவின் தலைமையமைச்சர் மோடி, கூட்டங்களில் பேசும் போது அடிக்கடி தமிழ்மொழி இந்தியாவின் பழமையான மொழி என்று போற்றுகிறார். அதுமட்டுமல்ல, அது உலகெங்கும் போற்றப்படும் ஒரு செம்மொழி என்றும் கூறுகிறார். ஆனால், இந்தித் திணிப்பு என்று வரும் போது மட்டும் இதையெல்லாம் புறக்கணித்துவிட்டு, இந்தியை அரியாசனத்தில் ஏற்றவேண்டும் என்று அவர்கள் முனைகிறார். இந்த கட்டத்தில் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். தென்னாட்டு மொழிகள் அனைத்திற்கும் செம்மொழித் தகுதியை இந்திய அரசு வழங்கியிருக்கிறது. வேறு சில மொழிகளுக்கும் அளித்திருக்கிறது. ஆனால், இந்திக்குச் செம்மொழித் தகுதி அளிக்கப்படவில்லை என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். சமற்கிருதத்திற்குச் செம்மொழித் தகுதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சமற்கிருதம் பேச, எழுதத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 130கோடி மக்களில் 25,000 பேருக்கும் குறைவானவர்கள்தான் அதைப் பேசுகிறார்கள். அதற்கு இந்திய அரசு பலஆயிரம் கோடிக்கணக்கில் பணத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கிறது.

தமிழ்நாடு உள்படத் தென் மாநிலங்கள் மற்றும் இந்திப் பேசாத மாநிலங்கள் அனைத்தும் இந்தியை கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்று இந்திய அரசு வலியுறுத்துகிறது. ஆனால், மும்மொழித் திட்டத்தின்படி, வட இந்தியாவில் உள்ள மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் மூன்றாவது மொழியாகத் தமிழ் அல்லது தென்னாட்டு மொழிகள் எதையாவது படிக்கவேண்டும் என்று இவர்கள் வலியுறுத்துகிறார்களா என்றால் இல்லை. அந்த மாணவர்களுக்கு மொழிச்சுமை இரண்டு மொழியோடு நின்று விடுகிறது. மூன்றாம் மொழியை அவர்கள் ஒருபோதும் இன்று வரையிலும் படிப்பதில்லை. வேண்டுமானால் சமற்கிருதத்தை மூன்றாவது மொழியாக வைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறார்களே தவிர, இந்தியாவின் முதன் மொழியான தமிழை அங்கே மூன்றாவது மொழியாகப் படிக்க வேண்டும் என்று சொல்வதற்கு இந்திய அரசு முன்வரவில்லை. ஆக, அப்பட்டமான ஒரு மொழி ஏகாதிபத்தியத்தை இந்திப் பேசாத மக்கள் மீது திணிப்பதற்கு இந்திய அரசு முயலுகிறது.

மொழி என்பது பேச்சு, எழுத்து அதோடு அடங்கிவிடுவதில்லை. ஒரு மொழியின் அடிப்படையில்தான் அந்த மொழிப்பேசும் மக்களின் பண்பாடு உருவாகிறது. தமிழ் செம்மொழியாக விளங்குகிறது. இந்தியாவின் பழமையான மொழியாகத் திகழ்கிறது. அதைப் பேசும் மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள் எல்லாவற்றிலும் அது படிந்திருக்கிறது. அந்தத் தமிழர்கள் மீது இந்தியைத் திணிப்பதற்கு முயற்சி செய்தால் அதற்குப் பெயர் என்ன? ஆயிரக் கணக்கான ஆண்டுக் காலத்திற்கு மேலாகச் சமற்கிருதத்தைத் திணிப்பதற்குத் திட்டமிட்ட முயற்சி நடந்தது. ஆனால், அது ஒருபோதும் வெற்றிபெறவில்லை. தமிழ் தனது தனித்தன்மையை இன்றுவரையிலும் நிலைநிறுத்தி வருகிறது.

இந்தியா முழுவதும் ஒரு காலத்தில் தமிழ்தான் பேசப்பட்டது என்று நேரு, அம்பேத்கர் போன்றவர்களெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்; எழுதியிருக்கிறார்கள். ஆனால், எந்தவிதத்திலும் தகுதியற்ற ஒரு மொழியைத் தமிழ்நாட்டு மக்கள் மீது திணிப்பதற்குச் செய்யப்படும் முயற்சியை ஒருபோதும் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

1938ஆம் ஆண்டில் சென்னை மாகாண முதல்வராக இருந்த போது, முதன்முதலாக இந்தியைத் தமிழ்நாட்டு மக்கள் மீது திணிப்பதற்கு இராஜாஜி அவர்கள் முயற்சி செய்தார். அப்போது பெரியார் தலைமையில் தமிழறிஞர்களான சோமசுந்தர



பாரதியார், கி.ஆ.பெ. விசுவநாதன், மறைமலையடிகள் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அப்போராட்டத்தில் நடராசன், தாளமுத்து ஆகிய இரு இளைஞர்கள் உயிர்த் தியாகம் செய்தார்கள். இதன் விளைவாக இந்தித் திணிப்பை இராஜாஜி திரும்பப் பெற்றார். பிற்காலத்தில் அதே இராஜாஜி அவர்கள் முதலில் இந்தியைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புங்கள் என்று சொன்னார். அதன் பொருள் என்ன? இந்தி இன்னும் வளம் இல்லாத மொழியாகத் திகழ்கிறது. அதை வளமாக்குவதற்கு வழியைப் பாருங்கள் என்று முகத்தில் அடித்தார்போல் சொன்னார் இராஜாஜி.

ஆகவே, இதற்கு முன்னால் இந்தியைத் திணிப்பதற்கு முதலாவது தலைமையமைச்சர் நேருவின் காலத்திலேயே இம்முயற்சி எடுக்கப்பட்ட போது, அதற்குக் கடும் எதிர்ப்பு எழுந்தது. அப்போது நேரு அவர்கள் நாடாளுமன்றத்தில் பின்வரும் வாக்குறுதியை அளித்தார். இந்திப் பேசாத மக்கள் விரும்புகிற காலம் வரை இணை ஆட்சி மொழியாக ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கும் என்பதுதான் அந்த வாக்குறுதி ஆகும். பிறகு லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் தலைமையமைச்சராக வந்தபோது, 1965ஆம் ஆண்டில் இந்தி ஆட்சிமொழியாகும் என்ற ஆணையை குடியரசுத் தலைவர் பிறப்பித்தபோது, அதற்கு எதிராக தமிழ்நாட்டு மாணவர்கள் கொதித்தெழுந்து போராடினார்கள். தமிழ்நாட்டு மக்களும் அந்தப் போராட்டத்தில் இறங்கினார்கள். தமிழ்நாடே கொந்தளித்தது. அதன் விளைவாக அகில இந்திய காங்கிரசுத் தலைவராக இருந்த காமராசர் தலையீட்டின் பேரில் தலைமையமைச்சர் லால்பகதூர் அவர்கள் நேருவின் வாக்குறுதிக்குச் சட்ட வடிவம் கொடுத்தார். இதையெல்லாம் அறிந்திராதவர்கள் இன்றைக்கு இந்தித் திணிப்பில் ஈடுபடுவது என்பது அரசியலமைப்புச் சட்டத்திற்கே எதிரானது. இதை ஒருபோதும் தமிழகம் ஏற்காது என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

www.sangathamil.ca

# சென்னை மாநகர பஸ் குறிப்பேட்டில் ஆங்கிலம்: அன்புமணி கண்டனம்

27.02.2025





பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி இராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: - சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகங்களின் மூலம் இயக்கப்படும் மாநகரப் பஸ்களின் செயல்பாடுகள் குறித்த குறிப்புகளை பதிவு செய்வதற்கான வண்டி குறிப்பேடு இதுவரை தமிழில் வழங்கப் பட்டு வந்தது. ஆனால், அதை இப்போது ஆங்கிலத்தில் மாற்றியுள்ளனர்.

இது கடுமையாக கண்டிக்கத்தக்கது.தமிழ்நாட்டில் 1956-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தின்படி அரசின் ஆவணங்கள், படிவங்கள் அனைத்தும் தமிழில் தான் இருக்க வேண்டும். பஸ்களுக்கான படிவங்களை ஆங்கிலத்தில் மாற்றுவது தமிழுக்கு இழைக்கப்படும் துரோகம் ஆகும்.

தமிழ்நாட்டில் அன்னைத் தமிழுக்கு இடமளிக்க மறுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதுமட்டுமின்றி, ஓட்டுனர்களும், நடத்துனர்களும் 10-ம் வகுப்புக் கல்வித் தகுதியில் பணிக்கு சேர்ந்தவர்கள். அவர்களால் ஆங்கிலத்தில் எழுத முடியாது. இவை அனைத்துக்கும் மேலாக எந்த மொழியையும் திணிக்கக் கூடாது. எனவே, பஸ் குறிப்பேட்டை ஏற்கனவே நடைமுறையில் இருந்தவாறு தமிழுக்கு மாற்ற வேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்

# தமிழகத்தில் தமிழை பயிற்று மொழியாக செயல்படுத்த ஆக்கபூர்வ நடவடிக்கை தேவை

## பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ்

23.02.2025

தாய்மொழிக்கு எவ்வாறு சேவை செய்வது என்பதை கேரள, தெலுங்கானா, கர்நாடக, ஆந்திரம் போன்ற பிற திராவிட மாநில அரசுகளிடமிருந்து தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழகத்தில் தமிழைக் கட்டாயப் பாடமாகவும், பயிற்று மொழியாகவும் செயல்படுத்த தமிழக அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பாமக தலைவர் இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், “தெலுங்கானாவில் மாநிலப் பாடத்திட்டம், சிபிஎஸ்இ பாடத் திட்டம் உள்ளிட்ட அனைத்துப் பாடத்திட்டங்களை பின்பற்றும் பள்ளிகளிலும் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை தெலுங்கு கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் தமிழைக் கட்டாயப்பாடமாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டு 19 ஆண்டுகளாகியும் இன்று வரை அந்தச் சட்டத்தை செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்காதது கண்டிக்கத்தக்கது.

தெலுங்கானாவில் தெலுங்கை கட்டாயப்பாடமாக்கும் சட்டம் 2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. அதன்படி கடந்த 2022-23ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு வரை தெலுங்கு கட்டாயப்பாடமாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், முந்தைய சந்திரசேகரராவ் ஆட்சியில் அச்சட்டம் முறையாக செயல்படுத்தப் படாத நிலையில், இப்போது தெலுங்கு கட்டாயப் பாடச் சட்டம் புதிய தீவிரத்துடன் செயல்படுத்தப்படும் 2025-26ஆம் ஆண்டில் ஒன்பதாம் வகுப்பிலும், 2026-27ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பிலும் தெலுங்கு மொழிப் பாடத்திற்கு கட்டாயம் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்றும் அம்மாநில முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி ஆணை பிறப்பித்திருக்கிறார். தாய்மொழியை காக்கும் நோக்கத்தில் இந்த நடவடிக்கை மிகவும் வரவேற்கத்தக்கது.

ஆனால், தமிழை வளர்க்கிறோம், வாழ வைக்கிறோம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்களால் தமிழகத்தில் தமிழை இன்னும் பயிற்று மொழியாகவோ, கட்டாயப்பாடமாகவோ கொண்டு வர முடியவில்லை. தமிழ் மொழியை கட்டாயப்பாடமாக்குவதில் தமிழக ஆட்சியாளர்கள் செய்த துரோகங்கள் மிக நீண்டவை. பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் கொடுத்த தொடர் அழுத்தம் காரணமாக தமிழ் நாட்டில் பத்தாம் வகுப்பு வரை தமிழைக் கட்டாயப் பாடமாக்கும் சட்டம் 2006 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. அந்த சட்டத்தின்படி ஆண்டுக்கு ஓர் வகுப்பு வீதம் தமிழ்க் கட்டாயப்பாடமாக்கப்பட்டு 2015-16ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ்க் கட்டாயப்பாடமாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதன்பின் 9 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் இதுவரை தமிழ்நாட்டில் பத்தாம் வகுப்புத் தேர்வில் தமிழ் கட்டாயப்பாடம் ஆக்கப்படவில்லை. அதற்காக ஆட்சியாளர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தமிழ்க் கட்டாயப்பாடமாக்கப்படுவதற்கு எதிராக தனியார் பள்ளிகள் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. தமிழ்க் கட்டாயப்பாடச் சட்டத்தை தடை செய்ய முடியாது என்று கூறிவிட்ட உயர்நீதிமன்றம், 2022-23ஆம் ஆண்டு முதல் தமிழ்க் கட்டாயப்பாடச் சட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று ஆணையிட்டது. அதை எதிர்த்து தனியார் பள்ளிகள் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தன.

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி 6 ஆம் நாள் இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், “உள்ளூர் மொழியைக் கற்றுக் கொள்வது குழந்தைகளுக்கு மிகவும் பயனுள்ளது. அதே நேரத்தில் உள்ளூர் மொழியை கற்பிக்க தனியார் பள்ளிகள் மறுப்பது தேச ஒற்றுமைக்கு நல்லதல்ல’” என்று கூறியது. எனினும், பத்தாம் வகுப்பு தேர்வு தொடங்க ஒரு மாதம் மட்டுமே இருந்த நிலையில், அதற்குள்ளாக வழக்கை விசாரித்து முடிக்க முடியாது என்பதால், தமிழ்க் கட்டாயப்பாடச் சட்டத்தை செயல்படுத்துவதிலிருந்து ஓராண்டுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்படுவதாகவும், கோடை விடுமுறைக்குப் பிறகு ஜுலை மாதத்தில் வழக்கை விசாரித்துத் தீர்ப்பளிப்பதாகவும் உச்சநீதிமன்றம் கூறியிருந்தது. 2023 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும்படி உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு முறையீடு செய்திருந்தால், 2023 - 24ஆம் ஆண்டிலேயே தமிழ்க் கட்டாயப்பாடமாகியிருந்திருக்கும். ஆனால், இன்று வரை அந்த வழக்கை விசாரணைக்கு கொண்டு வர திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேலும், 2015-16ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள சி.பி.எஸ்.இ உள்ளிட்ட பிற கல்வி வாரியங்களுடன் இணைக்கப்பட்ட பள்ளிகளிலும் தமிழை கட்டாயமாக்கி, கடந்த 18.09.2014 அன்று அப்போதைய தமிழக அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி நடப்பு 2024-25ஆம் ஆண்டில் பிற பாடத்திட்டங்களை பின்பற்றும் தனியார் பள்ளிகளிலும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ்க் கட்டாயப்பாடமாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதை செய்யாத திமுக அரசு, அந்தக் கடமையிலிருந்து தனியார் பள்ளிகளைக் காப்பாற்றும் நோக்குடன் 2023ஆம் ஆண்டு மே மாதம் தனியார் பள்ளிகளுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியது.

அதன்படி, சிபிஎஸ்இ உள்ளிட்ட பாடத்திட்டத்தை பின்பற்றும் தனியார் பள்ளிகள் தமிழைக் கட்டாயப் பாடமாக்கத் தேவையிலடலை; அதற்கு பதிலாக தமிழைக் கூடுதல் கட்டாயப் பாடமாக்கினால் போதுமானது; தமிழ்ப் பாடத்திற்கு சிபிஎஸ்இ உள்ளிட்ட வாரியங்கள் தேர்வு நடத்தத் தேவையில்லை; தமிழ்நாடு அரசுத் தேர்வுத்துறையே நடத்தி அதற்கான சான்றிதழை அளிக்கும் என்று அறிவிக்கப்பட்டது. இது மோசடியானது. தனியார் பள்ளிகள் எந்தப் பாடத்திட்டத்தை பின்பற்றுகின்றனவோ, அந்தப் பாடத்திட்டத்தின்படி தமிழ்ப் பாடத்திற்கு தேர்வு நடத்தப்பட்டு, அதில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாக்கப்பட்டால் தான் மாணவர்கள் தமிழைப் படிப்பார்கள். மாறாக, பொதுத்தேர்வில் தமிழ்ப் பாடம் கிடையாது; பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற தமிழ்க் கட்டாயம் கிடையாது; எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாத வகையில், தமிழக அரசுத் தேர்வுத் துறை நடத்தும் தேர்வை பெயரளவில் எழுதினால் போதுமானது என்றால் எவரும் தமிழ் படிக்க மாட்டார்கள்.



இன்னொருபுறம், தமிழைக் கட்டாயப் பயிற்று மொழியாக்கும் அரசாணை செல்லாது என்று உயர்நீதிமன்றம் அளித்தத் தீர்ப்பை எதிர்த்து 2000 ஆம் ஆண்டில் தமிழக அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு 25 ஆண்டுகளுக்கும் மேலாக உச்ச நீதிமன்றத்தில் கிடப்பில் போடப்பட்டுள்ளது. அதை விசாரணைக்கு கொண்டு வரவோ அல்லது தமிழைக் கட்டாயப் பயிற்றுமொழியாக்கி சட்டம் கொண்டு வரவோ அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்கெல்லாம் காரணம், தமிழை வெறுக்கும் தனியார் பள்ளி நிர்வாகங்களுக்கு தமிழக ஆட்சியாளர்கள் செலுத்தி வரும் பதில் மரியாதை தான். இது தமிழ்த் துரோகம்.

தாய்மொழிக்கு எவ்வாறு சேவை செய்வது என்பதை கேரளம், தெலுங்கானம், கர்நாடகம், ஆந்திரம் போன்ற பிற திராவிட மாநில அரசுகளிடமிருந்து தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். இனியும் அன்னைத் தமிழுக்கு துரோகம் செய்வதை விடுத்து, தமிழகத்தில் தமிழைக் கட்டாயப் பாடமாகவும், பயிற்று மொழியாகவும் செயல்படுத்த தமிழக அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.” என்று வலியுறுத்தியுள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# உலக செய்திகள்

## ஐரோப்பிய இராணுவத்தை உருவாக்க வேண்டும்

### உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி

15.02.2025

ரஷ்யாவிலிருந்து பாதுகாக்க ஐரோப்பிய இராணுவத்தை உருவாக்க உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் ஆகியோர் அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க ஒப்புக்கொண்டதை அடுத்து, மியூனிக் பாதுகாப்பு மாநாட்டில் பேசிய போதே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

எங்கள் தலையீடு இல்லாமல் எங்கள் முதுகுக்குப் பின்னால் செய்யப்படும் ஒப்பந்தங்களை ஒருபோதும் உக்ரைன் ஏற்றுக் கொள்ளாது உக்ரைன் ஜனாதிபதி என்றும் கூறினார்.

ஐரோப்பாவிற்கு அதன் சொந்த இராணுவம் தேவை என்று பல தலைவர்கள் பேசியுள்ளனர்.
அமெரிக்க துணை ஜனாதிபதி ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பல தசாப்த கால பழைய உறவு முடிவுக்கு வருவதாக தெளிவுபடுத்தினார்.

ஐரோப்பாவின் ஆயுதப் படைகள் உருவாக்கப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன் என்று ஜெலென்ஸ்கி கூறினார்.

டிரம்ப் மற்றும் ஹெக்செத் இருவரும் உக்ரைன் நேட்டோவில் சேர வாய்ப்பில்லை என்று கூறியுள்ளனர்.

2014 க்கு முந்தைய உக்ரைனின் எல்லைகளுக்குத் திரும்புவது நடைமுறைக்கு மாறானது என்றும் அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் கூறினார்.

ஐரோப்பிய இராணுவம் என்ற கருத்து, பிரான்சின் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் உட்பட பிற தலைவர்களால் முன்மொழியப்பட்ட ஒன்றாகும், அவர் நீண்ட காலமாக அமெரிக்காவின் மீதான அதன் நம்பகத்தன்மையைக் குறைக்க ஐரோப்



பாவின் இராணுவத்தை ஆதரித்து வருகிறார்.

வெள்ளிக்கிழமை ஐரோப்பிய ஜனநாயகங்களைத் தாக்கி உரையாற்றிய அமெரிக்க துணைத் தலைவர் ஜே.டி. வான்ஸ், ஐரோப்பா பாதுகாப்பில் பெரிய அளவில் முன்னேற வேண்டும் என்று எச்சரித்தார்.

## ரஷ்யா – அமெரிக்கா இருநாடுகளும் தூதரகங்களை திறந்து ஒத்துழைப்பை வழங்க முடிவு

18.02.2025

ரஷ்யாவின் நிலைப்பாட்டை அமெரிக்கா இப்போது நன்றாகப் புரிந்துகொள்கிறது என்று ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கூறினார்.



இன்று செவ்வாய்க்கிழமை ரியாத்தில் நடந்த உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் மாஸ்கோவின் நிலைப்பாட்டை வாஷிங்டன் நன்றாக புரிந்து கொண்டதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கூறினார்.

உரையாடல் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று நான் நம்புகிறேன். நாங்கள் ஒருவரையொருவர் கேட்டுக் கொள்ளவில்லை. ஆனால் கேட்டோம். மேலும் அமெரிக்க தரப்பு எங்கள் நிலைப்பாட்டை நன்கு புரிந்துகொண்டுள்ளது என்று நம்புவதற்கு எனக்கு காரணம் உள்ளது என்று 2022 உக்ரைன் படையெடுப்பிற்குப் பின்னர் இரு உலக வல்லரசுகளுக்கும் இடையிலான முதல் பேச்சுவார்த்தையில் ரஷ்ய தூதுக் குழுவிற்கு தலைமை தாங்கிய லாவ்ரோவ் கூறினார்.

உக்ரைன் மோதலைத் தீர்ப்பதற்கான ஒரு செயல்முறையை நிறுவவும், இராஜதந்திர பணிகளுக்கான தடைகளை அகற்றவும் இரு நாடுகளும் ஒப்புக்கொண்டதாக லாவ்ரோவ் மேலும் கூறினார்.

உக்ரைனை ஆக்கிரமிப்பதற்கான காரணங்களில் ஒன்றாக மாஸ்கோ குறிப்பிட்ட நேட்டோ விரிவாக்கம் குறித்தும் ரஷ்ய உயர்மட்ட இராஜதந்திரி பேசினார். இது ரஷ்யாவிற்கு நேரடி அச்சுறுத்தல் என்றும், உக்ரைனுக்கு நேட்டோ துருப்புக்கள் அனுப்பப்படுவது மற்ற கொடிகளின் கீழ் கூட ஏற்றுக்கொள்ள முடியாதது என்று அமெரிக்க பிரதிநிதிகளிடம் தெரிவித்ததாகவும் அவர் வலியுறுத்தினார்.

குறிப்பாக எந்தவொரு அமைதி ஒப்பந்தத்தின் கீழும் உக்ரைனில் உள்ள நேட்டோ நாடுகளின் அமைதி காக்கும் படைகளை தனது நாடு ஏற்றுக்கொள்ளாது என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கூறியுள்ளார்.

பின்னர், அமெரிக்காவும் ரஷ்யாவும் விரைவில் பரஸ்பரம் தங்கள் நாடுகளுக்கு தூதர்களை நியமித்து, முழுமையாக ஒத்துழைப்பை மீட்டெடுப்பதற்கான நிலைமைகளை உருவாக்கும் என்று லாவ்ரோவ் கூறினார்.

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்க குழுக்களை நியமிக்க ரஷ்யாவும் அமெரிக்காவும் ஒப்புக்கொண்டதாகக் கூறின.

இன்று ஒரு நீண்ட மற்றும் கடினமான பயணத்தின் முதல் படியாகும். ஆனால் ஒரு முக்கியமான ஒன்று என்று கூட்டத்திற்குப் பின்னர் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ கூறினார்.

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தீவிரமான செயல்



பாட்டில் ஈடுபட மாஸ்கோ தயாராக இருப்பதாக அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ உறுதியாக கூறினார். வாஷிங்டன் ஒரு நியாயமான மற்றும் நிலையான தீர்வை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும் கூறினார்.

அமெரிக்க வெளியுறவுத்துறைச் செய்தித் தொடர்பாளர் டாமி புரூஸ் ஒரு அறிக்கையில், இந்த சந்திப்பு அமைதியை நோக்கிய ஒரு முக்கியமான முன்னேற்றம் என்று கூறினார்.

போரை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்த பேச்சுவார்த்தைகளில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபட வேண்டும் என்றும் ரஷ்யாவுடன் கூட்டாளியாக இருப்பதற்கு அசாதாரண வாய்ப்புகள் உள்ளன என்றும் ரூபியோ கூறினார்.

சவுதி அரேபியாவில் நடந்த கூட்டத்தில் அமெரிக்க மத்திய கிழக்கு தூதர் ஸ்டீவ் விட்காஃப் மற்றும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக் வால்ட்ஸ், ரஷ்ய ஜனாதிபதி உதவியாளர் யூரி உஷாகோவ் மற்றும் ரஷ்யாவின் இறையாண்மை செல்வ நிதியத்தின் தலைவர் கிரில் டிமிட்ரிவ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## ஒரு பிரதேசத்தை கைப்பற்ற அதன் ‘மொழி’யை அழிப்பதே சிறந்த வழி

### இந்திய குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர்

21.02.2025

ஒரு பிரதேசத்தை கைப்பற்ற அதன் கலாச்சாரத்தை தகர்த்து அதன் மொழியை அழிப்பதே சிறந்த வழி என குடியரசு துணை தலைவர் ஜெகதீப் தன்கர் பேசியுள்ளார்.

சமீபத்தில் நடந்த 98வது அகில பாரதிய மராத்தி சாகித்ய சம்மேளம் நிகழ்ச்சியில் பங்கேற்று ஜெகதீப் தன்கர் உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் மற்றும் அவரது மகள் சுப்ரியா சுலே எம்.பி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய ஜெகதீப் தன்கர், ஒரு நாடு அதன் கலாச்சார செல்வம் மற்றும் அதன் கலாச்சார நெறிமுறைகளால் வரையறுக்கப்படுகிறது, இந்த விஷயத்தில் இந்தியா தனித்துவமானது, ஏனெனில் உலகில் எந்த நாடும் நம்மை ஒப்பிட முடியாது. நமது கலாச்சாரத்தையும் மொழிகளையும் வளர்ப்பது மூதாதையர்களின் ஆணை. அதுவே நமது வரையறுக்கப்பட்ட கடமை. இலக்கியத்தைப் பாதுகாப்பதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு கை கொடுப்பதன் மூலம் மட்டுமே இதைச் செய்ய முடியும் என்று தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நிகழ்ந்த படையெடுப்புகளைக் குறிப்பிட்டு பேசிய ஜகதீப், ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்கான சிறந்த வழி, அதை உடல் ரீதியாக முறியடிப்பது அல்ல. மாறாக அதன் கலாச்சாரத்தை தகர்த்து முறியடித்து அதன் மொழியை அழிப்பதாகும். அவர்கள் நம் மொழி, நம் கலாச்சாரம், நம் மத இடங்களை கைப்பற்ற மிகவும் அடக்குமுறை கொண்ட கொடூரமானவர்களாக இருந்தனர்.

காட்டுமிராண்டித்தனம் மற்றும் பழிவாங்கும் தன்மை உச்சத்தில் இருந்தது. நம்மை காயப்படுத்த, அவர்கள் நம் மத இடத்திற்கு மேலாக தங்கள் இடத்தை உருவாக்கினர். நம்



மொழிகளை மட்டுப்படுத்தினர். நம் மொழி செழிக்கவில்லை என்றால், நம் வரலாறும் செழிக்காது என்று தெரிவித்தார்.

# 5 மாதங்களுக்கு பின்பு நஸ்ரல்லாவின் இறுதி சடங்கு; 90 நாடுகளை சேர்ந்த இலட்சக்கணக்கானோர் பங்கேற்பு

23.02.2025

லெபனானில் 5 மாதங்களுக்கு பின்பு நடந்த ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் நஸ்ரல்லாவின் இறுதி சடங்கு நிகழ்ச்சியில் 90 நாடுகளை சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.



இசுரவேல் மீது கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் 07ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு தாக்குதல் நடத்தியது. இதில் இசுரவேல் கடுமையாக பாதிக்கப்பட்டதுடன், ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் பணயக் கைதிகளாக பிடித்து செல்லப்பட்டனர். இதனை தொடர்ந்து காசா மீது இசுரவேல் போரில் ஈடுபட்டது.

இசுரவேலின் தாக்குதலில் 46ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் பலியாகி உள்ளனர். பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக, ஹிஸ்புல்லா அமைப்பும் இசுரவேல் மீது போரில் ஈடுபட்டுது. லெபனான் நாட்டில் இருந்தபடி, இசுரவேலை தாக்கியது. இதன் தொடர்ச்சியாக இசுரவேல் பதிலடி தாக்குதலில் ஈடுபட்டது.

இதில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவரான ஹசன் நஸ்ரல்லாவை லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் வைத்து இசுரவேல் இராணுவம் கடந்த ஆண்டு செப்டம்பர் 27ஆம் திகதி குண்டு மழை பொழிந்து கொன்றது. இதில் 80க்கும் மேற்பட்ட குண்டுகள் பயன்படுத்தப்பட்டன.



இந்த தாக்குதல் நடந்து பல மாதங்களானாதும், பாதுகாப்பு காரணங்களுக்காக நஸ்ரல்லாவின் இறுதி சடங்க நடைபெறாமல் தள்ளி போய் கொண்டே இருந்தது. இந்த சூழலில், 5 மாதங்களுக்கு பின்னர், லெபனானில் உள்ள மிக பெரிய விளையாட்டு திடலில் நஸ்ரல்லாவின் இறுதி சடங்குஇன்று



நடைபெற்றது.

ஹிஸ்புல்லா கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட தெற்கு புறநகர் பகுதிகளில், கேமில்லே சாமவுன் விளையாட்டு நகர திடலில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. ஈரான் ஆதரவுடன், மத்திய கிழக்கு பகுதியில் 3 தசாப்தங்களாக சக்தி வாய்ந்த தலைவர்களில் ஒருவராக அறியப்பட்ட அவருடைய இறுதி சடங்கில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் என இலட்சக்கணக்கானோர் கடும் குளிரிலும் நடந்தே நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு சென்று கலந்து கொண்டனர்.

அவர்களின் கைகளில் ஹிஸ்புல்லா கொடிகளும், நஸ்ரல்லாவின் புகைப்படங்களும் காணப்பட்டன. 10 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இறுதி நிகழ்வில் பங்கேற்றனர். இதற்காக 90 நாடுகளை சேர்ந்த மக்கள் லெபனானுக்கு வந்துள்ளனர். இது பற்றிய வீடியோ ஒன்றும் வெளிவந்து உள்ளது.




இதில் மைய பகுதியில் விளையாட்டு திடல் இருக்க, அதனை சுற்றியுள்ள தெருக்களில் இருந்து மக்கள் வரிசை, வரிசையாக நடந்து வரும் காட்சிகள் இடம் பெற்று உள்ளன. 50 ஆயிரம் பேர் பங்கேற்க கூடிய அந்த திடலில் மக்கள் அமர வசதியாக கூடுதல் இடங்களை ஹிஸ்புல்லா அமைப்பாளர்கள் செய்திருந்தனர். அந்த பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு இருந்தன.

# விண்வெளியில் இருந்து பூமியில் உள்ளோரின் முகங்களை அடையாளம் காணும் புகைப்படக்கருவி

23.02.2025

விண்வெளியில் இருந்து பூமியில் உள்ளோரின் முகங்களை அடையாளம் காணும் அதி திறன் கொண்ட உலகின் மிக சக்திவாய்ந்த உளவு புகைப்படக்கருவியை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது.

உலகளாவிய கண்காணிப்பு திறன்களை மறுவரையறை செய்யக்கூடிய சக்திவாய்ந்த லேசர் அமைப்புடன் சீன விஞ்ஞானிகள் ஆப்டிகல் இமேஜிங் தொழில்நுட்பத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

மேம்பட்ட இந்த இமேஜிங் சாதனம் 100 கிலோமீட்டர் (62 மைல்) தொலைவில் இருந்து மில்லிமீட்டர் அளவிலான விவரங்களைப் பிடிக்கும் திறன் கொண்டது.

இது உளவுத்துறையில் பாரிய புரட்சியை ஏற்படுத்தும்.



# உக்ரைனிலிருந்து ரஷ்ய படைகளை திரும்பப்பெற வலியுஞத்தி ஐ.நா. தீர்மானம்: இந்தியா புறக்கணிப்பு

24.02.2025

உக்ரைனிலிருந்து ரஷ்ய படைகளை திரும்பப்பெற வலியுறுத்தி ஐ.நா.வில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா புறக்கணித்துள்ளது. 193 நாடுகள் வாக்களிக்க தகுதி பெற்றிருந்த நிலையில் 93 நாடுகள் ஆதரவாகவும், 18 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. இந்திய உள்பட 65 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்தன. கடந்த முறை ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது 140-க்கு அதிகமான நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக வாக்களித்த நிலையில் தற்போது வெறும் 93 நாடுகளே ரஷ்யாவுக்கு எதிராக வாக்களித்துள்ளன.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் - ரஷ்யா இடையே கடந்த 2022 பிப்., 24-ல் உக்ரைன் மீது வான்வழி மற்றும் தரைவழி தாக்குதலை ரஷ்யா தொடங்கியது. இதையடுத்து போர் தொடங்கி மூன்றாண்டுகள் நேற்று (பிப்.24) நிறைவடைந்தது. இந்நிலையில் உக்ரைன் - ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஆர்வம் காட்டிவருகிறார். அதன் நிமித்தமாக அவர் ரஷ்ய அதிபர் புதினுடன் பேச்சுவார்த்தையும் மேற்கொண்டார். போரை முடிவுக்குக் கொண்டுவர புதினும் - ஜெலன்ஸ்கியும் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அதேவேளையில் ஜெலன்ஸ்கியை கடுமையாக சாடியும் வருகிறார். இதுவரை அமெரிக்கா அள்ளிக் கொடுத்த ஆயுத, நிதியுதவிகளுக்காக உக்ரைனில் உள்ள அரிய தாதுக்களை அணுக அமெரிக்காவுக்கு அனுமதியும் கோரி வருகிறார்.

இந்நிலையில் தான் ஐ.நா.,வில் உக்ரைனில் இருந்து ரஷ்யப் படைகளை உடனடியாக திரும்பப் பெற வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ரஷ்யா - உக்ரைன் போர் பதற்றத்தைக் குறைக்கவும், போரை அமைதியான முறையில் தீர்க்கவும் வலியுறுத்தி இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சூழலில் ஐரோப்பிய நாடுகள் பல அவசர மாநாட்டை நடத்த திட்டமிட்டுள்ளன. பெல்ஜியம் தலைநகர் ப்ரசல்ஸில், 27 ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள் பங்கேற்கும் அவசர மாநாட்டை, மார்ச் 6-ல் நடத்த ஐரோப்பிய கவுன்சில் திட்டமிட்டுள்ளது.

உக்ரைன் நாட்டின் வெளியுறவு இணை அமைச்சர் மரியானா பெட்ஸா கூறுகையில், "ரஷ்ய படையெடுப்பை எதிர்ப்பது தங்கள்



தற்காப்புக்கான உரிமை. பேரழிவு தொடங்கி மூன்று ஆண்டுகள் நிறைவடைந்த சூழலில் அனைத்துலக நாடுகளும் எங்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டுகிறோம். நீங்கள் மனிதாபிமானத்துக்கு, நியாயத்துக்கு, நீடித்த அமைதிக்கு துணை நிற்க வேண்டுகிறோம்." என்றார்.







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்ச்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபாரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர் பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

**பெண்ணிடமும் மனிதம் இருக்கிறது. அதன் அற்புதமான ஆற்றல்களையும், அலாதியான பண்புகளையும் பாலியல் அளவுகோலால் நிர்ணயிக் கமுடியாது. எதையும் பெண்ணால் சாதிக்க முடியும் என்பதற்கு எமது போராட்டம் ஒரு உன்னத உதாரணமாகத் திகழ்கின்றது.**

**பாலியல் வேறுபாட்டிற்குப் புறம்பாக, ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பாலான, இந்த மனிதத்தை இனம்கண்டு கௌரவிக்குமாறு பெண்ணி னம் ஆணினத்திடம் அன்புக்கரம் நீட்டுகிறது. ஆழமான புரிந்துணர்வுடன் ஆணினம் இந்த அன்புக்கரத்தைப் பற்றிக்கொள்ளும்போதுதான் ஆண் பெண் சமத்துவம் சாத்தியமாகும்.**

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



எமது சமூகம் மாறிக்கொண்டிருக்கிறது. விடுதலைப் போராக வீசிக்கொண்டிருக்கும் வரலாற்றுப் புயல் எமது மண்ணில் காலம் காலமாக நிலைத் திருந்த பழமைவாத விருட்சங்களை வேரோடு பிடுங்கி வீழ்த்தி வருகிறது. எமது மனக்குகையில் குடியிருந்த மூட நம்பிக்கைப் பேய்கள் விரட்டப்பட்டு வருகின்றன. எமது சமூகக் கருத்துலகில் புதிய பார்வை மலர்கிறது. புதிய விழிப்புணர்வு தோன்றி வருகிறது. சமூக உறவுகளில் புரட்சிகரமான மாற் றம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

எமது போராட்டத்தினுள் ஒரு போராட்டமாக பெண் விடுதலைப் போர் இன்று முனைப்புப் பெற்று வருகிறது. பெண் விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது எமது விடுதலை இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை அதன் வளர்ச்சியும், எழுச்சியும் ஒப்பில்லாத ஒரு தனிச் சரித்திரம். மண்ணின் விடிவிற்காகவும் பெண்ணின் விமோசனத்திற்காகவும் இன்று தமிழீழப் புரட்சிப் பெண் புலியாக மாறிவிட்டாள். அநீதிக்கு எதிரான ஆவேச நெருப்பாக அவள் இன்று ஆயுதமேந்தி நிற்கிறாள். இந்த வரலாற்றுத் திருப்பத்திற்கு எமது இயக்கமே வழிசமைத்துக் கொடுத்தது.

சமத்துவத்தை நோக்கிய பயணமாகப் பெண் உரிமைப் போராட்டம் தொடர்கிறது. பாலியல் வேறு பாட்டின் அடிப்படையில் சமத்துவமற்ற சமூக உறவுகள் உருவாக்கம் பெற்றுள்ளன. எல்லாக் காலங்களிலும், எல்லாச் சமூகங்களிலும், எல்லாப் பண்பாட்டு வடிவங்களிலும் இந்த, சமத்துவமற்ற மனித உறவு நிலவி வருகிறது. பெண்ணைத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளி விட்டிருக்கும் இந்த சமூக அநீதியை எதிர்த்து இன்று உலகப் பெண்ணினம் போர்க்கொடி உயர்த்தி நிற்கிறது.

பால் ரீதியாய உடற்கூற்று வேறுபாடு என்பது இயற்கையின் திருவிளையாடலாக இனவிருத்திக்கு அளிக்கப்பட்ட கொடை. உயிர்ப்படைப்பிற்காக சிருஷ்டிக்கப்பட்ட உடற்கூற்றின் அடிப்படையில் ஆணையும் பெண்ணையும் வேறுபடுத்தி சமத்துவமற்ற உறவுகளை சமூகம் பின்னி விட்டிருக்கிறது. பாலியல் வேறுபாடும், அதன் அடிப்படையில் தோன்றிய பண்பாட்டு நிய மங்களும், அவை பெண் மீது பதித்துவிட்ட படிமங்களும், பார்வைகளும், ஆண் பெண் சமத்துவத்திற்கு முட்டுக் கட்டைகளாக நிற்கின்றன.

மனித ஆளுமை பாலியல் வேறுபாட்டிற்கு அப்பாலானது. ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கிறது. அது மனிதப் பிறவிகளுக்குப் பொதுவானது.

இந்த மனிதத்தின் ஆற்றல்களை உடற் கூறு நிர்ணயிப்பதல்ல.

பெண்ணிடமும் மனிதம் இருக்கிறது. அதன் அற்புதமான ஆற்றல்களையும், அலாதியான பண்புகளையும் பாலியல் அளவுகோலால் நிர்ணயிக்கமுடியாது. எதையும் பெண்ணால் சாதிக்க முடியும் என்பதற்கு எமது போராட்டம் ஒரு உன்னத உதாரணமாகக் திகழ்கின்றது.

பாலியல் வேறுபாட்டிற்குப் புறப்பாக, ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பாலான, இந்த மனிதத்தை இனம்கண்டு கௌரவிக்குமாறு பெண்ணினம் ஆணினத்திடம் அன்புக்கரம் நீட்டு கிறது. ஆழமான புரிந்துணர்வுடன் ஆணினம் இந்த அன்புக்கரத்தைப் பற்றிக்கொள்ளும் போதுதான் ஆண் பெண் சமத்துவம் சாத்தியமாகும்.

1993 ஆண்டு அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு வெளியிடப்பட்ட தேசியத் தலைவரின்


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும்
பொன் நகை
மிளிரும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com


★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
K
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu




முகிலைத் துளைத்த புலிகளும் நிலவைத் துடைத்த தமிழரும்.!

முந்தி ராவணன் ஏற்றிய புஷ்பகம்
முகில் துளைத்ததாம் அதன்பிற கின்றுதான்
சொந்தமான வானூர்தியில் தமிழனும்
சோதிமின்னிடத் தோன்றினான் ஆமிது
விந்தைதானடா. போரிடை ஆடும்மண்
விடியும் என்பதற்கான குறியுடன்
எந்தைநாடினி எதற்கும் அஞ்சாதென
இறக்கைகட்டிப் பறந்த பறப்படா.
26.03.2007 திங்கட்கிழமை
ஈழத்தமிழருக்கு முகில்கள் தலைவாரியநாள்.
நள்ளிரவிலும் வெளிச்சம் பிரகாசித்த தினம்.
நீர்கொழும்புக்கு மேலே நின்றிருந்த நட்சத்திரங்கள்
யாரிவர்கள் என்று அதிசயித்தன.
அச்சத்தில் மகிழ்ச்சி தொலைத்தவர்கள்கூட
கச்சையிறுக்கிக் காலிற் சதங்கை பூட்டினர்.
நாணற்புற்களும் தலைநிமிர்த்தி
மானத்தின் மகுடம் தரித்தன.
எம்மாலும் இயலுமெனக் காட்ட
இரவிலும் வான்புலிகள் நிகழ்த்திய கூத்தில்
உமக்கினிச் சாமத்திலும் உறக்கமில்லையென
பகைவர் காதிற் பாடிய நாள்.
கோட்பாடுகளுக்கும் மதிப்பீடுகளுக்கும்
அப்பாலான அசாத்திய அதிசயம்.
நேரிற்பார்த்த ஓரிருதமிழருக்குத் திவ்விய தரிசனம்.
இதுவரையான காலத்தில்
ஈழத்தமிழரில் இருவருக்கே
இறக்கை முளைத்திருந்தது.
அன்று இராவணனுக்கு
இன்று பிரபாகரனுக்கு.
இராவணனின் 'புஷ்பகம்'
சீதையைத் தூக்கித் திரும்பியது.
பிரபாகரனின் 'கற்பகம்'
கட்டுநாயக்காவைச் சுட்டுத் திரும்பியது.
முன்னது வால்மீகியின் கற்பனை
பின்னது வான்புலிகளின் அற்புதம்.
வன்னியிலிருந்து நீர்கொழும்புவரை பறத்தலென்பது
வல்லரசுக்குச் சுண்டங்காய்.
போரிடும் விடுதலைப் பொறிகளுக்கு
எல்லோருக்கும் எட்டாத இமயம்
எட்டாத உயரத்தைத் தொட்டனர் ஈழத்தமிழர்.
நிலத்தை வசமாக்கி
மு கடலை வசமாக்கி
வானத்தையும் வசமாக்கிய வல்லமையால்
ஈழத்தமிழரை எழுப்பம் தழுவியது.
வான்புலிகளின் பறத்தலென்பது
வெறும் வல்லமையை மட்டுமல்ல
ஈழத்தமிழர் அழுதகாலம் முடிந்ததென்ற
உரத்த குரலையுமே தூக்கிச்சென்றது கூடவே.
நான்கு தமிழரின் சிறகு விரிப்பில்
நாற்பது இலட்சம் ஈழத்தமிழரும் பறந்தனர்.
ஆச்சரியம் என்னவெனில்
அதிகமானோர் தூக்கத்திலிருந்தனர் அப்போது.
இது பிரகடனப்படுத்தாத யுத்தமென்பதால்
இப்போது தருமயுத்தமே நடக்கிறது.
இடைக்கிடை நகுல சகாதேவர் களம் புகினும்
இன்னும் அருச்சுனர்கள் காண்டீபம் தரிக்கவில்லை.
வீமர்கள் கதாயுதம் எடுக்கவில்லை.
எவராயினும்
கோத்தபாயாவை எழுதிவைக்கச் சொல்லுங்கள்.
சம்பூரைத் தோல்விக் கணக்கில் செலவுவைத்து
புலிகள் வெளியேறவில்லை.
வாகரையில் இருந்து புன்னகையில் அர்த்தம் சொல்லியே
புலிகள் அகன்றனர்.
வான்புலிகளின் பறத்தல் என்பது
புலிகள் அஸ்திரங்களைக் கையிலெடுத்ததற்கான அறிகுறி
கரும்புலிகள் காண்டீபம் தரித்ததற்கான சாட்சி
வெற்றியின் வரவு இனித்தான் வெளிச்சம்தரும்.
அன்றிரவு
வானில் அழகாய் நிலவிருக்க
என்றும் போல் காற்று இதமாய் வீசியது.
நள்ளிரவு
கட்டுநாயக்கா வான் பரப்பில்
புள்ளியென ஏதோ புகுந்து பெரிதாகி
வான் தளத்தில் தீபாவளியெனவே வெடிகொளுத்தி
மீண்டும் திரும்பி மிதந்தபடி போயிற்று.
ஈழத்தமிழன் இறக்கை கட்டி
முகிலினுக்குள்
வாழத்தொடங்கிய வரலாற்று நாளிதுதான்.
உலகத் திசையாவும் உதைபட்டு
அகதியென
நிலத்திற் புல்லாகி நின்ற தமிழினத்தோன்
வானத்தில் ஏறி
வரிசையெனப் பெருமகிழ்வில்
கானத்தைப் பாடிக் களித்தான்.
தமிழ்த் தலைவன்
ஈழத்தைப் பெறுவான் என்ற பெருநம்பிக்கை
காலத்தில் மீண்டும் கால்பரத்திக் கொண்டதுகாண்.
நாளாந்தம் வந்து நம்குடிமேற் குண்டெறிந்து
ஆளானதனைத்தும் அழித்தான்.
பள்ளிசென்ற
பூவைத் தொலைத்தான்.
புதுமனையைப் போட்டெரித்தான்.
சாவையெம் வாசலிலே சபையிருத்திச் சாப்பிட்டான்.
கோயிலழித்தான்.
குடியிருப்பைப் போட்டெரித்தான்.
வாயெடுத்து அழக்கூட வகையற்று
நமையழித்தான்.
காத்திருந்த தலைவன் கதைமுடிக்கத்
தேதிவைத்தான்.
சாக்குருவியெல்லாம் சாகவொரு நாட்குறித்தான்.
தாயின் முலையினிலே தமிழ்ப்பால் குடித்தவர்கள்
வாயிற்சிரிப்போடு வான்பறவை மீதமர்ந்தார்.
தலைவன் கையசைக்க
தமிழ்வீரம் மெய்சிலிர்க்க
முகிலைக் கிழித்தபடி மிதந்ததடா வானூர்தி.
முகிலேறிப் போன முதற் குரவி
நீர்கொழும்பின்
அயலேறிப் பகைவரது அஸ்திரங்கள் எரித்ததுகாண்.
மற்றக்குருவி மடியிருந்த குண்டுகளால்
கற்பனைக்கும் எட்டாத அற்புதங்கள் செய்ததுகாண்.
கொற்றம்நிறுவிவிட்டுக் கூடுவந்த குருவிரண்டும்
மற்றத்தரம் பறக்க மறுபடியும் காத்திருக்கு.
நிலம்மகிழ
அந்த நீலவான்தான் மகிழ
புலம்மகிழ
புலத்தில் போயிருக்கும் தமிழ்மகிழ
உலகம் முழுதும் உள்ள உறவுகளோ
வாழ்த்துரைக்க
ஈழவிடுதலைக்காய் எழுந்த பறப்பிதுதான்.
வாழும் காலத்தின் வரலாறு இதுவேதான்.
மானமேறி வாழ்தல் அவாவுறும்
மரபுளோய்! உன்வாசல் வரிந்திதோ
வானமேறி முகிலை உடுத்திடும்
வாழ்வுனக்கென ஆனது தெய்வமே!
காணநூறு கண்ணில்லையே நானதைக்
கைகளாற் தொடவில்லையே தமிழனே!
தான தானதை தோமெனத் துள்ளியே
தமிழனேற்றிய ஊர்தியைப் பாரடா.

கவியாக்கம்: வியாசன்

வெளியீடு :விடுதலை புலிகள் இதழ் பங்குனி –சித்திரை 2007




# இலங்கைத் தீவின் மலையகம்

இலங்கைத்தீவின் மத்திய மாகாணத்தை உள்ளடக்கிய குறிஞ்சி நிலம் ஒரு முக்கிய பூகோள அடையாளமாகவும் சூடான அரசியல் களமாகவும் இடம்பெறுகிறது. 1505 ஆண்டில் ஆரம்பித்த ஐரோப்பிய இனங்களின் இலங்கை வருகை படிப் படியாகக் கண்டி இராசதானியையும் அதன் ஆள்பலத்தையும் பாதிப்பிற்கு உள்ளாக்கியது. 1815 ஆம் ஆண்டு வரை கண்டி இராசதானியை ஐரோப்பியர்களால் வெற்றிகொள்ள முடிய வில்லை மலையும் மலை சூழ்ந்த பிரதேசமும் பெறுமதிமிக்க பாதுகாப்பை வழங்கின. முதலாவதாகவும் இரண்டாவதாகவும் தீவின் கரையோரப் பகுதிகளை, யாழ். குடா நாடு உள்ளடங் கலாக ஆட்சி செய்த போத்துக்கேயர்களும் ஒல்லாந்தர்களும் கண்டியை கைப்பற்ற முடியவில்லை. பிரிட்டிஷ் ஆட்சி தொடங் கிய பின் கண்டியின் வீழ்ச்சி மிக விரைவில் நடந்தேறியது. 1796இல் ஒல்லாந்தர்களிடம் இருந்து அவர்கள் ஆட்சி செய்த பகுதிகளைப் பிரிட்டிசார் பொறுப்பேற்றனர். 1815 இல் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கண்டி இராட்சியத்தை கைப்பற்றினர். 1832 இல் செய்யப்பட்ட கோல்புறூக் கம்ரென் பரிந்துரைகளுக்கு அமைவாக போத்துக்கேயர், ஒல்லாந்தர்களால் தனிப் பகுதிகளாக ஆட்சி செய்யப்பட்ட தமிழர் வாழ்விடங்களைப் பிரிட் டிஷ் ஆட்சியினர் சிங்களவர் வாழ்விடங்களோடு ஒன்றிணைத் தனர்.

**பிரிட்டிஷ் ஆட்சியில் கண்டி மாத்திரமல்ல தமிழர்களின் தன்னாட் சியும் பறிபோயுள்ளது.** கண்டியைக் கைப்பற்றுவதற்கு பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பெரும் படை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படவில்லை. உள்நாட்டில் எழுந்த குழப் பகரமான சூழல் பழம் நழுவிப் பாலில் வீழ்ந்தாற்போல் தானா கவே பிரிட்டிசார் வசம் செல்லும் மார்க்கத்தை ஏற்படுத்தியது. அப்போது கண்டியை ஆண்ட அரச பரம்பரையினர் தமிழ் பேசும் நாயக்கர் வம்சத்தினராக இருந்தனர். சிங்கள உயர்குடிப் பரம்பரைத் தலைவர்கள் நாயக்கர் ஆட்சிக்குக் கடும் எதிர்ப்புக் காட்டினர். இறுதியாகக் கண்டியை ஆண்ட சிறீ விக்கிரம ராஜசிங்க என்ற முடிக்குரிய பெயர்பெற்ற கண்ணுச்சாமியின் ஆட்சி மிருகத்தனமான கொடுங்கோலாட்சியாக இருந்தது. இது சிங்களத் தலைவர்களின் எதிர்ப்பிற்குக் காரணமாக அமைந் தது. அதே சமயத்தில் சிங்கள் உயர்குடித் தலைவர்கள் மத்தியில் சிறிதளவேனும் ஒற்றுமையும் ஒருமுகச்செயற்பாடும் இருக்க வில்லை பிரிட்டிசாரும் கண்டியைக் கைப்பற்ற வேண்டும் என்பதில் மிகவும் தீவிரமாக இருந்தனர். இதற்காக அவர்கள் சூழ்ச்சி உபாயத்தை பெருமளவில் கைக்கொண்டனர்.



சிறீ விக்கிரம இராஜசிங்கன்

கண்டியில் நாயக்கர் ஆட்சி 75 வருட காலம் நீடித்தது. வருகர் என்றும் வருதே என்றும் அழைக்கப்பட்ட நாயக்கர்கள் ஆட்சி கண்டியின் இரண்டாம் இராஜசிங்க ஆட்சியோடு ஆரம்பிக் கிறது. இரண்டாம் இராஜசிங்கவின் ஆட்சி 1635- 1687 காலத்தில் நிலவியது. இவனுடைய தந்தை செனரத் அரசன் தனது மகன் இராஜசிங்கவுக்கு ஒரு நாயக்கவம்ச அரச குமாரத் தியை மணம் முடித்து வைத்தான். இது தமிழ் நாட்டின் மதுரை யில் இருந்து பெண் எடுக்கும் பாரம்பரியத்தைத் தோற்றுவித்தது. இரண்டாம் இராஜசிங்கவின் மகன் இரண்டாம் விமலதர்ம சூரியாவும் தனது தாய்வழியில் ஒரு நாயக்கர் வம்சப் பெண் ணைத் திருமணம் செய்தான். இவனுடைய ஒரே மகன் நரேந் திரசிங்கவும் அவ்வாறு செய்தான். ஆனால் நரேந்திரசிங் கவுக்கு மகப்பேறு இல்லாமல் போய்விட்டது. தனது மனைவி யின் சகோதரன் தனக்குப்பின் கண்டியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் ஒழுங்கை நரேந்திரசிங்க மேற்கொண்டான். நரேந்திர சிங்கவின் மைத்துனன் கண்டி அரசனான பின் வெளிப்படை யான நாயக்கர் ஆட்சி கண்டியில் ஆரம்பித்தது. நாயக்கர் மன் னர்கள் அனைவரும் தமது மனைவியரை மதுரையில் இருந்து பெற்றுக் கொண்டனர்.

சிறீ விக்கிரம ராஜசிங்கவுக்குப்பின் நாயக்கர் ஆட்சி மாத்திர மல்ல கண்டிக்குரிய அரச பரம்பரை ஆட்சியும் முடிவுக்கு வந்து விட்டது. அதற்குப்பின் பிரிட்டிஷ் அரச பரம் பரையினர் கண்டி உள்ளிட்ட இலங்கைத் தீவின் அரசுக்குரியவராகி விட்டனர். அதுவும் 1948 ஆம் ஆண்டுடன் முடிவுக்கு வந்து விட்டது. நாயக்கர் ஆட்சி கண்டியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. நாயக்கர்கள் தமது பரிவாரங்களை மதுரையில் இருந்து கண்டிக்குக் கொண்டுவந்து குடியேற்றினர். தமிழ் அரண்மனை மொழியாகவும் அரச கரும மொழியாகவும் இடம்பெற்றது. இந்து மதம் அரசின் ஆதரவைப் பெற்றது. பிராமணக் குடும்பங்கள் தமிழ் நாட்டிலிருந்து வந்து சேர்ந்தனர். பரத நாட்டியம், தமிழ் மொழியில் ஆடல் - பாடல் என்பனவும் அரண்மனைச் சுற்றாட லில் பரவத் தொடங்கின.



றொபேட் நொக்ஸ்

கண்டி இராட்சியத்தின் நாயக்கர் அரச குடும்பத் தொடர்பை ஆரம்பித்து வைத்த இரண்டாம் இராஜசிங்க மன்னன் இன்னு மொரு வகையில் வரலாற்றுப் புகழ் பெற்றுள்ளான். அவன்பல ஐரோப்பியர்களைக் கைது செய்து தனது இராட்ச்சியத்தில் வைத் திருந்தான். 1660இல் றொபேட் நொக்ஸ் என்ற ஆங்கி லேயனையும் அவனுடைய தோழர்களையும் கண்டி அரசன் சிறைப் பிடித்தான். 19 வருடம் 6 மாதம் 17 நாட்கள் கண்டி இராட் சியத்திற்கு உட்பட்ட நிலப்பரப்பில் கைதியாக வாழ்ந்த றொபேட் நொக்ஸ் சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றதோடு கிட்டத்தட்ட சிங்களவனாக மாறிவிட்டான். ஆனால் தப்பி ஓட வேண்டும் என்ற எண்ணம் மாத்திரம் அவனை விட்டகல வில்லை. ஈற்றில் அவன் தனது நண்பன் ஜட்ன்ற் என்பவ னோடு அனுராதபுரத் திற்குத் தப்பிச் சென்றான். அனுராத புரத்தில் அக்காலத்தில் எல்லோரும் தமிழ் பேசுவோராக இருந்த படியால் ஒரு மொழி பெயர்ப்பாளனின் உதவியை றொபேட் நொக்ஸ் நாடினான். ஒருவாறு ஒல்லாந்தர்களின் கட்டுப்பாட்டில் இருந்த மன்னாரை அவன் அடைந்தான்.

ஒல்லாந்தர்களின் பாதுகாப்பில் கொழும்பு சென்ற றொபேட் நொக்ஸ் சில காலம் அங்கு வாழ்ந்தபின் ஒல்லாந்தர்களின் கிழக் குக் காலனித்துவ நாடுகளின் தலைமையகமான பற்றேவி யாவுக்குச் சென்றான். ஜாவாத தீவின் தலைநகர் ஒல்லாந்தர் களால் பற்றேலியா என்று அழைக்கப்பட்டது. இப்போது ஜக் கர்த்தா என்ற பெயர் பெற்று இந்தோனிசியா நாட்டின் தலைநக ராகவும் இடம்பெறுகிறது. 1680 செப்ரம்பரில் றொபேட் நொக்ஸ் இங்கிலாந்து சென்றடைந்தான். அடுத்த வருடம், அதாவது 1681 இல் தனது கண்டி வாழ்க்கை பற்றிய நூலை இலண்டனில் வெளியிட்டான். கண்டி இராட்சியம் பற்றி பல வரலாற்றுத் தகவல் களைத் தாங்கிய இந்நூல் இலங்கை பற்றிய மிக முக்கிய ஆவணமாகத் திகழ்கிறது. 1920ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் நாளில் றொபேட் நொக்ஸ் காலமானான்.



தமது கொடுங்கோல் அரசனை விரட்ட உதவியபின் பிரிட்டிஷ் அரசு தம்மிடம் கண்டி அரசை ஒப்படைத்து விட்டு வெளியேறும் என்று சிங்களத் தலைவர்கள் எதிர் பார்த்தார்கள். அது நடை பெறவில்லை. மாறாக பிரிட்டிஷ் அரசு தன்னைப் பலப்படுத்திக் கொண்டது. பிரிட்டிஷ் அரசு சார்பில் அதனுடைய முன்னணி இராசதந்திரி நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவருடைய




**ஆங்கிலேயர் தமிழர் தாயகத்தை 1833 இல் சிறீலங்காவுடன் இணைப்பதற்கு முன் இருந்த மாகாண அமைப்பு மத்திய மாகாணம் என்னும் மலையகம்**

பெயர் சேர் ஜோன் டி'ஒயிலி (SIR YOHN D'OYLY) அவர் சிங் கள மொழியில் அபார தேச்சி பெற்றவர். சிங்கள மக்களுடைய இயல்புகளை நன்கு அறிந்தவரான படியால் அவரால் திறம்படச் செயற்பட முடிந்தது. இலண்டன் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத் தில் படித்தவரானபடியால் ஆவணத்தயாரிப்பிலும் சிறந்து விளங் கினார். 1815ஆம் ஆண்டு நடைபெற்ற பிரிட்டிஷ் அரச பிரதிநிதிக ளுக்கும் கண்டித் தலைவர்களுக்கும் இடையிலான உயர் மட்ட மாநாட்டில் பிரிட்டிஷ் அரச பிரதிநிதியாக சேர் ஜோன் டி ஒயிலி கலந்துகொண்டார். இந்த மாநாட்டில் கண்டி இராட்சியத்தைப் பிரிட்டிசாரிடம் கையளிப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது. மேற் கூறிய உயர் மட்ட மாநாடு கண்டியன் கொன்வென்டின் (KANDYAN CONVENTION) என்று அழைக்கப்படுகிறது.



கண்டியன் கொன்வென்டின்

இதில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் இரு பகுதி யினருக்கும் இடையில் ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டது. இலங்கைத்தீவின் பிரிட்டிஷ் ஆளுநர் றொபேட் பிரவுண் றிக் (ROBERT BROWNRIGG) தனது அரசு சார்பில் ஒப்ப மிட்டார். கண்டித்தலைவர்கள் கண்டி இராச்சியத்தின் சார்பில் அதில் ஒப்பமிட்டார்கள்.

அவ்வாறு ஒப்பமிட்ட கண்டிச் சிங்களத் தலைவர்களில் சிலர் தமிழில் ஒப்பமிட்டுள்ளனர். றத்வத்தை குடும்பத்தைச் சேர்ந் தவர் தமிழில் ஒப்பமிட்டுள்ளார். ஒரு சிலர் சிங்களம் தமிழ் கலந்த ஒரு கலப்பு மொழியில் ஒப்பமிட்டுள்ளனர். சிலர் தனிச் சிங்களத்தில் ஒப்பமிட்டுள்ளனர். பல திரை மறைவு வேலை-களை பிரிட்டிஷ் அரசு சார்பில் மேற்கொண்ட சேர் ஜோன்




***மலையகத் தமிழர்களுக்கு எதிர்ப்புக் காட்டிய சிங்களத் தலைவர்களில் டி.எஸ். சேனநாயக்கா என்று அழைக்கப்படும் டொன் ஸ்ரீபன் சேனநாயக்கா முதலிடம் வகித்தார். அவர் காட்டிய மூர்க்கத்தனமான எதிர்ப்பு இலங்கை அரசியலின் எதிர்காலத்தை தீர்மானிக்கிறது. சிறீலங்கா சுதந்திரம் அடையும்வரை அவர் மலையகத் தமிழர்களை நாடற்றவராக்கும் தீர்மானத்தை பிற்போட்டார். மலையகத் தமிழர்களின் குடியுரிமையை அவர் சிறீலங்கா சுதந்திரம் பெற்ற அதே வருடம் சட்டம் நிறைவேற்றிப் பறித்தார். இது வடக்கு கிழக்கு தமிழர்களின் அரசியல் வரலாற்றையும் பாதித்தது. சிங்களப் பேரினவாதத் தலைவர்களில் மலையகத் தமிழர்களுக்கு எதிர்ப்புக் காட்டுவதில் டி. எஸ். சேனநாயக்கா நிகரற்று விளங்குகிறார். பல இலங்கைத் தமிழர்கள் அவரைத் தமது நம்பிக்கைக்குரிய நண்பராக கணிப்பிட்டனர். தமிழனின் பலத்தைக் குறைத்தது போல் சிங்களக் குடியேற்றத்தின் மூலம் தமிழர் மண் பறிப்பைத் தொடக்கி வைத்தவரும் இதே மனிதர்தான். அவருடைய சகாவும் வாரிசுமான எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவை சேனநாயக்காவின் இரட்டைப் பிறவி என்று வர்ணிப்பதில் தவறில்லை.***

டி'ஒயிலியின் உடல் கண்டிசேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. கண்டி கெரிசன் செமற்றறி (KANDY GARRION (EMETERY)) என்று அழைக்கப்படும். சேமக்காலை 1817 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசால் திறக்கப்பட்டது. பல ஆங்கிலேயர்களின் சடலங்கள் அதில் புதைக்கப்பட்டுள்ளன. அவர்களுள் மிகவும் முக்கியமானவர் சேர் ஜோன் டி ஒயிலி ஆவர். இறக்கும் போது அவருக்கு வயது 49 கண்டி இராட்சியம் பற்றிய பெறுமதியான நூலை அவர் எழுதி வெளியிட்டுள்ளார். 1810 - 1815 ஆண்டுகளுக்கிடையில் அவர் பதிவு செய்த, உத்தியோக பூர்வ நாட்குறிப்புப் புத்தகங்களும் பிரசுரமாகியுள்ளன. அவர் பங்கு பற்றிய கண்டியன் கொன்வென்டினினன் நாள் மார்ச் 1815 என்பது குறிப்பிடத்தக்கது.




1815 இல் மலையகம் தொடர்பாகப் பிரிட்டிசார் கடைப்பிடித்த கொள்கையைச் சுருக்கமாக இவ்வாறு கூறலாம். மலையகம் தவிர்ந்த இத்தீவின் மிகுதிப் பகுதி அனைத்தையும் கைப்பற்றிய அவர்களுக்கு கண்டி இராட்ச்சியத்தை விட்டுவைக்க மனமில்லை. கண்டி அரசனோடு தொடர்பு கொண்டு பிரிட்டிசாருக்கு அடிபணிய வைக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அதிருப்தியாளர்களான சிங்கள உயர்குடித் தலைவர்களோடு இணைந்து ஒரு சூழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கண்டியைக் கைப்பற்றுவதே சிறந்த உபாயம். இதில் ஏமாந்தது சிங்களத் தலைவர்கள் மாத்திரமே. அரசனையும் நாட்டையும் அவர்கள் காட்டிக் கொடுத்தார்கள். ஆனால் எதிர்பார்த்ததுபோல் ஆட்சிப் பொறுப்பை அவர்களிடம் கொடுத்து விட்டுப் பிரிட்டிசார் வெளியேறவில்லை. சிறீ விக்கிரம இராஜசிங்க என்ற கண்ணுச்சாமியும் அவனுடைய மனைவியரும் பிறரும் தமிழ் நாட்டின் வேலூருக்கு நாடு கடத்தப்பட்டனர். கண்ணுச்சாமியின் இறுதிக் காலம் அங்கேயே கழிந்தது. சிறீலங்கா 1948 இல் விடுதலை பெற்றபின் பிரதமர் டி.எஸ் சேனநாயக்கா கண்ணுச்சாமியின் நேரடி பிற்சந்ததியினன் ஒரு வனைக் கொழும்புக்குக் கூட்டிவந்தார். அவனுக்கு மத்திய வங்கியில் ஒரு வேலை போட்டுக் கொடுக்கப்பட்டது. அவன் கடலில் குளிக்கும் போது உயிரிழந்தான். கண்டி அரசர்களின் கதை முடிந்து விட்டது.

பிரிட்டிஷ் ஆட்சியாளருக்கு மலையகம் மூன்று விதமாகப் பயன்பட்டது. முதலாவதாக இலங்கைத் தீவின் மீதான அவர்களுடைய பிடி முழுமையாகி விட்டது. இரண்டாவது பெருந்தோட்டங்கள் அமைப்பதற்கும் ஒரு ஏற்றுமதிப் பொருளாதாரத்தைத் தொடங்குவதற்கும் சிறந்த தளமாக அது அமைந்தது. மூன்றாவதாக பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கோடைகால வாழ்விடமாக நுவரேலியா போன்ற இதமான தட்பவெப்ப முள்ள பகுதிகள் அமைந்தன. ஆளுநர் உள்ளடங்கலான உயர்மட்டத்தினர் கொழும்பில் வெப்பம் உச்சம் அடையும் போது மலைப்பகுதிக்குச் செல்லும் வழமையைக் கொண்டிருந்தனர். இன்றும் சிறீலங்கா அரசியல் தலைவருக்குரிய உல்லாச மாளிகை நுவரேலியாவில் காணப்படுகிறது. (LITTLE ENGLAND) என்று நுவரேலியா அழைக்கப்படுவதுண்டு.

இன்று தேயிலையும் இலங்கையும் இணைபிரியாதவையாக இடம்பெறுகின்றன. இலங்கைத்தேயிலை சர்வதேசப் புகழ் பெற்றது. உலகின் மிகக்கூடுதலான தேயிலையைத் உற்பத்தி செய்யும் நாடு இந்தியா. ஆனால் மிகக் கூடுதலான தேயிலையை ஏற்றுமதி செய்யும் நாடு இலங்கை. தேயிலைச் செய்கைக்கு முன்பாக இலங்கையில் கோப்பிச் செடி பெருமளவில் பயிரிடப்பட்டது. மலையகம் கோப்பிக்குப் புகழ்பெற்றிருந்தது. தேயிலை கோப்பிக்குப் பிந்தியது. இன்றைய எதியோப்பியாவின் தென் - மேற்கு மாகாணமான கபாவில் (KAFFA) கோப்பிச் செடிகள் தானாக வளர்வது பல நூற்றாண்டுகளுக்கு முன் கண்டு பிடிக்கப்பட்டது. யார் கண்டு பிடித்தார்கள். எப்படிக் கண்டு பிடித்தார்கள் என்ற விவரம் தெரியவில்லை. ஆனால் ஆங்கிலத்தில் கொபி தமிழில் கோப்பி என்ற சொற்கள் அது முதன் முதலாகக் கண்டு பிடிக்கப்பட்ட கபா ஆங்கிலத்தில் நாம் COFFEE என்று அழைப்பதற்கு KAFFA தான் காரணம். கி. பி ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கோப்பியின் சிறப்பைப் பாரசீக இராணுவத்தினர் நன்கு உணத்தியிருந்தனர். அவர்கள் கோப்பியை அரேபியாவுக்கு அறிமுகம் செய்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அரேபியர்கள் அதைப் பருகும் பானமாகத் தயாரித்தார்கள். அரபு மொழியில் கோப்பிக்குப் பெயர் காவா, அதாவது குடிபானம் 17ஆம் நூற்றாண்டளவில் பெருமளவு கோப்பி கொட்டை அரேபியாவின் மொச்சா துறைமுகத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்டன. இதனால் கோப்பிக்கு மொச்சா (MOCHA) என்ற இன்னுமொரு பெயர் கிடைக்கப்பெற்றது. சில ஐரோப்பிய மொழிகளில் கோப்பியை மொச்சா என்று அழைக்கிறார்கள்.

கோப்பிச் செடி மலைப் பிரதேசங்களில் வளர்க்கப்படுகிறது. அதற்கு உயர்ந்த இடமும் நிழலும் தேவைப்படுகின்றன. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கோப்பிச் செடியை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் அறிமுகம் செய்தனர். இலங்கையில் அது அழிந்து விட்டது ஆனால் இந்தியாவில் கோப்பித் தோட்டங்கள் வர்த்தக அடிப்படையில் பேணப்படுகின்றன. ஒல்லாந்தர்கள் தமது காலனித்துவ நாடான இந்தோனேசியாவுக்கு கோப்பிச் செடியை அறிமுகம் செய்தனர். 19 ஆம் நூற்றாண்டு வரை உலகின் முன்னணி கோப்பி ஏற்றுமதி நாடாக இந்தோனேசியா இடம் பெற்றது. ஜாவாத்தீவில் பெருமளவு கோப்பிச் செய்கை இடம் பெற்றதால் ஜாவா (JAVA) என்று கோப்பிக்கு இன்னுமோர் பெயர் கிடைத்தது. 1888 ஆம் ஆண்டில் கோப்பிச் செடியைத் தாக்கும் ஒரு பூச்சி நோய் இந்தோனேசியாவின் கோப்பித் தோட்டங்களை அழித்தன. ஏற்றுமதி பெருமளவில் குறைந்து விட்டது. இன்று பிறேசில், கொலம்பியா, குவத்த மாலா போன்ற தென் அமெரிக்க நாடுகளும், மேற்கு இந்தியத்தீவுகளும், எதியோப்பியாவும் மிகப் பெருமளவு கோப்பியைப் பயிரிட்டு ஏற்றுமதி செய்கின்றன. உலகப் பொருளாதாரத்தில் தேயிலைக்கு நிகரான இடம் கோப்பிக்கும் உண்டு,

இலங்கையின் கோப்பி வரலாறு 1824 இல் ஆரம்பிக்கிறது. கம்பளைக்கு அருகாமையில் ஜோர்ஜ் பேர்ட் (GEORGE BIRD) என்ற ஆங்கிலேயர் ஒரு கோப்பித் தோட்டத்தை அந்த வருடம் ஆரம்பித்தார். இலங்கையின் ஆளுநர் சேர் எட்வேட் பார்ன்ஸ் (GOVERNOR SIR EDWARD BARNES) அடுத்த வருடம் பேராதெனியாவுக்கு அண்மையிலுள்ள கொனைறுவாவில் தனக்குச் சொந்தமான கோப்பித் தோட்டத்தைத் திறந்தார். அதே பார்ன்ஸ் மலையகத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய உதவும் ஒரு நெடுஞ்சாலையையும் அமைத்தார். 1835 இல் கோப்பிச் செய்கை மிக வேகமாகப் பரவியது. 4,000 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான காட்டு நிலம் கோப்பிச் செய்கைக்காக தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டன. சரியாகப் பத்து வருடத்தில் 300,000 ஏக்கர் நிலத்தில் கோப்பிச் செய்கை நடைபெற்றது. 1845 இல் இங்கிலாந்தில் நடந்த தற்காலிக அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் கோப்பிச் செய்கையில் வீழ்ச்சி ஏற்பட்டது. 1855 இல் மீண்டும் கோப்பி ஏற்றுமதி உச்ச நிலை அடைந்தது. 1870 இல் கோப்பிச் செடியைத் தாக்கும் பூச்சி நோய் ஆரம்பித்தாலும் கோப்பிச் செய்கையும் ஏற்றுமதியும் பாதிப்பு அடையவில்லை. 1880 இல் நோயின் தாக்கம் உச்ச நிலை அடைந்தது பின்பு படிப்படியாகக் கோப்பிச் செய்கை கைவிடப்பட்டு தேயிலையின் வரலாறு ஆரம்பமாகியது.

கோப்பியில் பலவிதமான ரகங்களும் ருசிகளும் உண்டு. அதுபோல் தேயிலையில் மூன்று முக்கிய ரகங்கள் காணப்படுவதோடு அவற்றின் ருசிகளும் வேறுபடு கின்றன. கோப்பி, தேயிலை ஆகியவற்றின் ருசி வேறுபாடுகள் அவை பயிரிடப்படும் நாடு, அவற்றைப் பதனிடும் முறை என்பன வற்றால் தீர்மானிக்கப்படுகின்றன. தேனீரைத் தயாரித்துப் பருகும் முறைகளும் வேறுபடுகின்றன. சில நாடுகளில் சீனி, பால் போன்றவற்றைச் சேர்க்காமல் வெறும் தேனீரை மாத்திரம் குடிக்கிறார்கள். சிலர் பால், சீனி என்பனவோடு சிறிது எலுமிச்சம் பழச்சாற்றையும் சேர்த்துப் பருகுகிறார்கள். குளிர் வலய நாடுகளில் தேனீரில் சிறிதளவு மதுபானம் கலந்து சுடச்சுடக் குடிக்கும் வழக்கம் உண்டு. திபெத்து நாட்டில் சூடான தேனீரில் ஒரு கட்டி பசு நெய்யை மிதக்க விட்டு அது உருகும்போது ருசித்துக் குடிப்பார்கள். ஜப்பான், ருஷ்யாபோன்ற நாடுகளில் தேனீர் பருகுவது சம்பந்தமான மிக விரிவான பாரம்பரிய பழக்க வழக்கங்கள் உருவாகியுள்ளன. அவை பண்பாட்டு அடையாளங்களாகக் கருதப்படுகின்றன.

கறுப்பு, பச்சை, ஊலொங் (BLACK, GREEN, OOLONG) என்று மூன்று வகையான தேயிலை ரகங்கள் இருக்கின்றன. இவற்றிற்கிடையில் இலை வித்தியாசம், அதாவது இலையின் பருமன் வித்தியாசம் இருப்பினும் தயாரிப்பு முறைதான் கறுப்பு. பச்சை, ஊலொங் என்ற வகைப்படுத்தலைத் தீர்மானிக்கின்றது. கறுப்பு தேயிலையைத் தயாரிக்கும் நாடுகளாவன இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, வங்காளதேசம், பாகிஸ்தான், கென்னியா மற்றும் மத்திய ஆபிரிக்க நாடுகள். உலகச் சந்தையில் விற்பனையாகும் தேயிலையில் 90 வீதம் கறுப்பு தேயிலையாக இடம்பெறுகிறது. பச்சை தேயிலை தயாரிக்கும் நாடுகளில் சீனா, ஜப்பான், தாய்வான், வியற்நாம் போன்ற நாடுகள் முன்னணி இடம் வகிக்கின்றன. ஜப்பான் பெருமளவு பச்சை தேயிலையைத் தயாரிக்கிறது. ஜப்பானின் உள் நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அது போதுமானதாக இருக்கிறது. சீனா ஒரு பச்சைத் தேயிலை தயாரிக்கும் நாடாக இருப்பினும் சிறிதளவு கறுப்புத் தேயிலையையும் அது தயாரிக்கிறது. பெரியளவில் இல்லாவிட்டாலும் சீனா ஒரு தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடு. பச்சை, கறுப்பு தேயிலைகளுக்கு இடைப்பட்டதாக ஊலொங் தேயிலை இடம்பெறுகிறது. கிட்டத் தட்ட 4000 வருடங்களுக்கு முன் கண்டு பிடிக்கப்பட்ட தேயிலை கிழக்கு நாடுகள் மேற்கு நாடுகள், மத்திய கிழக்கு என்ற வித்தியாசம் பாராட்டாது உலக மக்கள் அனைவராலும் விரும்பப்படும் பானமாகும்.

மலையகத்தின் கோப்பி, தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு பெரும் எண்ணிக்கையில் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். குறைவான ஊதியத்திற்கு அதிகாலை தொட்டு மாலை வரை கிட்டத்தட்ட அடிமைகள் போன்றவர்கள் தேவைப்பட்டனர். அத்தோடு அவர்கள் தோட்டங்களுக்கு அருகாமையில் வாழ வேண்டும் என்று பெருந்தோட்ட முதலாளிகள் எதிர்பார்த்தனர். சிங்களத் தொழிலாளர்கள் வேலை முடிந்ததும் தமது கிராமங்களுக்குப் போய்விடுவார்கள். கூலியும் அவர்களுக்குக் கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருந்தது. அனைத்தையும் கணக்கில் எடுத்த ஆங்கிலேயர்கள் தமிழ் நாட்டிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டு வரும் முடிவை எடுத்தனர். இது இலங்கைத்தீவின் நவீன வரலாற்றில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. மலையகம் என்ற குறியீட்டுத் தமிழ்ச் சொல்லின் தோற்றத்திற்கும் வகை செய்தது. ஏற்கனவே தமிழ் நாட்டுத் தொழிலாளர்களை தென்ஆபிரிக்கா, மேற்கு இந்திய தீவுகள், மலேசியா, பீஜித் தீவுகளுக்கு ஏற்றுமதி செய்த அனுபவம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு உண்டு. அதே நடைமுறையை அவர்கள் இலங்கையிலும் பயன்படுத்தினர். தமிழன் எடுப்பார் கைப்பிள்ளை, அத்தோடு எஜமான விசுவாசமுள்ள அடிமை மனம் பூண்டவன் என்பது அக்கால ஆங்கிலேயர்களின் சரியான கணிப்பீடு.



1930 ஆம் ஆண்டில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்திரக் கூலியாக ஐம்பது சதம் வழங்கப்பட்டது. வாழ்விடமாக கூலி லைன் எனப்படும் கால்நடை வளர்ப் பதற்கு உதவும் சிறிய தொடர் அடைப்புக்கள் போன்ற ஒடுங்கலான அறைகள் வழங்கப்பட்டன. 1848 இல் ஆங்கில ஆட்சியாளர்களுக்கு எதிரான பாரிய ஆயுதக்கிளர்ச்சியைச் சிங்களவர்கள் நடத்தினார்கள். அது சிங்களவர்களைப் பெருந்தோட்டங்களில் வேலைக்கு அமர்த்துவதில்லை என்று முடிவெடுத்த ஆங்கிலேயர்களைத் தூண்டியது. தமிழ் நாட்டுத் தொழிலாளர்களின் மலையக வருகை ஏற்கனவே 1839 இல் ஆரம்பித்து விட்டது. எந்த வருடம் மாத்திரம் 2, 719 தமிழர்கள் கொண்டு வரப்பட்டனர். 1910 ஆம் ஆண்டளவில் மலையகத்திற்குக் கொண்டு வரப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 409, 914 ஆக உயர்ந்து விட்டது. 1939, 1940களில் இத்தொகை 900,000 ஆகப் பருத்து விட்டது. 1848ஆம் ஆண்டின் சிங்களவர்களின் ஆயுதக் கிளர்ச்சிக்கான காரணங்களில் தமிழ்த் தொழிலாளர்களின் மலையக வருகையும் ஒன்றாக அமைந்தது. 1920 இல் சிங்களத் தேசியவாதிகள் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளை மிகவும் விரிவாகவும் வெளிப்படையாகவும் முன்னெடுத்தனர். பிரிட்டிஷ் ஆட்சி காலமாகையால் வன்முறைகளில் இறங்க அவர்களால் முடியவில்லை. என்றாலும் முறுகல் நிலை காணப்பட்டது. மலையகத் தமிழர்களுக்கு எதிர்ப்புக் காட்டிய சிங்களத் தலைவர்களில் டி.எஸ். சேனநாயக்கா என்று அழைக்கப்படும் டொன் ஸ்ரீபன் சேன நாயக்கா முதலிடம் வகித்தார். அவர் காட்டிய மூர்க்கத்தனமான எதிர்ப்பு இலங்கை அரசியலின் எதிர்காலத்தை தீர்மானிக்கிறது. சிறீலங்கா சுதந்திரம் அடையும் வரை அவர் மலையகத் தமிழர்களை நாடற்றவராக்கும்



டி.எஸ். சேனநாயக்கா



எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா



தந்தை செல்வா

தீர்மானத்தை பிற்போட்டார். மலையகத் தமிழர்களின் குடியுரிமையை அவர் சிறீலங்கா சுதந்திரம் பெற்ற அதே வருடம் சட்டம் நிறைவேற்றிப் பறித்தார். இது வடக்கு கிழக்கு தமிழர்களின் அரசியல் வரலாற்றையும் பாதித்தது. சிங்களப் பேரினவாதத் தலைவர்களில் மலையகத் தமிழர்களுக்கு எதிர்ப்புக் காட்டுவதில் டி. எஸ். சேனநாயக்கா நிகரற்று விளங்குகிறார். பல இலங்கைத் தமிழர்கள் அவரைத் தமது நம்பிக்கைக்குரிய நண்பராக கணிப்பிட்டனர். தமிழனின் பலத்தைக் குறைத்தது போல் சிங்களக் குடியேற்றத்தின் மூலம் தமிழர் மண் பறிப்பைத் தொடக்கி வைத்தவரும் இதே மனிதர்தான். அவருடைய சகாவும் வாரிசுவுமான எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவை சேனநாயக்காவின் இரட்டைப் பிறவி என்று வர்ணிப்பதில் தவறில்லை.

1919 ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் நாள் கொழும்பு நகர மண்டபத்தில் இலங்கை தேசிய காங்கிரஸ் (CEYLON NATIONAL CONGRESS) என்ற தமிழர், சிங்களவர் ஐக்கியப்பட்ட தேசிய காங்கிரஸ் தோன்றியது. இவ்வாறான இலங்கையின் முதலாவது தேசிய இயக்கத்தை ஆரம்பித்தவர் தமிழரான பொன் அருணாசலம் ஆவர். சிங்களத் தலைவர்கள் செய்த நம்பிக்கைத் துரோகத்தால் அவர் 1920 இல் உறுப்புரிமை, தலைமைப் பதவி ஆகியவற்றைத் துறந்து காங்கிரசில் இருந்து வெளியேறினார். 1931 ஆம் ஆண்டு ஆகஸ்து மாதம் 15 ஆம் நாள் அருணாசலம் தமிழர் மகாஜன சபை என்ற தமிழர்களுக்கான தன்னாட்சி கோரும் அமைப்பை உருவாக்கினார். 1924 ஆண்டு ஜனவரி 9ஆம் நாள் அவர் மதுரையில் காலமானார். இப்படியான ஏமாற்று வேலைகளுக்குப் பெயர்பெற்ற இலங்கை தேசிய காங்கிரசின் உறுப்பினர்களில் ஒருவரான டி.எஸ். சேனநாயக்கா 1925 ஆம் ஆண்டு மலையகத் தமிழர்களுக்கு எதிரான இனவாதப் பிரசாரத்தை ஆரம்பித்தார். சிங்கள இனம் பலமிழக்கிறது, மலையகத் தமிழர்கள் தமிழ் நாட்டிற்குச் சொந்தமானவர்கள், அவர்களுக்கு இந்த நாட்டில் அக்கறை இல்லை என்ற வாதத்தையும் டி.எஸ். சேனநாயக்கா முன்வைத்தார்.

ஸ்ரேற் கவுன்சில் (STATE COUNCIL) என்ற பாராளுமன்ற அரசமைப்பிற்கு முன்னோடியான அரசவையில் அமைச்சர் பதவி வகித்த எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா மலையகத் தமிழர் விவகாரத்தை அரசியல் ஆக்கினார். 1933, 1934 ஆம் ஆண்டுகளில் அவர் தனது வாதத்திற்கு வலுச்சேர்க்கும் பொய்யான தகவல்களை முன் வைத்தார். 1827 இல் 10,000 ஆகவிருந்த எண்ணிக்கை 1932 இல் 651,000 ஆக உயர்ந்து விட்டது என்று சுட்டிக் காட்டினார். அப்போது இலங்கையின் மொத்த மக்கள் தொகை 5, 738,000 என்றும் மலையகத் தமிழர் எண்ணிக்கை அதில் ஐந்தில் ஒரு வீதம் என்றும் அவர் புள்ளி விவரம் வழங்கினார். என்றாலும் மலையகத் தமிழர்களின் வருகையைத் தடுக்க இவர்களால் முடியவில்லை. ஆங்கிலேயத் தோட்ட முதலாளிகளுக்கு மேலும் கூடுதலான தமிழ்த் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். இதே சமயத்தில் இலங்கை வர்த்தகம் மற்றும் கடன் வழங்கல் துறைகளில் இந்தியச் செட்டியார்கள் செலுத்திய ஆதிக்கம் பற்றியும் டி. எஸ். சேனநாயக்கா கடுமையான விமர்சனக் கருத்துக்களை வெளியிட்டார். சேனநாயக்கா பண்டாரநாயக்கா ஆகியோர் கொடுத்த கடும் அழுத்தம் காரணமாக இந்திய தேசிய காங்கிரஸ் சிங்களத் தேசியவாதிகளின் வாதங்களைக் கருத்தில் எடுக்கச் சம்மதித்தது. என்றாலும் தீர்மானம் எடுக்கும் இறுதிவலு ஆங்கில அரசிடம் இருந்த படியால் உருப்படியாக ஒன்றும் செய்ய முடியவில்லை.

***ஒரு சிங்களவன் மேற்கு நாடொன்றில் ஐந்து வருடம் தொடர்ச்சியாக வாழ்ந்து முடித்தபின் குடியுரிமை விண்ணப்பம் செய்யத் தொடங்கிவிடுவான். ஆனால் ஒரு நூற்றாண்டுக்குமேல் இலங்கையில் வாழ்ந்து அதன் கோப்பி, தேயிலை ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு உழைத்த மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறிக்க சிங்கள அரசினால் முடிகிறதென்றால், என்ன காரணம்? தமிழர்கள் என்பது காரணம் இதே காரணத்திற்காக அயல் நாடான இந்தியாவும் மாற்றந்தாய் மனதுடன் நடக்கிறது.***

தீராச் சினமும் ஆழ்ந்த பகைமையும் கொண்டிருந்த சிங்களத் தலைவர்களுக்கு சிறீலங்கா சுதந்திரம் பெற்றதும் தமது விருப்பம் போல் செயற்பட வாய்ப்புக் கிடைத்தது. 1948 பெப்பிரவரி 4ஆம் நாள் சிங்களவர் சுதந்திரம் பெற்றனர் தனியரசாக விருந்த வடகிழக்கை தமது நிர்வாக நலனுக்காக 1833 இல் சிங்களவர்களின் வாழ் நிலத்தோடு ஒன்றிணைந்த பிரிட்டிசார் தமிழர்களின் எதிர்காலத்தைச் சூனியமாக்கி விட்டுச் சென்றனர். இதுவரை காலமும் தமிழர் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருந்த தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீ.ஜீ பொன்னம்பலம் தனது போராட்டத்தை உதறித்தள்ளிவிட்டு டி. எஸ். சேனநாயக்காவின் அமைச்சரவையில் இணைந்தார். அவருக்கு கைத்தொழில் மற்றும் மீன்பிடி அமைச்சு வழங்கப்பட்டது. இந்தக் குத்துக் கரணத்தைத் தொடர்ந்து தமிழர் வரலாற்றில் பல பாரிய




திருப்பங்கள் ஏற்பட்டன. தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் ஈ.எம். வீ. நாகநாதன் செயலாளர் பதவியில் இருந்து இராசீநாமச் செய்ததோடு கட்சியில் இருந்தும் வெளியேறினார். அடுத்ததாக டி.எஸ் சேனநாயக்கா அரசு இலங்கைப் பிரசா உரிமைச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இச்சட்டத்திற்கு அமைச்சர் ஜீ.ஜீ பொன்னம்பலம் உட்பட தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் சாதகமாக வாக்களித்தனர். பல தசாப்தங்களாகக் கறுவிக் கொண்டிருந்த சேனநாயக்கா-பண்டாரநாயக்கா சோடியினர் மலையகத் தமிழர்களை மிக எளிதாக நாடற்றவர் என்ற நிலைக்குத் தள்ளி விட்டனர்.

இலங்கையின் இன்றைய அமைதியின்மை இன முரண்பாடு தனிநாட்டுக் கோரிக்கை என்ற வரலாற்றுத் தொடரில் மூன்று நிகழ்ச்சிகள் முக்கியமாகக் கருதப்படுகின்றன. 1920 இல் அருணாசலத்தை ஏமாற்றியமை, 1949 இல் நிறைவேறிய பிரசாவுரிமைச் சட்டம், 1956 இல் நிறைவேறிய தனிச்சிங்களச் சட்டம் என்பன அந்த மூன்று நிகழ்ச்சிகளுமாகும். பிரஜாவுரிமைச் சட்டத்திற்குச் சாதகமாக அமைச்சர் பொன்னம்பலம் வாக்களித்த காரணத்தால் செல்வநாயகம், வன்னியசிங்கம் போன்ற தலைவர்கள் காங்கிரசை விட்டு வெளியேறினர். தீர்க்கதரிசன உணர்வுமிக்க செல்வநாயகம் “இன்று மலையகம், நாளை நாங்கள்” என்று கூறினார். அப்படியே நடந்துவிட்டது. 1949 ஆண்டு டிசெம்பர் 18ஆம் நாள் தமிழரசுக் கட்சி என்ற புதிய அரசியல் கட்சியை செல்வநாயகம் ஆரம்பித்தார். இலங்கை வரலாற்றில் முதலாவதாக உடைந்த அரசியல் கட்சி இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியாகும். இதற்கு மலையகத் தமிழர்களின் குடியுரிமைப் பாதிப்பு மூல காரணமாக அமைகிறது.

ஒரு சிங்களவன் மேற்கு நாடொன்றில் ஐந்து வருடம் தொடர்ச்சியாக வாழ்ந்து முடித்தபின் குடியுரிமை விண்ணப்பம் செய்யத் தொடங்கிவிடுவான். ஆனால் ஒரு நூற்றாண்டுக்குமேல் இலங்கையில் வாழ்ந்து அதன் கோப்பி, தேயிலை ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு உழைத்த மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறிக்க சிங்கள அரசினால் முடிகிறதென்றால், என்ன காரணம்? தமிழர்கள் என்பது காரணம் இதே காரணத்திற்காக அயல் நாடான இந்தியாவும் மாற்றந்தாய் மனதுடன் நடக்கிறது.

சீன வம்சாவழியினர் இன்று தெற்கு ஆசிய நாடுகள் அனைத்திலும் பல கோடிக்கணக்காக வாழ்கின்றனர். மலேசியாவில் சீனர்கள் மலே மக்களுக்கு அடுத்த நிலையிலான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். சிங்கப்பூரில் சீனர்கள்தான் பெரும்பான்மையினர். தெற்கு ஆசிய நாடு ஒன்றாவது தமது சீன மக்களின் உரிமைகளைப் பறிக்கத் துணியவில்லை. சீனாவுடன் முரண்பட நேரிடும் என்று அனைத்து அரசுகளுக்கும் தெரியும். ஆனால் தமிழர்களுக்கு எவரும் என்னவும் செய்யலாம்,



சிறிமாவோ– லால் – பகதூர் சாஸ்திரி ஒப்பந்தம



அதற்கு இந்திய அரசு ஆதரவு கூட வழுங்கலாம்.

நாடற்றவர்களாகச் சட்டத்தின் மூலம் மாற்றப்பட்ட மலையகத் தமிழர்கள் மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் பொலிஸ் இராணுவக் கெடுபிடிகளோடு இந்தியாவுக்கு ஏற்றி அனுப்பப்பட்ட போது இந்தியா தடை விதிக்காமல் இருந்தது ஏன்? சிறிமாவோ-லால் - பகதூர் சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் மலையகத் தமிழர்களை ஏற்றுக்கொள்ள இந்திய மத்திய அரசு சம்மதித்தது என்ன காரணத்திற்காக? பல தேசங்களும் பல இனங்களும் ஒன்றிணைந்த இந்தியாவில் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்க யாருமில்லை. தேசியக் கொள்கை வகுக்கும் போது மத்தியில் ஆதிக்கம் செலுத்தும் தமிழர்களுக்கு எதிரான மாநில அதிகாரிகள் தீர்மானம் எடுக்கின்றனர். கல்வி அறிவில் மிகச் சிறந்து விளங்கும் கேரள மாநில அதிகாரிகள் புதுடில்லியில் செங்கோலோச்சுகின்றனர். தமிழர் நலனில் அவர்களுக்கு அக்கறை இல்லை. சீனாவைப் பாருங்கள் அங்கே முழு மக்கள் தொகையில் 93 வீதமானோர் ஹான் என்ற ஒற்றை இனத்தைச் சேர்ந்தவர்கள். அதனால் தெளிவான வெளியுறவுக் கொள்கையும், வெளிநாடுகளில் காலம் காலமாக வாழும் சீன வம்சாவழியினர் நலனில் நிரந்தர அக்கறையும் காணப்படுகிறது. தமிழர்களின் நலனில் அக்கறையற்ற காழ்ப்புணர்வு மேலோங்கிய, மத்திய அரசு அதிகாரிகள் இருக்கும் வரை உலகத் தமிழர்களுக்காக இந்தியா குரல் தரவாய்ப்பு இல்லை.

இப்போது குடியுரிமை பெற்று மலையகத்தில் வாழும் தமிழர்களின் நிலவரம் எப்படி இருக்கிறது? அவர்கள் தொடர்ந்தும் இந்தியத் தமிழர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இன அழிப்பு நடவடிக்கையின் ஒரு அங்கமாக அரச மருத்துவர்கள் தமிழ்ப் பெண்களுக்குக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்கிறார்கள் இதில் கன்னிப் பெண்களும் அடங்குவர். இதுபற்றி மலையகத் தலைவர்கள் அலட்டிக்கொள்வதில்லை. 80 வீதமான தமிழர்கள் வாழும் நுவரேலியா மாவட்டத்தில் நிர்வாக அதிகாரிகள் அனைவரும் சிங்கள இனத்தவர்களாக இருக்கின்றனர். வடகிழக்கிற்கு வெளியே மிகக் கூடுதலான தமிழர்கள் வாழும் மாவட்டமான நுவரேலியாவில் இப்படியென்றால் தமிழர்களின் பிற மலையக மாவட்டங்கள் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஹற்றன், டிக்கோயா, தலாவாக் கொல்லை போன்ற மலையக மாவட்டங்களில் நுவரேலியாவுக்கு நிகரான



அல்லது அதிலும் மோசமான நிலவரம் தான் காணப்படுகிறது. தமது மொழி உரிமைக்காகப் போரிடும் வலுவற்ற மலையகத் தமிழ் இளைஞர்களிற் பலர் தமக்குத்தாமே சிங்களப் பெயர்களைச் சூட்டிக் கொண்டு சிங்கள மொழியில் பேசியும் கல்வி கற்றும் வருகிறார்கள். இதற்கு சிங்கள அரசு பூரண ஆதரவு வழுங்குகிறது. மலையகத்தில் சிங்கள நிர்வாக அதிகாரிகளை அரசு நியமிப்பதற்கு அடிப்படைக்காரணம் வெளிப்படையாகத் தெரிகிறது. நிர்வாக நலனை அனுபவிக்க விரும்பினால் சிங்களவர்களாக மாறுங்கள், இதுதான் மலையகத்திற்கு அரசு கூறும் செய்தி.

மலையகத்தில் தோன்றிய தொழிற் சங்கங்கள் இப்போது அரசியல் கட்சிகளாக மாறிவிட்டன. இதனால் இரு வகை இலாபம் கிடைக்கிறது. தொழிலாளர்களிடமிருந்து வசூலிக்கும் சந்தாப் பணத்தை சுயதேவைக்குப் பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கிறது. அரசியலில் இதிலும் கூடிய பணத்தைத் திரட்டும் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடிகிறது. மலையகத்தில் ஒரு வித்தியாசமான அரசியல் கலாச்சாரம் நிலவுகிறது. அரசியல் தலைவர்கள் மக்களின் வாக்குக்களை பெறுவதற்காக தேர்தல் காலத்தில் மலையகம் வருவார்கள் வெற்றிபெற்ற கையோடு கொழும்புக்குச் சென்றுவிடுவார்கள். அடுத்த தேர்தலுக்கு மீண்டும் வருவார்கள். மக்களைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. சொத்து சேர்ப்பது, சுகபோகம் அனுபவிப்பது இதுதான் மலையக அரசியல் வாதிகளின் குறி. சிங்களவர்களுடைய எக்கட்சி பதவிக்கு வந்தாலும் அவர்கள் தீவிரமாகப் பேரம் பேசி அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொள்வார்கள் "எக்கட்சி பதவிக்கு வந்தாலும் நாங்கள் தான் ஆளும் கட்சி" என்று தமது மோசடி நடவடிக்கைகளுக்கு கோட்பாட்டு வடிவம் கொடுப்பார்கள். கோப்பி, தேயிலையுடன் ஆரம்பித்த மலையகத் தமிழர்களின் கண்ணீர் கதையை சொற்களில் அடக்க முடியாது அது முடிவில்லாத தொடர் கதை.

தமிழ்த் தொழிலாளரின் சோகத்தைப் பாரதியார் பாட்டாக வடித்துள்ளார். அதில் சில வரிகள்-

ஆபிரிக்கத்து காப்பிரி நாட்டிலும்
தென்முனையடுத்த தீவுகள் பலவினும்
பூமிப்பந்தின் கீழ்ப்புறத்துள்ள
பற்பல தீவினும் பரவி இவ்வெளிய
தமிழ்ச்சாதி தடியுதை உண்டும்
காலுதை உண்டும் கயிற்றடி உண்டும்
வருந்திடும் செய்தியும்.......

நன்றி: -கலாநிதி க.சோமாஸ்கந்தன்-எரிமலை மார்ச் 2007

www.sangathamil.ca




அமெரிக்கத் தொழிலாளர்கள் எட்டுமணி நேர வேலை நேரத்துக்காக போராடி வெற்றி பெற்ற நாளை நினைவு கூரவே மே நாள் அறிமுகமானது. அது அன்று உலகத் தின ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவராலும் கொண்டாடப் படும் ஒன்றாகியுள்ளது. அதேபோலவே, அதே அமெரிக்கப் பெண் தொழிலாளர்கள் 10 மணி நேர வேலைகேட்டும், ஆண்களுக்கு சமமான ஊதியத்தைக் கேட்டும் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினார்கள் ஆர்ப்பாட்ட அணி வகுப்புகளையும் நடத்தினார்கள். அமெரிக்கப் புடவை ஆலைப்பெண் தொழிலாளர்களே இதில் முன்னணி வகுத்தார்கள். இது நடந்து 1857 ம் ஆண்டு மார்ச் 08ம் திகதியிலாகும்.

அமெரிக்காவிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் முதலாளித்துவ வர்க்கம் ஆட்சிக்கு வந்தது. தொழிலாளர்களின் போராட்டங்கள், எதிர்பார்ப்புகள் யாவும் அடக்கப்பட்டன. அவர்களது போராட்ட வரலாறுகளும் மறைக்கப்பட்டன.

ஆனால் வரலாற்றின் உண்மைத் தோற்றத்தை யாராலும் மறைக்க முடியாது உலக சமதர்ம அனைத்துலக பெண் கள் அமைப்பு என்றோர் பெண் விடுதலை அமைப்பு 1907ம் ஆண்டு தோற்றம் பெற்றது. இது இன்று சமதர்ம அனைத்துலக அமைப்பின் (Socialist International) சகோ தரத்துவ அமைப்பாக சமதர்ம அனைத்துலக பெண்கள் அமைப்பு என்ற பெயரில் இன்றும் இயங்கிவருகின்றது.

இவ்வமைப்பின் 2வது மகாநாடு 1910ம் ஆண்டு டென் மார்க்கில் கோபன் ஹேகன் நகரில் கூடியது. முதலாளித் துவவாதிகளால் மறைக்கப்பட்ட வரலாற்றை இவர்கள் வெளிக்கொணர்ந்தார்கள். அமெரிக்க பெண் தொழி லாளர்களின் போராட்ட எழுச்சி நாளான மார்ச் 08ஐ அனைத்துலகப் பெண்கள் நாளாக பிரகடனம் செய்தார் கள். ஜேர்மனிய பொதுவுடமைக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான கிளாரா செட்கினே இத் தீர்மானத்தை முன்வைத்தவராகும்.

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**




## தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# I.P.K.Fஇன் தமிழின அழிப்பு: இந்தியப் படைகளின் பாலியல் வல்லுறவுகள்

இந்திய அமைதிப்படைகளின் காலத்தில் அவர்கள் தமிழ் பெண்கள் மீது பரவலான பாலியல் வல்லுறவுகளையும் மேற்கொண்டார்கள். இதுபற்றிய முறைப்பாடுகளுடன் மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்த இந்திய இராணுவத் தளபதியிடம் சென்றபோது, இப்படியான முறைப்பாடுகளுடன் தன்னிடம் வரவேண்டாம் என்றும், யாரையாவது அவரது படைகள் சுட்டால் மட்டுமே முறைப்பாடுகளுடன் வரவேண்டும் என்று சொல்லியிருக்கின்றார். இந்திய இராணுவத்தால் பாலியல் வன்முறைகளை மிகப் பரவலாக இடம்பெற்று வந்ததால் இதை ஒரு குற்றச்செயலாக கருதவேண்டாம் என்று இராணுவத் தளபதிகள் மக்களை நிர்ப்பந்தித்துள்ளார்கள்.

இக்காலப்பகுதியில் தமிழர் தாயகத்தில் பணியாற்றிய பல தமிழ் வைத்தியர்கள் இந்தியப் படைகளால் பாலியல் வல்லுறவுக்குள்ளாகிய நூற்றுக்கணக்கான இளம் பெண்களுக்கு சிகிச்சையளித்திருக்கின்றார்கள். பல்கலைக்கழக ஆசிரியரும் சமூகப்பணி ஆர்வலருமாக இருந்து பின்னர் படுகொலை செய்யப்பட்ட ரஜினி தினகரகம இந்தியப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவுகள் பற்றி விரிவாக எழுதியிருக்கின்றார். இந்தியப் படைகள் புரிந்த பாலியல் கொடுமைகள் சர்வதேச மன்னிப்புக் சபையின் அறிக்கைகளிலும் ஒரு தலைப்பாக இடம்பெற்றுள்ளன. இக்காலப்பகுதியில் வெளிவந்த உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களிலும் இந்தியப் படைகள் புரிந்த பாலியல் குற்றஞ்செயல்கள் பற்றிய செய்திகள் அதிகமாக வெளிவந்திருக்கின்றன.

இக்காலப்பகுதியில் நிலவிய பாலியல் வல்லுறவுக்குட்படும் பயம் காரணமாக இளம் பெண்கள் அதிக அளவில் தமிழ் ஆயுதக் குழுக்களில் இணைந்து கொண்டார்கள். தங்களது நண்பர்களும் அயலவர்களும் இந்தியப் படைகளால் பாலியல் வல்லுறவுக்குடபடுத்தப் பட்டதே தாங்கள் இவ்வாறு இணைவதற்கு உந்து சக்தியென்று பலர் கூறியுள்ளார்கள். மானுடவியலாளர்கள் கூற்றில் கூறுவதானால், ஒரு இளம் பெண்ணின் இம்முடிவானது, அவரை பாதிக்கப்படக்கூடியவர் என்ற நிலையை களைந்து சமூகத்தில் சக்தியுள்ள ஒருவராக மாற்றுகிறது எனலாம்.

**புள்ளிவிபரங்கள்**

இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவுகள் தொடர்பான ஆவணங்கள் தமிழ்ச் செயற்பாட்டாளர்களால் பரந்தளவில் சேர்க்கப்பட்டுள்ளன. 1987 ஒக்ரோபருக்கும் 1988 யூனிற்கும் இடையில் தனித்தனியாக 60 இற்கும் மேற்பட்ட பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதற்கான ஆவணங்கள் உள்ளன. இவ்வாறன சில ஆவணங்களில் மருத்துவ அறிக்கையும் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட சம்பவங்களில் 350 வரையான பெண்களும் யுவதிகளும் இவ்வாறாகப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இவ்வாறு பாதிக்கப்படடவர்களில் 14 வயது இளம் பெண்கள் தொடக்கம் 45 வயதான பெண்கள் வரைக்கும், கர்ப்பிணிகள்கூட உள்ளடங்குகின்றனர். ஏறத்தாழ அரைவாசிக்கும் மேல் 18 வயதுக்குட் பட்டவர்களேயாவர்.

பெரும்பான்மையான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே இடம்பெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்திலும் குறிப்பிட்ட எண்ணிக்கையான நிகழ்வுகள் இடம்பெற்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மக்களும் இந்திய இராணுவத்தின் கைகளில் அகப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு ஆளாகினர்.

தமிழர் கலாச்சாரத்தில் இக்குற்றச்செயல் மிகவம் பாரதூரமான தன்மையில் பார்க்கப் படுவதால், பெருந்தொகையான சம்பவங்கள் ஆவணப்படுத்தப்படவில்லை. எனினும் இந்தியப் படைகளின் பாலியல் வல்லுறவானது ஒரு திட்டமிட்ட வன்முறை வடிவமாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை இச்சம்பவங்களின் சாட்சிகளிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்களும் ஏனைய விபரங்களும் காட்டுகின்றன.

**இந்தியப் படைகளின் பாலியல் வல்லுறவுகளின் பொதுவான அம்சங்கள்**

பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் காட்டுவது போன்று, அவை ஒரு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியப் படைகள் மத்தியில் இது ஒரு பரவலான ஒரு செயற்பாடாகவும் இருந்துள்ளது. பல சம்பவங்களில் இந்தியப் படையினர் பெண்களை அவர்களது வீடுகளில் வைத்தே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர். மற்றைய சம்பவங்களில் பெண்களைக் கடத்தி தமது முகாம்களுக்கோ அல்லது கைவிடப்பட்ட இடங்களுக்கோ கொண்டுசென்று வல்லுறவுக்குட் படுத்தியுள் ளார்கள். முகாம்களிலும் காவலரண்களிலும் நிலைகொண்டிருந்த படைவீரர்கள்? மக்களுடைய குடியிருப்புகளுக்குச் சென்று, வீடுகளுக்குள் நுழைவார்கள். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட படைவீரர்கள்? குடும்ப அங்கத்தவர்களைத் தாக்கிவிட்டுப் பின்னர் பெண் களையும் யுவதிகளையும் பாலியல் வல்லு றவுக் குட்படுத்துவார்கள் அல்லது பாலியல் துஸ் பிரயோகம் செய்வார்கள். அதன்பின்னர், அவர்கள் வீட்டைச் சூறையாடி, குடும்பத்தின் தனிப்பட்ட உடைமைகளை அல்லது பெறுமதியான பொருட்களை தம்முடன் எடுத்துக் கொண்டு சென்றுவிடுவார்கள். சில சம்பவங்களில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய பின்னர் பெண்கள் கொலைசெய்யப்பட்டும் உள்ளார்கள்.

1988 ஜனவரி 2 ஆம் திகதி, யாழ்மாவட்டத்திலுள்ள புன்னாலைக்கட்டுவன் என்னும் இடத்தில் மூத்ததம்பி கனகேஸ்வரி என்பவரின் வீட்டிற்குள் மூன்று இந்திப்படையினர் நுழைந்தார்கள். அவர்கள் அவரை தொல்லைப்படுத்தி, பாலியல் ரீதியாகத் துஸ்பிரயோகம் செய்துவிட்டு அவரது வீட்டையும் சூறையாடினர். அதே இடத்தில், நாகமுத்து சரவணை என்பவருடைய வீட்டிற்குள் நுழைந்த வேறு மூன்று இந்தியப் படையினர் அவருடைய மகள்மாரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்திருக்கின்றார்கள்.

1987 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தின் கோண்டாவில் கிழக்கில் இரண்டு இந்தியப் படையினர் காங்கேசன் துறை வீதி மற்றும் முதட்டு மடம் வீதிச் சந்தியிலிருந்த எஸ். சற்குணதேவியின் வீட்டுக்குள் நுழைந்து அவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார். அவர்கள் அவரது க ண வரைக் கட்டி அவரைத் தாக்கியும் இருந்தனர்.

1987 நவம்பர் 26 ஆம் திகதி. ஜி.செல்வநாயகத்தின் வீட்டுக்குள் நுழைந்த சில படையினர் அவரைப் பாலியல் வல்லுறவுக்குட் படுத்தினர். இவ்விரு சம்பவங்களும் எவ்வாறு இந்தியப் படையினர் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து பெண்களை பாலியல் வல்லுறவுக் குட்படுததினார்கள் என்பதை காட்டுகின்றன.

1987 நவம்பர் 21 ஆம் திகதி. யாழ்மாவட்டத்திலுள்ள உடுவிலைச் சேர்ந்த பல பெண்கள் உடுவில் இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்த படையினரால் பாலியல்வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள்.

1987 ஒக்ரோபர் 17 அம் திகதி. யாழ்ப்பாண மாவட்டத்தின் உரும்பிராய் என்னும் இடத்தில் 30 பெண்கள் இந்தியப் படைவீரர்களால் கடத்தப்பட்டார்கள். அவர்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத் தப்பட்டதாக நம்பப்படுகின்றது.

1987 ஒக்ரோபர் 20 ஆம் திகதி, யாழ்ப்பாண மானிப்பாயில் ஒரு தாயும் அவருடைய மகளும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

1989 வரை வடமராட்சியில் பணியாற்றிய தமிழ் வைத்தியர் ஒருவர் இந்தியப் படைவீரர்களால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக் கப்பட்ட பலருக்குச்சிகிச்சையளித்தார். அவர் கேட்ட தகவல்களின் படி, அதிகமான பாலியல் வல்லுறவுகள், இந்திய இராணுவத்தினர் வீடு களைச் சுற்றிவளைத்து ஆண்களை பிடித்துச் செல்லும் நடவடிக்கைகளின்போதே இடம் பெற்றிருக்கின்றது. இந்நேரத்தில் இந்தியப் படையினரின் ஏனைய வீரர்கள் வீடுகளுக்குள் நுழைந்து பெண்களையும் யுவதிகளையும் பாலியல் வல்லுறவுக் குட்படுத்துவார்கள். இவ்வாறான ஒரு சம்பவத்தில் 8. 10, 12 வய துடைய மூன்று சகோதரிகள் படைவீரர்களால் பாலியல் துன்புறுத்தலுக்காளாக்கப்பட்டார்கள். சிகிச்சையின்போது அவர்களது மார்பகங்களைச் சுற்றி கடித்த அடையாளங்கள் இருந்ததை அவ் வைத்தியர் கண்டார்.

இவ்வாறு பாலியல் வல்லுறவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவளத்துணைச் சிகிச்



சை, உடற்காயங்கள் மற்றும் பாலியல் ரீதியாகக்கடத்தப்படும் தொற்றுநோய்களுக்கும் அவர் சிகிச்சையளித்துள்ளார். பாலியல் வல்லுறவு காரணமாக பெண்கள் கர்ப்பமடைந்த நிலையையும் எதிர்கொண்டிருந்தனர். உடற்காயங்கள் சிகிச்சையளிப்பதற்கு இலகுவானவையாக இருந்தன என்றும், ஆனால் உளவியல் தாக்கங்களுக்குச் சிகிச்சை வழங்குவது மிகவும் கடினமாது என்றும் கூறினார். பெரும்பாலான பெண்கள் அது தங்களுடைய தவறே என்று நம்புவதாகக் கூறி ஒரு குற்ற உணர்வினாலேயே மிகவும் பாதிக்கப்பட்டிருந்ததை அவ்வைத்தியர் அவ தானித்தார். இம் மனநிலையிலிருந்த தனது நோயாளர்களை வெளியில் கொண்டு வருவது அவ்வைத்தியருக்குப் பெரும்பாடாக இருந்தது.

**பாதிக்கப்பட்டவர்களது பதில் நடவடிக்கைகள்**

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சமூகத்தால் கறை பூசப்படும் என்ற பயம் காரணமாக பாலியல் வன்முறைச் சம்பவங்களைப் பற்றி முறை யிடுவது தமிழ் சமூகத்தில் மிகவும் அரிதான செயல். இருந்தும் கூட, சில பாலியல் வன் முறைச்சம்பவங்கள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களால் வெளிகொண்டுவரப்பட்டன. இப்பாதிப்புகளை எதிர்கொள்ளும் வேறு சில வழிகளையும் இவர்கள் செயற்படுத்தியுள்ளார்கள்.

1988 ஏப்ரலில், கிளிநொச்சி இரணைமடு மற்றும் முல்லைத்தீவின் விசுவமடு ஆகிய இடங்களில் ஆறு பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள். இச்சம்பவத்தைக் கேள்விப்பட்ட அயலவர்களும் அவ்விடங்களில் வாழ்ந்த மக்களும் தங்களது வீடுகளுக்குள்ளேயே இருந்ததுடன் ஏப்ரல் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் தங்களது கடைகளைப் பூட்டி, வியாபாரங்களையும் நிறுத்தி வைத்திருந்தார்கள். இச்சம்பவமானது எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒரு அடையாளமாக மட்டுமன்றி, கொடூரமாக தாக்கப்பட்ட பெண் களின் குடும்பத்தவர் சோகம் ஆறும் நேர மாகவும் அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக் கும் செயலாகவும் இருந்தது.

1987 நவம்பர் 30 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த 47 குடிமக்களால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று, பின்வருமாறு சொல்கின்றது:

“இச்சம்பவங்களானது இப்பகுதி மக்கள் மத்தியில் பயத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் அவர்களில் சிலர் இவ்விடத்தைவிட்டு வெளியேறிக் கொண்டும் இருக்கின்றார்கள். பாதுகாப்பாக வாழமுடியும் என்ற நம்பிக்கையில் நாம் எமது வீடுகளுக்குத் திரும்பும்போது, அமைதி காக்கும் படையினரால் நாம் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகின்றோம்.”

**அதிகாரிகள் பதில் நடவடிக்கைகள்**

பாலியல் வல்லுறவுக்குச் சம்பவங்களுக்கு இந்தியப் படையினரும் இலங்கை அரசாங் அதிகாரிகளும் வழங்கிய பதில்கள் ஒன்றில் அச்சம்பவங்கள் நடக்கவில்லை என்று மறுப்பதாக அல்லது அவற்றை குறைத்துக்காட்டுவதாகவே இருந்தன. இந்தத் தந்திரமானது பொறுப்பிலிருந்தும் நீதியிலிருந்தும் தப்பித்துக்கொள்வதற்கு மட்டுமன்றி, தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையையும் கௌரவத்தையும் இழந்த நிலையினைப் பதியச் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டது. பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவதானது பெண்களையும் அவர்கள் சமூகத்தையும் பாரியளவில் பாதிப்புறச் செய்ததுடன், இவ்வாறு அதனை மறுப்பதானது தமிழ் மக்களின் ஒட்டுமொத்த மன அழுத்தத்தையும் அதிகரிக்கச் செய்தது.




1987 நவம்பர் 21 ஆம் திகதி, உடுவில் இராணுவ முகாமில் வைத்து பல பெண்கள் இந்தியப் படைகளால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள். பின்னர் இச்சம்பவம் பற்றி முறையிடுவதற்காகப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண்களும் அவர்களது பெற்றோரும் அதிகாரிகளிடம் சென்றார்கள். அதற்கு அதிகாரிகள்,

“பாலியல் வல்லுறவு என்பது பொதுவாக நடக்கும் ஒன்றே. இச்சம்பவம் பற்றி முறைப்பாடு செய்வதற்கு இங்கே வரவேண்டாம். யாராவது சுட்டுக்கொல்லப்பட்டால் நாங்கள் அதைப் பதிவதற்குத் தயாராக இருக்கின்றோம்” என்று சொன்னார்கள்.

பாலியல் வல்லுறவு என்பது “பொதுவாக நடக்கும் ஒன்று” என்று வகைப்படுத்துவதன் ஊடாக, அக்குற்றச்செயலதும் மனித உரிமை மீறலதும் தீவிரத்தன்மையினை குறைத்துக் காட்டும் ஒரு செயற்பாடாகவே இவர்களது பதில் அமைந்திருந்தது.

1988 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி புன்னாலைக் கட்டுவன் வடக்கு, சிறீ துர்க்கா சனசமூக நிலையத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் ஒன்றில் அக்கிராமத்தின் 60 குடியிருப்பாளர்கள் கையொப்பமிட்டிருந் தார்கள். பாலியல் வல்லுறவுக்கு அல்லது துஸ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்ட அக்கிராமத்தைச் சேர்ந்த பல பெண்கள் பற்றிய ஒரு அறிக்கை உட்பட இந்தியப்படைகளால் இழைக்கப்பட்ட அநீதிகளை அவ் ஆவணம் கோடிட்டுக் காட்டியது.

படையினர் தமிழ்ப் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்துகின்றார்கள் என்ற ஊடகச் செய்திகளை யாழ்ப்பாண இந்திய இராணுவத் தலைமையகம் மறுத்தது. இவ்வறிக்கைகள் விஷத்தன்மையானதும் படையினரை கேவலப்படுத்துவதுமாக உள்ளது என அவர்கள் இதற்கு பதிலளித்தனர். மேலும்,

“பெண்களை போற்றுவது இந்திய கலாசாரத்தின் ஒரு உன்னதமான அம்சம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று எல்லா இலங்கை தமிழருக்கும் மதிப்பளித்து வரும் இந்திய படை வீரர்கள் இப்படி மோசமான குற்றச்செயல்களை புரிவார்கள் என்பது ஏற்க முடியாதது”, என்றும் கூறினார்கள். பெண்களுக்கு மதிப்பளிக்கும் இந்திய கலாசாரத்தை காட்டி இந்திய இராணுவம் பாலியல் வல்லுவுறவுக் குற்றச்சாட்டுகளை மறுக்க முயற்சிப்பதையே இது காட்டுகிறது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)






# கிளைமோர் தாக்குதலில் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட இருவர் படுகொலை 06.03.2008

கிளைமோர் தாக்குதலில் யாழ்ப்பாணம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் கொல்லப்பட்டார். 06.03.2008



யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் K.சிவநேசன், ஓமந்தை/புளியங்குளம் நுழைவாயில் ஊடாக வன்னியை கடந்த 30 நிமிடங்களில் ஏ-9 வீதியில் சிறீலங்கா இராணுவத்தின் ஆழ ஊடுருவல் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார். வியாழன். புளியங்குளம் மற்றும் மாங்குளம் பகுதிகளுக்கு இடையில் பிற்பகல் 1.20 மணியளவில் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றது. கொழும்பில் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு மல்லாவியில் உள்ள தனது இல்லத்திற்கு திரும்பிக் கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினரின் வாகனம் இலக்குவைக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் அவரது டிரைவரும் உயிரிழந்தார்.

வவுனியா செட்டிகுளத்தைச் சேர்ந்த திரு.சிவநேசனின் சாரதியான பெரியண்ணன் மகேஸ்வரராஜா (வயது 27) ஒரு பிள்ளையின் தந்தையாரே சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். சிவநேசன் எம்.பி படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

ஏ9 வீதியில் சைக்கிளில் பயணித்த குஞ்சுக்குழம் பகுதியைச் சேர்ந்த அருள்நாதன் லூஜித்நாதன் என்ற 11 வயது சிறுவனும் தாக்குதலில் காயமடைந்துள்ளார்.

1957 ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் திகதி பிறந்த கே. சிவநேசன், இலங்கை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர், 1996 மற்றும் 2004 க்கு இடையில், வடக்கு பிராந்திய பனை அபிவிருத்தி CO-OP சமூகத்தின் யூனி-கிளஸ்டரின் பொது முகாமையாளராக இருந்தார். யாழ்ப்பாணம் பனை அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் கணக்காளராகவும், வன்னி மல்லாவியில் உள்ள மக்கள் சங்க சம்மேளனத்தின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் நெல்லியடி மத்தியா மகா வித்தியாலயத்தின் முன்னாள் மாணவராவார்.















**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**



# முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதுகாப்பு வலய படுகொலை 04.03.2009

சிறீலங்கா இராணுவத்தின் "பாதுகாப்பு வலயத்தில்" கொலை வெறி தாக்குதலில், 73 பேர் கொல்லப்பட்டனர், 01.03.2009

முல்லைத்தீவு மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை "பாதுகாப்பு வலயத்திற்குள்" இருந்த மக்கள் மீது சிறீலங்கா இராணுவத் தினரின் தாக்குதலிலும், சிறீலங்கா விமானப்படையின் பீரங்கி குண்டுகள் மற்றும் விமானத் தாக்குதல்களில் குறைந்தது 73 பொதுமக்களின் உயிர்களை பலிகொண்டுள்ளதாக மருத்துவ மற்றும் உள்ளூர் உதவி ஊழியர்களின் விவரங்கள் தெரிவிக் கின்றன. மாவட்டம். 160க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயம் அடைந்துள்ளனர். கடந்த 3 நாட்களில் சுமார் 35 கிளஸ்டர் பொருத்தப்பட்ட பீரங்கி குண்டுகள் வீசப்பட்டன. செவ்வாய்க் கிழமை மட்டும் 15 கிளஸ்டர் குண்டுகள் பொதுமக்கள் பகுதிகளில் வீசப்பட்டன. 10 வயதுக்குட்பட்ட 11 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர், காலை 4, இரவு 5 மற்றும் காலையில் காணாமல் போன இரண்டு குழந்தைகளில் ஒன்று குழந்தை யின் தாய் அதன் தலையின் ஒரு பகுதியை மீட்டதால் பின்னர் அடையாளம் காணப்பட்டது. மாத்தளன் மருத்துவமனை, காயம் பட்ட தங்கள் குழந்தைகளை மரணத்திலிருந்து காப் பாற்றும்படி மருத்துவர்களிடம் மன்றாடி அழுதுகொண்டிருந்த தாய்மார்களால் நிறைந்திருந்தது.

சமீபத்தில், ஒரு பெண் பொக்கனையிலிருந்து மாத்தளன் மருத் துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார், அவரது காலில் வெடிக்காத நிலையில் ஒரு கொத்து குண்டுடன், மருத்துவர் களின் கூற்றுப்படி, அவரது உயிரைக் காப்பாற்ற அவரது காலை துண்டிக்க வேண்டியிருந்தது.

கொத்து வெடிகளில் பல குழந்தைகள் காயம் அடைந்துள்ளனர். ஒரு பீரங்கி ஷெல் அல்லது மோட்டார் ஷெல் போன்ற வெடிப் பைக் காட்டிலும் வித்தியாசமான வெடிப்புச் சத்தத்தைக் கேட்கும் போது, சத்தம் போன்ற வானவேடிக்கைகளுடன் ஒரு சிலந்தி போன்ற வெடிப்பு மாதிரியைக் கேட்கும் போது, மக்கள் கொத்து வெடிப்புகளை அடையாளம் கண்டுகொள்கிறார்கள்.

மாத்தலான் பகுதியில் 33 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் குறைந்தது 16 பேர் தற்காலிக மருத்துவமனைக்கு அருகில் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் நான்கு பேர் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகள். அவர்கள் 1 வயது ஐ. நிலக்சன், 6 வயது ஆர். நிஷாந்தன், 9 வயதுடைய என். கஸ்தூரி மற்றும் 10 வயதுடைய ஆர். திரேசன் என அடையாளம் காணப் பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் குமிழமுனை பாடசாலையின் ஆசி ரியை மொஹான் தர்ஷிகாவும் அடங்குவார்.

செவ்வாய்க்கிழமை காயல் பகுதிக்கு அருகில் உள்ள பொக்கனி பகுதியில் குறைந்தது 15 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.



இரணைப்பாலையில் 18க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப் பட்டனர்.

முளிவாய்க்காலில் குறைந்தது 4 பொதுமக்கள் கொல்லப் பட்டனர்.

விமானப்படையின் குண்டுவீச்சுக்காரர்கள் காலை சாலை யையும் மாலை 4:30 மணியளவில் இரணைப்பாலையையும் தாக்கினர். "டோறாப்படகு" மீனவர்கள் மீது திடீரெனத் தாக்குதல் நடத்தப்பட்டது.

# முல்லைத்தீவு பொக்கனை மற்றும் மாத்தளன் பாதுகாப்பு வலயப் படுகொலை - 04.03.2009

சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் "பாதுகாப்பு மண்டலத்தில்" அதிகமான குழந்தைகள் கொல்லப்பட்டனர்.

சிறீலங்கா இராணுவம் புதன்கிழமை "பாதுகாப்பு வலயத் திற்குள்" பீரங்கித் தாக்குதலில் 78 பொதுமக்கள் கொல்லப் பட்டனர். பாதிக்கப்பட்டவர்களில் 21 பேர் குழந்தைகள் என்று பல்வேறு குடியிருப்புகளில் இருந்து வெளிவரும் விவரங்கள் தெரிவிக்கின்றன. காலை 5:30 மணி முதல் 9:00 மணி வரை யிலும், மாலை 5:00 மணி முதல் 9:00 மணி வரையிலும் 47 பேர் பீரங்கித் தாக்குதல்களில் 23 பொதுமக்கள் கொல்லப் பட்டனர். 182 பொதுமக்கள் காயம் அடைந்துள்ளனர். பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பொக்கனை மற்றும் மாத்தளனில் அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. காய மடைந்த பொதுமக்களை ICRC கப்பலுக்கு ஏற்றிச் சென்று தனது தார்ப்பாலின் கூடாரத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்த ICRC ஊழியர் ஒருவர் பொக்கனாயில் கொல்லப்பட்டார். பலியானவர்களில் கர்ப்பிணித் தாயும் அடங்குவார்.

காலை 5:30 மணி முதல் 6:45 மணி வரை நடந்த சரமாரி தாக் குதலில் 6 பொதுமக்கள் பொக்கனாயில் கொல்லப்பட்டதுடன், 11 பேர் காயம் அடைந்தனர், கொல்லப்பட்டவர்களில் ஒரு குழந் தையும் உள்ளது. ICRC ஊழியர் உட்பட 19 பொதுமக்கள்



மாலையில் கொல்லப்பட்டனர் மேலும் 69 பேர் கண்மூடித் தனமான பீரங்கித் தாக்குதலில் காயமடைந்தனர்.

மாலை 5:00 மணி முதல் 9:00 மணி வரையிலான ஷெல் தாக் குதலில் மாத்தளனில் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும்



9 பேர் காயமடைந்தனர். மாலையில் 19 பொதுமக்கள் கொல்லப் பட்டனர் மற்றும் 37 பேர் காயமடைந்தனர்.

முள்ளிவாய்க்கால் இரட்டைவாய்க்காலில் இரவு 7.00 மணிக் குள் 10 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மற்றும் 7:40 மாலை 56 பொதுமக்கள் காயமடைந்தனர்.

இரணைப்பாலை, பாதுகாப்பான வலயத்திற்கு வெளியே, காலையில் 4 குழந்தைகள் உட்பட 13 பொதுமக்கள் கொல்லப் பட்டனர் மற்றும் மாலையில் மேலும் 10 பேர் கொல்லப்பட்டனர், 51 பேர் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயப் படுகொலை 07.03.2009

கடந்த 72 மணி நேரத்தில் 208 பொதுமக்கள் கொல்லப் பட்டனர். 07.04.2009

இலங்கை இராணுவம் பீரங்கி பொருத்தப்பட்ட கொத்துக் குண்டுகள் "பாதுகாப்பு வலயத்திற்குள்" பல IDP குடியிருப் புகளைத் தாக்கியது, சனிக்கிழமை பிற்பகல் 3:00 மணி வரை குறைந்தது 53 பொதுமக்களின் உயிர்களைக் கொன்றது. சுமார் 112 பொதுமக்கள் காயம் அடைந்தனர். வெள்ளிக்கிழமை, 86 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 100 க்கும் மேற்பட்ட பொது மக்கள் காயமடைந்தனர். ஷெல் தாக்குதல் தொடர்ந்த தால் இறந்த உடல்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட வில்லை. பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பதுங்கு குழிகளுக்குள்ளேயே இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வியாழன் அன்று கண்மூடித்தனமான ஷெல் மற்றும் இலங்கை விமானப்படையின் குண்டுத் தாக் குதல்களில் 69 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். கடந்த 3 நாட் களில் 330க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

கொத்துக் குண்டுகளுடன் கூடிய பீரங்கி குண்டுகள் சனிக் கிழமை அம்பலவன்பொக்கனி மற்றும் மாத்தாளன் வெடித்தன. பீரங்கி குண்டுகள் சில பதுங்கு குழிகளைத் தாக்கி பதுங்கு குழிகளுக்குள் இருந்த பொதுமக்களைக் கொன்றன. முள்ளி வாய்க்கால் மற்றும் இரட்டைவாய்க்கால் மீது குண்டுகள் வீசப் பட்டன. இரணைப்பாலை, "பாதுகாப்பு வலயத்திற்கு" வெளியே தொடர்ந்து சரமாரியாக தாக்கப்படுகிறது. இரணைப்பாலையில் இருந்து உயிரிழப்பு விவரங்கள் கிடைக்கவில்லை.

சனிக்கிழமையன்று, மருத்துவமனையிலிருந்து 500 மீட்டர் தொலைவில் குண்டுகள் வெடித்தன. மாத்தளனுக்கும் அம் பலவன்பொக்கனைக்கும் இடைப்பட்ட இடத்தில் மனிதாபி மானப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக GS (கிராம அதிகாரி) அவர்களிடம் பதிவு செய்யக் காத்திருந்த பொது மக்களில் இருவர் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

வியாழன் அன்று ஜரானைப்பாலை அனந்தபுரத்தில் விமானப் படையின் குண்டுவீச்சு மற்றும் ஞடுயு ஷெல் தாக்குதல்களில் 31 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இரண்டு குண்டுவீச்சுகள் நாள் முழுவதும் இரண்டு சுற்றுகளில் 8 முறை கைவிடப்பட்டன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வெளியிடப் படும் ஈழநாதம் நாளிதழின் முல்லைத்தீவு மாவட்ட விநியோக முகாமையாளர் சசி மாதன், 27, அனந்தபுரத்தில் கொல்லப் பட்டவர்களில் ஒருவர். இவர் முள்ளியவலையைச் சேர்ந்தவர்.

வலைஞர்மடத்தில் அரசாங்க வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்த பகுதியை குறிவைத்து சிறீலங்கா இராணுவத்தினர் ஷெல் தாக்குதல் நடத்தியதில் வியாழக்கிழமை நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.



வியாழன் அன்று பொக்கனாய் பகுதியில் வெடிகுண்டு வெடித்ததில் மேலும் 4 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

வியாழக்கிழமை முல்லிவாய்க்கால் உட்பட எஞ்சிய இடங்களில் சுமார் 30 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

வியாழன் அன்று சாலையில் இருந்து நீண்ட தூர இயந்திரத் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி சிறீலங்கா இராணுவத்தினர் கடலுக்குள் சுட்டது. தகவலறிந்த ஆதாரங்களின்படி, குறைந்தது ஒரு புல்லட் ICRC கப்பலைத் தாக்கியது.

# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத் தாக்குதல் 07.03.2009








# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயப் படுகொலை 11.03.2009

11.03.2009 செவ்வாயன்று சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் 49 குழந்தைகள் உட்பட 133 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

செவ்வாயன்று சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் "பாதுகாப்பான வலயத்திற்குள்" கொல்லப்பட்ட 133 பொதுமக்களில் 49 க்கும் மேற்பட்டவர்கள் குழந்தைகள் மற்றும் அவர்களில் 16 பேர் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகள். கொலைக்களமாக மாறியுள்ள "பாதுகாப்பான வலயத்திற்குள்" தங்குமிடமின்றி தவித்த பொதுமக்களுக்கு எதிராக சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகள் மற்றும் தீக் குண்டுகளை சிறீலங்கா சிங்கள இராணுவம் நிலைநிறுத்தியதாக வன்னியிலிருந்து தமிழ்நெட் செய்தியாளர் தெரிவிக்கிறார். ஒரு GS (கிராம அதிகாரி) மற்றும் ICRC தொழிலாளி உட்பட 273 பொதுமக்கள் செவ்வாயன்று காயமடைந்தனர். பொதுமக்களில் 47 பேர் காயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலோ அல்லது அனுமதிக்கப்பட்ட பின்பும் உயிரிழந்தனர்.

மனிதாபிமான பொருட்களைப் பெறுவதற்காக கிராம அதிகாரியிடம் (GS) தங்களைப் பதிவு செய்ய வரிசையில் காத்திருந்த மூன்று பொதுமக்கள் மாத்தளனில் கொல்லப்பட்டனர். கிராம அலுவலர் திரு.புலேந்திரன் காயம் அடைந்தார்.

கொல்லப்பட்ட பொதுமக்களில் தர்மபுரம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வி. வனிதா என்ற ஆசிரியையும் அடங்குவார். இதில் காயமடைந்த ICRC ஊழியர் வி. வின்சென்ட் அவர்கள்.

Multi-Barrel Rocket Launcher (MBRL) ராக்கெட் வெடிப்பில் சுமார் 300 தார்ப்பாய் குடிசைகள் எரிந்து சாம்பலாயின. வலைஞர்மடத்தில் உள்ள மெடிக்கல் ஸ்டோர் எறிகணை வீச்சில் சேதம் அடைந்ததுடன், மருத்துவக் கடைக்கு அருகில் உள்ள தங்குமிடத்திற்குள் இருந்த மருத்துவர் சிற்றம்பலத்தின் மகன் கொல்லப்பட்டார்.



# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயப் படுகொலை 12.03.2009

12.03.2009 புதனன்று "பாதுகாப்பு மண்டலத்திற்குள்" சிறீலங்கா இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலில் 82 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

முல்லைத்தீவு மருத்துவ அத்தியட்சகர் வி.சண்முகராஜா புதன்கிழமை சிறீலங்கா இராணுவத்திடம் இருந்து பல்குழல் ரொக்கெட் லாஞ்சர் (MBRL) குண்டுகளால் "பாதுகாப்பான வலயத்திற்குள்" முள்ளிவாய்க்காலைத் தாக்கியதுடன், நீண்ட தூர துப்பாக்கிச் சூட்டில் 7 வயது குழந்தை உயிரிழந்தது. மாத்தலானில் உள்ள உள்நாட்டு நீர்நிலைகளுக்கு அருகில். மொத்தத்தில், 82 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 130 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மனிதாபிமானப் பொருட்களைப் பெற வரிசையில் காத்திருந்த பொதுமக்கள் MBRL மற்றும் பீரங்கித் தாக்குதலால் பாதிக்கப்பட்டனர். 500-க்கும் மேற்பட்ட நோயாளிகள் அடைக்கலம் மற்றும் மருத்துவ சிகிச்சையின்றி கடும் மழைக்கு மத்தியில் போராடி வருகின்றனர்.

உள்நாட்டு கடல் வழியாக நீண்ட தூரம் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் நான்கு பொதுமக்கள் காயமடைந்தனர்.

எஸ்.எல்.ஏ.வின் MBRL தீ, வலைஞர்மடம் மற்றும் முள்ளிவாய்க்கால் குடியிருப்புகளை குறிவைத்தது. முள்ளிவாய்க்காலில் குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 43 பேர் காயமடைந்தனர்.

பொக்கனை - வலைஞர்மடத்திற்கு இடையில் நள்ளிரவில் 13 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை வரை, மார்ச் மாதத்தின் முதல் பத்து நாட்களுக்குள், புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனையில் 964 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் (RDHS) தெரிவித்தார்.

"கிட்டத்தட்ட அனைத்து வழக்குகளும் தீவிர ஷெல் தாக்குதலுக்கு ஆளானவை. ஒரு சிலர் வான்வழித் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் பாதிக்கப்பட்டவர்கள். பாதிக்கப்பட்டவர்களில் 95% க்கும் அதிகமானோர் பாதுகாப்பான பகுதியைச் சேர்ந்தவர்கள் மற்றும் 40 குழந்தைகள் மற்றும் 79 பெரியவர்கள் இறந்தனர். மருத்துவமனையில் அல்லது சிகிச்சையின் போது அல்லது சிகிச்சைக்குப் பிறகு," என்று RDHS புதன்கிழமை கூறியது,







JATHU
KITCHEN & RENOVATION
உங்கள் கனவுகளை
அடைய நாங்கள்
உதவுகிறோம்..
வீடு சீரமைப்பு
சேவைகளுக்கு
அழையுங்கள்
Custom Kitchen
Kitchen Counter Top
Kitchen Cabinets
Plumbing
Washroom Full Work
Electrical
Pot Light
Painting
Ground Moulding
Basement
Flooring
Free! ESTIMATES
Stairs
Tiles
Windows
Garage Door
Patio Door
Carpet
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Free
Estimate!
Call today
$50 OFF
Broken Glass...? (Door & Windows)
We will fix it within 24 hour.
Let us help with...
• Replacement (Door & Windows)
• Custom Door & Windows
• Front Door & Patio Door
• Garden Door
• Door & Windows Re-Caulking (Important)
• Painting Doors & Windows
• Basement Separate Entrance Door
• Home Painting
• Spotlights installation
• California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com



# தொல்லியல் சுவடுகள்...

# மன்னார் நானாட்டானில் கிடைத்த பண்டைய நாணயங்கள் தமிழகப் பாண்டியருக்கு உரியதா?



18.09.2020 அன்று மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் சந்திக்கு அருகில் உள்ள வடக்கு வீதி என்ற இடத்தில் வீடு கட்டுவதற்காக குழிகள் வெட்டியபோது ஒரு குழியில் காணப்பட்ட பானையில் இருந்து 1904 நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டது என்ற செய்தி 25.09.2020 அன்றிலிருந்து ஊடகங்களில் முக்கிய செய்தியாக காணப்பட்டது. இந்நாணயங்களை அச்சத்துடன் பார்த்த அக்கிராம மக்கள் பூதம் பாதுகாத்து வந்த இந்நாணயங்களை வீட்டில் வைத்திருப்பது ஆபத்து என கூறியதால் அவற்றால் அச்சமடைந்த நானாட்டான் பிரதேச சபையின் உபதவிசாளர் திரு.புவனம் அவர்கள் அந்நாணயங்கள் அனைத்தையும் முருங்கன் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்திருந்தார். அந்நாணயங்கள் நீதிமன்றத்தின் ஊடாக இலங்கைத் தொல்லியற் திணைக்களத்திடம் ஒப்படைக்க இருப்பதாக அறிந்தோம்.



வடஇலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான நாணயங்கள் முதன் முறையாக ஒரேயிடத்தில் கிடைத்திருப்பதால் அந்நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தையாவது பார்ப்போம் என்ற ஆவலில் மன்னார் மாவட்ட கௌரவ பாராளமன்ற உறுப்பினர் திரு.சாள்ஸ் அன்ரனி மற்றும் நானாட்டான் பிரதேச சபையின் உபதவிசாளர் திரு.புவனம் அவர்களுடன் தொடர்பு கொண்ட போது அவர்கள் உரிய இடத்தைப் பார்வையிடுவதற்கான சகல வசதிகளையும் ஏற்படுத்தி தந்தனர். இக்களவாய்வில் எனது மாணவர்களும் தொல்லியல் ஆய்வு உத்தியோகத்தர்களுமான திரு. கபிலன், மணிமாறன், தசிந்தன், கிரிகரன் ஆகியோருடன் நானாட்டான் பிரதேச செயலாளர் திரு.சிறிஸ்கந்தகுமார், நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் ஜொனி, மதகுரு அருண் புஸ்பராஜ், அக்கிராமத்து இளைஞர்களான திரு.செல்வம், கணேஸ் மற்றும் ஜெயசீலன் ஆகியோரும் எம்முடன் இணைந்து ஆர்வத்துடன் பங்கெடுத்தமை மகிழ்ச்சியளிப்பதாக இருந்தது.



நானாட்டானில் கிடைத்த நாணய வகைகள்

நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் பல குழிகள் தோண்டப்பட்டிருந்தன. ஆனால் அக்குழிகள் எவற்றிலுமே புராதன குடியிருப்புக்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படவில்லை. மாறாக இக்குழிகளில் காணப்படும் களிமண் அருகிலுள்ள காணிகளின் மண்ணின் நிறத்தில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாக காணப்படுகின்றது. இது பற்றி வீட்டு உரிமையாளரிடம் கேட்டபோது இற்றைக்குப் 15 ஆண்டுகளுக்கு முன்னர் இம்மண்ணை அருகில் உள்ள குளத்தில் இருந்து கொண்டு வந்து கொட்டியதாகக் கூறினார். இதனால் இங்கு பானையோடு கிடைத்த நாணயங்கள் குளத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மண்ணோடு வந்தவை என்பது உறுதியாகத் தெரிகின்றது. இந்நாணயங்களில் மீன் சின்னங்களும், வாளும் பொறிக்கப்பட்டுள்ளதால் இவை பாண்டியர் முடியாட்சிக்குரிய நாணயங்கள் என ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருந்தன. தென்னிலங்கை ஊடகங்களில் இவை அநுராதபுர இராசதானிகால நாணயங்கள் என செய்திகள் வெளிவந்திருந்ததையும் அறிந்தோம். இந்நாணயங்கள் அனைத்தையும் நேரில் பார்வையிட எமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆயினும் முருங்கன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நானாட்டான் பாடசாலை ஒன்றில் காட்சிக்கு வைப்பதற்காக கொடுத்த நாணயங்களையும், களவாய்வின் போது எமக்கு கிடைத்த இரு நாணயங்களையும், ஊடகங்களில் வெளிவந்த நாணயங்களின் புகைப்படங்களையும் வைத்துப் பார்த்த போது இந்நாணயங்களின் முன்பக்கத்தில் மூன்று கோடுகளால் வடிவமைக்கப்பட்ட பீடத்தின் மேல் இடப்பக்கமாக அல்லது வலப்பக்கமாக பார்த்த நிலையில் படுத்திருக்கும் நந்தியின் உருவமும், இதற்கு இரு புறத்திலும் குத்துவிளக்கும், நந்தியின் தலைக்கு மேல் பிறைச் சந்திரனும், நாணய விளிம்பினை ஒட்டி சிறு புள்ளிகளும் காணப்பட்டன. நாணயத்தின் பின்பக்கத்தில் பீடத்தின் மேல் கிடையாக அல்லது நேராக இரண்டு மீன் சின்னங்களும் இவற்றின் இரு புறத்திலும் குத்துவிளக்கும், விளிம்பை ஒட்டி பிறைச் சந்திரனும், சிறு புள்ளிகளும் காணப்பட்டன. ஆயினும் நாணயங்களின், அளவு, நிறை, வடிவமைப்பு, அழகு, தெளிவு என்பவற்றில் வேறுபாடுகள் இருப்பதை அவதானிக்க முடிந்தது.







இவ்வகையான நாணயங்கள் இலங்கையில் சிறப்பாக வடஇலங்கையில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அவற்றைப் பிரின்செப் (1858), எலியட் (1858), கொட்றிங்ரன் (1924), டுல்பே(1966), மிச்செனர்(1998) முதலான நாணயவியல் அறிஞர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளனர். சேயோன் என்ற நிலவியலாளர் வடஇலங்கையில் மாதோட்டம், மன்னார், கந்தரோடை முதலான இடங்களில் இருந்து நூற்றுக்கணக்கான இவ்வகை நாணயங்களைக் கண்டுபிடித்து 1982 இல் வெளியிடப்பட்ட தனது இலங்கையின் பண்டைய கால நாணயங்கள் என்ற நூலில் ஆவணப்படுத்தியுள்ளார். 1997 களில் பேராசிரியர் கிருஸ்ணராஜா கந்தரோடையில் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்விலும் இவ்வகை நாணயங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1990 களில் இருந்து வடஇலங்கையில் மேற்கொள்ளப்பட்ட எமது தொல்லியல் மேலாய்வின் போது பூநகரி, ஈழவூர், மாதோட்டம், உடுத்துறை, இயற்றாலை, கட்டுக்கரை முதலான இடங்களிலும் இவ்வகை நாணயங்கள் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. இக்கண்டுபிடிப்புக்களின் தொடர்ச்சியாக நானாட்டானில் கிடைத்த நாணயங்கள் காணப்பட்டாலும் அவை வகையிலும், தொகையிலும் அதிகமாக இருப்பதால் வடஇலங்கையின் வரலாறு பற்றிய எதிர்கால ஆய்வில் இந்நாணயங்கள் அதிக முக்கியத்துவம் பெற இடமுண்டு என்பதில் ஐயமில்லை.

பொதுவாக பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னர் அதாவது யாழ்ப்பாண அரசின் தோற்றத்திற்கு முன்னர் இலங்கையில் புழக்கத்தில் இருந்த தமிழ் நாணயங்கள் தமிழகத்துடனான அரசியல் வாணிபத் தொடர்பால் வந்தவை என்றே கூறப்பட்டு



இலங்கைத் தமிழர் நாணயம்



சிங்கள மன்னர் நாணயம்

வந்துள்ளது. இதற்கு, யாழ்ப்பாண அரசின் தோற்றத்தின் பின்னரே இலங்கைத் தமிழரிடம் நாணயங்களை வெளியிடும் மரபு தோன்றியது என்ற நம்பிக்கை முக்கிய காரணமாகும். ஆனால் இலங்கையின் சமகாலத் தொல்லியல் கண்டுபிடிப்புக்களில், சங்க காலத்தின் சமகாலத்தில் இருந்து தமிழகத்தைப் போல் இலங்கைத் தமிழரிடமும் நாணயங்களை வெளியிடும் மரபு தோன்றி வளர்ந்ததற்கு உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.



மீன் சின்னங்கள் பொறித்த வட இலங்கை நாணயங்கள்

நானாட்டானில் கண்டுபிடிக்கப்பட்ட நாணய வகைகளை பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து ஆய்வு செய்த அறிஞர்கள் பலரும் அந்நாணயங்கள் வடஇலங்கையில் கிடைத்ததாகவே கூறுகின்றனர். இவற்றின் எண்ணிக்கை யாழ்ப்பாண அரசு காலத்தில் வெளியிடப்பட்ட சேது மொழி பொறித்த நாணயங்களின் எண்ணிக்கையை விடப் பல மடங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. வடஇலங்கைக்கு வெளியே இவ்வகை நாணயங்கள் மிக அரிதாக அநுராதபுரத்திலும், அக்குறுகொட என்ற இடத்திலும் கிடைத்துள்ளன. தமிழ் நாடு, சென்னை அருங்காட்சியகத்தில் இவ்வகையான நான்கு நாணயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும் அவையும் யாழ்ப்பாணத்தில் இருந்தே பிற்காலத்தில் பெறப்பட்டதாக கூறப்படுகின்றது. இதனால் நானாட்டானில் கிடைத்த நாணய வகைகளை வடஇலங்கையில் இருந்த அரசோடும், ஆட்சி செய்த அரசர்களோடும் தொடர்புபடுத்திப் பார்ப்பதே பொருத்தமாகும். இந்நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள சிற்பங்கள், சின்னங்கள், குறியீடுகள் முதலியன இந்து மதத்தை, சிறப்பாக சைவ சமயத்தைப் பிரதிபலிப்பதால் இந்நாணயங்களை வெளியிட்ட அரசின் மதமாக இந்து மதம் இருந்துள்ளதெனக் கூறலாம்.

இதுவரைகாலமும் இந்நாணயங்களை ஆய்வு செய்த நாணயவியல் அறிஞர்களில் ஒருசாரார், நாணயங்களில் மீன் சின்னங்கள் காணப்படுவதால் இவை பாண்டியரால் வெளியிடப்பட்டு தமிழகத் தொடர்பால் இலங்கைக்கு வந்ததாகக் கூறுகின்றனர். இன்னொரு சாரார், இலங்கையில் பாண்டியர் ஆட்சி இருந்ததன் அடையாளமாக இந்நாணயங்களை வெளியிட்டிருக்கலாம் எனக் கூறுகின்றனர். வேறு சிலர் வடஇலங்கையில் கிடைத்த நாணயங்கள் சமகாலத்தில் தமிழகத்தில் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களில் இருந்து சில தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருப்பதால் இவற்றைப் பாண்டியர் வட இலங்கைக்கென வெளியிடப்பட்ட தனித்துவமான நாணயங்கள் எனக் கருதுகின்றனர். ஆயினும் இக்கருத்துக்கள் பொருத்தப்பாடாகத் தோன்றவில்லை. காரணம் தமிழகத்தில் சங்ககாலம் தொட்டு வெளியிடப்பட்ட நாணயங்கள் சமகாலத்தில் இலங்கையில் பெரும்பாலும் புழக்கத்தில் இருந்துள்ளதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால் வடஇலங்கையில் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ள மீன் சின்னங்கள் பொறித்த ஒரு நாணயமாவது தமிழக ஆய்வுகளில் கிடைத்ததாகத் தெரியவில்லை. இவை தமிழகத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களாக இருந்தால் வடஇலங்கையைக் காட்டிலும் தமிழகத்திலேயே அதிக எண்ணிக்கையில் கிடைத்திருக்க வேண்டும். ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற் றாண்டு வரை பாண்டியர் இலங்கை மீது பல தடவைகள் படையெடுத்ததற்குப் பாளி இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. இப்படையெடுப்புக்கள் மூலம் சோழரைப் போல் பாண்டியர் ஆட்சி இலங்கையில் ஏற்பட்டதற்கு எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை. மாறாக இப்படையெடுப்புக்கள் மூலம் இலங்கை மன்னர்களிடம் பாண்டியர் திறைபெற்றதற்கே சான்றுகள் காணப்படுகின்றன. இதனால் இலங்கையில் பாண்டியர் ஆட்சி இருந்ததன் அடையாளமாக இந்நாணயங்கள் வெளியிடப்பட்டன எனக் கூறுவது ஏற்புடையதாகத் தோன்றவில்லை. வடஇலங்கையில் கிடைத்த மீன் சின்னங்கள் பொறித்த நாணயங்கள் தனித்துவமானது என்பதில் நாணயவியல் அறிஞர்களிடையே மாற்றுக் கருத்

**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.**

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு**

**தொடர்புகளுக்கு 437.345.4203**




# வட இலங்கையில் வரலாற்றுத் தொடக்க காலம் தொட்டு கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை வெளியிடப்பட்ட காளை உருவம் (நந்தி) பொறித்த நாணயங்கள்

துக்கள் காணப்படவில்லை. அத்தனித்துவம் பாண்டியருக்குரியதல்ல. மாறாக இலங்கையில் தமிழ், சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் காணப்படும் தனித்துவமான அம்சமாகப் பார்ப்பதே பொருத்தமாகும்.

இலங்கையில் நாணயங்களை வெளியிடும் மரபு தோன்றுவதற்கு இந்தியத் தொடர்பு முக்கிய காரணமாக இருந்தாலும், பண்டுதொட்டு இலங்கையில் தமிழ், சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் சில தனித்துவமான அம்சங்கள் காணப்படுகின்றன. தமிழகத்தில் சங்ககாலப் பாண்டியர் வெளியிட்ட சதுரவடிவிலான நாணயங்களில் முன்பக்கத்தில் நிற்கும் நிலையில் காளையின் உருவமும், நாணயத்தின் பின்பக்கத்தில் பாண்டியரின் அரச இலட்சனையான மீன் சின்னமும் காணப்படுகின்றன. சமகாலத்தில் இலங்கையில் வெளியிடப்பட்ட சதுர நாணயங்களின் முன்பக்கத்தில் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களில் உள்ளதைப் போன்ற காளை உருவம் இடம் பெற்றாலும் நாணயத்தின் பின்பக்கத்தில் பாண்டியரின் மீன் சின்னத்திற்குப் பதிலாக ஒரு வட்டமும் வட்டத்திற்குள் மூன்று அல்லது நான்கு சிறு புள்ளிகளும் காணப்படுகின்றன. இச்சின்னங்களே சற்றுப் பிற்பட்ட காலத்தில் சிங்கள மன்னர்கள் வெளியிட்ட சதுரவடிவிலான நாணயங்களின் பின்பக்கத்திலும் காணப்படுகின்றன. ஆனால் நாணயங்களின் முன்பக்கத்தில் காளைக்குப் பதிலாக சிங்கள மன்னர் வெளியிட்ட நாணயங்களில் சிங்கம் முக்கிய இலட்சனையாக இடம்பெற்றுள்ளது. இவற்றில் இருந்து சிங்கள மன்னர்கள் சிங்கத்தையும், தமிழர்கள் காளையையும் (நந்தி) தமது அரச இலட்சனையாகக் கொண்டு ஆட்சி செய்துள்ளனர் எனத் தெரியவருகிறது. இம்மரபு பிற்காலத்திலும் தொடர்ந்துள்ளது. நாணயங்களின் பின்பக்கத்தில் உள்ள சின்னங்களில் காணப்படும் ஒற்றுமை அநுராதபுர அரசை அல்லது நாட்டைக் குறித்திருக்கலாம்.

கிபி. 6 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழகத்தில் பாண்டியர் வெளியிட்ட சதுர வடிவிலான நாணயங்களில் அவர்களின் அரச இலட்சனையான மீன் சின்னம் கோட்டுருவில் பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் கிடைத்த சதுர நாணயங்களில் அவை முழு உருவமாகவே பொறிக்கப்பட்டுள்ளது. இந்த வேறுபாடு வடஇலங்கையில் கிடைத்த மீன் சின்னங்கள் பொறித்த நாணயங்களிலும் காணப்படுகின்றன.

நானாட்டானில் கிடைத்த நாணய வகைகளில் மூன்று கோடுகளால் அமைந்த பீடத்தின் மேலேயே நந்தியும், மீன் சின்னங்களும் காணப்படுகின்றன. இந்த அம்சம் சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் பௌத்த சின்னங்களை வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது இலங்கை நாணய மரபுக்குரிய தனித்துவமான அம்சமாகும். இந்த அம்சத்தை தமிழக நாணயங்களிலோ அல்லது இந்திய நாணயங்களிலோ காணமுடியவில்லை. பாண்டியர் இன்னொரு நாட்டை வெற்றி கொண்டு ஆட்சி செய்யும் போது தாம் வெளியிட்ட நாணயங்களில் தமது அரச இலட்சனையான மீனையே பொறித்தனர். ஆனால் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் புதிய அரசைத் தோற்றுவித்த பாண்டியரின் படைத்தளபதிகளான ஆரியச் சக்கரவர்த்திகள் மீனுக்குப் பதிலாக நந்தியையே அரச இலட்சனையாக நாணயங்களிலும், அரச கொடிகளிலும், அரச ஆவணங்களிலும் பயன்படுத்தினர். இதற்கு, யாழ்ப்பாண அரசிற்கு முன்னோடியாக நந்தியை அரச இலட்சனையாகக் கொண்ட தமிழ் அரசு வடஇலங்கையில் இருந்தது காரணம் எனலாம். ஆயினும் யாழ்ப்பாண இராசதானிக்கு முற்பட்ட நாணயங்களில் நந்தியின் வடிவம் மூன்று கோடுகளாலால் அமைந்த பீடத்திற்கு மேல் காணப்படுகின்றது. ஆனால் யாழ்ப்பாண இராசதானி கால நாணயங்களில் பீடத்திற்குப் பதிலாக சேது என்ற மங்கல மொழி பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் யாழ்ப்பாண இராசதானியை முதலில் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் தமிழ் நாடு, இராமேச்வரம் சேது தலத்துடன் தமக்குள்ள தொடர்பை அடையாளப் படுத்திக் கொண்டனர் எனக் கூறலாம்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பொலநறுவை இராசதானியில் கலிங்கமாகன் ஆட்சியால் வெறுப்படைந்த சிங்கள மக்களும், சிங்கள அரசும் தெற்கு நோக்கி நகர்ந்த போது வடக்கே தமிழருக்குச் சார்பான அரசு கலிங்கமாகன், சாவகன் தலைமையில் தோன்றியதாகப் பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வரசின் படைகள், பாதுகாப்பு அரண்கள் திருகோணமலை, கந்தளாய், பதவியா, குருந்தன் குளம், கோணாவில், மன்னார், மாதோட்டம், இலுப்பைக் கடவை, காக்கதீவு, ஊர்காவற்துறை, வலிகாமம் முதலான இடங்களில் நிலை கொண்டிருந்ததாக இவ்விலக்கியங்கள் மேலும் கூறுகின்றன. இதைச் சமகாலத்திற்குரிய பாண்டியரது கல்வெட்டும் உறுதி செய்கின்றது. இவ்வாதாரங்களை வைத்துப் பார்க்கும் போது மன்னார் நானாட்டனிலும், வடஇலங்கையின் ஏனைய வட்டாரங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட நந்தி, மீன் சின்னங்கள் பொறித்த நாணயங்கள் யாழ்ப்பாண அரசுக்கு முன்னோடியாக வடஇலங்கையில் நந்தியை அரச இலட்சனையாகக் கொண்டு ஆட்சிபுரிந்த தமிழ் அரசால் வெளியிடப்பட்டவை எனக் கூறுவதே பொருத்தமாகும்.

குறிப்பு

ஆதிகால, இடைக்கால இலங்கையில் புழக்கத்தில் இருந்த தமிழ் நாணயங்களின் முன்பக்கத்தில் நந்தியும், நாணயங்களின் பின்பக்கத்தில் மீன் வடிவங்களும் முக்கிய சின்னங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் நந்தியின் வடிவம் அரச இலட்சனையையும், மீன் சின்னங்கள் மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் கடல்சார் தொடர்புகள் பெற்றிருந்த முக்கியத் துவத்தையும் பிரதிபலிப்பதாக இருக்கலாம். மூன்று ஆண்டுகள் தமிழகத்தில் தங்கியிருந்த காலப்பகுதியில் அங்குள்ள அருங் காட்சியங்கள் பலவற்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நாணயங் களையும், தனிநபர்களின் சேகரிப்பிலுள்ள நாணயங்களையும் நேரில் பார்வையிட்டு ஆராயும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஆனால் இலங்கையில் கிடைத்துள்ள மேற்கூறப்பட்ட சின் னங்கள் கொண்ட நாணயங்களை அங்கு காணமுடிய வில்லை. கடந்த முப்பது ஆண்டுகளுக்குமேல் தமிழகத்தின் குக் கிராமங்களுக்கெல்லாம் சென்று நாணயங்களைச் சேகரித்து பதினைந்துக்கு மேற்பட்டநூல்களையும், நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்ட தஞ்சாவூர் அளக்குடி ஆறுமுகம் சீதாராமனுடம் பல தடவைகள் இலங்கையில் கிடைத்து வரும் நாணயங்கள் பற்றி கலந்துரையாட முடிந்தது. அவர் நந்தியும், மீன் சின்னமும்பொறித்த நாணயங்களின் வடிவமைப்பும், அவற்றின் கலைமரபு, தொழில்நுட்பத் திறன், அழகு என்பவற்றை தமிழக நாணய மரபிற்கு அந்நியமானவை என்றே உறுதிபடக் கூறுகின்றார். ஆகவே யாழ்ப்பாண இராசதானிக்கு முன்னர் இலங்கையில் புழக்கத்தில் இருந்த தமிழ் நாணயங்கள் அனைத்தும் தமிழகத்தில் இருந்து கொண்டு வரப்பட்டவை என்ற பாரம்பரிய நம்பிக்கையை மீள்வாசிப்பிற்கு உட்படுத்தி அவற்றை இலங்கை மண்ணோடொட்டி வாழ்ந்து வரும் தமிழருடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதே பொருத்தமாகும். அதன் மூலம் இலங்கைத் தமிழர் வரலாற்றுக்கு புதுமுகவரி கிடைக்கும்.

நன்றி: போராசிரியர் பரமு புஷ்பரட்ணம்

# பிரபாகரன் ஒரு அதிசயப் பிறவி! தேசியத் தலைமையை நேசித்த தமிழோசை ஆனந்தி

- நவீனன்-

24.02.2025

போர்க்காலத்தில் பல செய்தித் தணிக்கைகள் மத்தியிலும் தாயக மக்களுக்காக களத்தில் நிகழும் நிகழ்வுகளை தொகுத்து உடனுக்குடன் வழங்கி வந்தார். பி.பி.சி தமிழோசையில் ஆனந்தி சூரியப்பிரகாசம் அவர்கள் பணியாற்றிவந்த காலத்தில் தாயக உறவுகளின் அவலங்களையும் தமிழோசை வாயிலாக உலகெங்கும் கொண்டு சென்றதில் பெரும் பங்கு வகித்தார்.





தமிழ் ஒலிபரப்பு துறையில் ஒரு முன்னோடியாக இருந்த “ஆனந்தி அக்கா” பிபிசி தமிழ் சேவையில் இணைநந்த முதல் தமிழ்ப் பெண்மணியாக பல தடைகளைத் தாண்டி பிபிசி தமிழோசையின் இயக்குநராக உயர்ந்த பெருமைக்குரியவர்.

பல ஆண்டுகளாக தாயக மக்களுக்கு செய்திச் சேவையை தொடர்ந்து வழங்கி வந்த பிபிசி ‘ஆனந்தி அக்கா’ பெப்ரவரி 21இல் இலண்டனில் இயற்கை எய்தினார்.

கொடூரமான போர் நடந்த காலத்தில் துணிகரமான தாயகம் வந்து தமிழ் மக்களின் உண்மை நிலையை உலகறியச் செய்தார். விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை, பிபிசியின் சார்பில் முதன் முதலாக சந்தித்து நேர் காணலை சர்வதேச ஊடகங்கள் மூலமாக வெளியிட்டார்.

தமிழர் உலகம் மாத்திரமன்றி, சர்வதேசம் எங்கும் அப்போது மூத்த ஊடகவியலாளர் ஆனந்தி சூரியப்பிரகாசத்துடனான நேர் காணல் பலத்த வரவேற்பை பெற்றது.

இலண்டனிலிருந்து கொழும்பு சென்றதுமே இலங்கை அரசின் கெடுபிடியை அவர் சந்தித்தார். அவரது பயணத்திட்டம் என்ன, பயணத்தின் நோக்கம் என்ன என்பது பற்றி எல்லாம் துரவித் துருவி விசாரிக்க ஆரம்பித்தார்கள். பின்னர் அவரை தொடர்ந்து கண்காணிக்கவும் செய்தார்கள்.

அப்போது வவுனியாவுக்கு முன் வரை மட்டுமே இலங்கை படைகளின் ஆதிக்கம் இருக்கும். அதன் பிறகு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிக்குள் வருவதற்குள் பல்வேறு தடைகளை அரசு ஏற்படுத்தி இருந்தது.

அதையெல்லாம் மீறி புலிகளின் பாதுகாப்புப் பகுதிக்கு வந்த அவர் யாழ்ப்பாணத்தில் தேசியத் தலைவர் பிரபாகரனை சந்தித்தார்.

பலருக்கும் நினைவிருக்கும் அவருடைய நேர்காணலை உலகெங்கும் தமிழ் மக்கள் பார்த்து வியந்தனர். அந்த நேர்காணலின் பின்னரே பிரபாகரன் ஒரு அதிசயப் பிறவி என்றார் பிபிசி புகழ் ஆனந்தி அக்கா.

“தமிழோசை ஆனந்தி“ என தமிழ் உலகம் அறிந்திருக்கும் திருமதி. ஆனந்தி சூரியப்பிரகாசம் பி.பி.சி தமிழோசையில் அவர்கள் பணியாற்றிவந்த காலத்தில் தாயக உறவுகளின் அவலங்களையும் தமிழோசை வாயிலாக உலகெங்கும் கொண்டு சென்றதில் பெரும் பங்கு வகித்தார்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்தவரான ஆனந்தி சூரியப்பிரகாசம் அவர்கள், இலங்கை வானொலியில் உருவான பல நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்றார். அத்துடன் அக்காலத்தில் வானொலியில் சிறந்த அறிவிப்பாளராகவும் திகழ்ந்தார்.



இங்கிலாந்துக்கு 1970 காலகட்டத்தில் குடிபெயர்ந்த ஆனந்தி சூரியப்பிரகாசம் பி.பி.சி தமிழோசையின் பகுதிநேர அறிவிப்பாளராக ஆரம்பத்தில் பணியாற்றி வந்தார். பின்னர், நிரந்தர அறிவிப்பாளராகிப் பொறுப்புகள் ஏற்றுச் செயற்பட்டார்.

மூன்று தசாப்தங்களாக பி.பி.சி தமிழோசையில் பணியாற்றிய அனுபவம் கொண்ட அவர் பல இளைய தலைமுறையினரை ஊக்குவித்து பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.

இறுதியாக அவர் தமிழோசையில் இருந்து ஓய்வு பெற்றாலும், தமிழர் கலாச்சார பண்பாட்டு நிகழ்வுகளில் இனித்த முகத்துடன் எப்போதும் காணலாம்.

தமிழ் கூறும் நல்லுலகம் ஆனந்தி அக்காவின் கணீரென்ற குரலை ஒரு போதும் மறவாது. தமிழ் கூறும் நல்லுலகிற்கு அரும் பணிபுரிந்த ஆனந்தி அக்காவிற்கு அஞ்சலிகளும் ஆராதனைகளும் உரித்தாகட்டும்!



# REWARDING YOUR EVERYDAY

MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.

EVERYDAY SHOPPING



**1-855-856-6875**

## Merchant Benefits

- **Website Template:** Modern design for improved user experience.
- **Personalized Marketing Tools:** Push notifications, personalized gift cards, and electronic flyers.
- **Convenient Payment Options:** EV gift wallet for seamle transactions.
- **Comprehensive Analytics:** Access full reporting and tracking online.
- **Customer Engagement:** Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
- **Financial Security:** Build income for future sale or retirement.
- **One-time Registration Fee:** $199 to unlock these benefits.

## Member Benefits

- **Point Accumulation:** Earn 4% to 60% on purchases.
- **Diverse Product Range:** Access everyday essentials and a wide variety of products and services.
- **Shopping Flexibility:** Enjoy convenience with both local and online shopping options.
- **Gift Card Rewards:** Benefit from gift cards and an EV gift wallet.
- **Simple Tracking:** Easily monitor progress with our user-friendly tracking system.
- **Networking Opportunities:** Build your own shopping network effortlessly.
- **Exclusive Privileges:** Gain mining rights worth $60.











Reward Points

WWW.MYEVERYDAYSHOPPING.COM

# நூறு ஆயிரம் நூல்களும் நூறு மில்லியன் ரூபாய்களும்

– நவீனன் –





24.02.2025

ஒரு கோடி கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது, ஒரு நூலகம் கட்டுவேன் என்று பதிலளித்தாராம் மகாத்மா காந்தி. இப்போது அநுர அரசும் நூறு மில்லியன் யாழ் நூலகத்திற்கு தந்து பிராயச்சித்தம் தேடுகிறார்கள் போல தெரிகிறது.

போதும் என்று நொந்துபோய், புதுவாழ்வைத் தேடுகிறீர்களா, ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்குங்கள் என்று சொல்லி மக்களை விழிப்படைய வைத்தார் இங்கர்சால். அப் படித் தான் இந்த அரசும் தமிழ் மக்களின் மேல் கரிசனை கொண்டு புதிய வழியை நோக்கி வழியை காட்ட விளை கின்றனர் போல!

பயங்கரமான போராட்ட ஆயுதங்கள் எவை என கேட்கப்பட்ட போது புத்தகங்கள் தான் என்றாராம் அமெரிக்க கறுப்பின மக்களின் வாழ்க்கை வரலாற்றை மாற்றிய பெருந் தலைவர் மார்டின் லூதர்கிங். நூலகத்தை எரித்த சிங்கள அரசிற்கு இப் போது தான் அரச பயங்கரவாதம் பற்றி தெளிவு பெறுகின்றதோ எனவும் தோன்றுகிறது.

## அணையாத அறிவாலயம் :

1981 ஜூன் 1இல் எரிக்கப்பட்ட அணையாத அறிவாலயமாகிய யாழ் பொது சன நூலகத்தை மேம்படுத்த நூறு மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அண்மையில் தெரிவித்தார்.

அன்று சிங்கள அரசால் அழிக்கப்பட்டு போனவை வெறும் கட்டிடங்களல்ல. ஓலைச்சுவடிகள், அரிய புத்தகங்கள். அதை எப்படி நிவர்த்தி செய்ய பணம் தந்து புனர் நிர்மாணம் செய்ய முடியும்?

அரசால் ஒதுக்கப்பட்ட மில்லியனால் எரிந்து போன புத்த கங்களை வாங்கலாமா அல்லது உலகின் எந்த மூலையி லிருந்தாவது கொண்டு வரமுடியுமா என்பதும் கேள்விக் குறியே?

இலங்கையின் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையை முன்வைத்து ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நாடாளுமன்றில் உரையாற்றுகையில், யாழ் பொது சன நூல கத்தை மேம்படுத்த நூறு மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு வழங்கும் தகவலை தெரிவித்தார்.

முன்னைய சிங்கள இனவாத அரசுகளின் கொடுஞ் செயல் களால் அழிக்கப்பட்ட யாழ் நூலகத்திற்கு, பிராயச்சித்தமாக வழங்கப்படும் நிதி உதவி இது என்றே கருத வேண்டும்.

அல்லது சந்திரிக்கா அரசின் காலத்து 'செங்கட்டியும் வெண் சுண்ணாம்பும்' என்ற மற்றதொரு மாயைத் திட்டமா இது என்பதை அநுர அரசின் எதிர்கால நடவடிக்கைகளிலேயே தெரிந்து கொள்ள முடியும்.

## நூறாயிரம் நூல்களும் நூறு மில்லியனும்:

வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றாராம் கருஞ் சிறையில் வாடிய நெல்சன் மண்டேலா. உலகமே போற்றும் மேதைகளால் கோயிலாக போற்றப்படும் ஓர் நூலகத்தையே 1981 தேர்தல் காலத்தில் வாக்குகளுக்காக தீ வைக்கப்பட்டது.

யாழ். நூலகம், யாழ்ப்பாணம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பல இடங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் வாசகர்களால் பயன்படுத்தப்பட்ட இந்த நூலகமே முற்றாக சாம்பலில் கருகியது.

தற்போது யாழ். நூலகத்திற்கு அத்தியாவசிய வசதிகளை வழங்க 100 மில்லியன் ரூபாய் என்றும், ஏனைய பிரதேசங் களில் நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்கு 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

முன்னாள் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு தனிமைத்தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்ட போது புத்த கங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து விட்டு வருவேன் என்று பதிலளித்தாராம். இப்படி தனித்து திகழ்ந்த யாழ் நூலகமே 20



ஆம் நூற்றாண்டின் இன, கலாச்சார அழிப்புகளின் கோரத்தை முகங்கொண்டது.

மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு எது என்று வினவப் பட்டபோது சற்றும் யோசிக்காமல் புத்தகம் என பதிலளித்தார் அறிஞர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். எத்தனையோ அறிஞர்கள் போற்றும் யாழ்ப்பாணப் பொது நூலக எரிப்பு என்பது 20ஆம் நூற்றாண்டின் இன, கலாச்சார அழிப்புகளில் ஒரு மிகப்பெரும் வன்முறையாகக் கருதப்படுகிறது. அப்போது நூலகத்தில் 97,000 நூல்கள் இருந்தன. அதில் பல அரிய நூல்களும் அடக்கம்.

1981 இல் யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிப்பு என்பது இலங்கை இனப் பிரச்சினையில் ஒரு கோரமான நிகழ்வாகும். 1981 ஆம் ஆண்டு ஜூன் ஒன்றாம் தேதி சிங்கள வன்முறைக் குழு ஒன்றால் இந்நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது.

அப்போது யாழ்ப்பாண நகரில் உள்ள சந்தை வளாகம், வணிக நிறுவனங்கள், ஈழநாடு பத்திரிகை அலுவலகம் மற்றும் யாழ்ப் பாணப் பொது நூலகம் ஆகியவை முற்றாக எரிக்கப்பட்டன.

மேலும் தென் கிழக்காசியாவிலேயே உள்ள பெரிய நூல கங்களில் யாழ்ப்பாணத்து நூலகமும் ஒன்றாகும். பல நூற் றாண்டுகள் பழமையான ஓலைச்சுவடிகள், 1800களில் யாழ்ப் பாணத்தில் வெளியிடப்பட்ட பல பத்திரிகைகளின் மூலப் பிரதிகள் போன்றவை நூலகத்திலிருந்தன.



காமினி திசாநாயக்க



சிறில் மெத்தியு

இந்த நூலக எரிப்பை மேற்கொண்ட அரசின் வன்முறைக் கும் பலில் அன்றைய இலங்கையின் அமைச்சர் காமினி திசா நாயக்கா, சிறில் மத்தியூ உட்பட பல்வேறு சிங்கள அரசியல் தலைவர்கள் அடங்கியிருந்தனர்.

என் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள் இங்கே ஒரு புத்தகப்







சிங்கராயர் தாவீது அடிகளார்

புழு உறங்குகிறது என்றாராம் பெட்ரண்ட் ரஸல். அப்படியான ஒரு புத்தக புழுவான சிங்கராயர் தாவீது அடிகளார் யாழ் நூலகம் எரிந்ததை கண்டு மீளாத உறக்கத்தில் ஆழ்ந்து போனார் என்பது துயரமான வரலாறாகும்.

யாழ் நூலகம் எரிக்கப்பட்டது ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் அழியாக் காயத்தை ஏற்படுத்தியது. மேலும் தமிழ்த் தேசியப் போராட்டதிற்கும் வலுவான உரத்தை ஊட்டியது.

பிறந்த நாளுக்கு என்ன வேண்டும் என கேட்டபோது புத்த கங்கள் வேண்டும் என சற்றும் தயக்கமின்றி லெனின் கூறிட குவிந்த புத்தகங்கள் பல இலட்சம். அப்படி பல ஆயிரம் புத் தகங்கள் இருந்த ஓர் நூலகமே தீயில் கருகியது.

ஒவ்வொரு படமும் நடிக்க ஒப்புக் கொள்ளும்போது வரும் முன் பணத்தில் முதல் நூறு டாலருக்கு புத்தகம் வாங்குவாராம் நடிகர் சார்லி சாப்லின். ஆம் அவரைப்போல ஆயிரமாயிரம் தமிழ்கள் வாங்கி வழங்கிய நூல்களாலேயே யாழ் நூலகம் செழித்து வளர்ந்தது.

## புனரமைக்கும் வேலைகள்:

ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித்தரும் ஆகச் சிறந்த பரிசு ஒரு புத்தகம்தான் என்றார் பிரித்தானிய போர்க்கால பிரதமர் வின் ஸ்டன் சர்ச்சில். இப்படி ஆயிரமாயிரம் தமிழ்க் குழந்தைகளின் பரிசுக் களஞ்சியமாக விளங்கியதே யாழ் நூலகம்.

யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டு ஓராண்டிற்குப் பின்னர் 1982இல் யாழ் நூலக வாரம் ஒன்றை யாழ்ப்பாண சமூகம் முன்னெடுத்தது. இதன் மூலம் பொது மக்களிடம் இருந்து ஏராளமான நூல்கள் சேகரிக்கப்பட்டன. கட்டிடத்தைப் புன ரமைக்கும் வேலைகளும் ஆரம்பமாயின.

ஆனால் ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான 1983 ஜுலை வன் முறைகள் தென்னிலங்கையில் ஆரம்பித்தன் பின்னர், 1984 இல் நூலகக் கட்டிடம் புனரமைப்பு வேலைகள் நிறுத்தப்பட்டன.

ஈழப்போர் தொடர்ந்து நடந்ததினாலும், யாழ் நூலக கட்டிடம் எறிகணைகள் மற்றும் துப்பாக்கிச் சூடுகளால் சேதமடைய ஆரம்பித்தது. இலங்கை இராணுவம் யாழ்ப்பாணக் கோட் டையில் நிலை கொண்டிருந்தமையால் யாழ் நூலகம் நிரந்தர மாக மூடப்பட்டது.

1998ஆம் ஆண்டில் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங் காவின் அரசு நூலகத்தை மீளக் கட்டியெழுப்ப மீண்டும் முடிவெடுத்தது. வெளிநாட்டு அரசு உதவி கோரப்பட்டு, 1 மில் லியன் டாலர் செலவழிக்கப்பட்டு 25,000 நூல்கள் வரை சேகரிக்கப்பட்டன.

இதன் பின்னர் 2004ஆம் ஆண்டில் நூலகம் பொது மக்களுக்கு மீண்டும் திறக்கப்பட்டது.

தான் தூக்கிலிடப்படுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை வாசித்துக் கொண்டே இருந்தாராம் இந்திய சுதந்திரத்திற்காக போராடிய மாவீரன் பகத்சிங்.

நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலை சிறந்த நண்பன் என்றார் அமெரிக்காவின் புகழ்பெற்ற தலைவர் ஆபிரகாம் லிங்கன்.

உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு தான் அவசியம் என்றார் சிக்மண்ட் ப்ராய்ட்.

ஆம், இவ்வளவு அறிவியல் மேதைகளும் நூல்களையும், நூல கங்களையும் போற்றிப் புகழும் போது எதற்காக சிங்கள அரசு யாழ் நூலகத்தை எரித்தது ?

புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே உள்ளன என்பதை வலியுறுத்திக் கூறினார் மேமேதை ரஷ்யாவின் லெனின். உலகமே போற்றும் புரட்சி யாளர்களால் ஆராதிக்கப்பட்ட ஆலயங்களான நூலகங்களை எரிக்க வேண்டிய அவசியம் சிங்கள அரசுக்கு ஏன் ஏற்பட்டது ?

ஆம், தற்போது அநுரவின் ஆளும் அரசு நூலகத்தை புன ரமைக்கும் திட்டமானது, தமிழ் மக்கள் மீதான கரிசனையின் பாலாகவா அல்லது தமிழர் தாயகத்தில் அதனது வாக்கு வங் கியை தக்க வைத்துக் கொள்ளவா என்பதை எதிர் வரும் காலங்களில் நாம் காணலாம்.



26-10-1991

யாழ்ப்பாண நூல்நிலயத்தை தீயிட்டவர் காமினியே

- ஜனாதிபதி பதில்

26.10.1991 ஈழநாடு பத்திரிகையில் வெளியான செய்தியில் சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா





# தாய்மை

வெள்ளையம்மா ஏன் பைத்தியமானாள்...?

வெள்ளையம்மா ஏன் தற்கொலை செய்து கொண்டாள்...?

அவள் பைத்தியமாகவில்லை. அவள் வாழ்ந்த கிராமம் அவளைப் பைத்தியக்காரியாக்கியது. அவளாக தற்கொலை செய்யவில்லை. அவளது கிராமம் அவளை தற்கொலை செய்ய வைத்தது.

அழுகிப் போன சமூகம் அவளைக் கொன்றுவிட்டது.

பத்து ஆண்டுகளுக்கு முன் நடந்து போனதுதான். ஆனாலும் அந்த வேதனைகளை ஜீரணிக்க முடிய வில்லை.

வெள்ளையம்மாவுக்கு அது சொந்தப்பெயரல்ல. வள்ளிநாயகி இதுதான் அவளுடைய சொந்தப் பெயர். அவளின் அழகையும் நிறத்தையும் வைத்து வந்த காரணப்பெயரே அது. தேச விடுதலைப் போர் விழுதெறியுமுன்னே அவளது வாழ்வு முடிந்து போய்விட்டது. மயிலிட்டிக் கிராமம் திடீரென இலங்கை இராணுவத்தால் சுற்றி வளைக்கப்படுகின்றது. எவருமே அங்கிருந்து தப்பிக்கொள்ள முடியாத நிலை. சுற்றிவளைப்பினுள் அகப்பட்டுக் கொண்ட அந்தப் போராளியைக் காப்பாற்ற எவரும் முன்வரவில்லை. அனைவருமே அவனைக் கண்டு பயந்து ஒதுங்கிக் கொண்டார்கள். விழிகளைப் பிதுக்கிக் கொண்டார்கள்.

வெள்ளையம்மா வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு ஓடி வந்தாள். அவனையும், அவனது பதற்றத்தையும் அவளால் உடனேயே புரிந்துகொள்ள முடிந்தது. வெள்ளையம்மா வீட்டினுள் ஓடிச்சென்று பழைய வேட்டி ஒன்றினை எடுத்து வந்து அவனிடம் கட்டும்படி கொடுத்தாள். தலையினையும் மூடிப் போர்த்துக் கொள்ளும்படி வேறோர் பழந்துணியையும் கொடுத்தாள். நாக்கினை நீட்டும்படி சொல்லிவிட்டு பிளேற் ஒன்றினால் நாக்கில் மெதுவாகக் கீறினாள். இத்தனைக்கும் அவன் எதிர் வார்த்தை எதுவுமே பேச வில்லை. முன்பின் தெரியாத அவள் சொல்வதை இயந்திரம் போல் செய்து கொண்டான். எவ்வாறாயினும் தப்பித்துக்கொள்ள வேண்டியிருந்தது.

வெள்ளையம்மா சாறி உடுத்து குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டாள். குறுகிய நேரத்துள் விவேகமான சிந்தனையும் செயலும்.

அனைவரையும் வீடுகளிலிருந்து வெளியேறி நிரையாக வரும்படி இராணுவத்தினர் கட்டளை பிறப்பித்தனர். வெள்ளைம்மா அந்தப் போராளியை ஏற இறங்க ஒரு தடவை நோக்கி விட்டு, மனதை திடப்படுத்திக் கொண்டாள். அவனது கையைப் பிடித்துக் கொண்டு மெதுவாக நடக்கத் தொடங்கினாள். இராணுவத்தினரை நெருங்கியதும் கசம் பிடித்தவர்கள் போல் நன்றாக இருமும் படியும் இருமியபின், எச்சிலோடு இரத்தத்தைச் சேர்த்து துப்பும் படியும் வேண்டிக்கொண்டாள்... அவனும் அசல் கசக்காரன் போல் மாறினான்.

வரிசை நெருங்கிவிட்டது. அடுத்து இவர்கள்தான்...

“ஏய் ஆர் ஆளு”? என்ற கேள்வி மிரட்டுதலாக வந்தது. “என்ர கணவர்தான் கசநோயில... என்று அவள் சொல்லி முடிக்கு முன்பே அவனும் இருமி இருமித் துப்பினான். இரத்தத்தைக் கண்ட இராணுவத்தினர் போ, போ என்பது போல் அவசரமாகக் கையசைத்தனர்.

வெள்ளையம்மா இறைவனுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டாள். இராணுவத்தினர் நின்ற இடத்திலிருந்து ஐம்பது யார் தூரந்தான் சென்றிருப்பார்கள். வீதியொன்றின் குறுக்கே வந்த சைக்கிளிலில் தாவி ஏறிப்பறந்து விட்டான். நல்லவேளை இராணுவத்தினர் திரும்பிப் பார்க்கவில்லை.

அந்தப் போராளியைக் காப்பாற்றி விட்ட பெருமையுடன் சென்ற வெள்ளையம்மாவின் உயர்ந்த அர்ப்பணிப்பை, தாய்மையின் விவேகத்தை, பெண் குலத்தின் பண்பை அவளது கிராமம் பகுத்துணரத் தவறிவிட்டது. இராணுவத்திடமிருந்து அன்று தப்பிய அவளை அவளது சமூகம் விட்டு வைக்கவில்லை. சாக்கடைச் சமூகம் அவளைக் கொன்றுவிட்டது. வெள்ளையம்மாவின் நடத்தைக்கு வால், தலை வைத்தனர். அவளது புனிதமான உள்ளம் புண்பட்டது. வேதனையால் வெடித்தது. முடிவு? அவள் சுயநினைவிழந்தாள். காத்திருந்த அவளது சமூகம் அவளுக்கு பைத்தியம் என்று பட்டம் சூட்டியது. வெள்ளையம்மா தன் சமூகத்திலிருந்து விடுதலை பெற விரும்பினாள். ஒரு விடுதலை வீரனை தேசத்துக்கு காத்துக்கொடுத்த நிறைவோடு தன்னை அழித்துக் கொண்டாள்.

எந்த மக்களால் வெள்ளையம்மா கொல்லப்பட்டாளோ அந்த மக்களின் விடுதலைக்காவும் தேசத்தின் விடுதலைக்காகவும் அவளின் தம்பியும் தங்கையும் இன்று களத்திலே நிற்கின்றனர். வெள்ளையம்மா போல் பல வெள்ளையம்மாக்களின் சிறகுகள் தான் அன்று எம் விடுதலை வீரர்கள் பலரைக் காத்துத் தந்தது. விடிவு தெரியும் விடுதலைப் பயணத்தில் நாம் நிற்க துணையாகி நின்ற தாய்மையின் தூய்மையை என்றும் புனிதமாகப் பார்க்க எமது சமுதாயம் பழகிக் கொள்ள வேண்டும்.

கடந்த நிகழ்கால கால நினைவுகளிலிருந்து நினைவுகளுக்குக் கொண்டு வந்தான் என்னருகே இருந்த போராளி. 6.30 மணிக்கு வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியதை நினைவு படுத்தினான். சில தினங்களுக்கு முன்பு தான் இவனும் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியிருந்தான். ஏனெனில், காலிலும் கையிலும் அவனுக்கு ஏற்பட்ட காயங்கள் இன்னும் சரியாக ஆறவில்லை. இருவரும் வைத்தியசாலைக்குப் புறப்பட்டோம்.

இரவு 7.00 மணிக்கெல்லாம் வைத்தியசாலைக்குள் நுழைகின்றோம். நீண்டு செல்லும் “ஸ்ரெச்சர்களைப்” பார்க்கின்றேன். எதுவுமே வெறுமையாக இல்லை. திரும்பிய திசையெல்லாம் வேதனையின் முனகல்கள் இயலாமையின் அழுகுரல்கள் ஆவேசத்தின் அட்டகாச வார்த்தைகள். மயக்க ஊசி ஏற்றப்பட்டவர்கள் சுயநினைவின்றி ஏதோவெல்லாம் பேசிக் கொண்டார்கள். மக்களின் விடியலுக்காய் துன்பத்தை தாமே சுமந்து கொண்ட சுதந்திர வீரர்களல்லவா! காயங்கள் ஏற்படும் போது தான் அவர்களுக்கு ஓய்வு. புதை குழியில் மட்டுமே அவர்கள் நிரந்தரமாக தூங்க முடிகின்றது.

காலில் கடுமையான முறிவு ஏற்பட்ட போராளி ஒருவன் “ஐயோ... அம்மா... மக்களைக் காப்பாற்ற வெளிக்கிட்டா இது தான் நிலை, ஐயோ...அண்ணா சொன்னதெல்லாம் நிறைவேற்றிப் போட்டம். அன்பு கவனமெண்டவர் அதுதான் செய்யேலாமப் போச்சுது. அம்மா... என்று தன் வேதனையை மறப்பதற்காக சத்தமிட்டுப் பேசிக் கொண்டிருந்தான் எங்களைக் கண்டதும் எழுந்திருக்க முயன்றான். ஆனால் அது முடியாமல் போயிற்று.

“என்ன மச்சான் பாரடாப்பா, கால்ல ஏதோ மண்முடையெல்லாம் கட்டித்தூக்கிக் கிடக்கு. நேற்று வந்தாங்கள் பாவியள் கத்திரிக்கோல காயத்துக்குள்ள ஓட்டி ஓட்டி இழுத்தாங்கள். கத்தரிக்கோல் இந்தப் பக்கத்தால போய் மற்றப் பக்கத்தால வெளிக்கிடுது. ஒண்டரைப் போத்திலுக்குக் கிட்ட ஏதோ வெள்ளையாய் எடுத்தாங்கள். எல்லோரும் கொண்டு போய் பகிந்து குடிச்சுப் பாருங்கோ என்று பேசினேன். ஆனால், அதுக்குப் பிறகுதான் வலிக்குறைவாய்க் கிடக்குது. என்ன நினைச்சாங்களோ தெரியாது மச்சான். போதாக் குறைக்கு இரவு நான் குளறிக் கொண்டிருக்க, ஆரோ என்கால தடவிக் கொண்டிருந்தார்கள். ஆற்றா காலப் பிடிக்கிறவன்? எடுடா கையை என்று சொல்லிக் கொண்டே பார்த்தன். “என்னப்பன் நல்லா வேதனப் படுத்துதோ” என்று கேட்டுவிட்டு காலைத் தடவிக் கொண்டிருக்குது மச்சான். ஆரெண்டு உனக்குத் தெரிஞ்சிருக்கும் பக்கத்து அறையிலதான் கிடக்கிறார். நான் குளறின சத்தங் கேட்டு சாமத்தில மூண்டு சில்லு சைக்கிள்ள மெதுவா இறங்கி வந்து தடவிக் கொண்டிருக்குது மச்சான். இந்தாள் என்ன பிறப்படாப்பா. என்ரை வேதினையைப் பார்த்துட்டு நேசைக் கூப்பிட்டு ஒரு ஊசி போடிச்சுது. அதுக்குப் பிறகுதான் நித்திரை கொண்டனான்” என்று சொல்லிச் சிரித்தான்.

தனது காயத்தைப் பாராது தனது வேதனையை மறந்து சக போர் வீரனுக்காய் துன்புற்ற அந்த மூத்த தளபதியை நினைத்த போது கண்கள் கலங்கியது. உண்மையான தாய்மையின் வெளிப்பாடாய் நிற்கும் இவர்களால் தான் விடியலின் பாதையில் எங்கள் பயணம் தொடர் கின்றது.

ஓய்வின்றி ஓடி ஓடி மருந்து கொடுத்துக் கொண்டிருந்த ஒரு மருத்துவத் தாதியைப் பார்த்து, “நேசன்ரிக்கு என்னைத் தெரியுதா? இண்டைக்கு கொஞ்சம் ஓய்வாய் இருக்கிறியள் போல கிடக்கு” என்று என்னுடன் வந்த போராளி கேட்டான்.

“இப்பத்தான் மருந்துகளெல்லாம் குடுத்து முடிஞ்சு வந்து நிற்கிறன். நீங்கள் என்ன இந்தப் பக்கம் இன்னுமொருக்காய்




என்னோட சண்டை பிடிப்பமெண்டு வந்தனீங்களோ” என்று சிரித்துக் கொண்டே கேட்டாள். “இப்பத்தான் மருந்துகளெல்லாம் குடுத்து முடிச்சு வந்து நிக்கிறன்” என்று அவள் சொல்லி முடிக்கும் போதே, மீண்டும் அழைப்பு வந்தது. ஊசியும் மருந்துகளும் அடங்கிய தட்டுடன் மின்னலாய்ப் புறப்பட்டாள்.

“இப்ப கொஞ்சம் ஓய்வாய் நிற்கிறியள் போல கிடக்குது? என்று அவளிடம் கேட்டதை திரும்ப என் மனதுள் போட்டுப் பார்த்துக் கொண்டேன். விசித்திரமான பிறப்புக்கள். தன்னலம் மறந்த தாய்மையின் வடிவங்கள். ஒரு போராளியின் காயத்தை ஆற்றி மீண்டும் அவனை விடுதலைப் பாதையில் நடக்கவைக்கும் வரை அவர்கள்படும் இன்னல்கள், துன்பங்கள் கொஞ்சமா?

சற்றுத் தள்ளியிருந்த “ஸ்ரெச்சரில்“ எழுந்திருக்க முடியாமலிருந்த ஒரு போராளியை மெதுவாகத் தூக்கி தன்னுடன் அணைத்து வைத்துக் கொண்டு உணவு தீத்திக் கொண்டிருந்தாள் ஒரு தாய். குழந்தை போல் அழுதழுது சாப்பிட்டுக் கொண்டிருந் தான் அந்தப் போர் வீரன். அவனை இந்த மண்ணுக்காய் பெற்றுத் தந்த தாயாக இருக்குமென நினைத்தேன். ஆனால் உண்மை அதுவல்ல. அவள் வேறு ஒரு மாவீரனின் தாய். மட்டக்களப்பில் பிறந்து, யாழ். மண்ணில் களம் நின்று காயம்பட்ட அந்த வீரனை தன் பிள்ளைகள் போல் கருதி உணவு தீத்தும் அந்தத் தாயின் உள்ளத்தை எப்படிச் சொல்வது. அந்தப் போர் வீரனும் அந்த அன்னையின் அணைப்பில் பெற்றவளின் தாய்மையைக் கண்டு கொண்டான். அதனால் தான் அவனும் அழுது கொண்டான். நெஞ்சை உருக்கும் அந்த நினைவுகளுடன் வைத்தியசாலையிலிருந்து வெளியேறினோம்.

- மணலாறு விஜயன்
18.03.1994 களத்தில்

# தேர்தல் ஆண்டில் தையிட்டி விகாரை

அரசியல் சமூகச் செயற்பாட்டாளரான செல்வின் அண்மையில் சொன்னார், பலாலியில் தரையிறங்கும் ஒரு விமானத்தின் பருந்துப் பார்வையில் முதலில் தெரியப் போவது தையிட்டி விகாரை தான். பகலில் சூரிய ஒளியிலும் இரவில் இருளின் பின்னணியில் மின்னொளியில் முழிப்பாகத் தெரியப்போவதும் விகாரை யாகத்தான் இருக்கும். எனவே பலாலி விமான நிலையத்தில் தரையிறங்கும் ஒரு விமானப் பயணிக்கு யாழ்ப்பாணத்தின் தரை தோற்றத்தில் முதலில் முழிப்பாகத் தெரியபோவது தையிட்டித் தாதுகோபமா ?





தையிட்டியிலிருந்து சுமார் 13 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மாதகல் சம்பில் துறை ஏற்கனவே ஜம்புகோளப் பட்டினமாக பெயர் மாற்றப்பட்டு சிங்கள பவுத்த மயப்படுத்தப்பட்டு விட்டது. அங்கே ஒரு பெரிய விருந்தினர் விடுதி உண்டு. அது யுத்த வெற்றிவாதத்தின் சுற்றுலாவிகளாக வரும் சிங்கள பௌத்த பயணிகளைக் கவரும் நோக்கிலானது. அதையும் படைத் தரப்பே பரிபாலித்து வருகிறது. அங்கேயும் தனியார் காணிகள் பறிக்கப்பட்டிருப்பதாக குற்றச் சாட்டுக்கள் உண்டு. இப்படிப்பட்டதோர் நிலப்பறிப்பு மற்றும் சிங்கள பௌத்த மயமாக்கற் பின்னணியில் தையிட்டி விகாரையை விட்டுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்குமா ?

அண்மையில் உயிர் நீத்த ஊடகவியலாளராகிய பாரதியின் இறுதி நிகழ்வுக்கு வந்திருந்த கொழும்பை மையமாகக் கொண்ட ஊடகவியலாளர் ஒருவர் என்னிடம் பின்வருமாறு சொன்னார், "தையிட்டி விகாரையின் மையப் பகுதி அதாவது தாதுகோபம் அமைந்திருக்கும் காணி ஒரு மலேசிய ஓய்வூதியருக்குரியது. அவருடைய உறவினராகிய ஒரு பெண் மலேசியாவில் வசிக்கிறார், அவர் சில ஆண்டுகளுக்கு முன் சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பொழுது அவரைச் சந்தித்து அது தொடர்பாக உரையாடியிருக்கிறார். அதன் பின் அவர் அப்போதிருந்த தளபதி சவேந்திர சில்வாவையும் சந்தித்ததாகத் தகவல் உண்டு" என்று.



இந்த விடயத்தை நான், அண்மையில் யாழ்.திண்ணை விடுதியில் நடந்த ஜநாவின் விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட சுமந்திரனைக் கண்ட பொழுது கேட்டேன். அவர் அத தகவல்கள் உண்மையானவை என்று சொன்னார். அந்தப் பெண் கிட்டத்தட்ட 80 வயதைக் கடந்தவர் என்று கூறப்படுகிறது. அவர் இப்பொழுது எங்கே இருக்கிறார் அல்லது அவர் இருக்கிறாரா இல்லையா போன்ற விவரங்கள் சுமந்திரனுக்குத் தெரியவில்லை.

ஆனால், காணி உரிமையாளர் வெளிநாட்டில் என்பது உண்மையான தகவல் அல்ல என்று சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபையின் முன்னாள் உறுப்பினர் சசீவன் கூறுகிறார். அப்போதிருந்த தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி மன்றத் தலைவர் இது தொடர்பில் பொறுப்பாக நடந்து கொள்ளவில்லை என்றும், விகாரை கட்டப்பட்டதற்கு அவரும் பொறுப்பு என்று சசீவன் குற்றஞ் சாட்டுகிறார்.

காணி உரிமையாளர் மலேசியாவில் என்று கூறப்படுவதை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வட்டாரங்கள் வேறுவிதமாகப் பார்க்கின்றன. தையிட்டிப் போராட்டத்தின் எழுச்சியை திசைதிருப்பும் நோக்கத்தைக் கொண்ட தகவல்கள் இவை என்று அவர்கள் கருதக்கூடும். அவர்கள் தையிட்டி விகாரையை ஒரு சட்டவிரோத கட்டுமானம் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

ஆனால் அதை சட்டரீதியாக மட்டும் அணுகக்கூடாது. அதை ஏன் தனிய சட்ட ரீதியாக மட்டும் அணுகக்கூடாது? ஏனென்றால் சட்டவிரோதமானது பிழையானது என்றால் சட்ட ரீதியானது சரியானது என்பதே தர்க்கம். சட்ட ரீதியானது சரியானது என்றால் சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பின் சட்டக் கட்டமைப்பு தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தரும் என்று நம்பலாமா?

இல்லை. தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பின் கருவிகளில் சட்டமும் ஒன்று. அண்மையில் அரசியல் பேசும் இளையோர் என்ற அமைப்பின் மெய்நிகர் சந்திப்பில் சுட்டிகாட்டப்பட்டதுபோல, திருகோணமலையில் பஸ் நிலையத்தில் கட்டப்பட்ட இரண்டு புத்தர் சிலைகளுக்கு எதிராக நீதிமன்றம் வழங்கிய கட்டளை உண்டு. அனால் சிலைகள் அகற்றப்படவில்லை. கிழக்கில் மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புக்கு எதிராக நீதிமன்றக் கட்டளை உண்டு. முல்லைத்தீவில், நீராவியடியில், நீதிமன்றத் கட்டளையை மீறி பிள்ளையார் ஆலய வளாகத்தில் ஒரு பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டது. அதுபோல பல இடங்களில் நீதிமன்றக் கட்டளைகளை மீறி சிங்கள பௌத்த மயமாக்கலும் நில ஆக்கிரமிப்பும் நடந்திருக்கிறது. நடந்து கொண்டிருக்கிறது. எனவே இலங்கைத்தீவின் சட்டக் கட்டமைப்பு தமிழ் மக்களுக்கு நீதியைத் தரும் என்ற தோற்றத்தை ஏற்படுத்த முடியாது.

மாறாக தையிட்டி விகாரை விடயத்தை நிலப்பறிப்பு, சிங்கள பௌத்த மயமாக்கல் இந்த நிகழ்ச்சி திட்டத்தின் ஒரு பகுதியாகவே பார்க்க வேண்டும்; அணுக வேண்டும்; அதற்கு எதிராகப் போராட வேண்டும்.

கடந்த பௌர்ணமி நாளன்று நடந்த போராட்டம் குறிப்பிடத்தக்கது. ஆனால் ஒவ்வொரு பௌர்ணமி நாளில் மட்டும் போராட்டலாமென்றால் அது மிகப் பலவீனமானது. ஏனென்றால் நிலப்பறிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும் பௌர்ணமிகளுக்காக காத்திருப்பதில்லை. அவை மிகவும் நிறுவனமயப்பட்ட நடவடிக்கைகள். இக்கட்டுரை எழுதப்படுகையில்கூட எங்காவது ஒரு சிறு குன்றில் ஏதாவது ஒரு விகாரைக்கு ஒரு செங்கல் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கும்.

எனவே ஒவ்வொரு போயா தினத்தன்றும் போராடி தையிட்டியை மீட்க முடியாது. நில அபகரிப்புக்கும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கும் எதிரான போராட்டம் மாதத்தில் ஒரு தடவை மட்டும் நடத்தப்படும் ஒன்றாக இருக்க முடியாது. ஏனென்றால் நில அபகரிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் தொடர் நடவடிக்கைகள். பல தசாப்தகால தொடர்ச்சியான நடவடிக்கைகள். மிகவும் நிறுவனமயப்பட்ட, அதிக வளம் பொருந்திய அரசு உபகரணங்களால் முன்னெடுக்கப்படுகின்ற தொடர்ச்சியான நடவடிக்கைகள்.

அதாவது சிங்கள பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் -அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் -தமிழ் மக்களின் தேசிய இருப்பை அழிக்கும் நடவடிக்கைகள் கடந்த பல தசாப்தங்களாக தொடர்ச்சியாக முன் னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக 2009க்குப் பின்னரும் அது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் தமிழ் எதிர்ப்புத்தான் குறைந்து போய்விட்டது.

இப்படிப்பட்டதோர் பின்னணியில் நில அபகரிப்புக்கும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கும் எதிராகத் தொடர்ச்சியாகப் போராட வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் தமிழ்த் தரப்புக்கு உண்டு. அடுத்த பௌர்ணமிவரை இன்னுமொரு எழுச்சிக்காகக் காத்திருப்பது பலமானது அல்ல.

தமிழ் மக்களுடைய போராட்டத்தின் அளவுதான் இந்த விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முடிவையும் தீர்மானிக்கும். ஏனென்றால் இது ஒரு தேர்தல் ஆண்டு. இந்த ஆண்டில் சிங்கள பௌத்த வாக்காளர்களின் வாக்குகளைக் கவர்வதா? அல்லது தமிழ் மக்களுடைய பயங்களை நீக்குவதா? என்று பார்த்தால், அரசாங்கம் சிங்கள பௌத்த வாக்காளர்களின் கூட்டு உணர்வை பாதுகாக்கவே முன் நிற்கும்.



தையிட்டிப் போராட்டத்தின் பின்னணியில் அரசுத் தலைவர் வல்வெட்டித் துறைக்கு வருகிறார். பிரதமர் வலிகாமத்தின் பல பகுதிகளுக்கும் வருகிறார். மானிப்பாயில் வைத்து பிரதமர் கூறுகிறார், இது தமிழ் மக்களாலும் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் என்று.




அதேசமயம் அமைச்சர் சந்திரசேகரன் மீனவக் கிராமங்கள் தோறும் தீயாக வேலை செய்கிறார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த விடயத்தில் ஒருவித இந்திய எதிர்ப்பை லோக்கலாக வெளிப்படுத்துகின்றது. இந்திய மீனவர்களுக்கு எதிராகத் திட்டவட்டமான நிலைப்பாட்டை எடுப்பதன் மூலம் தமிழ் கடல் தொழிலாளர் சங்கங்களைக் கவர்வது அவர்களுடைய உள் நோக்கம்.








அண்மையில் வெளியிடப்பட்ட வரவு செலவுத் திட்ட அறிக்கையும் தமிழ் மக்களைக் கவரும் நோக்கிலானது. ரணில் விக்கிரமசிங்க எரித்த நூலகத்தை நாங்கள் அபிவிருத்தி செய்கிறோம் என்ற பொருள்பட சந்திரசேகரன் முகநூலில் ஒரு பதிவை போட்டிருக்கிறார். நூலக எரிப்புக்கு ரணில் எப்பொழுதோ மன்னிப்புக் கேட்டு விட்டார். ஆனால் வடக்குக் கிழக்கை பிரித்தமைக்குச் சுனாமிப் பொதுக்கட்டமைப்பு எனப்படும் மனிதநேயக் கட்டமைப்பை எதிர்த்தமைக்கு இறுதிக்கட்டப் போரில் மகிந்தவைப் பலப்படுத்தியதற்கு ஜேவிபி இன்றுவரை மன்னிப்புக் கேட்கவே இல்லை. நூலகத்துக்கு நிதி ஒதுக்கியதன் மூலம் படித்த தமிழ் நடுத்தர வர்க்கத்தைக் தவறலாமா என்று அரசாங்கம் முயற்சிக்கின்றது.

அதாவது விரைவில் வரக்கூடிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல், பின்னர் வரக்கூடிய மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றை



இலக்கு வைத்துத் தமிழ் வாக்குகளைக் கவரும் நோக்கத்தோடு அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் இறங்கி வேலை செய்கின்றது.




ஆனால் பிரதமர் ஹரிணி கூறுவது போல இந்த அரசாங்கம் தமிழ் மக்களாலும் தெரிவு செய்யப்பட்டது என்றால், தையிட்டி விகாரை விடயத்தில் தமிழ் மக்களின் பயத்தையா அல்லது சிங்கள பௌத்த கூட்டு உளவியலையா அதிகமாக மதிக்கும்?

வரவுசெலவுத் திட்ட அறிக்கையை முன்வைத்து உரையாற்றிய அனுர பின்வருமாறு கூறுகிறார்… “எங்களில் யாரும் இலஞ்சம் எடுப்பதில்லை. அப்படி எடுத்தால் அவர்களுக்கு எந்த மன்னிப்பும் கிடையாது. ஊழல் இல்லாத ஆட்சியை உருவாக்குவேன். இலஞ்சம் வாங்கப் பயப்படும் நாட்டை உருவாக்குவேன். அப்படிப்பட்ட ஆட்சியால் மட்டும்தான் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும்.”

அவர் கூறுவது சிங்கள மக்களுக்குப் பொருந்தலாம். ஆனால் தமிழ் மக்களுக்குப் பொருந்தாது. தமிழ் மக்கள் ஊழலுக்கு எதிராகவோ அரசு நிர்வாக துஷ்பிரயோகங்களுக்கு எதிராகவோ போராடவில்லை. நமது தேசிய இருப்பை அழிக்க முற்படும் இன ஒடுக்குமுறைக்கு எதிராகத்தான் போராடி வருகிறார்கள். எனவே தமிழ் மக்கள் கேட்பது தமது தேசிய இருப்பைப் பாதுகாக்க வேண்டும் என்றுதான்.

ஊழலற்ற ஆட்சியால்தான் நாட்டைக் கட்டியெழுப்பலாம் என்று கூறுவது தவறு. இனவாதமற்ற, இன அழிப்புக்கு பரிகாரம் தரத் தயாராக உள்ள, அதாவது, இனப் பிரச்சினையைத் தீர்க்கத் தேவையான அரசியல் திடசித்தத்தை- “பொலிட்டிக்கல் வில்லைக்” -கொண்டிருக்கும் ஒரு அரசாங்கத்தால் மட்டுந்தான் இச்சிறிய தீவைக் கட்டியெழுப்ப முடியும்.

நன்றி: நிலாந்தன்

**எமது போராளிகளின் தனிப்பட்ட நேர்மை, ஒழுக்கம் – வழிகாட்டும் வகையில் வாழும் வாழ்க்கை – இவையே மக்கள் எம்மீது மரியாதை வைக்கக் காரணமாகும்.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

# விகாரைகளால் ஆக்கிரமிக்கப்படும் தமிழர்களின் பாரம்பரிய தாயகம்

- நவீனன்-

23.02.2025

ஆங்கிலேய காலனியாதிக்கத்தின் பின்னர் இலங்கையில் இனங்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடுகளிற்கான மூல காரணம் மதமோ அன்றில் இனமோ அல்ல. ஆயினும் பெரும்பான்மை இன அடிப்படையிலான கட்சிகளின் அரசியல் அதிகாரப் போட்டிகளின் விளைவே தமிழர் மீதான இனப்படுகொலைக்கு முக்கிய காரணம் ஆகும்.

## தமிழ் இனப்படுகொலை:

1948ஆம் ஆண்டு சிறீலங்காவின் விடுதலைக்குப் பிறகு, சிங்கள தேசியவாதக் கொள்கைகள் தமிழர்களை புறக்கணித்ததால், அதில் எதிர்ப்பு உருவாகி, இறுதியில் உள்நாட்டுப் போராக, தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை வெடித்தது.

இதனைவிட பொருளாதார போட்டி மற்றும் அரசியல் ரீதியான போராட்டங்கள் சிங்கள-தமிழ் மக்களின் இடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி மோதல்களைத் தூண்டின.

அதேவேளை தமிழர் தாயகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள வளங்கள் உட்பட தமிழ் மக்களது பூர்வீக நிலங்களும் இலங்கையில் உள்ள பெரும்பான்மை இனத்தவர்களால் கைப்பற்றப்பட்டு சூறையாடப்பட்டது.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கோரமான போர் நடைபெற்று வந்தது. ஆனால் போர் மௌனித்து பதினைந்து வருடங்கள் கடந்தும், இந்த நிலை இன்னும் தொடர்கிறது என்பதை சர்வதேச நாடுகள் புரிந்து கொள்ளாமல் இருப்பது வேதனை அளிப்பதாக உள்ளது.

தமிழர்களது உணர்வுகளை மதிக்காத சிங்கள அரசுகள் மேற்கொண்ட இனவாத நடவடிக்கைகள் தொடருமாக இருந்தால் தமிழர்களின் தாயக நிலம் விரைவில் பறிபோகும் அபாயம் உள்ளது.

கடந்தகால வரலாற்றில் தமிழர்கள் மீதான இனப்படுகொலை மட்டுமன்றி தமிழர்களின் நில அபகரிப்பையும் சிங்கள அரசு தொடர்ந்து செய்து வந்ததது.



ஸ்ரீ மலை நீலியம்மன் கோவில்

குறிப்பாக தமிழர்களின் பாரம்பரிய தலைநகரான திருகோணமலையில் ஸ்ரீ மலை நீலியம்மன் கோவிலை தீயிட்டு அழித்துவிட்டு குறித்த கோவில் வளாகத்தில் “பாசன பப்பாத ராஜமஹா விகாரை” என்கிற பௌத்த ஆலயம் ஒன்றை அமைத்து இருக்கிறார்கள்.



பாசன பப்பாத ராஜமஹா விகாரை

அது மாத்திரமன்றி திருகோணமலை முகத்துவாராம் பிரதேசத்தில் குஞ்சுமப்ப பெரியசாமி கோவிலை அழித்து அந்த கோவில் சூழலில் “லங்கா பட்டுன சமுத்திரகிரி” என்கிற பெயரில் விகாரை ஒன்றை கட்டி இருக்கின்றார்கள்.



கமுனு விகாரை







லங்கா பட்டுன சமுத்திரகிரி

அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் பூர்வீகமாக வாழ்ந்து வந்த விவசாயம் செய்த 41,000 ஏக்கர் காணிகளை வன இலாகா திணைக்களம் கையகப்படுத்தி உள்ளது. சிறீலங்கா அரசின் துறைமுக அதிகார சபையும் காணிகளை கையகப்படுத்த முனைவதாகவும் குச்சவெளியில் 31 விகாரைகள் கட்டுவதாகவும் கூறப்படுகிறது.

இதனைப் போலவே வடக்கில் தமிழர்களின் தொன்மை மிக்க கோயில்கள் சூழ்ந்த காங்கேசன்துறையில் உள்ள சைவ ஆலய சூழலில் ”கமுனு விகாரை” என்கிற பெயரில் பௌத்த விகாரை ஒன்றை நிறுவி இருக்கிறார்கள்.

மேலும் முல்லைத்தீவு குருந்தூர் மலை ஆதி ஐயனார் கோவில் சூலத்தை உடைத்து வீசிவிட்டு அங்கு “குறுந்தூர் விகாரை” என்கின்ற பெயரில் விகாரை ஒன்றை நிறுவி இருக்கின்றார்கள்.



குறுந்தூர் விகாரை



www.sangathamil.ca

# வவுனியா வடக்கில் தமிழர்களின் பூர்வீகக் கிராமமான கச்சல் சமளங்குளம்

**போர் மௌனித்து பதினைந்து வருடங்கள் கடந்தும், இந்த ஆக்கிரமிப்பு நிலை இன்னும் தொடர்கிறது என்பதை சர்வதேச நாடுகள் புரிந்து கொள்ளாமல் இருப்பது வேதனை அளிப்பதாக உள்ளது.**



இதனைப் போலவே முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் அத்துமீறி “குருகந்த புராண ராஜ மகா விகாரை” என்கின்ற பேரில் விகாரையொன்றை கட்டியிருக்கின்றார்கள்.



**சிங்கள அரசின் நில ஆக்கிரமிப்பு:**

நில ஆக்கிரமிப்பை உறுதி செய்யும் வகையில் வவுனியா வெடுக்குநாறி மலை சிவன் ஆலய விக்கிரங்களை சேதப்படுத்தி அது “வட்டமான பர்வத விகாரை” என்கின்ற பௌத்த தொல்லியல் நிலம் என உரிமை கோருகின்றார்கள்.










வவுனியா வடக்கில் தமிழர்களின் பூர்வீகக் கிராமமான கச்சல் சமளங்குளத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய விகாரை ஒன்றும் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சிறீலங்கா அரசின் தொல்பொருள் பகுதி என்ற பெயரில் தொல்பொருள் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் இந்த விகாரையின் நிர்மாணப்பணிகள் இடம்பெற்றது.

1980 ஆம் ஆண்டுவரை வாழ்ந்து போரின் காரணமாக தமிழர்கள் இடம்பெயர்ந்த நிலையில் இக் கிராமத்தில் தொல்லியல் அடையாளம் எனக் கூறப்பட்டு தமிழர்கள் தடுக்கப்பட்டு வந்தனர்.

அவ்வாறான பகுதியிலேயே இந்த விகாரை அமைக்கப்பட்டு நிறைவுபெற்று திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடகிழக்கு பகுதியை இணைக்கும் மணலாறு பகுதியில் நீண்ட காலமாக நில உரிமையை தமிழர்கள் இழந்து வருகின்றனர்.

இதன் விளைவாக தென்னவன்மரபடி கந்தசாமி மலை முருகன் ஆலய பூசை வழிபாடுகளை தடை செய்து விட்டு அது “சங்க மலை விகாரை” க்குரிய நிலம் என உரிமை கோருகின்றார்கள்.

போர்க்காலத்தில் திருகோணமலை 64 ஆம் கட்டை இராஜவந்தான் மலை பிள்ளையார் ஆலயத்தை சிதைத்து விட்டு அங்கு “கொட்டியாராம ஸ்ரீ பத்ர தாது ராஜ மகா விகாரை” என் கின்ற பெயரில் விகாரையொன்றை கட்டியிருக்கின்றார்கள்.

திருகோணமலை சூடைக்குடா மலை குன்றத்தூர் முருகன் ஆலயத்தை அழித்து அங்கும் விகாரையொன்றை கட்டியிருக்கின்றார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் குசலமலை சைவ குமரன் ஆலயத்தின் பாரம்பரிய முன் கதவு, மூலஸ்தான விக்கிரம் என்பவற்றை அடித்து நொருக்கியிருக்கின்றார்கள்.

**தமிழர்களது உணர்வுகளை மதிக்காத சிங்கள அரசுகள் மேற்கொண்ட இனவாத நடவடிக்கைகள் இன்னும் தொடருமாக இருந்தால் தமிழர்களின் தாயக நிலம் விரைவில் முழுமையாக பறிபோகும் அபாயம் உள்ளது.**

நீண்ட காலமாக தமிழர் பாரம்பரியத்தை அழித்த சிங்கள அரசுகள், பல நூறு விகாரைகளை கட்டிய சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள், இது போதாதென்று தையிட்டியில் திஸ்ஸ விகாரையை உருவாக்கி கட்டி எழுப்பி விட்டனர்.

இந்த இடத்தில் விகாரை அடிக்கல் நாட்டப்பட்ட போது அதிகாரத்திலிருந்த ஆட்சியாளர்களின் பங்காளியாக ஜேவிபி கட்சி இருந்ததை கூட பலரும் மறந்து விட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் சட்டவிரோதமாக சிங்கள இராணுவத்தினரால் தமிழரின் பூர்வீக நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள புத்த விகாரையை நீக்க கோரி தாயகம் எங்கும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் மக்களின் தாயக நிலப்பரப்பான யாழ்ப்பாணம் - தையிட்டியில் தனியாருக்குச் சொந்தமான காணியில் சட்டவிரோதமாக சிங்கள இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தாயகத்தில் மக்களால் முன்னெடுக்கப்படும் தொடர்ச்சியான போராட்டங்களுக்கு தார்மீக ஆதரவை உலக நாடுகளுக்குத் தெரிவிக்கும் வகையில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் புலம்பெயர் தேசங்களிலும் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


தையிட்டி திஸ்ஸ விகாரை

# யாழ்ப்பாணம் – தையிட்டி யில் தனியாருக்குச் சொந்தமான காணியில் சிறீலங்கா சிங்கள இனவழிப்பு இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரை























# உடும்பன் குளம் படுகொலை

***1986ம் ஆண்டு மாசி மாதம் 19ம் திகதி அம்பாறை மாவட்டத்திலுள்ள உடும்பன்குளம் எனும் சிறிய கிராமத்தில் - வயலில் வேலை செய்து கொண்டிருந்த 60 ற்கும் மேற்பட்ட தமிழ் விவசாயிகள் சிங்கள இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டார்கள்.***

***இப்படுகொலையானது அம்பாறை மாவட்டத்திலிருந்து தமிழர்களை மிரட்டி அவர்களை அங்கிருந்து விரட்டியடித்து அம்மண்ணை அபகரிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது.***

தங்கவேலாயுதபுரம் –

பறிபோய்க் கொண்டிருக்கும் அம்பாறை மாவட்டத்தின் பழந் தமிழ்க் கிராமங்களில் ஒன்று. இந்தப் புராதனக் கிராமத்தை அணைத்திருந்த உடும்பன் குள வயல் நிலங்களில் விளைந்த நெற் கதிர்களின் கலகலப்பு ஒலித்துக் கொண்டிருந்தது.

வருடத்தின் பெரும்பகுதி வெறுமையாகவே இருக்கும் உடும்பன் குளம் மாரி காலத்தில் தான் குதூகலிக்கும்.. பெரும்போக நெற்செய்கைக்காக அயற் கிராமங்களின் மக்கள் அங்கே வருவார்கள். வாடிகளை அமைத்து அங்கே வாழ்வார்கள், அந்த மக்களுக்கு அது கடின உழைப்பை சிந்தும் மகிழ்சிகரமான நாட்கள். ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் அதுதான் மகிழ்ச்சியான வாழ்க்கைக் காலம்,

அது அறுவடைக் காலம்... உடும்பன் குளத்தின் நூறு ஏக்கர் வயல் நிலங்களும் நன்றாகவே விளைந்திருந்தது. சில வயல்களில் சூடு வைத்திருந்தனர். சில வயல்களில் துப்பட்டிகள் (சிறிய நெற் கட்டுக்கள்) அடுக்கப்பட்டிருந்தன. சில வயல்களில் அறுவடைக்குத் தயாராக நெற்கதிர்கள் சாய்ந்து கிடந்தன.

## 1986ஆம் ஆண்டு மாசி 19ஆம் திகதி

காலை 7 மணி, அதி காலையிலேயே எழுந்து விட்ட அந்த விவசாயிகள் வயல்களில் தமது வேலைகளில் கவனத்தை செலுத்திக்கொண்டிருந்தார்கள். இரவிரவாக சூட்டுக் களத்தில் போராடிய உழவு இயந்திரங்கள் ஓய்ந்து போய் நின்றன. இளஞ் சூரியனின் கதிர்கள் அந்த விவசாயிகளின் வெற்று மேனிகளில் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தது. அவர்களின் உழைப்பின், வியர்வையின் பலனை அவர்கள் பார்த்துப் பூரித்துக் கொண்டிருந்தார்.

கிளிகளின் பறப்புகளும், கீச்சல் ஒலிகளும் அடர்ந்த காட்டினால் சூழப்பட்ட அந்த வயல் நிலங்களின் அமைதியைக் குலைத்துக் கொண்டிருந்தன. அறுவடையை முடித்துவிட்டு ஊருக்குச் செல்லும் ஆவல், அவர்கள் உற்சாகமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் குதூகலத்துடன் அறுவடை செய்து கொண்டிருந்த தமிழ் விவசாயிகளை மனித அறுவடை செய்ய வெறிப்படைகள் சிங்கள சுற்றி வளைத்துப் படுத்திருந்ததை அந்த அப்பாவி விவசாயிகள் அறிந்திருக்கவில்லை.

காடுகளில் பதுங்கி இருந்த சிங்கள இராணுவத்தினர் திடீரென வெறிபிடித்தவர்கள் போல சத்தமிட்டபடி துப்பாக்கிகளை இயக்கியபடியே வயல் வெளிகளில் வேலை செய்து கொண்டிருந்த மக்களைச் சுற்றி வளைத்தார்கள். அவர்கள் கதறிக் கொண்டிருந்தார்கள், பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

வயல் வெளியில் திரும்பிப் பார்த்த இடமெல்லாம் பச்சைதிறப் பேய்கள். அங்கு எவருமே தப்புவதற்கு வழி இருக்கவில்லை. சுற்றிவளைத்துப் பிடிக்கப்பட்டவர்கள் எல்லாம் கொடூரமாகத் தாக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள், ஆண்களும் பெண்களும் வித்தியாசமில்லாமல் தாக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

சுற்றிவளைத்துப் பிடிக்கப்பட்ட அனைவரையும் மந்தைகளைச் சாய்ப்பது போல விரட்டி வயல் வெளிகளின் ஓரத்தில் இருந்த கிரவல் பாதைக்குகொண்டு சென்றார்கள். இச் சந்தர்ப்பத்தில் மிருக வெறிபிடித்த இராணுவத்தினரால் பல பெண்கள் கதறக் கதற காட்டுக்குள் இழுத்துச் செல்லப்பட்டார்கள். அவர்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டார்கள்.

கிரவல் பாதைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஆண்களும், பெண்களும் அங்கே தனித்தனியாகப் பிரிக்கப்பட்டார்கள். அவர்களின் கண்ணீருக்கும் கதறல்களுக்குமிடையே அவர்கள் அடிக்கடி தாக்கப்பட்டார்கள். அங்கும் இளம் பெண்கள் இழுத்துச் செல்லப்பட்டார்கள்.

ஆண்கள் தனிமைப்படுத்தப்பட்டு இருவர் இருவராக கட்டப்பட்டு அங்கே நின்ற உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்டார்கள், தமது மகள்மாருக்கு. கணவன்மார்களுக்கு ஏதோ விபரீதம் நடக்கப் போகின்றது என்பதை உணர்ந்து கொண்ட பெண்கள் அவர்களை விடுவிக்கும் படி மன்றாடினார்கள். அந்தக் கொடிய மிருகங்களின் கால்களில் விழுந்து கதறினார்கள்... மன்றாடினார்கள். ஆனால் இரக்கமற்ற அந்தச் சிங்கள வெறியர்களின் காதுகளில் அந்த அப்பாவி ஜீவன்களின் வேண்டுதல்கள் விழவில்லை. அவர்கள் அடித்து விரட்டப்பட்டார்கள்.

உச்சிவெயில் நேரம்.

உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்ட கிராமத்தவர்கள், வயல் வெளியின் சூட்டுக்களம் நோக்கிக் கொண்டு செல்லப்படுகிறார்கள். இளைஞர்கள், வயோதிபர்கள், சிறுவர்கள் எல்லோரும் அழைத்துச் செல்லப்பட்டார்கள், அவர்களின் முகங்களில் பயங்கலந்த கலவரம், இந்த வெறிபிடித்த இராணுவத்தினருக்கு எதிராக



கருகிய தமிழர்களின் உடல்களுக்கு முன்னால் நின்று கதறி அழும் தமிழீழப் பெண்கள்

எதுவுமே செய்ய முடியாத நிலை அவர்கள் நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு வைக்கோற் போர் அருகே சென்றதும் உழவு இயந்திரம் நிறுத்தப்பட்டது. அந்த விவசாயிகள் இருவர் இருவராக இறக்கப்பட்டார்கள்.

இராணுவத்தினரின் துப்பாக்கிகள் இயங்கத் தொடங்கின.

எங்கள் தேசம் எமது மக்களின் குருதியினால் தோய்ந்து கொண்டிருந்தது... அவர்களின் இறுதி ஓலங்களும். முனகல்களும் உடும்பன் குள காட்டுப் பகுதியை நிறைத்து, எதிரொலித்து ஓய்ந்தது. தங்களது சேமிப்புகளை அந்நிலத்தில் கொட்டி, வியர்வைத் துளிகளினால் அப்பயிர்களுக்கு உரம் சேர்த்து, அதன் பயனை அறுவடை செய்யக்காத்திருந்த அந்த மண்ணின் மைந்தர்கள்– அவர்களின் சூட்டுக் களத்திலேயே உயிரற்ற உடல்களாக வீசப்பட்டுக் கிடந்தார்கள். எல்லாமாக 60 ற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் இன வெறி கொண்டவர்களின் இரத்தப் பசிக்கு பலியாகிக் கிடந்தார்கள். – இதில் நாடோடிகளாக வாழ்க்கை நடாத்தும் குறவர் இன ஆண்களும் அடங்குவர். இவர்கள் கூலிக்கு வேலை செய்து வாழ்பவர்கள்.

அதே நேரம் இன்னொரு சிறீலங்கா இராணுவக்குழு வாடிகளுக்குள் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான பொருட்களை கொள்ளையிடத் தொடங்குகிறார்கள். வானொலிப் பெட்டிகள். நகை. பணம்... பெறுமதியான அனைத்தையுமே எடுத்தார்கள். அறுவடை செய்யப்பட்டு கட்டி வைக்கப்பட்டிருந்த நெல்லு மூடைகளை அந்தக் கிராமத்தவரின் உழவு இயந்திரங்களிலேயே ஏற்றினார்கள்.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் சூட்டுமேட்டில் குவிக்கப் படுகிறது. நெற் கதிர் குவியல்களினால் அவர்களின் உடல்கள் மூடப்படுகின்றன, சற்று நேரத்திற்கு முன்னர் நெற் கதிர்களை அணைத்து மகிழ்ந்து கொண்டிருந்தவர்களின் உயிரற்ற உடல்கள் அந்த நெற் கதிர்களாலேயே மூடப்பட்டன. அருகிலிருந்த குடிசைகளின் மரங்களும், காய்ந்த ஓலைகளும் அதன் மேலே போடப்படுகின்றன. ஆனால் அவர்களின் இறுதி நேர முனகம்கள் இன்னும் ஓயவில்லை. அந்தக் கொடூரம் நிறைந்த அராஜக வாதிகள் அதனை கேட்கவும் இல்லை, அவர்கள் சூட்டுக் களத்திற்கு தீ வைத்தார்கள், அங்கு நின்ற உழவு இயந்திரங்களுக்கும், அடுக்கப்பட்டிருந்த நெற் கதிர் குவியல்களுக்கும் தீயிட்டார்கள். உடும்பன் குளம் எரித்து கொண்டிருந்தது. அந்த ஏழை விவசாயிகளின் உழைப்பின் பலன்களெல்லாம் அவர்களுடனேயே சேர்த்து எரித்து கொண்டிருந்தது.

தமிழீழத்தின் எல்லைப்புற மாவட்டமான அம்பாறையில் உடும்பன் குளத்தைப் போலத்தான் பல தமிழ்க் கிராமங் அழிக்கப்பட்டுவிட்டன. அவை பறிக்கப்பட்டுவிட்டன. பல தமிழ் கிராமத்து மக்கள் இப்படித்தான் அழிக்கப்பட்டு விட்டார்கள், எங்கள் கிராமங்களில் எல்லாம் இன்று சிங்களவர்கள் வாழ்கிறார்கள். அம்பாறை மாவட்டத்தை ஒரு முழுமையான சிங்கள மாவட்டமாக மாற்ற முயலும் சிங்கள அரசினரின் திட்டமிட்ட செயல்கள் தான் இவை, இந்தக் கொலைகாரர் உண்மையில் ஆட்சியாளர்கள் தான்.

இந்தக் கொலைக்களத்தின் பார்வையாளர்களாக, இன்னும் சுடாமல் வைத்திருந்த மூன்று உழவு இயந்திர சாரதிகளும் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அந்த அப்பாவி மக்களின் மீதான வெற்றியுடனும், இவர்களிடம் கொள்ளையிடப்பட்ட நெல்லு மூடைகளுடனும் அம்பாறை முகாமை நோக்கி வீதி வழியாக அந்த அராஜக வாதிகளின் அணிவகுப்பு நடந்து கொண்டிருந்தது. அவர்களுடன் அழைத்துச் அவர்களு செல்லப்பட்ட உழவு இயந்திரச் சாரதிகளான புவனேந்திரன், செல்லையா, திவ்வியநாதன் ஆகிய மூவரும். – அதன் பின் திரும்பி வரவே இல்லை. அவர்களுடன் சேர்த்து எல்லாமாக 60 அப்பாவித் தமிழர்கள் அன்று அந்தக் கிராமத்தில் கொல்லப் பட்டார்கள் மறு நாள் அரச வானொலி அறிவிந்தது...

***லகுகல காட்டுப் பகுதியில் பயங்கர வாதிகளின் முகாம் ஒன்று அழிக்கப்பட்டு பல பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். ஒரு மணி நேரம் நடந்த இந்தச் சண்டையில் 40 பயங்கர வாதிகளின் உடல்கள் எடுக்கப்பட்டன. மேலதிக உடல்கள் தேடப்படுகின்றன.***

சிங்கள அரசின் பார்வையில் இத்தமிழர்கள் பயங்கரவாதிகள்.

இந்த நிலை இப்பொழுதும் தொடர்கிறது. உடும்பன் குளம் போன்று பல கிராமப் படுகொலைகள் செய்யப்பட்டுவிட்டன. ஆனால் நாம் இன்றும் பாதுகாப்பற்றவராக வாழ்கின்றோம். நாம் எமக்கு பாதுகாப்பினை தேட வேண்டும். அந்தப் பாதுகாப்பு என்பது மக்கள் அனைவரும் போராட்டத்தில் பங்களிப்பதுதான். இனிமேலும் அடிமைகளாக நாம் வாழ்வதைவிட ஆயுதங்களை ஏந்தி எமது மண்ணையும் மக்களையும் பாதுகாப்போம்.

**உடும்பன் குள சம்பவத்தில் கொல்லப்பட்ட மக்களின் விபரங்கள்**

***தங்கவேலாயுதபுரம் கிராமத்தைச் சேர்ந்த...***

1. சீனித்தம்பி சிவபாலன் (வயது 28)
2. சீனித்தம்பி தவநாகன் (வயது 20)
3. சீனித்தம்பி அருள்செல்வம் (வயது 18)
4. குமாரவேல் நாகராசா (வயது 27)
5. சுவாமி டேவிட் (வயது 29)
6. கணபதி வடிவேல் (வயது 27)
7. பொன்னம்பலம் யோகராசா (வயது 18)
8. விஸ்வகேது இராசாராம் (வயது 30)
9. கணேசமூர்த்தி பேரின்பன் (வயது 28)
10. விஸ்வகேது இராசா (வயது 23)
11. இராசையா சதாசிவம் (35)
12. ஆறுமுகம் சோமசுந்தரம் வயது 35)
13. தர்மலிங்கம் சபாரட்ணம் (வயது 22)
14. கணேசபிள்ளை மோகனராசா (வயது 22)
15. இராசையன் தவேந்திரன் (வயது 18)
16. சில்வஸ்ரர் இன்னாசி (வயது 32)
17. மயில்வாகனம் தியாகராசா (வயது 13)
18. மைலன் தியாகராசா (வயது 18)
19. சுந்தரம் சின்னவன் (வயது 20)
20. தர்மன் (வயது 22)
21. இராமசாமி கந்தையா (வயது 48)
22. பத்மநாதன் (வயது – )
23. மார்க்கண்டு இரவீந்திரன் (வயது –)
24. பொன்னன் இராசதுரை (வயது –)

***அக்கரைப்பற்று கிராமத்தைச் சேர்ந்த...***

25. ஆறுமுகம் நல்லதம்பி (வயது 63)
26. நல்லகம்பி விநாயகமூர்த்தி (வயது 35)
27. நல்லதம்பி கோபாலகிஷ்ணன் (வயது 23)
28. கந்தப்பு பாக்கியராசா (வயது 26)
29. கதிரேசு வைரமுத்து (வயது 60)
30. வைசமுத்து சுந்தாலிங்கம் (வயது 22)
31. அருண் சோமசுந்தரம் (வயது 32)
32. கந்தசாமி இராமலிங்கம் (வயது 60)
33. சீனித்தம்பி தாமோதரன் (நான் 40)
34. இராசையா சுதாசிவம் (வயது 35)
35. சின்னத்தம்பி துரையப்பு (வயது 45)
36. 36. நல்லதம்பி கணபதிப்பிள்ளை (வயது 25)

***கொம்மாந்துறை செங்கலடியைச் சேர்ந்த...***

37. தர்மலிங்கம் கனகேஸ்வரன் (வயது 18)
38. கணபதிப்பிள்ளை தங்கராசா (வயது 38)
39. மாணிக்கம் கிருபை (வயது 28)

***இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்ட உழவு இயந்திரச் சாரதிகள்.***

40. மாணிக்கப்போடி திவ்வியநாதன் (வயது 30)
41. தாகப்பு செல்லையா (வயது 32)
42. ஞானமுத்து புவனேந்திரன் (வயது 30)

மற்றும்

43. ஜெயராஜ் (வயது 28)
44. தாசப்பு சாமித்தம்பி (வயது 30)
45. தாசப்பு செபமாலை (வயது 20)
46. வெங்கரன் குலநாதன் (வயது 27)
47. துரை இராமலிங்கம் (வயது 26)
48. முத்துசாமி முத்துலிங்கம் (வயது 20)
49. இரங்கன் பாவுல் (வயது 35)

இத்துடன் கூலி வேலைக்கென உடும்பன்குளம் வந்திருந்த நாடோடிகளான எட்டு குறவர் இன ஆண்களும் கொல்லப்பட்டனர். இவர்களுடன் பிற ஊர்களில் இருந்து வந்து நாட்கூலி வேலை செய்து சம்பாதிக்கும் தொழிலாளர்கள் பலரும் கொல்லப்பட்டனர்.

– விடுதலைப்புலிகள் ஆடி 1990


16 ஆம் ஆண்டு
வீரவணக்கம்
ரவி
02.02.2009
இராஜா
07.02.2009
இரவிச்சந்திரன்
07.02.2009
அமரேசன்
08.02.2009
தமிழ்வேந்தன்
18.02.2009
சிவப்பிரகாசம்
21.02.2009
கோகுலகிருஷ்ணன்
25.02.2009
சீனிவாசன்
01.03.2009
எழில்வளவன்
05.03.2009
ஆனந்த்
15.03.2009
இராசசேகர்
17.03.2009
பாலசுந்தரம்
22.03.2009
மாரிமுத்து
22.03.2009
சிவானந்தன்
17.04.2009
சுப்பிரமணி
23.04.2009
தமிழின் இரத்த உறவுக்காய்
தணலிற்கே தம்முயிர் தந்து – தமிழனின்
தன் மானத்தை நிலைநாட்டிய வீரச் செம்மல்களே
எம் தொப்புள்கொடி உறவுதனை
தரணியெங்கும் உணர்த்திட்ட தீரர்களே!
உங்கள் சுடரின் வழியில் எம் பயணம் தொடரும்...
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

# கிளீன் தையிட்டி

17.02.2025

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள திண்ணை விருந்தினர் விடுதியில் இலங்கைக்கான ஐநா அலுவலகம் ஓர் விருந்துபசாரத்தை ஒழுங்குபடுத்தியிருந்தது. இலங்கையில் ஐநாவின் பிரசன்னம் 70 ஆண்டுகளைப் பூர்த்தி செய்கின்றது. இந்த 70ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதமாக அந்த விருந்துபசாரம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஐநாவின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் உட்பட ஐநாவின் கட்டமைப்புகளுக்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரிகளும் அந்த அலுவலகங்களில் வேலை செய்யும் உள்ளூர் அலுவலர்களும் அந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.



மேலும் கட்சித் தலைவர்கள் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், குடிமக்கள் சமூகங்களைச் சேர்ந்தவர்கள், அரச அதிகாரிகள் என்று பலவகைப்பட்டவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். அந்த நிகழ்வில் பேசிய இலங்கைக்கான ஐநாவின் வதிவிட ஒருங்கிணைப்பாளர், சிவில் சமூகங்களை அரசியல் கட்சிகளும் அரசாங்கமும் எதிர் நிலையில் வைத்து பார்க்கக்கூடாது என்று பேசினார்.

இலங்கைத் தீவில் ஐநாவின் பிரசன்னம் 70 ஆண்டுகள். ஆனால் இலங்கைத் தீவில் இனப்பிரச்சினை 70ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறது. தமிழ் மக்கள் ஐநாவுடன் நெருக்கமாக வேலை செய்ய தொடங்கியது 2009க்குப் பின்னிருந்து. அதாவது 15 ஆண்டுகள். அதிலும் குறிப்பாக இனப்பிரச்சினையை தீர்க்கும் நோக்கத்தோடு நிலைமாறு கால நீதியை இலங்கை தீவில் ஸ்தாபிப்பதற்காக உழைத்தது கடந்த 9 ஆண்டுகள். இப்படிப் பார்த்தால் இலங்கைத் தீவில் ஐநாவின் 70ஆண்டுகால பிரசன்னத்தால் இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை. குறிப்பாக 2009க்குப் பின்னரான கடந்த 15 ஆண்டு காலத் தமிழ் அரசியல் எனப்படுவது அதிகபட்சம் ஐநா மைய அரசியலாகவே இருந்துவருகிறது. அதிலும் குறிப்பாக 2015, செப்டம்பர் மாதம் இலங்கை அரசாங்கத்தின் இணை அனுசரணையோடு நிறைவேற்றப்பட்ட நிலைமாறுகால நீதிக்கான ஐநா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திற்குப் பின்னிருந்து தமிழ்க் கட்சிகளில் ஒரு பகுதியும் சிவில் சமூகங்களும் மனித உரிமைக் காவலர்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் நிலை மாறுகால நீதிக்காக அதாவது போரில் ஈடுபட்ட தரப்புகளை பொறுப்புக்கூற வைப்பதற்காக உழைத்து வருகின்றன. ஆனால் அவ்வாறு உழைத்ததன் விளைவாக தமிழ் மக்கள் பெற்றவை என்ன?




கடந்த 2021ஆம் ஆண்டு மனித உரிமைகள் பேரவைக்கு ஒரு கூட்டுக் கடிதத்தை எழுதுவதற்காக சிவில் சமூகங்கள் கட்சிகளை ஒருங்கிணைத்தன. அதற்குரிய இரண்டாவது சந்திப்பு வவுனியாவில் இடம் பெற்றது. இச்சந்தப்பின்போது அதில் பங்கு பற்றிய சுமந்திரன் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார்." 6 ஆண்டுகளாக ஒரு பரிசோதனையைச் செய்தோம், அதில் தோல்வியடைந்து விட்டோம்." ஆறாண்டு காலப் பரிசோதனை என்பது என்ன? அதுதான் 2015ஆம் ஆண்டிலிருந்து நிலைமாறு கால நீதிக்காக உழைத்தமை. நிலைமாறு கால நீதியைப் பொறுத்தவரை கூட்டமைப்பு அதன் பங்காளியாகச் செயல்பட்டது. புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்பில் உள்ள அமைப்புகளும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் நிலைமாறு கால நீதி வேண்டாம், இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதிதான் வேண்டும் என்று கோரிய ஓர் அரசியல் சூழலில், கூட்டமைப்பு நிலைமாறு கால நீதியின் பக்கம் நின்றது. ஆனால் அந்தப் பரிசோதனையில் தாங்கள் தோல்வியடைந்து விட்டதாக சுமந்திரன்-அவர்தான் நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளில் தமிழ்த் தரப்பின் பிரதான பங்காளி-அவ்வாறு கூறினார்.நிலைமாறுகால நீதிச் செயற்பாடுகள் இலங்கைத் தீவில் எதிர்மறை விளைவுகளைத்தான் தந்தன. ஆங்கிலத்தில் அதனை "கவுண்டர் ப்ரொடக்டிவ்"என்று கூறுவார்கள்.



அதாவது நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகள் இலங்கைத் தீவில் தோல்வியடைந்து விட்டன. அதற்குப் பின்னரும் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன. ஐநாவை நோக்கிய தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் பெரும்பாலும் நிறைவேற்றப்படவில்லை. 2021 ஆம் ஆண்டு தமிழ்க் கட்சிகள் ஐநாவுக்கு எழுதிய கூட்டுக் கடிதத்தில் ஒரு சான்றுகளைத் திரட்டும் பொறிமுறையைக் கேட்டிருந்தார்கள். குறிப்பாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியானது அந்தப் பொறிமுறையானது குறுகிய காலத்துக்குள் சாட்சியங்களைச் சேகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. ஆனால் அந்தக் கடிதத்திற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட ஐநாவின் சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான பொறிமுறையானது மிகப் பலவீனமானதாகவே அமைந்தது. அது ஐநா மனித உரிமைகள் பேரவைக்குள் இயங்கும் ஓர் அலுவலகமாக சுருக்கப்பட்டுவிட்டது. இதுதான் கடந்த 15 ஆண்டுகால ஐநா மையத் தமிழ் அரசியலின் தொகுக்



கப்பட்ட விளைவு.

இப்படிப்பட்டதோர் பூகோள அரசியற் சூழலில், திண்ணையில் நடந்த விருந்துபசாரத்துக்கு முதல் நாள் மாலை அதே திண்ணையில் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. ஐநாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியும் ஐநாவின் வெவ்வேறு அலகுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளும் கலந்து கொண்ட மேற்படி சந்திப்பில், தமிழ்மக்கள் மத்தியில் உள்ள குடிமக்கள் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். சந்திப்பில் நிலைமாறு கால நீதியின் தோல்வி குறித்து ஆழமாகப் பேசப்பட்டது. அந்தச் சந்திப்பின் முடிவில் இலங்கைக்குரிய ஐநா வதிவிட ஒருங்கிணைப்பாளரான மார்க் அன்ட்ரே ஃபிரான்ச்சே எல்லாவற்றையும் தொகுத்துப் பதில் சொன்னார்.

அவர் பழக இனிமையானவர்; எளிமையானவர்; வெளிப்படையான ஒரு ராஜதந்திரி. கதைப்போக்கில் சில விடயங்களை நறுக்கென்று சொல்லிவிட்டு போகக்கூடியவர். அவர் தனது தொகுப்புரையில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார். அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்ற பின் அமெரிக்கா மனித உரிமைகள் பேரவையிலிருந்து விலகப் போவதாகத் தெரிகிறது. இலங்கைக்கு எதிரான ஐநா தீர்மானங்களில் அமெரிக்கா பிரதான உந்துசக்தியாக இருந்து வந்திருக்கிறது. இந்நிலையில் இனி வரக்கூடிய ஐநா தீர்மானங்களை இலங்கை அரசாங்கமும் ஐநாவும் இணைந்து நிறைவேற்றக்கூடிய தீர்மானங்களாக இருப்பதற்கான வாய்ப்புகள் குறையக்கூடும். மேலும் இப்பொழுது நடைமுறையில் உள்ள சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகத்தின் செயற்பாடுகளையும் அது பாதிக்கக்கூடும் என்ற பொருள் கொள்ளத்தக்க விதத்தில் அவரது உரை அமைந்திருந்தது.

அமெரிக்கா ஐநா மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலக நேர்ந்தாலும் சுவிட்சர்லாந்து அந்தப் பாத்திரத்தை வகிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் உண்டு.

காசா, உக்ரைன் அழிவுகளின் பின்னணியில், பொதுவாகவே இலங்கை மீதான அதாவது தமிழர் விவகாரத்தின் மீதான ஐநாவின் கவனக்குவிப்பு குறையக்கூடிய வாய்ப்புகள் அதிகம். இவை மட்டுமல்ல உலகத்தின் கவனத்தையும் ஐநாவின் கவனத்தையும் ஏன் கொழும்பின் கவனத்தையும்கூட ஈர்க்கக்கூடிய விதத்தில் தமிழ் அரசியல் தொடர்ச்சியாக நொதிக்கும் ஒன்றதாக, கொந்தளிப்பானதாக இல்லை என்பதும் ஒரு காரணந்தான். இதை இன்னும் கூரான வார்த்தைகளில் சொன்னால், தமது அரசியலை கொந்தளிப்பானதாக உலகத்தின் கவனத்தை ஈர்க்கத் தக்கதாக கொதிநிலையில் வைத்திருக்கத் தமிழ் மக்களால் முடியவில்லை.

இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில், கடந்த புதன்கிழமை தையிட்டியில் நடந்த போராட்டம் ஒப்பீட்டளவில் எழுச்சிகரமானது. தையிட்டியை மையமாகக் கொண்டு இப்பொழுது தமிழ் அரசியல் நொதிக்கத் தொடங்கியுள்ளது. சிறீலங்காவை கிளீன் செய்யப்போவதாகச் செல்லும் ஓர் அரசாங்கத்தை நோக்கி "கிளீன் தையிட்டி" என்று தமிழ்மக்கள் கேட்கிறார்கள். நில ஆக்கிரமிப்புக்கு எதிரான அரசியல் தொடர்ந்து நொதிக்குமா? கொழும்பின் கவனத்தையும் உலகத்தின் கவனத்தையும் தன்னைநோக்கி ஈர்த்து வைத்திருக்க முடியுமா?



முடியுமா என்ற கேள்விக்கே இங்கு இடம் இல்லை. அதை எப்படியாவது செய்து முடிக்க வேண்டும். நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் சிங்களபௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் தீர்க்கப்படாத ஏனைய பிரச்சினைகளுக்கு எதிராகவும் தமிழ்மக்கள் தமது அரசியலில் நொதிக்கச் செய்ய வேண்டும். உலகமும் கொழும்பும் திரும்பிப் பார்க்கத்தக்க எழுச்சிகளை ஒழுங்கமைக்க வேண்டும்.

தையிடியில் புதன்கிழமை திரண்ட மக்கள் ஒரு கட்சியின் ஆதரவாளர்கள் மட்டுமல்ல. அதில் முன்பு அரசாங்கத்தின் பக்கம் நின்ற கட்சிகள், நிலைமாறு கால நீதியை ஆதரித்த கட்சிகள் என்று எல்லா வகைப்பட்ட கட்சிகளும் நின்றன. அது ஒரு திரட்சி. வரலாற்றில் எல்லாத் தேசத் திரட்சிகளும் அப்படிப்பட்டவைதான். "நீ முன்பு அரசாங்கத்தோடு நின்றாய்", "மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அரசாங்கம் காணியை அபகரித்த பொழுது உடந்தையாக நின்றாய்", "நிலைமாறு கால நீதியின் பக்கம் நின்றாய்"... என்றெல்லாம் பழைய தோம்பை இழுத்துக் கொண்டிருந்தால் தேசத்தைத் திரட்ட முடியாது. தேசத் திரட்சிக்குள் எல்லாமும் அடங்கும். அதற்குத் தலைமை தாங்கும் கட்டமைப்பு உறுதியானதாக கொள்கைப் பிடிப்புள்ளதாக இருந்தால் போதும்.

புதன்கிழமை ஏற்பட்ட திரட்சி எல்லா கட்சிகளுக்கும் ஒரு செய்தியை மீண்டும் உணர்த்துகிறது. அது புதிய செய்தி அல்ல. கடந்த 15 ஆண்டுகளாக கற்கத் தவறிய செய்தி. முள்ளிவாய்க்காலில் இருந்து கற்றுக்கொள்ளாத செய்தி. அது ஒரு தேர்தல் தோல்வியிலிருந்துதான் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு செய்தியல்ல.

கடந்த 15 ஆண்டுகளாக தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்ட எல்லாப் பெரிய எழுச்சிகளும் ஒரு கட்சிக்குரியவை அல்ல. அதில் பல கட்சிகள் இருந்தன. குடிமக்கள் சமூகங்கள், மக்கள் அமைப்புக்கள் இணைந்தன. எனவே இனிமேலும் அப்படித்தான் இருக்கும். தையிட்டி விவகாரத்தைத் தொடர்ந்து கவனக் குவிப்பில் வைத்திருந்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். சுமார் 20 மாதங்களுக்கு மேலாக அந்தப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்த அக்கட்சியால் முடியவில்லை. ஆனால் நடந்து முடிந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் விளைவாக அது சூடுபிடித்திருக்கிறது. விரைவில் நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபை தேர்தலை நோக்கியும் கட்சிகள் உழைக்கின்றன என்பது உண்மை. கட்சிகள் அப்படித்தான் சிந்திக்கும். ஆனால் யார் எதற்காக உழைக்கிறார்கள் என்பது இங்கு பிரச்சனையில்லை. ஒரு ஆக்கிரமிப்புக்கு எதிராக தேசமாகத் திரள முடிந்தால் அது வெற்றியே. கடந்த 15 ஆண்டுகளில் நிகழ்ந்த "ஏழுக தமிழ்கள்" "பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி" வரையிலுமான எழுச்சி, ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நோக்கிக் குவிந்த வாக்குகள்... எல்லாமும் பல கட்சிகளும் மக்கள் அமைப்புகளும் சேர்ந்து திரட்டியவைதான். அவை யாவும் கூட்டுச் செயற்பாடுகள்தான். எனவே தையிட்டிப் போராட்டம் தமிழ் கட்சிகளுக்கு மீண்டும் மீண்டும் உணர்த்தியிருப்பது அதனைத்தான். கட்சிகளைக் கடந்து ஒரு திரட்சியை ஏற்படுத்துவது என்றால், அதற்கு பல கட்சிகள் சம்பந்தப்பட வேண்டும்.

அப்படிப்பட்ட திரட்சிகள்தான் ஒப்பீட்டளவில் ஐநாவையும் உலகத்தையும் கொழும்பையும் தமிழ் மக்களை நோக்கித் திருப்பும். தமிழர்கள் தமது அரசியலை நொதிக்கச் செய்ய வேண்டும். கொதிக்கச் செய்ய வேண்டும். கொந்தளிக்கச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தேசத் திரட்சியைப் பலப்படுத்தலாம். தமிழ்த்தேசிய வாக்குகள் தமிழ்த்தேசியப் பரப்புக்கு வெளியே சிந்தப்படுவதையும் தடுக்கலாம்.பாலியல் வன்புணர்வுக்கு ஆளானதாகவும் அவர் கூறினார்.

நன்றி: நிலாந்தன்






# முதலாம் ஆண்டு நினைவுப் பகிர்வு



மண்ணில்
04.03.1938

விண்ணில்
23.02.2024

## அமரர்
## திரு. பாலசுந்தரம் சீவரட்ணம்

[காரைநகரை பிறப்பிடமாகவும், உருத்திரபுரம் – தமிழீழம், மார்க்கம் – கனடாவை வதிவிடமாகவும்]

அன்பின் திருவுருவாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் சிகரமாய்
சுயமரியாதைக் கொள்கையின்
சுடர் விளக்காய்
வாழ்ந்து
எங்கள் அனைவருக்கும்
வழிகாட்டியாய்
குடும்பத்தை வழிநடத்தி
அரும் பணியாற்றிய
எங்கள் அன்புத் தெய்வமே
உங்கள் பிரிவு
எம்மை ஆளாத்துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட
உங்கள் நினைவும்
பாசமும் எம்மை விட்டு
அகலாது என்றும்...!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தகவல்: சந்திரதேவி - மனைவி, ரமேஷ் - மகன், பிரகாஷ் - மகன், குமுதினி - மகள்

தொடர்புகளுக்கு: 647-871-2337

– நினைவுகளுடன் குடும்பத்தினர் –

# தமிழீழத்தில் இரத்தக் கறைபடிந்த நாட்கள்

**13.06.1990**
அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒருபிள்ளையார் கோயிலைக் குண்டு வைத்துத் தகர்த்த சிங்களப் படையினர், அக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதியிலும், அம்பாறை மத்திய முகாமைச் (Central Camp) சுற்றியுள்ள பகுதியிலும் 100ற்கும் அதிகமான தமிழ் மக்களை வெட்டிக் கொலை செய்தனர்.

**15.06.1990**
திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள ஜெயபுர என்னும் இடத்தில் பஸ் ஒன்றில் சென்று கொண்டிருந்த 13தமிழ்மக்களை சிங்கள இராணுவத்தினர் வழி மறித்துக் கொலைசெய்தனர்.




**16.06.1990**
கடந்த 3 நாட்களாக திருக்கோணமலை நகரப்பகுதியில் 100ற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை சிங்கள இராணுவத் தினரும், சிங்களக் காடையர்களுமாகச் சேர்ந்து வெட்டிக் கொலை செய்தனர்.

**18.06.1990**
திருக்கோணமலையின் எல்லைக் கிராமங்களான கப்பற் துறை, வெள்ளைமணல், கம்பர்மலை ஆகிய ஊர்களின் மீது சிங்கள முப்படைகளும் கடந்த 3 தினங்களாக நிகழ்த்திய தாக் குதலில் 40ற்கும் அதிகமான தமிழ் மக்கள் படுகொலை செய்யப் பட்டார்கள்.

**18.06.1990**
திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சீனன்குடா என்னும் இடத்தில் 40 தமிழ் மக்கள் சிங்களக் காடையர்களால் வெட்டிக் கொல்லப்பட்டார்கள்.

**19.06.1990**
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஊற்றுச்சேனை என்னும் இடத் தில் 9 தமிழ் மக்கள் சிங்களக் காடையர்களினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

**20.06.1990**
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கொக்குவில் என்ற இடத்தில் உலங்குவானூர்தி ஒன்று குண்டு வீசித்தாக்கிய போது ஒரு வீட்டிலிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உட்பட 8 தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

**21.06. 1990**
திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சீனன்குடா என்ற இடத்தில் சிங்கள இராணுவத் தினர் 14 தமிழ் மக்களை எரிகின்ற டயரில் உயிருடன்போட்டுக் கொலை செய்தனர்.

**21.06.1990**
திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய் என்ற இடத் தில் 13 தமிழ் மக்களை சிங்கள இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

**22.06.1990**
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காரைதீவு எனும் கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 பேர் உட்பட 35 தமிழ் மக்களை சிங்கள இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். மேலும், 4 தமிழர்களை வெட்டிக் கொன்று கிணற்றுக்குள் போட்டனர்.

**22.06.1990**
மட்டக்களப்பு மாவட்டத்தி ள்ள சம்மாந்துறை என்னும் இடத் தில், சிங்கள இராணுவத்தினர் 30ற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை சுட்டுக்கொன்றனர். மேலும், 3 தமிழர்களை எரிகின்ற டயரில் உயிருடன் போட்டுக் கொலை செய்தனர்.

**23.06.1990**
திருக்கோணமலைமாவட்டத்திலுள்ள 3ம் கட்டை, 6ம் கட்டை, சாம்பல்தீவு ஆகிய ஊர்களில் சிங்களப்படைகளினாலும், சிங்களக்காடையர்களினாலும் படுகொலை செய்யப்பட்ட 35 தமிழ் மக்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

**23.06.1990**
திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள நிலாவெளி எனும் ஊரில், செல்வம்மில்லில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்த தமிழ்மக்கள் மீது சிங்களவான் படை நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் 35 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

**25.06.1990**
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை என்ற கிராமத் தில் ஏறக்குறைய 85 தமிழ் மக்களை சிங்களப் படையினர் வெட்டியும், சுட்டும் கொலை செய்தனர்.

**26.06.1990**
அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை என்ற இடத்தில் முஸ்லிம் காடையர்களும் சிங்களக் காடையர்களும், சேர்ந்து 75ற்கும் அதிகமான தமிழ் மக்களை உயிருடன் டயரில் போட்டு எரித்துக் கொலை செய்தனர்.

**30.06.1990**
அம்பாறை மாவட்டத்திலுள்ள வீரமுனை என்னும் கிராமத்தில் சிங்களஇராணுவத்தினர் 84 தமிழ் இளைஞர்களை சுற்றி வளைத்துக் கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்று சுட்டுக் கொலை செய்தனர்.

**01.07.1990**
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை என்ற கிராமத் தில் 57 தமிழ் மக்களை சிங்களக் காடையர்கள் வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

**05.07.1990**
திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள, மூதூர்ப் பிரதேசத்தில் சிங்களப் படைகள் விமானத்திலிருந்தும், உலங்கு வானூர் திகளிலிருந்தும் (ஹெலி) நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் 30ற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 40 ற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.




**06.07.1990**
திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள மட்டக்குளி, நல்லூர் ஆகிய இடங்களில் 10 தமிழ்ப் பெண்களை பாலியல் வன் முறைக்கு உள்ளாக்கிய சிங்கள் இராணுவத்தினரும் ஊர் காவல் படையினரும், அப்பெண்களுடன் சேர்த்து 30 தமிழ் மக்களை கழுத்தில்வெட்டிப் படுகொலை செய்தனர்.

**07.07.1990**
திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய் என்ற இடத்தில் 12 முஸ்லிம் மக்கள் உட்பட 24 தமிழர்களை முஸ்லிம் காடையர்களும், சிங்களக் காடையர்களுமாகச் சேர்ந்து சுட்டுக்கொலை செய்து விட்டு, டயர் போட்டு எரித்தனர்.

**07-10.07.1990**
இத் திகதிகளுக்கு உட்பட்ட நாட்களில் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா என்ற இடத்தில் 8 தமிழ் மக்களை சிங்களக் காடையர்களும், முஸ்லிம் காடையர்களு மாகச் சேர்ந்து உயிருடன் டயர்போட்டு எரித்துக் கொலை செய்தனர்.

**07-10.07.1990**
இத் திகதிகளுக்கு உட்பட்ட நாட்களில் திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள வீரமாநகர் எனும் கிராமத்தில் சிங்களக் காடையர்களினால், 4,5 வயதுக் குழந்தைகள் உட்பட 35 தமிழ்மக்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

**10.07.1990**
அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை என்ற இடத்தில் கறுப்பு உடை அணிந்த சிங்களக் கொலைக்கும்பலினாலும், முஸ்லிம் காடையர்களினாலும் 31 தமிழ் மக்கள் வெட்டிக் கொல்லப்பட்ட பின், தீ வைத்து எரிக்கப்பட்டனர்.

**11.07.1990**
வடபகுதியிலிருந்து தமிழ் அகர்களை ஏற்றிக் கொண்டு தமிழகம் சென்று கொண்டி குந்த படகு மீது சிங்களக் கடற்படையினர் பீரங்கியால் தாக்கியபோது 21 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.


ஆர். பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில்

**12.07.1990**
திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள நிலாவெளி என்ற இடத்தில் சிங்களப்படையினர் 35 தமிழ் மக்களைக் கைது செய்து, பின்னர் சுட்டுக் கொலை செய்தனர்.

**13-14.07.1990**
திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள நிலாவெளி எனும் ஊரில் அகதி முகாம் ஒன்றிலிருந்து சிங்களப்படை யினரால் கைது செய்யப்பட்ட 14 தமிழ்மக்கள் சுட்டுக்கொலை செய்யப் பட்டனர். இவர்களில் 2 பெண்கள் பாலியல்வன் முறைக்கு உள்ளாக்கப்பட்ட பின் கொலைசெய்யப்பட்டனர்.

**14.07.1990**
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாடறுத்தமுனை என்ற கிரா மத்தில் சிங்களப்படையினரால் கைது செய்யப்பட்டிருந்த 28 தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டு, எரிக்கப்பட்டனர்.

**14.07.1990**
வட பகுதியில் இருந்து தமிழகத்தின் இராமேஸ்வரம் நோக்கி அகதிகளரகச் சென்று கொண்டிருந்தவர்களின் படகு ஒன்றின் மீது சிங்களக் கடற் படையினர் நடாத்திய பீரங்கித் தாக்குதலில் 24 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களின் சடலங்கள் யாழ்ப்பாணக் கரைகளில் ஒதுங்கின.

**14.07.1990**
யாழ்ப்பாண நகரத்தின் மீது சிங்கள வான்படையின் குண்டு வீச்சுத் தாக்குதலில் 5 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். 6 பேர் காயமடைந்தனர்.

**16.07.1990**
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்கட்டிச்சோலை. முனைக் காடு ஆகியகிராமங்கள் மீது சிங்கள வான்படையினர் "அவ்ரோ" விமானத்திலிருந்து மேற் கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் 10 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 10 பேர் படுகாயமடைந்தனர்.




**17.07.1990**
மட்டக்களப்பு தொலைத் தொடர்பு திணைக்களத்துக்கு முன் னால் 9 தமிழ் மக்களின் உடல்கள் சிங்கள இராணுவத்தால் டயர் போட்டு எரிக்கப்பட்டன.

**19.07.1990**
மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிந்து கருகிய நிலையில் 35 தமிழ் மக்களின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பழுகாமத்தில் 09 சடலங்களும். கோவில் போரைதீவில் 12 சடலங்களும், பெரியபோரைதீவில் 08 சடலங்களும், வெள்ளாவெளியில் 05 சடலங்களும், கற்சேனையில் ஒரு சடலமுமாக இம் 35 சடலங்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

- விடுதலைப்புலிகள் ஆடி 1990

முதலாம் ஆண்டு

# வீரவணக்கம்







ஈழ மண்ணில்
28.04.1969

இந்தியச் சிறையில்
28.02.2024

## சாந்தன்

## தில்லையம்பலம் சுதேந்திரராஜா

உடுப்பிட்டி, யாழ்ப்பாணம் – தமிழீழம்

செய்யாத குற்றத்திற்காக 32 ஆண்டுகள்
தண்டனை அனுபவித்து சாகடிக்கப்பட்ட
சாந்தன்
அவர்களுக்கு
எமது கண்ணீர் வணக்கம்

# மட்டக்களப்பில் மேய்ச்சல் தரை அபகரிப்பு: சிங்களப் பிரதிநிதிகளை உருவாக்கும் சதி...!

பா. அரியநேத்திரன்

17.02.2025

கிழக்கு மாகாணத்தில் பால்தரும் எருமை, பசுமாடுகள் ஏறக்குறைய 101,726 காணப்படுகின்றன. இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறக்குறைய நான்கு இலட்சம் எருமை, பசு மாடுகள் உள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியான பொலனறுவை மாவட்டங்களின் எல்லை பகுதியாக மயிலத்தமடு மற்றும் மாதவணை பிரதேசங்கள் காணப்படுகின்றன. இப்பகுதிகள் வனப் பகுதிக்கு மத்தியில் அமைந்துள்ளன. பட்டிப்பளை பிரதேசசெயலக பிரிவு கெவிளியாமடு காத்தமல்லியார் சேனை வெட்டிப்போட்டசேனை விக்சிச்தோட்டம், மணல் ஏற்றம், ஆகியபகுதிகளிலும் மேய்ச்சல் தரைகள் உள்ளன. ஊர் காவல்படையினர் உதவியுடன் வெளிமாவட்ட பொலனறுவை, அம்பாறை சிங்களவர்கள் பயிர்செய்கை என்ற போர்வையில் அத்துமீறி குடியேற்றப்படுகிறார்கள். பண்ணையாளர்களுக்கெதிரான செயற்பாடுகளைத் தடுப்புக்குரிய முயற்சிகளும், கவனயீர்ப்பு போராட்டங்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் நடை பெற்றுக் கொண்டே இருக்க அத்துமீறல்களும் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன.

தமது கால் நடைகளைத் தேடிச் சென்ற பண்ணையாளர்கள் தாக்கப்படுவார்கள் கைது செய்யப்படுவார்கள் பண்ணை நடவடிக்கைகளுக்காக அமைத்திருக்கும் குடிசைகள் நாசம் செய்யப்படும் கால்நடைகள் கொல்லப்படும் கவரப்பட்டு கப்பம் கோரப்படும். இவ்வாறு பல இன்னல்களை அனுபவித்தபடியே, தங்களது கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தின் பண்ணையாளர்கள் இருக்கிறார்கள்.

உண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரைகளில் அத்துமீறி சிங்களவர்களை குடியேற்றுவதற்கான நோக்கம் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே தமிழர்கள் கூடுதலாக வாழும் மாவட்டமாகும். 2012, உத்தியோக பூர்வ கணக்கெடுப்பின் புள்ளி விபரத்தின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் 72.61%, இஷ்லாமியர் 25.49%, சிங்களவர் 1.17%, பரங்கியர் 0.53% ஏனையோர் 0.21% வீதமும் வாழ்கிறார்கள். 2012க்கு பின்னர் இலங்கையில் உத்தியோகபூர்வ கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை.

சிங்களவர்களை 1.17 % வீதத்தில் இருந்து அதிகரிக்கவே சிங்கள குடியேற்றம் நடைபெறுகிறது. அதன்மூலம் தமிழர்களின் விகிதாசாரத்தை குறைக்கவும், எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள மக்கள் பிரதிநிதிகளை உருவாக்கவும் மேற்கொள்ளும் நீண்ட கால சதித்திட்டத்தின் வெளிப்பாடகவே இதனை பார்க்க முடிகிறது.

ஈழவிடுதலை ஆயுத போர்க்காலத்தில் இவ்வாறான அத்துமீறல்கள் காணப்படவில்லை அப்போது விடுதலைப்புலிகளின் நடமாட்டம் காரணமாக அத்துமீறிய சிங்கள குடியேற்றங்கள் இப்பகுதிகளில் இருந்ததில்லை, போர் முடிந்த கையோடு 2009, மே,18, க்கு பின்னரே அத்துமீறிக் குடியேற்றம் தொடர்கிறது. இவர்களை வெளியேற்றுவதற்கு கிழக்கு முதலமைச்சர் ஆளுநர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அப்போது பயனளிக்கவில்லை. 2015இல் ஆட்சி மாற்றத்தையடுத்து 2016இல் அத்துமீறல் செய்த 99 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதோடு, நீதிமன்றக் கட்டளையின் அடிப்படையில் அவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டார்கள். இந்த நடவடிக்கைகள், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் நடைபெற்றன.




கிழக்கு மாகாண சபை 2017 செப்டெம்பரில் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அத்துமீறுவோரின் நடவடிக்கைகள் மீண்டும் நிகழ ஆரம்பித்தன. இப்போது வரை தடுத்து நிறுத்த முடியவில்லை அது பரவிக்கொண்டே இருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரை இல்லாத நிலையில், பல தடவைகளில் நிரந்தரமான மேய்ச்சல் தரைக்காக வர்த்தமானி அறிவித்தலை வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அது திட்டமிட்டு அரசால் நிறைவேறாது போயிருக்கிறது. மகாவலி அதிகாரசபையும் அதனை தடுக்கிறது.

'நாமெல்லோரும் இலங்கையர்கள்' என்ற அடிப்படையிலும், இலங்கையர் எல்லோர் தொடர்பிலும் சட்டங்கள் பாராபட்சமின்றிப் பிரயோகிக்கப்பட வேண்டும். ஆனால் பார பட்சமாகவே கடந்த ஆட்சிகளில் எல்லாம் இது நடந்தது. தற்போது தேசிய மக்கள் சக்தி புதிய ஜனாதிபதியாக அநுர பதவி ஏற்று 159, பெரும்பான்மை ஆசனங்களுடன் ஆட்சியில் உள்ளபோதும் "கிளீன் சிறீலங்கா" என்ற கோஷத்தால் மேய்ச்சல் தரைக்கான பிரச்சினை தீர்க்கப் படவில்லை. மாறாக மேய்ச்சல் தரைகளில் இருந்து மாடுகளை கிளீன் செய்வதையே காணமுடிகிறது. பொருளாதாரத்தை முதன்மைப்படுத்தும் ஜனாதிபதி அநுர கால் நடைகள் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அடிப்படை பிரச்சினையாக உள்ள மேய்ச்சல் தரை தீர்க்கப்படாமல் தொடருமானால் பால் உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்படும்.




கடந்த 2024ஆம் ஆண்டு மட்டும் 1,750 க்கும் மேற்பட்ட மாடுகள் கொல்லப்பட்டும், பிடிக்கப்பட்டும், சித்திரவதைகளுக்கு உள்ளாகியும் உள்ளன.

1974ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்தப்பட்டு வரப்படும் பிரதேசமே மயிலத்தமடு, மாதவணை, கெவிளியாமடு பிரதேசங்களாகும். மாதவணை, புதிய மாதவணை, மயிலத்தமடு, மாந்திரியாற்றுப் பகுதி என்னும் இடங்களிலுள்ள 3,000 ஏக்கர் மேய்ச்சல் தரைக்காணிகளை பொலநறுவை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு 2014ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் விவசாயச் செய்கைக்கு வழங்குவதற்கு வனவள திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்ததாக அறிய முடிகிறது.

அது பல்வேறு முயற்சிகளால் நிறுத்தப்பட்டாலும், கிழக்கு ஆளுநரால் 2024, கடந்த வருடத்தில் மீண்டும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டது. மேய்ச்சல் தரை நிலங்களை விவசாயத்துக்கு வழங்கும் திட்டத்தைத் தடுக்கும் வகையில் தமிழ் அரசியல் வாதிகளால் மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகளின் பின்னர், நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்குதாக்கல் செய்து நீதிமன்றம் தடுத்தாலும் அதை நடைமுறைப்படுத்த பொலிசாரும் அசமந்த போக்கை கடைப்பிடிக்கின்றனர்.

ஜனாதிபதி ரணிலின் காலத்தில் பண்ணையாளர்கள் தொடர் போராட்டங்களை சித்தாண்டி சந்தியில் முன் எடுத்த நிலையில் ஜனாதிபதி ரணில் செங்கலடி மத்திய கல்லூரிக்கு வருகை தந்து 2023 செப்டம்பர் 08, கொம்மாதுறையில் இடம்பெற்ற கவன ஈர்ப்பு போராட்டத்தின் பின்னர் ஏறாவூர் பொலிசார் பண்ணையாளர்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், ஞா.ஸ்ரீநேசன், சீ.யோகேஷ்வரன், ஊடகவியலாளர்களான கிருஷ்ணபிள்ளை, சஜீதரன், மற்றும் பொது அமைப்பு பிரதிநிதிகளை சேர்ந்த 32, பேருக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளனர், இதுவரை 15, மாதங்களாக கடந்த 2023, நவம்பர், 17, தொடக்கம் 2025, ஜனவரி 22, வரை 8, தவணை வழக்கு இடம்பெற்றும் முடிவுகள் இல்லை 9, வது தவணை எதிர்வரும் 2025 ஏப்ரல்,22இல் மீண்டும் உள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்களுக்கு மாடுகள் மேயும் மேய்ச்சல் தரையும் இதுவரை இல்லை, மேய்ச்சல் தரை மீட்புக்காக கவன ஈர்ப்பு நடத்திய 32, பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் முடிவுறவில்லை தொடர்ந்து செல்லும் அவலமாகவே உள்ளது.

www.sangathamil.ca



# தமிழீழ விடுதலை வரலாற்றில் மார்ச்



**தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்ப ஏடான "விடுதலைப்புலிகள்" இதழ் முதலாவது குரல் வெளியீடு:**
தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான "விடுதலைப் புலிகள்" இதழ் முதன் முதலாக 26.03.1984 இல் தனது முதலாவது குரலை வெளியீடு செய்தது.



**லெப். கேணல் இம்ரான் வீரச்சாவு:**
யாழ். மாவட்டத் தளபதி லெப். கேணல் இம்ரான் (சங்கரப்பிள்ளை சதாதந்தன் - 20.01.1961, கொக்குவில் - யாழ்) 03.03.1988 அன்று உரும்பிராய்ப் பகுதியில் இந்தியப் படையினரின் முற்றுகையின் போது இடம்பெற்ற சமரில் வீரச்சாவு. கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் இவருடைய நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.



**இந்தியப் படையால் வஞ்சகமான முறையில் 13.03.1988 அன்று படுகொலை செய்யப்பட்ட லெப். கேணல் ஜொனி :**
விடுதலைப் புலிகளின் முதன்நிலை தளபதிகளுள் ஒருவரான ஜொனி (விக்னேஸ்வரன் விஜயகுமார் - 21.05.1962, பருத்தித்துறை) பேச்சுவார்த்தைக்கென இந்தியாவில் இருந்து இந்தியப்படைகளால் அழைத்துவரப்பட்டு, முல்லைத்தீவு தேவிபுரத்தில் வைத்து இந்தியப் படையால் வஞ்சகமான முறையில் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். எள்ளாங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் இவருடைய நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**அன்னை பூபதி அவர்களின் உண்ணா நோன்பு போராட்ட ஆரம்ப நாள்:**




இந்திய அரச படைகளின் கொடுமைகளுக்கெதிராக சாகும் வரையிலான உண்ணா நோன்பு ஒன்றினை அன்னை பூபதி அவர்கள் 19.03.1988 அன்று தொடங்கினார்.

அவர்கள் இரண்டு கோரிக்கையை வைத்து இந்திய அரசுக்கெதிராக உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினர். அவையாவன,
1. உடனடியாக யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டும்.
2. புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டும்.

**தமிழீழத்தை விட்டு இந்தியப் படைகள் வெளியேறிய நாள்:**



29.07.1987 அன்று தமிழீழ விடுதலைப் போராட் டத்தை வேரோடு பிடுங்கி எறிவதை இலக்காகக் கொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன்மூலம் பல ஆயிரக் கணக்கான இந்தியப் படைகள் தமிழீழத்தை ஆக்கிரமித்தன. இந்தியப் படையின் கொடுமையால் சுமார் 8,000 த்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப் பட்டனர். 24.03.1990 அன்று இந்தியப் படைகள் தமிழீழ மண்ணை விட்டு வெளியேறின.



**மனிதக்குண்டுத் தாக்குதல்:**
சிங்கள தேசத்தின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜெயரட்ன 02.03.1991 அன்று சிறீலங்கா தலைநகர் கொழும்பில் மனிதக் குண்டுத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்டார்.

**கரும்புலி மேஜர் டாம்போ வீரச்சாவு –19.03.1991:**




மன்னார் - சிலாபத்துறை சிங்கள இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மிகப் பெரும் தாக்குதல் நடவடிக்கையின் போது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு மேஜர் டாம்போ (காசிப் பிள்ளை தயாபரன் - 17.08.1967, நாச்சிக்குடா - மன்னார்) வீரச்சாவடைந்தார்.



**லெப். கேணல் ரவி வீரச்சாவு – 17.03.1994:**
வன்னி மாவட்ட சிறப்புத் தளபதியான லெப். கேணல் ரவி (குமாரவேல் ரவீந்தரகுமார் - 22.10.1964, விசுவமடு) இராணுவ ஒத்திகை ஒன்றில் தவறுதலாக கைக்குண்டு வெடித்ததில் வீரச்சாவடைந்தார்.

**சுண்டிக்குளம் கடற் சமரில் லெப் கேணல் நிமல் மற்றும் லெப். கேணல் எழில்வண்ணன் உட்பட 20 போராளிகள் வீரச்சாவு:**



கடற்கரும்புலிகளின் சாள்ஸ் படையணியின் தளபதியான இவர் 30.03.1996 அன்று சுண்டிக்குளம் கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையுடனான கடற் சமரில் தளபதி நிமல் (பரமநாதன் இளங்கோவன் - 30.03.1975, வல்வெட்டித்துறை), தளபதி எழில்வண்ணன் (சிவலிங்கம் முரளிதாஸ் - 13.10.1971, பருத்தித்துறை) ஆகியோர் தளபதிகளுடன் இத்தாக்குதலில் இரண்டு கடற் கரும்புலிகள் உட்பட 20 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

**சுண்டிக்குளம் கடற்பரப்பில் கடற்கரும்புலித் தாக்குதல்:**



தமிழீழ கடற்பரப்பிற்குள் உட்பிரவேசிக்கும் சிங்கள கடற்படையின் மனோபலத்தை உடைக்க சுண்டுக்குளம் கடற்பரப்பில் கடற்புலிகள் தொடுத்த சமருக்கு பலம் சேர்த்து எதிரியின் மனோ பலத்தை உடைத்தெறிந்த சமரில் 30.03.1996 அன்று கடற்கருப்புலிகளான கப்டன் இளையவள், மேஜர் ஜெகநாத் ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.



**மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவுப் பகுதியில் உள்ள சிறீலங்கா படைமுகம் மற்றும் கட்டளைத் தலைமையகம் மீதான தாக்குதல் - 06.03.1997:**
மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவுப் பகுதியில் 06.03.1997 அன்று சிறீலங்கா படைமுகாம் மற்றும் கட்டளைத் தலைமையகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலன் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். கேணல் பாலேந்திரா (வேல்முருகு ரவி - 05.02.1973, கிரான்) உட்பட84 போராளிகள் வீரச்சாவு.



**லெப். கேணல் மதனா வீரச்சாவு - 06.03.1997:**
மட்டக்களப்பில் மகளிர் படையணியை கட்டி வளர்ப்பதில் இவரது பங்கு குறிப்பிடத்தக்கது. மட்டு மாவட்டத்தின் மகளிர் படையணியான அன்பரசி படையணியின் தளதபியாக செயலாற்றிய மதனா (கருணாதேவி நாகேந்திரம் - 06.05.1975, மட்டு) 06.03.1997 அன்று கஜபாகு சிறப்புப் படையணியினர் நிலைகொண்டிருந்த வவுணதீவு சிறீலங்கா இராணுவ முகாம் தாக்குதலில் வெற்றிகரமாகப் பணியினை முடித்த சமயம் எதிரியின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவடைந்தார்.

**06.03.1997 அன்று திருகோணமலை சீனனகுடா சிறீலங்கா விமானப்படைத் தளம் மீதான கரும்புலித் தாக்குதல்:**



06.03.1997 அன்று திருகோணமலையில் அதியுயர் பாதுகாப்புடன் அமைந்திருந்த சீனன்குடா சிறீலங்கா விமானப்படைத் தளத்தினுள் புகுந்து கரும்புலிகளிள் அணி வை12 ரக விமானத்தையும் 2 விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் தகர்த்தெறிந்தனர். எதிரியின் குகைக்குள்ளேயே எதிரியின் பலத்தை உடைத்து கரும்புலிகளான மேஜர் சிற்றம்பலம் (இராஜேந்தரம் சபேஸ்குமார் - யாழ்), கப்டன் விஜயரூபன் (கந்தசாமி சிவகுணம் - மட்டு), கப்டன் நிவேதன் (சுப்பிரமணியன் சபேஸ்வரன் - மட்டு) ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

**குடாநாட்டிற்கான சிறீங்கா கடல் வழி விநியோகப் பாதை மீதான கடற் கரும்புலித் தாக்குதல் – 24.03.1997:**



24.03.1997 அன்று திருமலையிலிருந்து யாழ். குடாநாட்டிற்கு ஆயுதங்கள் வெடிபொருட்கள், மற்றும் இராணுவத்திற்கு அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிக்கொண்டு சென்ற கடற்படைத் தொடரணி மீது கடற்கரும்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். குடாநாட்டுப் படைகளின் இருப்புக்கு அச்சுறுத்தலான தாக்குதலை நடாத்தி வீரச்சாவடைந்த கரும்புலிகளுள் மேஜர் தமிழ்மாறன் (இராசையா மதியழகன் - 08.05.1976, ஊர்காவற்துறை), மேஜர் நாவலன் (கந்தையா முருகையா - 15.10.1972, கிளிநொச்சி), கப்டன் வானதி (கலைவாணி பாலராஜா - 02.01.1977 , கிளிநொச்சி), கப்டன் கலைவள்ளி (கசீந்திரா ஆறுமுகம் - 29.06.1976, யாழ்ப்பாணம்) ஆகியயோரும் அடங்குவர்.

**திருகோணமலை துறைமுகத்தினுல் கரும்புலித் தாக்குதல் – 11.03.1998**




திருகோணமலை துறைமுகத்தின் அதியுயர் பாதுகாப்பு வியூகத்தை உடைத்தெறிந்து 11.03.1998 அன்று உள்நுழைந்து சிறுத்தைப் படையணியின் கடலணியைச் சேர்ந்த கரும்புலிகளான கப்டன் ஆர்வலன் (செபஸ்ரியான் அகஸ்ரியான் - 07.01.1978, நுவரெலியா - சிறீலங்கா), கப்டன் இசையாளன் (சுந்தரராஜன் ரவிராஜ் - 07.09.1978, கிளிநொச்சி) ஆகிய போராளிகள் துறைமுக ரோந்துப் படகு ஒன்றை மூழ்கடித்து வீரவரலாறானார்கள்.

**நெடுந்தீவுக் கடற்பரப்பில் 12.03.2000 அன்று எதிர்பாராமல் நடந்த மோதலின் போது வீரச்சாவடைந்த கடற்கரும்புலிகள்:**





நெடுந்தீவுக் கடற்பரப்பில் 12.03.2000 அன்று கடற்பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை சிறீலங்கா கடற்படையுடன் எதிர்பாராமல் ஏற்பட்ட மோதலில் எதிரியின் அதிவேக டோரா பீரங்கிப் படகிற்கு சேதத்தை ஏற்படுத்தி வீரச்சாவடைந்த கரும்புலிகளுள் மேஜர் பரதன் (சதாசிவம் சந்திரகுமார் - 27.07.1974, திருக்கோவில்,அப்பாறை), மேஜர் மதன் (சிதம்பரநாதன் சிவாஜிநாதன் - 29.01.1979, மூதூர், திருமலை), கப்டன் தினேஸ் (வயிரவநாதன் ஜனன், - 23.05.1977, கீரிமலை,யாழ்ப்பாணம்) ஆகியோரும் அடங்குவர்.

**ஓயாத அலைகள் – 03 நடவடிக்கையில் பளையில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இரானுவத் தளம் மீதான கரும்புலித் தாக்குதல் – 26.03.2000:**




ஓயாத அலைகள் -03 தாக்குதலில் 26.03.2000 அன்று பளையில் நிலைகொண்டிருந்த சிறீலங்கா இராணுவ தள மையப்பகுதியில் அமைந்திருந்த ஆட்டிலெறிகளையும், ஆயுதக் களஞ்சியங்களையும் தகர்ப்பில் கரும்புலிகளான மேஜர் சுதாஜினி (தெய்வேந்திரம்பிள்ளை ஜெயசுகி - 03.02.1976, வரணி, யாழ்ப்பாணம்), மேஜர் தனுசன் (தங்கராசா இலங்கேஸ்வரன் - 25.01.1979, மூதூர், திருமலை) வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

**ஓயாத அலைகள் – 03 நடவடிக்கையில் யாழ். இயக்கச்சிப் பகுதியில் வீரச்சாவடைந்த கரும்புலிகள் – 31.03.2000:**





ஓயாத அலைகள் -03 தாக்குதலில் 31.03.2000 அன்று சிறீலங்கா படையினரின் ஆட்லறித் தளத்தினுள் ஊடுருவி தகர்த்தழித்துவிட்டு வெற்றியோடு தளம் திரும்பிக்கொண்டிருந்தவேளை யாழ். இயக்கச்சிப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கரும்புலிகளான மேஜர் ஆந்திரா (விநாயகமூர்த்தி சுதர்சினி - 03.03.1977, தாளையடி, யாழ்ப்பாணம்), கப்டன் சத்தியா (கிருஷ்ணமூர்த்தி முகுந்தினி - 06.12.1978, கரவெட்டி, யாழ்ப்பாணம்), மேஜர் மலர்விழி (பாலகிருஷ்ணன் சங்கீதா - 24.10.1978, வண்ணார்பண்ணை, யாழ்) ஆகியோர் வீரச் சாவடைந்தனர்.

**தமிழீழ போரியல் வரலாற்றில் சிறப்பு மிக்கதான குடாரப்பு தரையிறக்கம்:**



தமிழீழ போரியல் வரலாற்றில் சிறப்பு மிகக்தான குடாரப்பு தரையிறக்கம் 26.03.2000 அன்று நடைபெற்றது. இதன்மூலம் தமிழீழ தேசத்தின் 240 வருடகாலம் அடிமைச்சின்னமாக விளங்கிய ஆனையிறவுப் பெருந்தளம் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டது.

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான வணிகக் கப்பல் ஒன்றை சிங்கள கடற்படை தாக்கி நிர்மூலமாக்கியது:**




சமாதான முயற்சியை பெரும் நெருக்கடிக்குள் தள்ளும் விதமாய், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான எம்.ரி. கொய் வணிகக் கப்பல் ஒன்றை, சர்வதேச கடற்பரப்பில் வைத்து, சிங்கள கடற் படை தாக்கி நிர்மூலமாக்கியது. திருகோணமலையில் இருந்து 220 கடல்மைல் தொலைவில், இச் சம்பவம் 10.03.2003 அன்று இடம்பெற்றது. கப்பல் கப்டன் உட்பட பதினொரு விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர்.

**தமிழீழ வான் புலிகளின் அறிமுகமும் முதலாவது வான் தாக்குதலும் – 26.03.2007:**







தமிழரின் விடுதலையை வென்றெடுக்கவும் தமிழின் படை பலத்தில் தரைப்படை, கடற்படையோடு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனால் மூன்றாவது படையணியாக தமிழீழ "வான் படை" என்ற மூன்றாவது படையை அறிமுகப்படுத்திய நாள். இந்நாளின் அதிகாலை 1:45 மணியளவில் சிறீலங்கா கட்டுநாயக்கா சிங்கள வான் தளம் மீது ஒரு வெற்றிகரமான வான் தாக்குதலை நிகழ்த்தினர்.











**மாமனிதர் ஜெயக்குமார் நினைவு நாள்:**
கடந்த இரு தசாப்த காலத்திற்கு மேலாக அவுஸ்திரேலியா தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளராக செயற்பட்டு தமிழீழப் போராட்டத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் அரும்பாடுபட்ட அயராது உழைத்தவர் ஜெயக்குமார் தில்லைநடராஜா (19.12.1951) அவர்கள் 29.03.2007 அன்று உயிரிழந்தார். இவரின் இனப்பற்றிற்கும், விடுதலைப்பற்றிற்கும் மதிப்பளித்து இவரது விடுதலைப் பணியைக் கௌரவிக்கும் முகமாக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் மாமனிதர் என்ற அதியுயார் தமிழீழம விரதை வழங்கி கௌரவித்தார்.

**கேணல் கோபித் வீரச்சாவு:**



முல்லைத்தீவு இரட்டவாய்கால் பகுதியில் தாக்குதல் திட்டமிடல் ஒன்றின்போது சிங்கள பேரினவாத இராணுவம் மேற்கொண்ட எறிகணை வீச்சில் கோபித் (வைத்தியலிங்கம் சந்திரபாலன் - 05.08.1975, மல்லாவி) அவர்கள் 30.03.2008 அன்று வீரச்சாவடைந்தார்.



**லெப். கேணல் அமுதாப் வீரச்சாவு**
சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி துணைத் தளபதியான அமிதாப் (சிதம்பரபிள்ளை சிவநாயகம் - 15.04.1976, வவுனியா) அவர்கள் 31.03.2009 அன்று வட தமிழீழம் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்கள பேரினவாத இராணுவத்தினருடனான வழிமறிப்புத் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

**தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீரமரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது; அடிமைத்தனத்தின் அமைதியைக் கலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது; சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான்; அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் துங்கிக்கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக் கொண்டது; இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.ca**


வெளிவந்துவிட்டது
உலக வணிகம்
ULAGA VANIKAM
2025
BUSINESS DIRECTORY
www.ulagavanikam.ca
விளம்பரமின்றி வியாபாரமில்லை
தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள உலக வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்
www.ulagavanikam.ca
437-345-4203